தேடிவந்த மீட்பர்

முனைவர். பீ. கனகராஜ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

With Best Compliments

P.Kanagaraj
21 03 2014

தேடி வந்த மீட்பர்

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு

என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா

அடிமை உமக்கே இனிநான்

P. Kanagaraj

நூற்பெயர் : தேடி வந்த மீட்பர்

தொகுப்பும் வடிவமைப்பும் : © முனைவர் பி. கனகராஜ்

வருடம் : 2014

வெளியிடுபவர் : கனரா பதிப்பகம்
8 - A, பேரின்பத் தெரு
பாளையங்கோட்டை - 627002
Ph: 9486557381

விலை : ரூ: 80 /-

கணிப்பொறி வடிவமைப்பு : டயோசீசன் ஆப்செட்
& அச்சு அமைப்பு பிரிண்டர்ஸ்,
பாளையங்கோட்டை

நூலைப் பற்றி

மனுக்குலத்துக்கு மீட்பை அளிக்க இந்த உலகுக்கு வந்து தன்னையே பலியாகக் கொடுத்த இயேசுவின் அன்பை அறிய விரும்பும் மக்கள், அவரது இறைத்தன்மை, மனிதத்தன்மை, போதனைகள், வல்லமைச் செயல்கள், பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றை எளிதில் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நூல் எழுதப்பட்டாலும், கிறிஸ்தவர்கள் அனைவருக்குமே இந்த ஒருங்கிணைந்த நற்செய்தி நூல் மிகுந்த பயனளிக்கும் என்று நம்புகிறேன். இந்நூலின் நிறை குறைகளைக் கூறி நூலின் தன் மையை மேம்படுத்த உதவிய நெல்லைப் பேராயர் பேரருட்திரு. அறிவர் ஜெயபால் டேவிட் (பணிநிறைவு) அவர் களுக்கும் இந்நூலைத் தொகுத்து எழுதுவதற்கு உதவியாக இருந்த அனைத்து வேதாகமச் சங்க விவிலியப் பதிப்புகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

P. KANAGARAJ

பாளையங்கோட்டை

2014

பொருளடக்கம்

பகுதி	தலைப்பு	பக்கம்
1.	தொடக்க உரை, இயேசுவின் பிறப்பு ஆரம்ப கால ஊழியம்	1
2.	சீடர்கள்	23
3.	வல்லமைச் செயல்கள் / அரும் அடையாளங்கள்	31
4.	உவமைகள்	56
5.	போதனைகள்	90
6.	இறுதி நாட்கள்	134
7.	ஆறுதல் உரை	160
8.	பாடுகளும், இறப்பும்	169
9.	உயிர்ப்பும், விண்ணேற்றமும்	185

தேடி வந்த மீட்பர்

பகுதி – 1

திருமுழுக்குநர் யோவானின் பிறப்பு, அவரது திருப்பணிகள், கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய இறைவாக்குநர்களின் இறைவாக்கு, அவரது மூதாதையர் பட்டியல், ஆரம்ப கால ஊழியம் ஆகியவை இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

முன்னுரை (யோ. 1: 1–18)

ஆதியிலே வார்த்தையாக இருந்த அவர் கடவுளோடு இருந்தார்; கடவுளுமாயும் இருந்தார். உலகம் உட்பட அனைத்தும் அவர் மூலமாய் உண்டாக்கப்பட்டன. ஆனால் உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்கு உரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவரை நம்பி அவரை ஏற்றுக் கொண்ட அனைவருக்கும் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அவர் அளித்தார். அவர்கள் இரத்தத்தினாலோ, உடல் இச்சையினாலோ, ஆண்மகன் விருப்பத்தினாலோ அல்ல; கடவுளாலே பிறந்தவர்கள்.

அவருக்குள் வாழ்வு இருந்தது. அந்த வாழ்வு மானிடருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதனை மேற்கொள்ள முடியவில்லை. மக்கள் அனைவரையும் ஒளிரச் செய்யும் அந்த மெய்யான ஒளியை நம்பும்படி, அந்த ஒளியைக் குறித்து சாட்சி பகர கடவுளால் அனுப்பப்பட்ட யோவான் வந்தார். அவர் அந்த ஒளியல்ல. மாறாக, அந்த ஒளியைக் குறித்து சாட்சி பகர வந்தவரே. “எனக்குப்பின் வருகிறவர் எனக்கு முன்பே இருந்தவர். எனவே, அவர் என்னைவிட மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் தான் இவர்,” என்று உரத்த குரலில் யோவான் அவரைக் குறித்து சாட்சி பகர்ந்தார்.

அந்த வார்த்தை மனிதராகி கிருபையும் சத்தியமும் நிறைந்தவராய் நம்மிடையே குடி கொண்டார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது தந்தையின் ஒரே மகனுடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. அவருடைய நிறைவினால் நாம் அனைவரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம். திருச்சட்டம் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்டது. ஆனால் கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்டாயின. கடவுளை யாரேனும் ஒரு போதும் கண்டதில்லை. தந்தையின் மடியில் இருக்கும் கடவுள் தன்மையுள்ள அவருடைய ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியிருக்கிறார்.

யோவான் பிறப்பு பற்றி தூதரின் முன்னறிவிப்பு (லூக்கா 1:5-25)

யூதேயா நாட்டில் ஏரோது அரசனாக இருந்த காலத்தில் அபியா வகுப்பைச் சேர்ந்த சகரியா என்னும் ஆசாரியர் இருந்தார். அவர் மனைவி எலிசபெத்து. ஆரோனின் வழி வந்தவர். அவர்கள் இருவரும் கடவுளுடைய அனைத்துக் கட்டளைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் ஏற்ப குற்றமற்றவர்களாய் நடந்தவர்கள. கடவுளுடைய பார்வையில் நேர்மையாக விளங்கினவர்கள். இருவரும் வயது முதிர்ந்தவர்கள். அவர்களுக்குப் பிள்ளை இல்லை.

தம்முடைய முறை வந்தபோது கோவிலுக்குள் தூபம் காட்டுவதற்குச் சீட்டைப் பெற்றுக் கொண்ட சகரியா, தூபம் காட்டிய வேளையில் மக்கள் அனைவரும் கூட்டமாய் ஜெபித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது கடவுளின் தூதர் ஒருவர் தூபம் காட்டும் இடத்தின் வலது பக்கம் நின்றவாறு அவருக்குக் காட்சி அளித்தார். அவரைக் கண்டு பயந்து கலக்கமடைந்த சகரியாவை நோக்கி "அஞ்சவேண்டாம் சகரியாவே, உமது வேண்டுதல் கேட்கப்பட்டது. உம் மனைவி எலிசபெத்து ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு யோவான் என்று பெயரிடும். உமக்கு மகிழ்ச்சியும் உவகையும் உண்டாகும். அவரது பிறப்பால் அநேகர் மகிழ்ச்சி அடைவர். அவர் கடவுள் பார்வையில் பெரியவராய் இருப்பார். திராட்சை இரசத்தையோ மதுவையோ அருந்தார். தமது தாயின் வயிற்றில் இருக்கும் போதே தூய ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பார். இஸ்ரவேல் மக்களுள் பலரை அவர் கடவுளிடம் திரும்பி வரச் செய்வார். தந்தையின் உள்ளங்களைப் பிள்ளைகளுக்கும், நேர்மையானவர்களின் ஞானத்தைக் கீழ்ப்படியாதவர்களுக்கும் கொடுத்து, உத்தமமான மக்களை கடவுளுக்கு ஆயத்தப்படுத்த எலியாவின் ஆவியையும், வல்லமையையும் உடையவராய் அவருக்கு முன் செல்வார்"என்று கூறினார்.

"இதை நான் எப்படி அறிவேன்? நானும் என் மனைவியும் வயது சென்றவர்களாயிருக்கிறோமே" என்று தூதரிடம் வினவினார் சகரியா. அதற்கு தூதர் அவரிடம், "நான் கடவுளுக்கு முன் நிற்கும் காபிரியேல். உம்மோடு பேசவும், உமக்கு இந்தச் செய்தியை அறிவிக்கவுமே அனுப்பப்பட்டேன். இதோ, தகுந்த காலத்தில் நிறைவேற இருக்கும் என்னுடைய வார்த்தைகளை நீர் நம்பாததால் இவை நிறைவேறும் நாள் வரை நீர் ஊமையாய் இருப்பீர்" என்றார்

கோவிலில் சகரியா தாமதித்ததினால் (வெளியே) அவருக்காகக் காத்திருந்த மக்கள் ஆச்சரியமடைந்தனர். அவர் வெளியே வந்த போது பேசமுடியாமல் அவர்களிடம் சைகை காட்டினதினால் கோவிலில் அவர் ஒரு காட்சியைக் கண்டிருப்பார் என மக்கள் அறிந்து கொண்டனர். அவருடைய ஊழியத்தின் காலம் நிறைவேறியதும் வீட்டுக்குச் சென்றார். அதற்குப்பின்பு அவருடைய மனைவி எலிசபெத்து கர்ப்பமாகி, "மக்களிடையே என் மீதுள்ள நிந்தையை நீக்க இந்நாட்களில் கடவுள் இவ்வாறு என் மீது அருள் கூர்ந்திருக்கிறார்" என எண்ணி ஐந்து மாதங்கள் வரை பிறர் கண்ணில் படாதிருந்தாள்.

இயேசு பிறப்பு பற்றி தூதரின் முன்னறிவிப்பு (லூக். 1:26-38)

ஆறாம் மாதத்திலே கடவுள் காபிரியேல் என்னும் தூதரை கலிலேயாவில் உள்ள நாசரேத் என்னும் ஊரில் தாவீதின் குடும்பத்தைச் சேர்ந்த யோசேப்பு என்பவருக்கு நியமிக்கப்பட்டுள்ள மரியாளிடம் அனுப்பினார். தூதர் மரியாளிடம் "கிருபை பெற்றவரே வாழ்க. கடவுள் உம்மோடு இருக்கிறார். பெண்களுக்குள்ளே நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்று கூறினார். இவ்வார்த்தைகளைக் கேட்டுக் கலங்கிய மரியாள் இந்த வாழ்த்து எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தார். தூதர் அவரிடம். "மரியாளே பயப்படாதே. நீர் கடவுளிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர். இதோ நீர் கர்ப்பமடைந்து ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவரின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை கடவுள் அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றும் ஆளுவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது." என்றார். இது எப்படி ஆகும்? "நான் கன்னிகை அல்லவா" என்றார் மரியாள். தூதர் மரியாளிடம், "தூய ஆவி உம் மீது வரும். உன்னதமானவரின் வல்லமை உம்மேல் நிழலிடும். எனவே, உம்மிடம் பிறக்கும் குழந்தை தூயது. அக்குழந்தை கடவுளுடைய மகன் எனப்படும். மலடி என்று கருதப்பட்ட உம் உறவினர் எலிசபெத்தும் தம் முதிர் வயதிலே கர்ப்பம் தரித்திருக்கிறார். இது அவருக்கு ஆறாம் மாதம். கடவுளாலே கூடாதது ஒன்றுமில்லை," என்றார். அதற்கு மரியாள், "நான் கடவுளின் அடிமை. உம்முடைய வாக்கின்படி எனக்கு ஆகட்டும்," என்றார். அப்பொழுது தூதர் மரியாளிடமிருந்து போய்விட்டார்.

மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தல் (லூக்.1 : 39- 56)

மரியாள் யூதேயா மலை நாட்டிலுள்ள சகரியாவின் வீட்டிற்குச் சென்று எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாளின் வார்த்தையைக் கேட்டதும் எலிசபெத்து வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது. தூய

ஆவியினால் நிரப்பப்பட்ட எலிசபெத்து அப்பொழுது உரத்த குரலில், "பெண்களுக்குள் நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர். வயிற்றில் வளரும் உம் குழந்தையும் ஆசீர்வதிக்கப்பட்டதே. என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் எவ்விதத் தகுதியும் பெற்றிலேன். உம் வாழ்த்து ஒலியை நான் கேட்டதும், என் வயிற்றுக் குழந்தை களிப்புடன் துள்ளியது. கடவுள் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என நம்பிய நீரே பேறு பெற்றவர்," என புகழ்ந்துரைத்தார்.

மரியாளின் பாடல் (லூக். 1 : 46 – 56)

அதைக் கேட்ட மரியாள்:
என் ஆத்துமா கடவுளை மகிமைப்படுத்துகிறது
என் மனம் என் மீட்பராகிய கடவுளில் களிகூருகிறது.
அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையைக் கண்ணோக்கினார்.
இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னை பேறுபெற்றவர் என்பர்.
வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்.
அவர் தூயவர்;
அவருக்குப் பயந்து அவர் வழியில் நடப்போருக்குத் தலைமுறை
தலைமுறையாய் இரக்கம் பாராட்டி வருகிறார்.
தம்முடைய புயத்தினாலே தமது வல்லமையை வெளிப்படுத்தினார்.
இருதயத்தில் அகந்தை எண்ணம் கொண்டோரைச் சிதறடித்தார்.
பலவான்களை உயர்பதவிகளிலிருந்து தள்ளிவிட்டு
தாழ்மையானவர்களை
உயர்த்தினார்.
பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி செல்வந்தரை வெறுமையாய்
அனுப்பிவிட்டார்.
நம்முடைய மூதாதையருக்கு அவர் சொன்னபடியே
ஆபிரகாமுக்கும் அவருடைய மரபினருக்கும் என்றென்றும் இரக்கம் செய்ய
நினைத்து தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்" என்றார்.
ஏறத்தாழ மூன்று மாதம் எலிசபெத்துடன் தங்கியிருந்த பின்பு மரியாள் தம் வீட்டுக்குத் திரும்பினார்.

யோவானின் பிறப்பு (லூக். 1:56 – 66)

காலம் நிறைவேறினபோது எலிசபெத்து ஒரு மகனைப் பெற்றெடுத்தார். கடவுள் அவரிடத்தில் இரக்கம் பாராட்டினார் என்று அவருடைய அயலகத்தாரும் உறவினர்களும் கேள்விப்பட்டு அவரோடு சேர்ந்து மகிழ்ச்சி அடைந்தனர். எட்டாம் நாளிலே குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வந்த அவர்கள் சகரியா என்று பெயரிட இருந்தனர். ஆனால் எலிசபெத்தோ "அப்பெயர் அல்ல, யோவான் என்று பெயரிட வேண்டும்" என்றார். "உம் உறவினர்களுள்

இப்பெயரை உடையவர் எவரும் இல்லையே" என்று சொல்லி "குழந்தைக்கு என்ன பெயரிடலாம்? உம் விருப்பம் என்ன?" என்று சைகையினால் சகரியாவிடம் கேட்டனர். அவர் எழுது பலகை ஒன்றைக் கேட்டு வாங்கி "யோவான்" என்று எழுதினார். அனைவரும் ஆச்சரியப்பட்டனர். உடனே அவருடைய வாய் திறக்கப்பட்டது. அவருடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு அவர் கடவுளைப் போற்றினார். இச்செய்தி யூதேயாவின் மலை நாடெங்கும் பரவியது. அதனால் அவர்களைச் சுற்றி வசித்த மக்கள் அனைவரும் பயந்தனர். அவைகளைக் கேள்விப்பட்டவர்கள் அனைவரும் அச்செய்தியை தங்கள் மனதில் வைத்துக் கொண்டு இக்குழந்தை எப்படிப்பட்டதாக இருக்குமோ?" என்று சொன்னார்கள். ஏனெனில் கடவுளுடைய கரம் அக்குழந்தையோடு இருந்தது.

சகரியாவின் பாடல் (லூக் 1:67-80)

சகரியா தூய ஆவியால் நிரப்பப்பட்டு :
"இஸ்ரவேலின் கடவுளைப் போற்றுவோம் ;

அவர் நம்முடைய மூதாதையருக்கு அருளிய வாக்குப்படி
இரக்கம் பாராட்ட தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார்.
உங்கள் பகைவர்களின் கைகளினின்று நீங்கள் விடுதலை
செய்யப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமின்றி எனக்கு
முன்பாகத் தூய்மையோடும் நேர்மையோடும் ஊழியம் செய்யக்
கட்டளையிடுவேன்" என்று அவர் நம்முடைய தந்தை ஆபிரகாமுக்கு இட்ட
ஆணையையும், ஆதி முதல் தம்முடைய தூய இறைவாக்குநர் மூலம்
அளிக்கப்பட்ட வாக்கையும் நிறைவேற்றும் பொருட்டு தமது மக்களை மீட்டுக்
கொள்ளவும்,

நம்முடைய பகைவர்களிடமிருந்தும்
நம்மைப் பகைக்கிறவர்களின் கைகளினின்றும்
நம்மைக் காக்கவும் தம் ஊழியராகிய
தாவீதின் குடும்பத்தில் வல்லமை உடைய மீட்பர் ஒருவர்
தோன்றச் செய்தார்.
என் மகனே ! நீ உன்னதமானவரின் இறைவாக்குநர் எனப்படுவாய்;
கடவுளுக்கு வழியை ஆயத்தம் பண்ணவும்
கடவுளின் உருக்கமான இரக்கத்தினாலே
அவருடைய மக்களுக்கு பாவமன்னிப்பையும் மீட்பையும்
தெரிவிக்க அவருக்கு முன்னே செல்வாய்;
இருளிலும், இறப்பின் இருளிலும் இருப்பவர்களுக்கு ஒளி அளிக்கவும்,
நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியில் நடத்தவும்,
விண்ணிலிருந்து தோன்றிய விடியல் (அருணோதயம்)
நம்மிடம் வந்திருக்கிறது." என்றுரைத்தார்.

அக்குழந்தை (யோவான்) வளர்ந்து ஆவியில் வலிமை பெற்று இஸ்ரயேல் மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தும் காலம் வரை அவர் காடுகளில் வாழ்ந்து வந்தார்.

இயேசுவின் பிறப்பு பற்றி இறைவாக்குநர் ஏசாயாவின் முன்னறிவிப்பு (ஏசாயா: 9:2,6)

"காரிருளில் வாழ்ந்து வந்த மக்கள்
பேரொளியைக் கண்டார்கள்.
சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில்
குடியிருப்போர் மீது சுடர் ஒளி உதித்தது."
"நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளார்,
நமக்கு ஒரு மகன் தரப்பட்டுள்ளார்;
ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மீது இருக்கும்.
"அதிசயமான ஆலோசகர், வல்லமையுள்ள கடவுள்,
என்றும் நிலைத்து நிற்கும் தந்தை, சமாதானப் பிரபு
என்பவை அவரது திருப்பெயர்.''

இயேசுவின் மூதாதையர் பட்டியல் (மத்.1:1-17 லூக். 3: 23-38)

ஆதாம் கடவுளால் உருவாக்கப்பட்டவர்.
சேத் ஆதாமின் மகன்; ஏனோசு சேத்தின் மகன் ;
கேனான் ஏனோசின் மகன்; மகலலேயேல் கேனானின் மகன்;
யாரேது மகலலேயேலின் மகன் ; ஏனோக்கு யாரேதின் மகன்;
மெத்துசேலா ஏனோக்கின் மகன் ; லாமேக்கு மெத்துசேலாவின் மகன்;
நோவா லாமேக்கின் மகன்; சேம் நோவாவின் மகன்;
அர்ப்பகசாத் சேமின் மகன்; காயினான் அர்ப்பகசாத்தின் மகன்;
சேலா காயினானின் மகன்; ஏபேர் சேலாவின் மகன்;
பேலேக் ஏபேரின் மகன்; ரெகு பேலேக்கின் மகன்;
சேரூக் ரெகுவின் மகன்; நாகோர் சேரூக்கின் மகன்;
தேரா நாகோரின் மகன்;
ஆபிரகாம் தேராவின் மகன்; ஈசாக்கு ஆபிரகாமின் மகன்;
யாக்கோபு ஈசாக்கின் மகன்; யூதா யாக்கோபின் மகன்;
பெரேட்சு யூதாவின் மகன்; எட்சரோன் பெரேட்சின் மகன்;
ராம் எட்சரோனின் மகன்; அமினதாப் ராமின் மகன்;
நகசோன் அமினதாபின் மகன்; சல்மோன் நகசோனின் மகன்;
போவாசு சல்மோனின் மகன்;ஓபேது போவாசின் மகன்;
ஈசாய் ஓபேதின் மகன்; தாவீது ஈசாயின் மகன்;
சாலமோன் தாவீதின் மகன்; ரெகொபயாம் சாலமோனின் மகன்;
அபியாம் ரெகொபயாமின் மகன்; ஆசா அபியாவின் மகன்;

யோசபாத்து ஆசாவின் மகன்; யோராம் யோசபாத்தின் மகன்;
உசியா யோராமின் மகன்; யோதாம் உசியாவின் மகன்;
ஆகாசு யோதாமின் மகன்; எசேக்கியா ஆகாசின் மகன்;
மனாசே எசேக்கியாவின் மகன்; ஆமோன் மனாசேயின் மகன்;
யோசியா ஆமோனின் மகன்; எக்கோனியா (யோவாக்கின்) யோசியாவின் மகன்;
இவர் காலத்தில்தான் யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துக் கொண்டு போகப்பட்டனர்.
செயல்தியேல் எக்கோனியாவின் மகன்; செருபாபேல் செயல்தியேலின் மகன்;
அபியூது செருபாபேலின் மகன்; எலியாக்கிம் அபியூதின் மகன்;
ஆசோர் எலியாக்கிமின் மகன்; சாதோக்கு ஆசோரின் மகன்;
ஆக்கிம் சாதோக்கின் மகன்; எலியூது ஆக்கிமின் மகன்;
எலெயாசார் எலியூதின் மகன்; மாத்தான் எலெயாசாரின் மகன்;
யாக்கோபு மாத்தானின் மகன்; யோசேப்பு யாக்கோபின் மகன், மரியாளின் கணவர்.

கிறிஸ்து என்னும் இயேசு மரியாளிடம் பிறந்தவர்.

(இயேசுவின் வளர்ப்புத்தந்தை யோசேப்பு)

இயேசுவின் பிறப்பு (மத். 1: 18. 26; லூக். 2:1-39)

இயேசுவின் தாய் மரியாளுக்கும் யோசேப்புக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும் முன்பே மரியாள் கர்ப்பமாயிருந்தார் என்று அறிந்த கணவர் யோசேப்பு நேர்மையானவராய் இருந்ததினால் மரியாளை அவமானப்படுத்த விரும்பாமல் இரகசியமாய் அவரைத் தள்ளிவிடத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். அவர் அவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது கடவுளுடைய தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "தாவீதின் மகன் யோசேப்பே, உம் மனைவி மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்பட வேண்டாம். ஏனெனில் அவர் தூய ஆவியால் தான் கர்ப்பமாயிருக்கிறார். அவர் ஒரு மகனைப் பெறுவார். அவருக்கு இயேசு எனப் பெயரிடு. ஏனெனில் அவர் தமது மக்களின் பாவங்களை நீக்கி அவர்களை மீட்பார்" என்றார்.

"இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு மகனைப் பெறுவார். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவர்" இம்மானுவேல் என்பதற்கு "கடவுள் நம்மோடு இருக்கிறார்." என்று பொருள். இவ்வாறு இறைவாக்குநர் மூலமாய் கடவுளாலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இவை யாவும் நிகழ்ந்தன.

யோசேப்பு கடவுளுடைய தூதர் தனக்குக் கட்டளையிட்டபடியே மரியாளைச் சேர்த்துக் கொண்டார். எனினும் மரியாள் தம் மகனைப் பெறும் வரை அவருடன் யோசேப்பு கூடி வாழவில்லை.அக்காலத்தில், தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு அகுஸ்து சீசர் கட்டளை பிறப்பித்தார். அதன்படி சீரியா நாட்டில் குரேனியு என்பவர் ஆளுநராய் இருந்த போது முதன் முறையாக மக்கள் தொகை கணக்கிடப்பட்டது. மக்கள் அனைவரும் தங்களுடைய பெயரைப் பதிவு செய்ய அவரவர் ஊருக்குச் சென்றனர்.

அச்சமயம் தாவீதின் மரபினரான யோசேப்பு தமக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்டு நிறைமாதமாக இருந்த மரியாளோடு தங்களுடைய பெயரைப் பதிவு செய்ய கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத் என்னும் ஊரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லெகேம் என்னும் தாவீதின் ஊருக்குச் சென்றார். அங்கு மரியாளுக்குப் பேறுகாலம் தொடங்கியது. அவர் தம் தலைமகனைப் பெற்று பயணியர் விடுதியில் இடமில்லாததால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி புல்லணையிலே கிடத்தினார்.

மேய்ப்பர்களும் வான் தூதர்களும் (லூக். 2:8-21)

அப்பொழுது அவ்விடத்தில் உள்ள மேய்ப்பர்கள் வயல் வெளியில் தங்கி இரவு முழுவதும் தங்கள் மந்தையை காவல் காத்துக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் கடவுளுடைய தூதர் ஒருவர் அவர்கள் முன் வந்து நின்றார். கடவுளின் மகிமை அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது. அவர்கள் மிகவும் பயந்தனர். கடவுளின் தூதர் அவர்களிடம் ''பயப்படாதீர். இதோ எல்லா மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கடவுளாகிய கிறிஸ்து என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி புல்லணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்'' என்று கூறினார். உடனே விண்தூதர் திரள் அந்தத் தூதருடன் சேர்ந்து,

"உன்னதத்தில் இருக்கிற கடவுளுக்கு மகிமையும்

பூமியிலே அவர் விரும்புவோருக்குச் சமாதானமும் உண்டாவதாக"

என்று பாடி கடவுளைப் புகழ்ந்தனர்.

விண் தூதர்கள் அவர்களை விட்டு விண்ணுலகம் சென்ற பின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி ''வாருங்கள் நாம் பெத்லெகேம் சென்று கடவுளால் அறிவிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியைப் பார்ப்போம்'' என்று சொல்லி விரைந்து சென்று மரியாளையும், யோசேப்பையும் புல்லணையிலே கிடத்தியிருந்த பிள்ளையையும் கண்டனர். பின்பு அந்தப்

பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியை (மற்றவர்களுக்கு) தெரிவித்தனர். மேய்ப்பர்களாலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் வியப்படைந்தனர். மேய்ப்பர்கள் தாங்கள் கேட்டவை, கண்டவை எல்லாவற்றிற்காகவும் கடவுளை மகிமைப்படுத்தி, புகழ்ந்து பாடிக் கொண்டே திரும்பிச் சென்றனர். மரியாளோ இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் இருதயத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

விருத்தசேதனம் பண்ண வேண்டிய எட்டாம் நாளிலே தாயின் வயிற்றில் உருவாகுமுன்பே கடவுளுடைய தூதன் சொன்னபடியே பிள்ளைக்கு இயேசு என்று பெயரிட்டனர்.

கோவிலில் குழந்தை இயேசு (லூக். 2:22-38)

தூய்மைப்படுத்தும் காலம் நிறைவேறியதும் திருச்சட்டத்தின்படி ஒவ்வொரு தலை ஆண்மகனும் கடவுளுக்குத் தூய்மையானது என்று எண்ணப்பட்டு குழந்தையை கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கவும், இரு காட்டுப் புறாக்களையாவது அல்லது இரு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும் அவரை எருசலேமுக்குக் கொண்டு சென்றனர்.

அப்பொழுது எருசலேமில் சிமியோன் என்னும் பெயர் கொண்ட ஒருவர் இருந்தார். அவர் நேர்மையானவர். கடவுள் பற்றுள்ளவர்; இஸ்ரவேலுக்கு ஆறுதல் வரும் நாளுக்காகக் காத்துக் கொண்டிருந்தவர்; தூயஆவியைப் பெற்றவர். 'கடவுளாகிய கிறிஸ்துவைக் காணுமுன் நீ சாகமாட்டாய்' என்று தூய ஆவியானாலே அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் ஆவியின் ஏவுதலினால் கோவிலுக்கு வந்திருந்தார். பிள்ளையை (இயேசுவை) அவருடைய பெற்றோர் கோவிலுக்கு உள்ளே கொண்டு வருகையில் சிமியோன் அவரைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டு,

"ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை
இப்பொழுது சமாதானத்துடன் போக விடுகிறீர்.
மற்ற இனத்தவருக்கு ஒளிரும் ஒளியாகவும்
உம்முடைய மக்கள் இஸ்ரவேலருக்கு மகிமையாகவும்
அனைத்து மக்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின
உமது மீட்பை என் கண்கள் கண்டன."

என்று கடவுளைப் போற்றினார்.

இயேசுவைக் குறித்துச் சொல்லப்பட்டவை பற்றி யோசேப்பும் மரியாளும் வியப்படைந்தனர்.

மேலும், சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, மரியாளிடம்

“இதோ, அநேகருடைய இருதயச் சிந்தனைகள் வெளிப்படவும் இஸ்ரவேலருள் அநேகரின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும், எதிராகப் பேசப்படும் பேச்சுக்கு அடையாளமாகவும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உம் உள்ளத்தையும் ஒரு பட்டயம் ஊடுருவும்” என்று கூறினார்.

அன்னாள் ஓர் இறைவாக்குநர். ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் மகள். வயது முதிர்ந்த இவர் மணமாகி ஏழு ஆண்டுகள் மட்டுமே கணவரோடு வாழ்ந்து விதவையானவர். ஏறத்தாழ எண்பத்து நான்கு வயதான அன்னாள் கோவிலை விட்டு நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து, ஜெபித்து, ஆராதித்துக் கொண்டிருந்தார். அவரும் அந்நேரத்தில் வந்து கடவுளைப் புகழ்ந்து எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த அனைவரிடமும் இயேசுவைக் குறித்துப் பேசினார்.

நாசரேத்துக்குத் திரும்புதல் (லூக். 2:39-40)

கடவுளுடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்து முடித்த பின்பு கலிலேயாவிலுள்ள நாசரேத் என்னும் தங்களுடைய ஊருக்குத் திரும்பிச் சென்றனர். வளர்ந்து, ஆவியில் வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்த இயேசுவிடம் கடவுளின் கிருபை இருந்தது.

ஞானிகள் வருகை (மத். 2:1-12)

இயேசு பிறந்த சமயத்தில் யூதேயாவில் ஆட்சி புரிந்தவர் ஏரோது அரசன். அப்பொழுது கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து “யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவருடைய விண்மீனைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்திருக்கிறோம்” என்று வினவினர். இதைக் கேட்டதும், ஏரோது அரசனும் எருசலேம் நகரத்து மக்கள் அனைவரும் கலங்கினர்.

அவன் தலைமைக் குருக்களையும், திருமறை அறிஞர்களையும் கூட்டி “கிறிஸ்து எங்கே பிறப்பார்?” என்று அவர்களிடம் விசாரித்தான். அவர்கள் அவனிடம் “யூதேயாவிலுள்ள பெத்லெகேமில்” என்றனர். ஏனெனில்,

“யூதேயா நாட்டிலுள்ள பெத்லெகேமே,
யூதேயாவில் நீ சிறியது அல்ல,
என் மக்களாகிய இஸ்ரவேலரை ஆளுபவர்
உன்னிடமிருந்து தோன்றுவார்”

என்று இறைவாக்குநர் எழுதியிருக்கின்றனர் என்றனர். பின்பு ஞானிகளை இரகசியமாய் அழைத்து விண்மீன் தோன்றிய காலத்தைப்பற்றி அவர்களிடமிருந்து திட்டமாய் விசாரித்ததும் அவர்களிடம் “நீங்கள் போய்

பிள்ளையைக் குறித்துத் திட்டமாய் விசாரித்து அதைக் கண்ட பின்பு எனக்கு தெரிவியுங்கள். நானும் அதைப் பணிந்து கொள்ள வேண்டும்'' என்று சொல்லி அவர்களைப் பெத்லெகேமுக்கு அனுப்பிவிட்டான். அரசன் சொன்னதை அவர்கள் கேட்டுப் போகையில் இதோ அவர்கள் முன்பு கிழக்கிலே கண்ட விண்மீனைக் கண்டனர். அதைக் கண்டதும் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அவர்களுக்கு முன்னே சென்ற விண்மீன் பிள்ளை இருந்த வீடு வரை சென்று நின்றது. அவர்கள் வீட்டிற்குள் சென்று, பிள்ளையையும் தாய் மரியாளையும் கண்டு, மிகவும் தாழ்மையாய் விழுந்து வணங்கி பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் ஆகியவற்றை அதற்குக் காணிக்கையாகக் கொடுத்தனர். பின்பு, 'ஏரோதிடம் திரும்பிப் போகவேண்டாம்' என்று கனவில் கடவுளினால் எச்சரிக்கப்பட்டதினால் அவர்கள் வேறு வழியாகத் தங்கள் நாட்டிற்குத் திரும்பினார்கள்.

எகிப்துக்குச் செல்லுதல் (மத். 2:13-15)

ஞானிகள் சென்றதும் கடவுளுடைய தூதன் யோசேப்புக்குக் கனவில் தோன்றி "ஏரோது பிள்ளையைக் கொலை செய்யத் தேடுவான். ஆதலால், நீ எழுந்து சேயையும் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போ. நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்கேயே இரு'' என்று கூறினார். யோசேப்பு எழுந்து இரவோடு இரவாகச் சேயையும் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குச் சென்றான். ஏரோது இறக்கும் வரை அங்கேயே இருந்தான்.

"எகிப்திலிருந்து என் மகனை வரவழைத்தேன்,'' என்று இறைவாக்குநர் மூலமாக கடவுளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இவ்வாறு நடந்தது.

ஏரோதின் கொடூரம் (மத். 2:16-18)

அப்பொழுது, ஞானிகளால் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த ஏரோது மிகுந்த கோபத்துடன் ஆட்களை அனுப்பி தான் அவர்களிடத்தில் திட்டமாய் விசாரித்து அறிந்த காலத்தின்படியே, பெத்லெகேமிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான்.

"புலம்பலும் மிகுந்த அழுகையும் கொண்ட கூக்குரல்
ராமாவிலே கேட்டது
ராகேல் தம் பிள்ளைகளுக்காக அழுது
அவைகள் இல்லாததினால் ஆறுதல் அடையாமல் இருக்கிறாள்"

என்று இறைவாக்குநர் எரேமியாவினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.

மீண்டும் நாசரேத்துக்குச் செல்லுதல் (மத். 2:19-23)

ஏரோது இறந்த பின்பு கடவுளுடைய தூதர் எகிப்தில் யோசேப்புக்குக் கனவில் தோன்றி "நீ எழுந்து சேயையும் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ரவேல் நாட்டிற்குப் போ; சேயின் உயிரைப் பறிக்கத் தேடியவர்கள் இறந்து விட்டனர்," என்றான். மூவரும் இஸ்ரவேல் நாட்டிற்குச் சென்றனர். ஆனால் அர்கெலாயு தன் தந்தைக்குப்பின் யூதேயாவில் ஆட்சி செய்கிறான் என்று கேள்விப்பட்டு அங்கு செல்லப் பயந்தான். கனவில் கடவுளால் எச்சரிக்கப்பட்டு யோசேப்பு விலகிச் சென்று நாசரேத்தில் குடியிருந்தார். 'நசரேயன் எனப்படுவார்,' என இறைவாக்குநர்களால் உரைக்கப்பட்டது இவ்வாறு நிறைவேறியது.

கோவிலில் சிறுவன் இயேசு (லூக். 2: 41-52)

பஸ்கா பண்டிகை நாட்களில் இயேசுவின் பெற்றோர் வழக்கப்படி பன்னிரண்டு வயது நிரம்பிய தங்களுடைய மகனுடன் எருசலேமுக்குச் சென்றனர். பண்டிகை நாட்கள் முடிந்து அவர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தனர். சிறுவன் இயேசுவோ எருசலேமிலே தங்கி விட்டார். இது அவருடைய பெற்றோருக்குத் தெரியாது. மற்றப் பயணிகளுடன் வந்து கொண்டிருப்பார் என்று எண்ணியிருந்தனர். ஒரு நாள் பயணம் முடிந்த பின் உறவினரிடமும் அறிமுகமானவர்களிடத்திலும் தேட ஆரம்பித்தனர். காணாததினால் அவரைத் தேடிக் கொண்டே எருசலேமுக்குத் திரும்பிச் சென்றனர். மூன்று நாட்களுக்குப்பின் அவரைக் கோவிலில் கண்டனர். அங்கே அவர் போதகர் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் வினவிக்கொண்டும் இருந்தார். அவரது பேச்சைக் கேட்ட மற்றோரும் பெற்றோரும் அவருடைய அறிவுத் திறனையும் பதில்களையும் கண்டு வியப்படைந்தனர். அப்பொழுது அவருடைய தாயார் "ஏன் இப்படிச் செய்தாய்? நானும் உன் தந்தையும் மிகுந்த கவலையுடன் உன்னைத் தேடினோமே" என்றார். அதற்கு அவர் "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் தந்தை எனக்குக் கொடுத்திருக்கும் செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் அறியீர்களா?" என்றார். அவர் சொன்னதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ளவில்லை. பின்பு அவர் அவர்களுடனே நாசரேத் சென்று அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாய் இந்த எல்லா நிகழ்ச்சிகளையும் தன் இருதயத்தில் வைத்துக் கொண்டார். இயேசு ஞானத்திலும், வளர்த்தியிலும் கடவுள் கிருபையிலும், மனிதர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.

யோவான் வழியை ஆயத்தப்படுத்துதல் (லூக். 3:1-22;மா. 1:1-11)

திபேரியு சீசர் ஆட்சி செய்து வந்த பதினைந்தாம் ஆண்டில் பொந்தியு பிலாத்து யூதேயாவின் ஆளுநராக இருந்தார். ஏரோது கலிலேயாவுக்கும் அவன் சகோதரன் பிலிப்பு இத்துரேயா, தராகோனித்துப் பகுதிகளுக்கும்,

லிசானியா அபிலேனுக்கும் துணை ஆளுநர்களாகவும், அன்னாவும் காய்பாவும் தலைமைக் குருக்களாகவும் இருந்தனர். அக்காலத்தில் சகரியாவின் மகன் யோவான் காட்டுப்பகுதியில் வாழ்ந்து வந்தார். அவர் ஒட்டக மயிர் ஆடையை அணிந்திருந்தார். அரையில் வார்க்கச்சையைக் கட்டியிருந்தார். வெட்டுக்கிளியும் காட்டுத் தேனுமே அவருடைய உணவு. அவர் மெய்யான ஒளியாகிய கிறிஸ்துவைப் பற்றிச் சான்று பகரவும் அவர் வழியாக அனைவரும் கடவுளை நம்புமாறும் அனுப்பப்பட்டவர்.

கடவுளின் வாக்கைப் பெற்ற அவர், "பாவமன்னிப்பு அடைய மனம் மாறி ஞானஸ்நானம் பெறுங்கள்," என்று யோர்தான் ஆற்றைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளிலும் பறை சாற்றினார். இறைவாக்குநர் ஏசாயாவின் நூலில் யோவானைக்குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

"இதோ என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன். அவர் உமக்கு வழியை ஆயத்தம் செய்வார்.

பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது;
ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்;
அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்;
பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும்;
மலைகள், குன்றுகள் அனைத்தும் தாழ்த்தப்படும்;
கோணலானவை நேராக்கப்படும்;
கரடு முரடானவை சமமாக்கப்படும்;
மானிடர் அனைவரும் கடவுளின் மீட்பைக் காண்பர்"

எருசலேமிலிருந்தும், யூதேயாவிலிருந்தும் யோர்தானைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மக்கள் யோவானிடம் சென்று தங்கள் பாவங்களை அறிக்கையிட்டனர். அவர் யோர்தான் ஆற்றில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானம் பெற வந்த பரிசேயரையும் சதுசேயரையும் கண்டு யோவான்,

"விரியன் பாம்புக் குட்டிகளே, வரப்போகும் சினத்திலிருந்து தப்பித்துக் கொள்ள உங்களை எச்சரித்தவர் யார்? நீங்கள் மனம் மாறியவர் என்பதை உங்கள் நற்செயல்கள் மூலம் காட்டுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை என சொல்லாதீர்கள். இக்கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உருவாக்க கடவுள் வல்லவர். ஏற்கனவே மரங்களின் வேர் அருகே கோடரி வைக்கப்பட்டுள்ளது. நற்கனி தராத மரங்கள் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும்" என்றார்.

மக்கள் : நீர் மேசியாவா?

யோவான் : நான்மனமாற்றத்திற்கான ஞானஸ்நானத்தை உங்களுக்கு நீரினால் கொடுக்கிறேன். ஆனால் என்னைவிட வலிமை மிக்கவர் ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடிகளின் வாரை அவிழ்க்கக்கூட தகுதியற்றவன் நான். அவர் தூய ஆவியினாலும் நெருப்பினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். அவர் சுளகினால் கோதுமையையும் பதரையும் பிரித்தெடுத்து, கோதுமையைத் தம் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார்.

மக்கள் : நாங்கள் என்ன செய்யவேண்டும்?

யோவான் : இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். உணவை உடையவரும் அவ்வாறே செய்யவேண்டும்.

வரி

வசூலிப்பவர் : போதகரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

யோவான் : உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக ஒன்றும் வாங்காதீர்.

போர்வீரர் : நாங்கள் என்ன செய்ய வேண்டும் ?

யோவான் : எவரையும் பயமுறுத்திப் பணம் பறிக்காதீர்; யார் மீதும் பொய்க்குற்றம் சுமத்தாதீர்; உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்.

மேலும் பல அறிவுரைகளைக் கூறி மக்களுக்கு நற்செய்தியை அறிவித்தார் யோவான்.

யோவானின் சான்று (யோ. 1 : 19 - 28)

யோவான் யார் என்று அறிய எருசலேமிலுள்ள யூதர் குருக்களையும் லேவியரையும் பரிசேயரையும் அனுப்பினர்.

குருக்களும்

லேவியரும் : நீர் யார் ?

யோவான் : நான் மேசியா அல்ல.

குருக்களும்

லேவியரும் : அப்படியானால் நீர் எலியாவா அல்லது வர வேண்டிய இறைவாக்குநரா?

யோவான் : அவரல்ல நான்.

குருக்களும்
லேவியரும் : நீர் யார்? எங்களை அனுப்பினவரிடம் நாங்கள் மறுமொழி சொல்லியாக வேண்டும்; எனவே உம்மைப் பற்றி என்ன சொல்லுகிறீர்?

யோவான் : ஆண்டவருக்காக வழியைச் செம்மையாக்குங்கள் என வனாந்தரத்தில் குரல் ஒன்று கேட்கிறது" என்று இறைவாக்குநர் ஏசாயா உரைத்தது என்னைப் பற்றியே.

பரிசேயர் : நீர் மேசியாவுமல்ல, எலியாவுமல்ல, வர வேண்டிய இறைவாக்குநரும் அல்ல என்றால், ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீர்?

யோவான் : நான் நீரினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார். அவர் எனக்குப் பின் வருபவர். எனினும், என்னிலும் மேன்மையுள்ளவர். அவருடைய மிதியடிகளின் வாரை அவிழ்க்கக் கூட நான் தகுதியற்றவன்.

இவை யாவும் யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த யோர்தான் ஆற்றுக்கு அக்கரையிலுள்ள பெத்தானியாவில் நிகழ்ந்தன.

கடவுளின் ஆட்டுக்குட்டி (மத். 3: 13-17; யோ. 1:29 -34)

மறுநாள் இயேசு ஞானஸ்நானம் பெற யோர்தான் ஆற்றுக்கு வருவதைக் கண்ட யோவான்"இதோ! உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற கடவுளின் ஆட்டுக்குட்டி. எனக்குப் பின் ஒருவர் வருகிறார். அவர் எனக்கு முன்பே இருந்தவர். எனவே அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொன்னவர் இவரே. இவரை நான் அறியாதிருந்தும் இஸ்ரவேல் மக்களுக்கு இவரை வெளிப்படுத்தும் பொருட்டே நான் நீரினால் ஞானஸ்நானம் கொடுத்து வருகிறேன்" என்றார்.

யோவான் : நான் தான் உம்மிடம் ஞானஸ்நானம் பெற வேண்டியவன். அப்படியிருக்க, நீர் என்னிடம் வரலாமா?

இயேசு : இப்பொழுது விட்டு விடு. கடவுளுக்கு ஏற்புடைய அனைத்து நீதியையும் நாம் நிறைவேற்றுவது தான் முறை.

அதற்கு இணங்க யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார், ஞானஸ்நானம் பெற்று இயேசு நீரை விட்டு வெளியேறியதும் வானம் திறக்கப்பட்டது. கடவுளின் ஆவி புறாவைப் போல் அவர் மீது இறங்கியது. அப்பொழுது "இவர் என்னுடைய நேச மைந்தர். இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்,"என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

"தூயஆவி புறாவைப்போல வானில் இருந்து இறங்கி இவர் மீது தங்கியிருந்ததைக் கண்டேன். இவர் யாரென்று நானும் அறியாதிருந்தேன். ஆனால் நீரினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பியவர், "தூயஆவி இறங்கி யார் மீது அமர்வதைக் காண்பீரோ அவரே தூயஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பவர்," என்று என்னிடம் கூறியிருந்தார். அதை நான் கண்டு இவரே இறைவன் எனச் சான்று பகர்ந்து வருகிறேன்" என்று யோவான் கூறினார்.

இயேசுவும் யோவானும் (யோ : 3:22 -36)

பின்பு இயேசுவும் அவருடைய சீடரும் யூதேயாப் பகுதிக்குச் சென்றனர். அங்கே அவர் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். யோவானும் சலீம் ஊருக்கு அருகில் உள்ள அயினோனில் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏனெனில் அங்கு தண்ணீர் மிகுதியாய் இருந்தது.

ஒரு நாள் யோவானின் சீடர் சிலருக்கும் யூதருக்குமிடையே தூய்மைப்படுத்தும் முறை பற்றி வாக்குவாதம் உண்டாயிற்று. அவர்கள் யோவானிடம் போய், "ரபீ, யோர்தான் ஆற்றின் அக்கரையில் உம்முடன் இருந்தாரே; அவரைக் குறித்து நீரும் சான்று அளித்தீரே; இப்பொழுது அவரும் ஞானஸ்நானம் கொடுக்கிறார். எல்லாரும் அவரிடம் செல்லுகின்றனர்." என்றனர்.

யோவான் அவர்களிடம், "விண்ணிலிருந்து அருளப்படாத எதையும் எவரும் தமக்கு உரியதாக்கிக் கொள்ள இயலாது. நான் கிறிஸ்து அல்ல: அவருக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன் என்று நான் கூறியதற்கு நீங்களே சாட்சிகள். மணமகள் மணமகனுக்கு உரியவர். மணமகனின் தோழர் அருகில் நின்று அவர் சொல்லுவதைக் கேட்கிறார். கேட்டுப் பெரு மகிழ்ச்சி அடைகிறார். என் மகிழ்ச்சியும் இது போன்றதே. இம்மகிழ்ச்சி இப்பொழுது எனக்கு நிறைவாகக் கிடைத்துள்ளது. அவரது செல்வாக்கு பெருக வேண்டும். எனது செல்வாக்கு குறைய வேண்டும்," என்றார்.

விண்ணுலகிலிருந்து வருபவர்

"மண்ணுலகிலிருந்து உண்டானவர் மண்ணுலகுக்குரியவர். மண்ணுலகுக்குரியவை பற்றியே அவர் பேசுகிறார். விண்ணுலகிலிருந்து வருபவர், அனைவருக்கும் மேலானவர். தான் கண்டதையும் கேட்டதையும் பற்றியே அவர் சான்று பகர்கிறார். அவருடைய சான்றை ஏற்றுக்கொள்ளுபவர் எவரும் கடவுள் உண்மையானவர் என்பதை உறுதிப்படுத்துகிறார். கடவுளால் அனுப்பப்பட்டவர் கடவுளின் வாக்கைச் சொல்லுகிறார். அவருக்குக் கடவுள் தம் ஆவிக்குரிய கொடைகளை அளவின்றிக் கொடுக்கிறார். தந்தை மைந்தரிடம்

அன்பு கூர்ந்து அனைத்தையும் அவர் கையில் ஒப்படைத்துள்ளார். அந்த மைந்தரிடம் நம்பிக்கை கொள்ளுவோர் இப்பொழுதே நிலைவாழ்வைப் பெறுவர். நம்பிக்கை கொள்ளாதோர் நிலைவாழ்வைக் காணமாட்டார். கடவுளின் சினமே அவர்கள் மேல் நிலைத்திருக்கும்'' என்றார்.

இயேசு சோதிக்கப்படுதல் (மத். 4:1-11; மா 1;12-13; லூக் 4:1-13)

இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்காக தூய ஆவியால் வனாந்தரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு காட்டு விலங்குகளிடையே இருந்தார். வானதூதர் அவருக்குப் பணிவிடை செய்தனர். நாற்பது நாட்கள் இரவும் பகலும் நோன்பிருந்ததால் அவருக்குப் பசியுண்டாயிற்று.

சோதிக்கிறவன் அவரிடம் வந்து ''நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பங்களாகும்படி கட்டளையிடும்'' என்றான். அவர் மறுமொழியாக ''மனிதர் வாழ்வது அப்பத்தினால் மட்டுமன்று. மாறாக, கடவுளின் திருவாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லாலும் வாழ்வர் என மறைநூலில் எழுதப்பட்டுள்ளதே'' என்றார்.

பின்னர் பிசாசு அவரை எருசலேமின் திருநகரத்திற்குக் கொண்டு சென்று திருக்கோவிலின் உச்சியில் அவரை நிறுத்தி, ''நீர் இறைமகன் என்றால், கீழே குதியும். அவர் உம்மைக் குறித்துத் தம்முடைய தூதருக்குக் கட்டளையிடுவார். உமது கால் கல்லின் மேல் மோதாதபடி அவர்கள் உம்மைத் தங்கள் கைகளில் தாங்கிக் கொள்ளுவார்கள் என்று மறைநூலில் எழுதப்பட்டுள்ளது,'' என்று அவரிடம் கூறினான்.

இயேசு அவனிடம், ''உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம் எனவும் எழுதியுள்ளதே'' என்று சொன்னார்.

மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலைக்குக் கூட்டிச்சென்று உலகத்தின் அரசுகள் அனைத்தையும், அவற்றின் மேன்மையையும் அவருக்குக் காட்டி, ''நீர் கீழே விழுந்து என்னை வணங்கினால் இவை அனைத்தையும் உமக்குத் தருவேன்'' என்றான். அப்பொழுது இயேசு, ''அகன்று போ சாத்தானே'' என்று அதட்டி ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய் என்றும் எழுதியுள்ளதே'' என்றார். பின்னர் பிசாசு அவரை விட்டு சிலகாலம் அகன்று போனான். உடனே வானதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தனர்.

கலிலேயாவில் இயேசுவின் தொடக்கப்பணி
(மத் 4:12-16,மா 1:14-15 லூக் 4:14-15)

பின்பு இயேசு தூயஆவியின் வல்லமை உடையவராய் கடவுளின் நற்செய்தியை பறைசாற்றிக்கொண்டே கலிலேயாவுக்குத் திரும்பிச் சென்றார்.

"காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி இந்நற்செய்தியை நம்புங்கள்," என்றார். அவரைப்பற்றிய பேச்சு சுற்றுப்புறம் எங்கும் பரவியது. அவர் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் போதித்து வந்தார். எல்லாரும் அவரைப் புகழ்ந்தனர்.

நாசரேத்தில் இயேசு புறக்கணிக்கப்படுதல்
(மத். 4: 13-16, மா. 6:1-4, லூக். 4:16-30)

பிறகு அவர் தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து, தமது வழக்கத்தின்படி ஓய்வு நாளில் தொழுகைக் கூடத்திற்குச் சென்று மறைநூல் பகுதியை வாசிக்க எழுந்து நின்றார். இறைவாக்குநர் ஏசாயாவின் நூற்சுருள் அவரிடம் கொடுக்கப்பட்டது. அதை அவர் விரித்து,

" ஆண்டவருடைய ஆவி என்மேல் இருக்கிறது,
அவர் என்னை அருட்பொழிவு செய்துள்ளார்,
எளியவருக்கு நற்செய்தியை அறிவிக்கவும்,
' சிறைப்பட்டோருக்கு விடுதலை!
பார்வையற்றோருக்குப் பார்வை' ! என்று அறிவிக்கவும்,
ஒடுக்கப்பட்டோர் விடுதலை அடையும்படி செய்யவும்
' இதோ ! ஆண்டவர் அருள்தரும் ஆண்டு!' என்று அறிவிக்கவும்
அவர் என்னை அனுப்பியுள்ளார்"

என்று எழுதியிருக்கிற பகுதியை எடுத்து வாசித்த பிறகு அந்த நூல்சுருட்டி பணிவிடைக்காரரிடம் கொடுத்துவிட்டு அமர்ந்தார். தொழுகைக் கூடத்திலுள்ள எல்லாருடைய பார்வையும் அவர்மீதே இருந்தது. அப்பொழுது அவர் அவர்களிடம் "நீங்கள் கேட்ட மறை நூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" என்றார். அவருடைய அருள் மொழிகளைக் கேட்டு, வியப்புற்று, "இவன் யோசேப்பின் மகன் தானே" என்றனர். "இவருக்கு இவை எங்கிருந்து வந்தன? இவருக்கு அருளப்பட்டிருக்கும் ஞானந்தான் என்னே! இவருடைய கைகளால் வல்லமைச் செயல்கள் நடப்பதெப்படி? இவர் தச்சன் அல்லவா? இவர் யோசேப்பின் மகன் அல்லவா? மரியாளின் மகன் தானே? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்களின் சகோதரன் அல்லவா? இவருடைய சகோதரிகள் இங்கே நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?" என்றனர். இது அவரை ஏற்றுக் கொள்ள அவர்களுக்குத் தடையாயிருந்தது. இயேசு அவர்களிடம், "இறைவாக்குநருக்குத் தம் சொந்த ஊரிலும், சுற்றத்தாரிடையேயும், வீட்டிலும் மதிப்பு இராது. அங்கு அவர் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை."

"நீங்கள் என்னிடம், 'மருத்துவரே உம்மையே நீர் குணமாக்கிக் கொள்ளும்' என்னும் பழமொழியைச் சொல்லி, கப்பர்நகூமில் நீர் செய்ததாக நாங்கள் கேள்விப்பட்டவற்றை எல்லாம் உம் சொந்த ஊராகிய இவ்விடத்திலும்

செய்யும் எனக் கண்டிப்பாகக் கூறுவீர்கள். எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகளாக வானம் அடைபட்டு நாடெங்கும் பெரும் உணவுப் பஞ்சம் உண்டானது. அக்காலத்தில் இஸ்ரயேலரிடையே கைம்பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும் அவர்களுள் எவரிடமும் எலியா அனுப்பப்படவில்லை. சீதோன் நாட்டைச் சார்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்ணிடமே அனுப்பப்பட்டார். மேலும், இறைவாக்குநர் எலிசாவின் காலத்தில் இஸ்ரயேலரிடையே தொழுநோயாளிகள் பலர் இருந்தனர். ஆயினும் அவர்களுள் எவரும் குணமடையவில்லை. சீரியா நாட்டைச் சார்ந்த நாமானே குணமாக்கப்பட்டார்" என்றார்.

இவற்றைக் கேட்டபோது தொழுகைக் கூடத்தில் இருந்த அனைவரும் சீற்றங்கொண்டு எழுந்து அவரை ஊருக்கு வெளியே பிடித்துத் தள்ளி, அவ்வூர் அமைந்திருந்த மலையிலுள்ள செங்குத்தான ஓர் இடத்திலிருந்து கீழே தள்ளி விடும்படி அவரை அங்கே நடத்திச் சென்றனர். அவரோ அவர்கள் நடுவிலிருந்து அப்பால் போய்விட்டார்.

நோயாளிகள் சிலர் மேல் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினதைத் தவிர வேறு வல்லமைச் செயல் எதையும் அங்கு அவரால் செய்ய இயலாமற்போயிற்று. அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததைக் கண்டு வியப்புற்றார்.

அவர் நாசரேத்தை விட்டு,செபுலோன், நப்தலி என்னும் நாடுகளின் கடற்கரைக்கு அருகில் உள்ள கப்பர்நகூம் என்னும் ஊருக்குப் போய் அங்கே தங்கினார். இறைவாக்குநர் ஏசாயா மூலமாக உரைக்கப்பட்டது இவ்வாறு நிறைவேறிற்று.

" *செபுலோன் நாடே, நப்தலி நாடே,*
யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள கடற்கரைப்பகுதியே,
கடவுள் பற்றில்லாதவர் வாழும் கலிலேயாவே,
இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்,
சாவு நிழல் சூழ்ந்த நாட்டிலிருந்தவர்களுக்கு ஒளி உதித்தது."

கலிலேயா யூதேயா நாடுகளில் உள்ள ஊர்கள் தோறும் நற்செய்தி முழக்கம் (மா. 1 : 35 – 39 , லூக் 4:42-44)

இயேசு பொழுது விடியும் வேளை எழுந்து தனிமையான இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார். சீமோனும் அவருடன் இருந்தவர்களும் அவரைத் தேடிச் சென்றனர். அவரைக் கண்டதும், "எல்லாரும் உம்மைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறி அவர் தங்களை விட்டுப் போகாதவாறு அவரைத் தடுத்து நிறுத்தப் பார்த்தனர். அதற்கு அவர் "நாம் அடுத்த ஊர்களுக்குப் போவோம் வாருங்கள். அங்கும் நான் இறையாட்சி பற்றிய

நற்செய்தியை அறிவிக்க வேண்டும். இதற்காகவே நான் அனுப்பப் பட்டிருக்கிறேன்,'' என்றார். பின்பு அவர் கலிலேயா மற்றும் யூதேயாவில் நாடு முழுவதும் சென்று அங்குள்ள தொழுகைக் கூடங்களில் நற்செய்தியைப் பறைசாற்றி பேய்களை ஓட்டினார்.

இயேசுவும் திருமுழுக்குநர் யோவானின் சீடரும்

(மத். 11: 2-19; லூக். 7:18-35)

யோவான் சிறையிலிருந்தபோது மேசியாவின் அரிய செயல்களைப் பற்றிக் கேள்வியுற்று, தம் சீடருள் இருவரை வரவழைத்து, "வரவிருப்பவர் நீர் தானா? அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமா'' எனக்கேட்க ஆண்டவரிடம் அனுப்பினார். அவர்கள் அவரிடம் வந்து, "வரவிருப்பவர் நீர்தானா? அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமா? எனக் கேட்க, திருமுழுக்குநர் யோவான் எங்களை உம்மிடம் அனுப்பினார்,'' என்றனர்.

அந்நேரத்தில் பிணிகள், கொடிய நோய்கள், பொல்லாத ஆவிகள் இவற்றினின்று பலரைக் குணமாக்கி, குருடர் பலருக்குப் பார்வை அளித்துக் கொண்டிருந்தார். பிறகு அவர் அவர்களிடம், நீங்கள் இப்பொழுது பார்த்தவற்றையும் கேட்டவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள். குருடர் பார்வையடைகிறார்கள். முடவர் நடக்கிறார்கள். தொழுநோய் உள்ளவர்கள் குணமடைகிறார்கள். செவிடர் கேட்கிறார்கள். இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுகிறார்கள். எளியவருக்கு அருட்செய்தி அறிவிக்கப் படுகிறது. என்னைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளுவோர் நற்பேறு பெற்றோர்'' என்றார்.

யோவானின் சீடர்கள் திரும்பிச் சென்ற பிறகு இயேசு மக்களிடம் யோவானைப்பற்றிப் பேசத் தொடங்கினார். "நீங்கள் எதைப் பார்க்கப் பாலைநிலத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையா? இல்லையென்றால் யாரைப் பார்க்கச் சென்றீர்கள்? மெல்லிய ஆடை அணிந்த ஒரு மனிதரையா? மெல்லிய ஆடை அணிந்தவர்கள் அரச மாளிகைகளில் அல்லவா இருக்கின்றனர். பின்னர் யாரைத்தான் பார்க்கச் சென்றீர்கள்? இறைவாக்குநரையா? ஆம், இறைவாக்குநரைவிட மேலான வரையே என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.''

"இதோ ! நான் என் தூதனை உமக்கு முன்னால் அனுப்புகிறேன். அவர் உமக்கு முன் சென்று உமக்கு வழியை ஆயத்தம் செய்வார், என்று மறைநூலில் குறிக்கப்பட்டவர் இவரே. மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்குநர் யோவானை விடப் பெரியவர் எவரும் தோன்றினதில்லை. ஆயினும், இறையாட்சியில் மிகச் சிறியவரும் இவரைவிடப் பெரியவர் என்று நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். திருமுழுக்குநர் யோவான்

வந்தது முதல் இந்நாள் வரையிலும் இறையாட்சி வல்லமையாகச் செயலாற்றி வருகிறது. அதைப்பற்றியே யோவான் வரும் வரை திருச்சட்டமும் எல்லா இறைவாக்கு நூல்களும் இறைவாக்குரைத்தன. வரவேண்டியவராகிய எலியா இவரே. உங்களுக்கு மனமிருந்தால் இதை ஏற்றுக் கொள்ளுங்கள். கேட்டுணரும் செவியுள்ளோர் இதைக் கேட்கட்டும்."

ஆயக்காரர் உட்பட எல்லா மக்களும் இதைக் கேட்டு கடவுளுடைய நீதி நெறியை ஏற்றுக்கொண்டனர். ஏனெனில் அவர்கள் யோவானின் திருமுழுக்கைப் பெற்றிருந்தனர். ஆனால் பரிசேயரும் திருச்சட்ட அறிஞருமோ அவரிடம் திருமுழுக்குப் பெறாது தங்களுக்கென்று கடவுள் வகுத்திருந்த திட்டத்தைப் புறக்கணித்தனர்.

பின்னர் இயேசு, "இந்தத் தலைமுறையினரை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் சந்தை வெளியில் உட்கார்ந்து மற்றவர்களைக் கூப்பிட்டு,

நாங்கள் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை
நாங்கள் ஒப்பாரிவைத்தோம், நீங்கள் மாரடித்துப் புலம்பவில்லை,

என்று கூறி விளையாடும் சிறுபிள்ளைகளுக்கு ஒப்பானவர்கள். எப்படியெனில், யோவான் வந்தபோது அவர் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை. இவர்களோ அவன் பேய் பிடித்தவன் என்கிறார்கள். மானிட மகன் வந்துள்ளார். அவர் உணவு உண்கிறார். பானமும் அருந்துகிறார். இவர்களோ இம்மனிதன், பெருந்தீனிக்காரன், குடிகாரன், வரி வசூலிப்பவர்களுக்கும் பாவிகளுக்கும் நண்பன்' என்கிறார்கள். எனினும் ஞானம் மெய்யானது என்பதற்கு அதை ஏற்றுக் கொண்டோரின் செயல்களே சான்று."

திருமுழுக்குநர் யோவான் கொல்லப்படுதல்
(மத். 14:1-12, மா.6:14-29,லூக் 9:7-9)

இயேசுவின் பெயர் எங்கும் பரவியது. ஏரோது அரசனும் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டான். சிலர், திருமுழுக்குநர் யோவான் இறந்தோரிடமிருந்து எழுந்து விட்டார். அதனாலேதான் இந்த வல்ல செயல்கள் இவரால் செய்யப்படுகின்றன என்றனர். வேறு சிலர் இவர் எலியா என்றனர். மற்றும் சிலர் மற்ற இறைவாக்குநர்களைப் போல இவரும் ஓர் இறைவாக்குநரே என்றனர். ஆனால் ஏரோது அதைக் கேள்விப்பட்டபோது, "அவர் யோவானே! அவர் தலையை நான் வெட்டச் செய்தேன். ஆனால் அவர் உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறார்!" என்று சொன்னான்.

இந்த ஏரோதுதான் தன் சகோதரனான பிலிப்பின் மனைவி ஏரோதியாவைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டவன். யோவான் ஏரோதுவிடம், "உம் சகோதரருடைய மனைவியை நீர் வைத்திருப்பது முறையன்று," என்று சொல்லி வந்தார். அவள் பொருட்டு ஏரோது ஆள்

அனுப்பி யோவானைப் பிடித்து விலங்கிட்டுச் சிறையில் அடைத்திருந்தான். ஏரோதியா அவர் மீது காழ்ப்பு உணர்வு கொண்டு அவரைக் கொலை செய்ய விரும்பினாள். ஆனால் அவளால் அப்படிச் செய்ய இயலவில்லை. ஏனெனில் யோவான் நேர்மையும், தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்திருந்ததினால் அவருக்கு அஞ்சி அவரைப்பாதுகாத்து வந்தான். அவர் சொல்லைக் கேட்டு மனக்கலக்கம் அடைந்தபோதிலும் அவருக்கு மனமுவந்து செவி சாய்ப்பதுண்டு.

ஒரு நாள் ஏரோதியாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்தது. ஏரோது தன் பிறந்த நாளில், அரசியல் தலைவர்களுக்கும், படைத்தலைவர்களுக்கும் கலிலேயா நாட்டுப் பெரியோருக்கும் விருந்தளித்தான். அப்பொழுது ஏரோதியாவின் மகள் உள்ளே வந்து நடனம் ஆடி ஏரோதையும் விருந்தினரையும் அகமகிழச் செய்தாள். அரசன் அவளிடம், "நீ விரும்புவதை என்னிடம் கேள். நீ என்னிடம் எதைக் கேட்டாலும் ஏன் நான் ஆளும் நாட்டில் பாதியையே கேட்டாலும் உனக்குத் தருகிறேன்," என்று ஆணையிட்டுக் கூறினான். அவள் வெளியே சென்று 'நான் என்ன கேட்கலாம்' என்று தன் தாயிடம் கேட்டாள். அவள், 'திருமுழுக்குநர் யோவானின் தலையைக் கேள்'என்றாள். உடனே அவள் அரசனிடம் விரைந்து வந்து "திருமுழுக்குநர் யோவானின் தலையை இப்பொழுதே ஒரு தட்டில் வைத்து எனக்குக் கொடுக்க வேண்டும்," என்று கேட்டாள். இதைக் கேட்டதும் அரசன் மிகவும் வருந்தினான். ஆயினும் விருந்தினர் முன் தான் ஆணையிட்டதால் அவளுக்கு அதை மறுக்க விரும்பவில்லை. உடனே அரசன் ஒரு காவலனை அனுப்பி யோவானுடைய தலையைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான். அவன் போய் சிறையில் இருந்த யோவானின் தலையை வெட்டி அதை ஒரு தட்டில் கொண்டு வந்து அந்தச் சிறுமியிடம் கொடுக்க அவள் அதைத் தன் தாயிடம் கொடுத்தாள். இதைக் கேள்விப்பட்ட யோவானின் சீடர்கள் வந்து, அவர் உடலை எடுத்துச் சென்று அதை ஒரு கல்லறையில் வைத்தார்கள்

பகுதி 2

இயேசுவின் சீடர்கள்

இயேசு தெரிந்து கொண்ட சீடர்கள் பன்னிருவர். அவர்கள் அனைவருமே ஒரே நாளில் தெரிந்து கொள்ளப்படவில்லை. இந்த இலக்கத்தை அடைய ஓராண்டுக்கு மேல் ஆகிவிட்டது. ஈராண்டுகளுக்கு மேல் அவரோடு அவருடைய நிழல் போல் இருந்த போதிலும் அவருடைய போதனைகளையும். அவர் இம் மண்ணுலகத்துக்கு வந்த நோக்கத்தையும் அவரது உயிர்த்தெழுதல் வரை புரியாமலே இருந்தனர். அவர்களுடைய பதவி ஆசைக்கும், மறுதலிப்புக்கும், காட்டிக் கொடுத்தலுக்கும். ஐயப்பாடுகளுக்கும் இதுவே காரணம். தூய ஆவியினால் நிரப்பப்பட்ட பின்னரே சீடத்துவத்தின் சிறப்பை அவர்கள் புரிந்து கொண்டனர். தமது விண்ணேற்றத்திற்கு முன்பு மண்ணுலக எல்லையெங்கும் நற்செய்தியை எடுத்துச் செல்லுமாறு ஆணையிட்டார். எவ்விதத் தயக்கமின்றி அவரது ஆணைக்குக் கீழ்ப்படிந்து பலர் இரத்தச் சாட்சியாக இறக்க நேரிட்டது. இந்தியாவுக்கு நற்செய்தியைக் கொண்டு வந்த தோமா அவர்களுள் ஒருவர். சென்னையில் உள்ள சாந்தோமில் அவருடைய கல்லறை உள்ளது. சாந்தோம் என்பதற்குத் தூய தோமா என்று பொருள்.

இயேசுவின் சீடர்கள் (லூக். 5: 1-11 மத். 4:18-22, மத். 10: 1-5, மாற்கு 1: 16-20, யோ. 1:35-51)

இயேசு கலிலேயாக் கடலோராமாய் நடந்து போன வேளையில் மீனவரான சகோதரர் இருவர் வலைகளை அலசிக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர் பேதுரு எனப்பட்ட சீமோன். மற்றவர் அவருடைய சகோதரன் அந்திரேயா. இயேசு அவர்களைப்பார்த்து "நீங்கள் என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என்றார். உடனே அவர்கள் படகையும் வலைகளையும் கரையில் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றிச் சென்றனர். மேசியாவை முதன்முதலில் கண்டவர்கள் இவர்கள் இருவருமே. மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்பது பொருள். இயேசு சீமோனிடம், "நீ யோவானுடைய மகன் சீமோன்; நீ கேபா என்று அழைக்கப்படுவாய்" என்றார்

(கேபா என்ற அரமேயுச் சொல்லுக்குக் கற்பாறை என்று பொருள்)

இயேசு அவ்விடத்தை விட்டு அப்பால் சென்ற போது செபெதேயுவின் மகன் யாக்கோபு, அவருடைய சகோதரன் யோவான் ஆகிய இருவரையும் கண்டார். அவர்கள் தங்கள் தந்தை செபெதேயுவுடன் படகில் இருந்தவாறு வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களையும் இயேசு அழைத்தார். உடனே அவர்கள் தங்கள் படகையும் தகப்பனையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றிச் சென்றனர்.

மறுநாள் இயேசு கலிலேயாவில் பெத்சாய்தாவைச் சேர்ந்த பிலிப்பைக் கண்டு "என்னைப் பின் பற்றி வா" என்றார் (அந்திரேயாவும் பேதுருவும் பெத்சாய்தா ஊரினர்) பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு "மோசே திருச்சட்ட நூலிலும், இறைவாக்குநர் தம் நூல்களிலும் யாரைக் குறித்து எழுதியிருக்கிறார்களோ அவரை நாங்கள் கண்டுகொண்டோம். நாசரேத்தைச் சேர்ந்த யோசேப்பின் மகன் இயேசுவே, அவர்" என்றார். அதற்கு நாத்தான்வேல் "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரக்கூடுமோ?" என்று கேட்டார். பிலிப்பு அவரிடம், "நீரே வந்து பாரும்" என்றார். நாத்தான்வேல் தம்மை நோக்கி வருவதை இயேசு கண்டு "இவரே கபடமற்ற உண்மையான இஸ்ரவேலர்." என்றார்.

நாத்தான்வேல் : என்னை உமக்கு எப்படித் தெரியும்?

இயேசு : பிலிப்பு உம்மை அழைக்குமுன் நீர் அத்திமரத்தின் கீழ் இருந்தபோதே நான் உம்மைப் பார்த்தேன்.

நாத்தான்வேல் : உம்மை அத்திமரத்தின் கீழ் கண்டேன் என்று உம்மிடம் சொன்னதாலா இப்படி நம்புகிறீர்? இதைவிடப் பெரிய காரியங்களை நீர் காண்பீர். மேலும் வானம் திறந்திருக்கிறதையும், கடவுளின் தூதர்கள் மானிடமகன் வழியாக செல்லுவதையும், இறங்கிவருகிறதையும், காண்பீர்கள் என மிக உறுதியாக உங்களக்குச் சொல்லுகிறேன்.

அவர்களுடைய படகைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி கேட்டு, அதில் உட்கார்ந்து கொண்டு இறைவார்த்தையைக் கேட்பதற்கு அவரை நெருக்கிக் கொண்டிருந்த திரளான மக்களுக்குப் போதித்தார். பின்பு, சீமோனிடம் "படகை ஆழத்திற்குத் தள்ளிக் கொண்டுபோய் மீன் பிடிக்க உங்கள் வலைகளை வீசுங்கள்" என்றார். சீமோன் அவரிடம், "ஐயா இரவு முழுவதும் நாங்கள் முயற்சி செய்தும் ஒன்றும் அகப்படவில்லை. ஆயினும் உமது சொற்படியே வலைகளை வீசுகிறேன்," என்று சொல்லி வலைகளை அவர்கள் வீசினர். வலைகள் கிழியும் அளவுக்குத் திரளான மீன்கள் அகப்பட்டன. அதைக் கண்டு சீமோன் பேதுரு இயேசுவின் காலில் விழுந்து, "ஆண்டவரே, நான் பாவியான மனிதன். நீர் என்னை விட்டுப் போய்விடும்," என்றார்.

பிடித்த மீன்களின் திரளைக் கண்டு சீமோனின் கூட்டாளிகளும் செபெதேயுவின் மைந்தர்களுமான யாக்கோபும் யோவானும் திகைத்துப் போயினர்.

பன்னிருத் திருத்தூதுவர் (மா; 3 :13-19.லூக் 6: 12-16)

ஒரு நாள் இயேசு விண்ணப்பம் செய்வதற்காக மலைக்குப்போய் இரவு முழுவதும் கடவுளிடம் வேண்டுதல் செய்து கொண்டிருந்தார். பொழுது விடிந்ததும், அவர் தம் சீடர்களை வரவழைத்து தம்மோடு இருப்பதற்காகவும் அருளுரை ஆற்றுவதற்கென்றும், அதிகாரத்தோடு பேய்களைத் துரத்துவதற்கென்றும் அனுப்புவதற்காக அவர்களுள் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் திருத்தூதுவர் எனப் பெயரிட்டார். பேதுரு என்று அவர் மறு பெயரிட்ட சீமோன் அவருடைய சகோதரான அந்திரேயா, செபதேயுவின் மைந்தர்கள் யாக்கோபு, யோவான் (இவர்கள் இருவருக்கும் போவனர்ஜஸ் என்று பெயரிட்டார். அச்சொல்லுக்கு இடிமுழக்க மக்கள் என்று பொருள்) பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் மகன் யாக்கோபு, ததேயு ; தீவிரவாதி எனப்பட்ட சீமோன், அவரைக் காட்டிக் கொடுத்த யூதா இஸ்காரியோத்து என்பவர்களே அவர்கள்.

பன்னிருவரையும் திருப்பணிக்கு அனுப்புதல் (மத் 10:5-15; மா 6:7-13; லூக் 9:1-6)

இயேசு பன்னிருவரையும் ஒன்றாய் வரவழைத்து, பேய்களை அடக்கவும், நோய்களைத் தீர்க்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் அளித்து கடவுளின் அரசை விளம்பரப்படுத்தவும், பிணியாளிகளைக் குணமாக்கவும், அவர்களை இருவர் இருவராகத் திருப்பணி செய்ய பின் வருமாறு கட்டளையிட்டு அனுப்பினார். "நீங்கள் யூதரல்லாதாரிடம் செல்லவேண்டாம்; சமாரியரின் ஊருக்குள் நுழையவும் வேண்டாம். காணாமற்போயிருக்கும் ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடமே செல்லுங்கள். அப்படிச் செல்லுகையில் விண்ணரசு நெருங்கியுள்ளது," என்று அறிவியுங்கள். "நோயாளிகளைக் குணமாக்குங்கள், இறந்தோரை உயிர்ப்பியுங்கள், தொழுநோயுள்ளவர்களைக் குணமாக்குங்கள், பேய்களை ஓட்டுங்கள். இலவசமாகப் பெற்றுக் கொண்டீர்கள். இலவசமாகக் கொடுங்கள்."

"உங்கள் அரைக் கச்சைகளில் பொன், வெள்ளி, செப்புக்காசு ஆகிய எதையும் எடுத்துச் செல்லவேண்டாம். வழிக்குப் பையோ, இரண்டு சட்டைகளோ, மிதியடிகளோ, கைத்தடியோ வேண்டாம். வேலை செய்கிறவன் உணவு பெறத் தகுதியுள்ளவன். நீங்கள் போகும் நகர் அல்லது சிற்றூர் எதுவாயினும் அங்கே உங்களை ஏற்கத் தகுதியுள்ளவன் யாரென்று கண்டறிந்து கொள்ளுங்கள். அங்கிருந்து புறப்படும் வரை அவனிடமே தங்கியிருங்கள். அந்த வீட்டுக்குள் நீங்கள் செல்லும்போது அந்த வீட்டாருக்கு வாழ்த்து கூறுங்கள். அவர்கள் தகுதியுள்ளவர்களாய் இருந்தால் நீங்கள் கூறின சமாதான வாழ்த்து அவர்கள் மேல் தங்கும். அவர்கள் தகுதியற்றவர்களாய் இருந்தால், நீங்கள் கூறின சமாதான வாழ்த்து உங்களிடமே திரும்பி வந்துவிடும்."

"யாராவது உங்களை ஏற்றுக் கொள்ளாமலும் உங்கள் சொல்லுக்குச் செவி சாய்க்காமலும் போனால் அந்த வீட்டையாவது ஊரையாவது விட்டு நீங்கள் புறப்படும்போது அவர்களை எச்சரிக்கும் வகையில் உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இறுதித் தீர்ப்பு நாளிலே சோதோம் கொமோராவுக்கு நேரிடுவது அந்த ஊருக்கு நேரிடுவதைவிடத் தாங்கக் கூடியதாக இருக்கும். இதை உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்."

அப்படியே அவர்கள் புறப்பட்டு ஊர் ஊராய்ச் சென்று மக்கள் மனமாற்றமடைய வேண்டுமென்று அருட்செய்தியை அறிவித்தார்கள். பல பேய்களை ஓட்டினார்கள். நோயாளிகள் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினார்கள்.

சீடருக்கு வரும் துன்பம் (மத்.10:16-25)

"உங்களை ஓநாய்களுக்கிடையே ஆடுகளைப்போல அனுப்புகிறேன். ஆகவே நீங்கள் பாம்புகளைப்போல விழிப்புள்ளவர்களாகவும், புறாக்களைப் போல சாந்த குணமுள்ளவர்களாகவும் இருங்கள். மனிதரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஏனெனில் அவர்கள் உங்களை விசாரணைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள், தங்கள் தொழுகைக் கூடங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள். அதிகாரிகளிடமும் அரசர்களிடமும் என் பொருட்டு இழுத்துச் செல்வார்கள். அவர்கள் முன்னும் யூதரல்லாதார் முன்னும் என்னைப்பற்றி சாட்சி கூற அப்பொழுது உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். எல்லா நாட்டினருக்கும் முதலில் அருட்செய்தி அறிவிக்கப்பட்டாக வேண்டும். ஆகையால் உங்கள் மனத்தில் நீங்கள் செய்ய வேண்டிய தீர்மானமாவது : உங்கள் எதிர்வாத வழக்கை முன்பே உருவாக்கிக் கொள்ளக்கூடாது என்பதே. "என்ன சொல்லுவோம், எப்படிச் சொல்லுவோம்" என்று கவலைப்படவேண்டாம். நீங்கள் என்ன சொல்ல வேண்டுமென்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். அதையே சொல்லுங்கள். ஏனெனில் நானே உங்களுக்கு நாவன்மையைக் கொடுப்பேன். நீங்கள் பேசவேண்டியவற்றை அந்நேரத்தில் தூயஆவியானவர் உங்களுக்குக் கற்பிப்பார். உங்களை எதிர்ப்பவர் எவராலும் அவற்றை எதிர்க்கவோ மறுக்கவோ இயலாது. ஏனெனில், பேசுவது நீங்கள் அல்ல, தூயஆவியானவரே உங்கள் மூலம் பேசுவார்."

"சகோதரன் தன் சகோதரனைக் கொல்லப்படுவதற்கு ஒப்புக் கொடுப்பான். தகப்பனும் தன் பிள்ளையை அப்படியே செய்வான். பெற்றோரை எதிர்த்துப் பிள்ளைகள் எழுந்து அவர்களைக் கொன்று விடும்படி செய்வார்கள். என் பெயரின் பொருட்டு நீங்கள் எல்லாருடைய பகைக்கும் ஆளாவீர்கள். ஆயினும், உங்கள் தலையிலுள்ள ஒரு முடிகூட அழிந்து போகாது. முடிவு மட்டும் நிலைநிற்பவனே மீட்புப் பெறுவான்."

"அவர்கள் உங்களை இந்த ஊரில் துன்புறுத்தும் போது வேறோர் ஊருக்கு ஓடிப்போங்கள். மனுமைந்தர் வருவதற்குள்ளாக நீங்கள் இஸ்ரவேலரின் ஊர்களையெல்லாம் முடித்திருக்கமாட்டீர்கள் என்று நான் உங்களிடம் உறுதியாகச் சொல்லுகிறேன். சீடன் குருவைவிடச் சிறந்தவன் அல்ல. ஒருவேளை சீடன் தன் குருவைப் போலவும் வேலைக்காரன் தன் தலைவனைப் போலவும் ஆகலாம். வீட்டுத் தலைவனையே பெயல்செபூல் என்று சொல்லும்போது, அவனுடைய வீட்டாரை அப்படிச் சொல்லுவது மிகவும் திண்ணமல்லவா?"

யாருக்கு அஞ்சவேண்டும் ? (மத் 10:26-33, லூக் 12:2-7)

"அதற்காக அவர்களுக்கு நீங்கள் அஞ்சவேண்டாம். ஏனெனில், வெளியாக்கப்படாத மறைச்செய்தியுமில்லை. அறியப்படாத இரகசிய முமில்லை. நான் உங்களுக்கு இருட்டில் கூறுவதை நீங்கள் வெளிச்சத்தில் எடுத்துச் சொல்லுங்கள். காதோடு காதாகப் பேசக் கேட்பதை வீடுகளின் மேல் இருந்து கொண்டு அறிவியுங்கள். ஆன்மாவைக் கொல்ல வல்லமையற்றவர் களாய், உடலை மட்டும் கொல்லுகிறவர்களைக் குறித்து அச்சங்கொள்ள வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் தள்ளி அழிக்க வல்லமை யுள்ளவருக்கே அஞ்சுங்கள். ஆம் அவருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகள் விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் தந்தைக்குத் தெரியாமல் அவற்றுள் ஒன்று கூடத் தரையில் விழாது. உங்கள் தலைமுடி கூட முற்றும் எண்ணப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் அஞ்சவே வேண்டாம். பல அடைக்கலான் குருவிகளை விட நீங்கள் மேலானவர்கள்."

"மனிதர் முன் என்னை ஏற்றுக் கொள்ளுபவனை நானும் விண்ணுலகிலிருக்கிற என் தந்தையின் முன்னிலையில் ஏற்றுக் கொள்ளு வேன். மனிதர்முன் என்னை மறுக்கிறவன் எவனோ அவனை நானும் விண்ணுலகிலிருக்கிற என் தந்தையின் முன்னிலையில் மறுப்பேன். எவனாவது மனுமைந்தனுக்கு விரோதமாக ஒரு வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். ஆனால் தூய ஆவிக்கு விரோதமாகப் பழிப்புரை கூறுகிறவனோ மன்னிப்பு பெறமாட்டான்."

பிரிவினை ஏற்படுதல் (மத் 10 :34-39, லூக் 12:51-53,14:26-27)

"மண்ணுலகில் தீயை வீச வந்தேன். அது ஏற்கனவே மூண்டு எரிந்து கொண்டிருக்க வேண்டுமென்பதே என் பேராவல். ஆயினும், நான் பெற வேண்டிய முழுக்கு ஒன்று உண்டு. அது நடந்து தீருமளவும் எனக்கு இருக்கும் மன நெருக்கடியைச் சொல்ல இயலாது. மண்ணுலகில் சமாதானத்தை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள். இல்லை, பிரிவினையை உண்டு

பண்ணவே வந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரே வீட்டிலுள்ள ஐந்து பேரினிடையே பிரிவினை ஏற்படும். இரண்டு பேருக்கு விரோதமாக மூன்று பேரும் மூன்று பேருக்கு விரோதமாக இரண்டு பேரும் இருப்பார்கள். அவர்கள் பிரிந்து தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும், மருமகள் மாமிக்கும் விரோதமாக இருப்பார்கள்.''

"ஒருவனுக்கு அவனுடைய வீட்டாரே பகைஞராயிருப்பர். என்னை நேசிப்பதைவிடத் தன் தகப்பனையோ, தாயையோ மிகுதியாக நேசிப்பவன் என்னுடையவன் என்று சொல்லப்படத் தகுதியற்றவன். என்னை நேசிப்பதைவிடத் தன் மகனையோ, மகளையோ, மிகுதியாக நேசிப்பவனும் என்னுடையவன் என்று சொல்லப்படத் தகுதியற்றவன். தனக்குரிய சிலுவையைச் சுமக்காமலும் என்னைப் பின்பற்றி வராமலும் இருக்கிறவன் என்னுடையவன் என்று சொல்லப்படத் தகுதியற்றவன். தன் வாழ்வைத் தேடி அடைபவன் அதை இழப்பான். என் பொருட்டுத் தன் வாழ்வை இழப்பவனோ அதை அடைவான்.''

பலன் பெறுபவர் யார் ? (மத்10:40-42, மா.9:41)

''உங்களை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான். உங்களுக்குச் செவி சாய்க்கிறவன் எனக்குச் செவி சாய்க்கிறான். உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக்கிறான். என்னைப் புறக்கணிக்கிறவனோ, என்னை அனுப்பினவரையே புறக்கணிக்கிறான். இறைவாக்குநர் ஒருவரை அவர் இறைவாக்குநராய் இருப்பதை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளுகிறவன், இறைவாக்குநருக்குரிய பலனைப் பெறுவான். நேர்மையானவர் ஒருவரை அவர் நேர்மையானவராய் இருப்பதை முன்னிட்டு ஏற்றுக்கொள்ளுகிறவன், நேர்மையானவர்க்குரிய பலனைப் பெறுவான். இச்சிறியவர்களுள் ஒருவனுக்கு அவன் கிறிஸ்துவின் சீடனாயிருப்பதன் பொருட்டு ஒரு கிண்ணம் தண்ணீர் எவன் குடிக்கக் கொடுக்கிறானோ, அவன் தன் பலனைப் பெறாமல் போவதில்லை என்று உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்.'' இவ்வாறு தம் சீடர் பன்னிருவருக்கும் கட்டளையிட்டார்.

எழுபதுபேரின் திருப்பணி (லூக். 10: 1-23)

இவற்றிற்குப் பின்பு இயேசு வேறு எழுபது பேரை நியமித்து தாம் போகவிருந்த ஒவ்வோர் ஊருக்கும் இடத்திற்கும் அவர்களைத் தமக்கு முன்பாக இருவர் இருவராக அனுப்பினார். அவர் அவர்களிடம், "அறுவடை மிகுதி, வேலையாட்களோ குறைவு. ஆகையால் அறுவடைக்குச் சொந்தக்காரர் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை

அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள். புறப்பட்டுப் போங்கள். ஓநாய்களுக்கிடையே ஆட்டுக்குட்டிகளைப் போல உங்களை அனுப்புகிறேன். பணப்பையோ, தோற்பையோ, மிதியடியோ கொண்டு போக வேண்டாம். வழியிலே எவரிடமும் நலம் விசாரிக்க நிற்க வேண்டாம். நீங்கள் எந்த வீட்டிற்குள் சென்றாலும் முதலில் இந்த வீட்டிற்குச் சமாதானம் என்று சொல்லுங்கள். அங்கே இருப்பவன் சமாதான சீலனாயிருந்தால் நீங்கள் கூறும் சமாதானம் அவனிடம் தங்கும். இல்லையென்றால் அது உங்களிடமே திரும்பிவிடும். அந்த வீட்டிலேயே நீங்கள் தங்கி அவர்கள் தருவதைச் சாப்பிடுங்கள். ஒரு வீட்டை விட்டு வேறொரு வீட்டுக்குப் போக வேண்டாம். நீங்கள் ஓர் ஊருக்குள் செல்லும்போது அவ்வூரார் உங்களை ஏற்றுக்கொண்டால் அவர்கள் உங்களுக்குக் கொடுப்பதை உட்கொண்டு அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைக் குணமாக்கி 'கடவுளின் அரசு உங்களை நெருங்கியுள்ளது,' என்று அங்குள்ளவர்களுக்குச் சொல்லுங்கள். ஓர் ஊருக்குள் செல்லும்போது அவ்வூரார் உங்களை ஏற்றுக்கொள்ளா விட்டால், அதன் தெருக்களில் நீங்கள் சென்று எங்கள் கால்களில் ஒட்டின உங்கள் ஊர் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறி விடுகிறோம். ஆயினும், இது உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும். 'கடவுளின் அரசு நெருங்கியுள்ளது' என்று சொல்லுங்கள். அந்நாளில் சோதோமுக்கு நேரிடுவது அந்த ஊருக்கு நேரிடுவதை விட தாங்கக் கூடியதாய் இருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

மனமாற்றமடையாத ஊராரைக் கேடு சூழும் (மத். 11:20-24, லூக். 10:13-16)

இயேசு தம்முடைய வல்லமைச் செயல்களுள் பெரும்பாலானவை செய்யப்பட்ட ஊர்கள் மனமாற்றம் அடையாமல் போனதால் அவற்றைக் கடிந்து கொண்டார்.

"கொராசீனே, உனக்குக் கேடுவரும்; பெத்சாயிதாவே, உனக்குக் கேடுவரும். உங்கள் நடுவில் செய்யப்பட்ட வல்லமைச் செயல்கள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்தால், அவர்கள் முன்னமே முரட்டுத் துணியும் சாம்பலும் அணிந்து மனமாற்றம் அடைந்திருப்பார்கள். இறுதித் தீர்ப்பு நாளில் தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது உங்களுக்கு நேரிடுவதை விடத் தாங்கக் கூடியதாக இருக்கும். கப்பர்நகூமே, நீ வானம் வரை உயர்த்தப்படப் போகிறாயோ? இல்லை, பாதாளம் வரை தாழ்த்தப்படுவாய். உன்னில் செய்யப்பட்ட வல்லமைச் செயல்கள் சோதோமில் செய்யப்பட்டிருந்தால் இந்நாள் வரைக்கும் அது நிலைத்திருக்குமே. இறுதித் தீர்ப்பு நாளில் சோதோம் நாட்டுக்கு நேரிடுவது உனக்கு நேரிடுவதைவிடத் தாங்கக் கூடியதாய் இருக்கும்" என்றார்.

எழுபது பேரும் திரும்பிவருதல் (லூக் 10:17-20)

அனுப்பப்பட்ட அந்த எழுபது பேரும் மகிழ்ச்சியோடு திரும்பிவந்து "ஆண்டவரே, உமது திருப்பெயரால் நாங்கள் கட்டளையிடும் போது பேய்கள்

கூட எங்களுக்குக் கீழ்ப்படிகின்றன" என்றனர். அவர் அவர்களிடம், "சாத்தான் வானத்தினின்று மின்னலைப்போல விழக் கண்டேன். பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், பகைவனின் முழு வல்லமையையும் அடக்கவும் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். ஒன்றுமே உங்களுக்குத் தீங்கிழைக்காது. ஆயினும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகின்றன என்பதற்காக நீங்கள் மகிழ்ந்து கொண்டிராமல், உங்கள் பெயர்கள் விண்ணுலகில் எழுதப்பட்டிருக்கின்றன என்பதற்காக மகிழ்ச்சியடையுங்கள்," என்றார்.

இயேசு அகமகிழ்தல் (மத் 11:25-27இ 13:16-17, லூக் 10:21-24)

அந்நேரத்தில் தூய ஆவியானவர் இயேசுவை அகமகிழச் செய்தார். அவர், "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, இவற்றை ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் மறைவாக்கி, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மைப் புகழ்ந்து போற்றுகிறேன். ஆம், தந்தையே, இதுவே உம்முடைய திருவுளம். எல்லாம் என் தந்தையினால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மைந்தர் யாரென்பதை தந்தையைத் தவிர வேறு எவனும் அறியான்," என்றார். அவர் சீடர் பக்கம் திரும்பி "நீங்கள் காண்கிறவற்றைக் காணும் கண்கள் நற்பேறு பெற்றவை. எப்படியெனில், இறைவாக்குநர் பலரும், அரசர்களும் நீங்கள் காண்கிறவற்றைக் காண விரும்பியும் காணவில்லை; நீங்கள் கேட்கிறவற்றைக் கேட்க விரும்பியும் கேட்கவில்லை," என்றார்.

"அழுத்தும் சுமை சுமந்து சோர்வுற்றிருப்பவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவன். ஆகையால் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஆன்மாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் இசைவாக அமைவது. என் சுமை பளுவற்றது," என்றார்.

இயேசுவின் உண்மையான உறவினர்
(மத். 12:46-50, மா. 3: 31-35, லூக். 8:19-2)

இயேசு மக்களோடு பேசிக் கொண்டிருந்தார். அவருடைய தாயாரும் சகோதரரும் வெளியே நின்று கொண்டிருந்தனர். ஒருவன் அவரிடம், "அதோ உம்முடைய தாயாரும் சகோதரரும் உம்மோடு பேச வேண்டுமென்று வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னான். அவரோ அவனைப் பார்த்து, "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?" என்று கேட்டார். பிறகு, தம் சீடருக்கு நேரே கையை நீட்டி "இதோ என் தாயும் , சகோதாரரும். விண்ணுலகிலிருக்கிற என் தந்தையின் விருப்பத்தை யார் நிறைவேற்றுகிறாரோ அவரே எனக்குச் சகோதரன், எனக்குச் சகோதரி, எனக்குத்தாய்" என்றார்.

பகுதி - 3

வல்லமைச்செயல்கள்/அரும்அடையாளங்கள்

நோயாளிகளைக் குணமாக்குதல், இயற்கைக்கு அப்பாற்பட்ட அரிய செயல்கள், இறந்தவர்களை உயிர் பெறச் செய்தல், வல்லமைச் செயல்கள் (அற்புதங்கள்) இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன.

3.1 நோய்கள் குணமாக்கப்படுதல்

தொழு நோயுள்ளவன் (மத்; 8:1-4, மா 1:40-45, லூக் 5:12-16)

ஒரு நாள் தொழுநோயுள்ள ஒருவன் இயேசுவிடம் வந்து, முழந்தாள் படியிட்டு, "உமக்கு மனமிருப்பின் என்னைக் குணமாக்க உம்மால் முடியும்" என்று வேண்டிக்கொண்டான். அவர் மனவுருக்கங்கொண்டு, தமது கையை நீட்டி அவனைத் தொட்டு, "எனக்கு மனமுண்டு, நீ குணமடைவாயாக," என்றார். உடனே தொழுநோய் அவனை விட்டு நீங்கிற்று. அவன் குணமானான்.

அவர் அவனிடம், "நீ யாரிடமும் சொல்லாதே; எச்சரிக்கையாயிரு. ஆனால் ஆசாரியரிடம் உன்னைக் காட்டி, நீ குணமானதற்காக மக்களுக்குச் சான்று தரும் வகையில் மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கைகளைச் செலுத்து," என்று கண்டிப்பாய் கட்டளையிட்டு உடனே அவனை அனுப்பினார். அவனோ புறப்பட்டுப் போய், இந்தச் செய்தியை எங்கும் அறிவித்து விளம்பரப்படுத்தினான். அதனால் அது முதற்கொண்டு அவரால் எந்த ஊருக்கும் வெளிப்படையாகச் செல்ல இயலாமற்போயிற்று. திரளான மக்கள் அவர் போதனையைக் கேட்கவும் தங்கள் பிணிகளினின்று குணமடையவும் கூட்டங் கூட்டமாய் வந்தனர். அவரோ வேளாவேளையில் ஆள் நடமாட்டமில்லாத இடத்திற்குச் சென்று ஜெபம் செய்து கொண்டிருப்பார்.

நூற்றுவர் தலைவனின் வேலைக்காரன் (மத் 8:5-13, லூக் 7: 1-10)

கப்பர்நகூமில் நூற்றுவர் தலைவனுடைய வேலைக்காரன் ஒருவன் திமிர்வாத நோயுற்று சாகுந்தருவாயிலிருந்தான். தலைவனுக்கு அருமையானவன் அவன். இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டபோது, தன் வேலைக்காரனைக் குணப்படுத்த வேண்டும் என்று இயேசுவை வேண்டிக்கொள்ள யூதரின் மூப்பர் சிலரை அவரிடம் அனுப்பினான். அவர்கள் இயேசுவிடம் வந்து, "நீர் இந்த உதவி செய்கிறதற்கு அவர் தகுதியுள்ளவர். நம்முடைய இனத்தை நேசிக்கிறவர். எங்களுக்கு ஒரு தொழுகைக் கூடத்தையும் கட்டியிருக்கிறார்," என்று சொல்லி அவரை வருந்தி

அழைத்தனர். "நான் வந்து அவனைக் குணப்படுத்துகிறேன்," என்று சொல்லி இயேசு அவர்களோடு போனார். வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் வந்தபோது நூற்றுவர் தலைவன் அவரிடம் "ஐயா, நீர் என் வீட்டிற்குள் வர நான் தகுதியற்றவன்; ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்; அப்பொழுது என் வேலைக்காரன் குணமாவான். நான் அதிகாரத்திற்குட்பட்டவன் தான். என்னிடமும் படைவீரர் உண்டு. நான் ஒருவனிடம் 'போ' என்றால் அவன் போகிறான். வேறொருவனிடம் 'வா' என்றால் அவன் வருகிறான். என் அடிமையிடம் இதைச் செய் என்றால் அவன் செய்கிறான்," என்றான். அதைக் கேட்டதும் இயேசு வியப்படைந்து, தமக்குப் பின் வந்து கொண்டிருந்தவர்களை நோக்கி இத்தகைய நம்பிக்கையை நான் இஸ்ரவேலருள் எவரிடமும் கண்டதில்லை. கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து விண்ணரசில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடன் பந்தியில் அமர்வர். ஆனால், அந்த அரசின் உரிமையாளர்களோ புறம்பே உள்ள இருளிலே தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் புலம்பலும் இருக்கும் என்று திட்டமாக உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்றார். பிறகு இயேசு நூற்றுவர் தலைவனிடம் "நீ போகலாம்; நீ நம்பினபடியே நடக்கும்" என்று சொன்னார். அவ்வேளையிலேயே அவனுடைய வேலைக்காரன் குணமடைந்தான்.

சீமோனின் மாமி மற்றும் பலர்
(மத் 8:14-17, மா 1:29-34, லூக் 4: 38-41)

இயேசு யாக்கோபோடும் யோவானோடும் சீமோன், அந்திரேயா என்பவர்களுடைய வீட்டுக்குப் போனார். அங்கே சீமோனுடைய மாமி கொடிய காய்ச்சலால் வருந்திக் கொண்டிருந்தாள். அவளைப்பற்றி அவரிடம் சொன்னதும், அவர் அவள் அருகே போய் கையைப்பிடித்து அவளைத் தூக்கினார். காய்ச்சல் அவளை விட்டு நீங்கிற்று. அவள் அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

பொழுது சாய்ந்ததும், பிணியாளிகள், பேய் பிடித்திருந்தவர்கள் அனைவரையும் மக்கள் அவரிடம் கொண்டு வந்தார்கள். ஊர் முழுவதும வீட்டு வாயிலின் முன் வந்து கூடி விட்டது. பல வகையான நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தவர் மேல் தம்முடைய கைகளை வைத்து அனைவரையும் அவர் குணமாக்கினார். பல பேய்களைத் தம் சொல்லைக் கொண்டே ஓட்டினார். அவை "நீர் கடவுளின் மைந்தர்" என்று கத்திக்கொண்டு வெளியேறின. அவர் மேசியா என்பதைப் பேய்கள் அறிந்திருந்தபடியால் அவர் அவற்றை அதட்டி பேச விடாமல் தடுத்தார்.

"அவர் தாமே நம்முடைய நோய்களை அகற்றி நம்முடைய பிணிகளைச் சுமந்தார்"

என்று இறைவாக்குநர் ஏசாயா மூலமாக உரைக்கப்பட்டது இவ்வாறு நிறைவேறிற்று.

அசுத்த ஆவிகள் பிடித்தவன்
(மத் 8:28-34, மா 5:1-20, லூக் 8:26-39)

கலிலேயாவுக்கு எதிரே உள்ள கெரனேசர் நாட்டில் அசுத்த ஆவி பிடித்த ஒரு மனிதன் இருந்தான். அவன் நெடுங்காலமாக ஆடை அணியாதிருந்தவன்; வீட்டில் தங்காமல் கல்லறைகளில் தங்கினவன். அவனைப் பலமுறை விலங்குகளிட்டும், சங்கிலிகளால் கட்டி வைத்தும் பார்த்தார்கள். ஆனால், அவன் சங்கலிகளை முறித்து, விலங்குகளைத் துண்டு துண்டாக நொறுக்கி விட்டான். அவனை அடக்க எவனாலும் இயலவில்லை. அவன் அல்லும் பகலும் இடைவிடாமல் கல்லறைகளிலும் மலைகளிலுமிருந்து அலறுவான். கற்களால் தன்னையே காயப்படுத்திக் கொள்ளுவான். இயேசு அங்கு சென்றபோது, அவன் தொலைவிலிருந்து இயேசுவைக் கண்டு ஓடிவந்து, அவரைப் பணிந்து கொண்டு, "இயேசுவே, உன்னதமான கடவுளின் மைந்தரே, என்னிடம் உமக்கு என்ன வேலை? என்னை வதைக்க வேண்டாம்" என்று உரத்த குரலில் கத்தினான். ஏனென்றால், அவர் அவனைப் பார்த்து, "அசுத்த ஆவியே, இந்த மனிதனை விட்டு வெளியே வா" என்று கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். அவர் அவனிடம் "உன் பெயர் என்ன?" என்று கேட்டார். "இலேகியோன், ஏனென்றால் நாங்கள் பலர்" என்று சொல்லி, தங்களைப் பாதாளக் குழிக்குள் போகக் கட்டளையிடாதபடி அவரை கெஞ்சிக் கேட்டுக் கொண்டன.

அங்கே ஒரு மலையில் பன்றிகள் பெருங்கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன. அசுத்த ஆவிகள் அவரிடம், "நாங்கள் அந்தப் பன்றிகளுக்குள் புகும்படி எங்களை அங்கே அனுப்பிவிடும்," என்று வேண்டிக்கொள்ள, அவரும் விடை கொடுத்தார். உடனே அசுத்த ஆவிகள் அம்மனிதனை விட்டு வெளியேறிப் பன்றிகளுக்குள் புகவே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளடங்கிய அந்தக் கூட்டம் ஓடிச் செங்குத்துப் பாறையின் விளிம்புக்குக் கீழே கடலில் பாய்ந்து அழிந்து போயிற்று. அவற்றை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் ஓடிப்போய் ஊரிலும் சுற்றுப்புறங்களிலும் அதை விளம்பரப்படுத்தினார்கள். நடந்தது என்னவென்று பார்ப்பதற்கு ஊர் மக்கள் புறப்பட்டு இயேசுவிடம் வந்த போது அசுத்த ஆவிகள் பிடித்திருந்தவன் ஆடை அணிந்து, தன்னுணர்வோடு உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு திகிலடைந்தார்கள். நடந்ததை நேரில் பார்த்தவர்கள் அசுத்த ஆவிகள்

பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்கும் நேரிட்டதை அவர்களுக்கு விவரித்துச் சொன்னார்கள். அப்பொழுது அவர்கள் இயேசுவை தங்கள் நாட்டை விட்டுப்போய் விடும்படி வேண்டிக் கொண்டார்கள்.

அவ்வாறே அவர் படகில் ஏறுகையில், அசுத்த ஆவிகள் பிடித்திருந்தவன், தானும் அவரோடு கூடவே இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ஆனால், அவர் அவனுக்கு இடங்கொடாமல் அவனிடம் "நீ உன் வீட்டிற்குப் போய், ஆண்டவர் உன் மீது இரக்கங்கொண்டு உனக்குச் செய்ததையெல்லாம் உன் உறவினருக்கு விவரித்துக் கூறு" என்றார். அவன் சென்று, இயேசு தனக்குச் செய்ததையெல்லாம் தெக்கப்போலி நாட்டினருக்கு அறிவித்து வந்தான். அதைக் கேட்டவரெல்லாரும் வியப்புற்றனர்.

திமிர்வாதமுள்ளவன் (மத். 9: 1-8, மா. 2: 1-12, , லூக். 5 : 17-26)

இயேசு படகில் ஏறிக் கடலைக் கடந்து தமது சொந்த ஊருக்கு வந்தார். அவர் வீட்டிலே தான் இருக்கிறார் என்ற செய்தி பரவிற்று. ஏராளமான பேர் வந்து வாயிலின் முன் இடமில்லாமற்போகும் அளவிற்குக் கூடினர். கலிலேயா, யூதேயா நாடுகளிலுள்ள எல்லா ஊர்களிலும், எருசலேம் நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நீதிச்சட்ட அறிஞர்களும் உட்கார்ந்திருந்தார்கள். அவர் அவர்களுக்கு இறை வார்த்தையைப் போதித்தார். பிணியாளிகளைக் குணமாக்கும் ஆண்டவரின் வல்லமை இயேசுவுக்குள் இருந்தது. அவர் போதிக்கையில் திமிர்வாதமுள்ளவன் ஒருவனை நால்வர் சுமந்து கொண்டு வந்து, அவனை உள்ளே கொண்டு போய் அவர் முன் வைக்க வழி தேடினர். கூட்டம் அதிகமாயிருந்ததால் அவனை உள்ளே கொண்டு போக வழி அறியாது, வீட்டின் மேல் ஏறி, ஓடுகளுக்கிடையே வழியுண்டாக்கி கூட்டத்தின் நடுவில் இயேசுவுக்கு முன் அவனைப் படுக்கையோடு இறக்கினார்கள், அவர்களுக்கிருந்த நம்பிக்கையை இயேசு அறிந்து, "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன" என்றார், அப்பொழுது அங்கே உட்கார்ந்திருந்த மறை அறிஞர் சிலர் "இவன் ஏன் இப்படிப் பேசுகிறான்? தன்னை கடவுளுக்குச் சமமாக்கிக் கொண்டு அவரைப் பழிக்கிறானே! கடவுள் ஒருவராலன்றி வேறு யாரால் பாவங்களை மன்னிக்க இயலும்?" என்று தங்கள் உள்ளத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்கள் என்பதை இயேசு அறிந்து, "உங்கள் உள்ளத்தில் நீங்கள் இப்படிச் சிந்திப்பதேன்? திமிர்வாதமுள்ள இவனிடம், உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன என்று சொல்லுவதா அல்லது எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட, என்று சொல்லுவதா, எது எளிது? என்றாலும், உலகிலே பாவங்களை மன்னிக்க மனுமைந்தருக்கு அதிகாரம் உண்டென்பதை

நீங்கள் அறிய வேண்டும்" என்று சொல்லிவிட்டு திமிர்வாதமுள்ளவனிடம் "நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ" என்று சொன்னார். உடனே அவன் அவர்கள் காண எழுந்து, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு, கடவுளைப் புகழ்ந்து கொண்டே தன் வீட்டுக்குப் போனான். அதைக் கண்டு யாவரும் வியப்படைந்து, "நாம் ஒருபோதும் இப்படிப்பட்ட புதுமையான காரியங்களைக் கண்டதில்லையே!" என்று சொல்லி இப்படிப்பட்ட அதிகாரத்தை மனிதருக்குக் கொடுத்த கடவுளைப் புகழ்ந்து போற்றினார்கள்.

பார்வையற்ற இருவர் (மத். 9: 27-31)

பார்வையற்ற இருவர் "தாவீதின் மைந்தரே எங்கள் மீது இரங்கியருளும்" என்று கத்திக் கொண்டே இயேசுவுக்குப் பின்னால் சென்றனர். அவர் வீடு வந்து சேர்ந்த பின் பார்வையற்றோர் இருவரும் அவரிடம் வந்தார்கள். அவர்களிடம், "இந்தக் காரியத்தைச் செய்ய என்னால் இயலும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?" என இயேசு கேட்டார். அதற்கு அவர்கள் "ஆம், ஆண்டவரே" என்றார்கள். அப்பொழுது அவர் அவர்களுடைய கண்களைத் தொட்டு, "நீங்கள் நம்புகிறபடியே உங்களுக்கு ஆகக்கடவது" என்றார். அவர்களுடைய கண்கள் பார்வை பெற்றன. "இதை மற்ற யாரும் அறியாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்" என்று இயேசு அவர்களிடம் மிகவும் கண்டிப்பாகச் சொன்னார். ஆனால் அவர்களோ, புறப்பட்டுப்போய் அவரைப்பற்றிய செய்தியை நாடெங்கும் விளம்பரப்படுத்தினார்கள்.

செவித்திறனற்றவன் (மத். 9: 32-34)

பின்பு அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு செவித்திறனற்றவனை அவரிடம் கொண்டு வந்தனர். அசுத்த ஆவியை அவர் ஓட்டினார். செவித்திறனற்றவன் பேசினான். வியப்படைந்த மக்கள், "இஸ்ரவேலரிடையே இப்படி ஒருபோதும் நடந்ததில்லை" என்றார்கள். ஆனால், பரிசேயரோ "அசுத்த ஆவிகளின் தலைவனைக் கொண்டே இவன் அசுத்த ஆவிகளை ஓட்டுகிறான்" என்றார்கள்.

பார்வையற்ற,செவித்திறனற்ற அசுத்த ஆவி பிடித்தவன் (மத். 12:22-32, மா. 3: 20-30, லூக். 11:14-23)

பிறகு அசுத்த ஆவி பிடித்த ஒருவன் அவரிடம் கொண்டு வரப்பட்டான். அவன் பார்வையற்றவன், செவித்திறனற்றவன். அவனை இயேசு குணமாக்கவே அவன் பேசினான், பார்வை பெற்றான். அங்கிருந்த கூட்டத்தினர் எல்லாரும் திகைத்துப் போய், "இவர் தாவீதின் மைந்தராய் இருப்பாரோ?" என்று பேசிக் கொண்டனர். பரிசேயர் அதைக் கேட்டு, "அப்படியன்று, இவன் அசுத்த ஆவிகளின் தலைவனாகிய பெயல்செபூலைக்

கொண்டுதான் அசுத்த ஆவிகளை ஓட்டுகிறான்'' என்றனர். எருசலேமிலிருந்து வந்த மறைஅறிஞரும் இவனைப் பெயல்செபூல் என்னும் அசுத்த ஆவி பிடித்திருக்கிறது. அசுத்த ஆவிகளின் தலைவனைக் கொண்டு அசுத்த ஆவிகளை ஓட்டுகிறான்,''என்று சொல்லி வந்தனர். வேறு சிலர் அவரைப் பரிசோதிக்கும் வகையில் வானத்திலிருந்து வரும் ஒரு வல்லமைச் செயலை அத்தாட்சியாகக் காட்ட வேண்டுமென்று அவரிடம் கேட்டனர். அவரோ அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து கொண்டு. அவர்களைத் தம்மிடம் வரவழைத்து உவமைகள் மூலமாக அவர்களோடு பேசினார்.

''ஒன்றையொன்று எதிர்த்துத் தன்னையே அழிக்கக் கூடிய பிரிவுகளுள்ள எந்த அரசும் பாழாய்ப்போகும். ஒன்றையொன்று எதிர்த்துத் தன்னையே அழிக்கக் கூடிய பிரிவுகளுள்ள எந்த ஊரும் அல்லது எந்தக் குடும்பமும் நிலைத்திருக்காது. சாத்தானைச் சாத்தான் ஓட்டுகிறானென்றால், அவன் தன்னைத் தானே எதிர்த்துத் தாக்குகிறவனாவான். அப்படியானால், அவனுடைய அரசு எப்படி நிலைத்திருக்கும்? நான் பெயல்செபூலைக் கொண்டு, அசுத்த ஆவிகளைக் கொண்டு ஓட்டுகிறேனென்றால், உங்கள் மக்கள் அவற்றை யாரைக் கொண்டு ஓட்டுகிறார்கள்? எனவே, நீங்கள் சொல்லுவது தவறு என்று அவர்களே தீர்ப்பளிப்பார்கள். நான் கடவுளின் ஆவியைக் கொண்டே அசுத்த ஆவிகளை ஓட்டுவதால் கடவுளின் அரசு உங்களிடையே வந்துள்ளது என்பது உறுதி. வலியவனை முதலில் கட்டிவிட்டாலன்றி எப்படி ஒருவன் அந்த வலியவனுடைய வீட்டுக்குள் நுழைந்து அவனுடைய பொருள்களைக் கொள்ளையிட இயலும்? அவனைக் கட்டிவிட்ட பிறகுதான் அவனுடைய வீட்டைக் கொள்ளையிடுவான். என்னோடு இராதவன் எனக்கு எதிரியாய் இருக்கிறான். என்னோடு சேர்ந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவன் அவர்களைச் சிறடிக்கிறான். எந்தப் பாவமும், எந்தப் பழிப்புரையும் மனிதருக்கு மன்னிக்கப்படும். ஆனால், ஆவியானவரைப் பற்றிய பழிப்புரையோ மன்னிக்கப்படமாட்டாது. மனுமைந்தருக்கு விரோதமாக யாராவது ஒரு வார்த்தை பேசினால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; ஆனால், எவன் தூய ஆவிக்கு விரோதமாகப் பேசுகிறானோ அவனுக்கு அது இந்த யுகத்திலும் இனி வரப்போகும் யுகத்திலும் மன்னிக்கப்படமாட்டாது.''

கானான் நாட்டுப் பெண்ணின் மகள்
(மத். 15:21-28; மா. 7: 24-30)

தீரு, சீதோன் நாட்டில் உள்ள ஒரு வீட்டிற்குப் போனார். தாம் அங்கிருப்பதை ஒருவரும் அறியாதிருக்க விரும்பியும், அவரால் மறைவாயிருக்க இயலவில்லை. சிறிது நேரத்திற்குள் சீரோபேனிக்கியா இனத்தைச் சேர்ந்த ஒரு கிரேக்கப் பெண் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டு

உள்ளே வந்து அவர் காலில் விழுந்தாள். அவளுடைய மகளை அசுத்த ஆவி பிடித்திருந்தது. அதை ஓட்டிவிடும்படி இயேசுவை வேண்டிக்கொண்டாள். அவளுக்கு மறுமொழியாக அவர் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவருடைய சீடர்களோ, நமக்குப் பின்னே கத்திக் கொண்டு வரும் இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக் கொண்டனர். "இஸ்ரவேல் மரபினருள் காணால் போயிருக்கும் ஆடுகளிடம் மட்டுமே நான் அனுப்பப்பட்டேன்" " என்றார் இயேசு. அவளோ அவரைப் பணிந்து, "ஆண்டவரே எனக்கு உதவி செய்தருளும்" என்றாள். அவர் அவளிடம், "முதலில் பிள்ளைகள் வயிறார உண்ணட்டும். பிள்ளைகளின் உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது நல்லதன்று," என்றார். "மெய்தான் ஐயா, ஆயினும் மேசையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள், தங்களை வளர்ப்போரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளைத் தின்னுமே" என்று அவள் சொன்னதும் இயேசு, "அம்மா, உன் நம்பிக்கை பெரிது. இப்பொழுது நீ வீட்டுக்குப் போகலாம். நீ விரும்புகிறபடி அசுத்த ஆவி உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்று," என்றார். அந்நேரமே அவளுடைய மகள் குணமடைந்தாள். அவள் தன் வீட்டுக்குத் திரும்பினதும் தன் மகள் கட்டிலில் படுத்திருக்கிறதையும் அசுத்த ஆவி நீங்கி விட்டதையும் கண்டாள்.

அசுத்த ஆவி பிடித்திருந்ததினால் வலிப்பு நோயுள்ள இளைஞன் (மத் :17 :14-21, மா 9:14-29, லூக் 9: 37-43)

இயேசுவும், பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய சீடரும் மலையிலிருந்து இறங்கி மற்றச் சீடரிடம் வந்தபோது அவர்களைச் சுற்றிலும் ஒரு பெரிய கூட்டம் நின்று கொண்டிருந்தது. மறை அறிஞர்கள் அவர்களோடு வாதாடிக் கொண்டிருந்தனர்.மக்களெல்லாரும் இயேசுவைக் கண்டவுடனே வியப்படைந்து, ஓடி அவரை வரவேற்றனர். "நீங்கள் இவர்களோடு எதைப்பற்றி வாதாடுகிறீர்கள்?" என்று அவர் அவர்களிடம் கேட்டார். கூட்டத்திலிருந்து ஒருவன் அவரை அணுகி அவர் முன் முழந்தாள்படியிட்டு, "போதகரே உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேன். என் மகன் மீது இரங்கும். அவன் எனக்கு ஒரே மகன். வலிப்பு நோயாளி. ஓர் ஆவி அவனைப் பிடித்திருக்கிறது. திடீரென்று அலறுகிறான்.அது அவனை அலைக்கழிக்கிறது. வலிப்பு வந்து அவனைக் கீழே வீழ்த்துகிறது. அப்பொழுது வாயில் நுரை தள்ளுகிறது. பற்களை நெரிக்கிறான். உடம்பு விறைத்துப் போகிறது. அது அவனை நொறுக்குவதுமல்லாமல் எளிதில் அவனைவிட்டுப் போவதுமில்லை. அதை ஓட்டிவிடும்படி உம்முடைய சீடரிடம் கேட்டேன். அது அவர்களால் இயலாமல் போயிற்று" என்றான்.

இயேசு அவர்களிடம், "நம்பிக்கையற்ற சீர்கெட்ட சமுதாயமே, எவ்வளவு காலம் நான் உங்களோடிருப்பது? எவ்வளவு காலம் உங்களிடம் பொறுமை காட்டுவது? அவனை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்றார்.

அவனை அவரிடம் கொண்டு வந்தனர். அந்த ஆவி அவரைக் கண்டவுடன் அவனை அலைக்கழித்தது. தரையில் விழுந்து புரண்டான். வாயில் நுரை தள்ளிற்று. "இது இவனுக்கு வந்து எவ்வளவு காலமாகிறது?" என்று தகப்பனிடம் இயேசு கேட்டார். அதற்கு அவன், "குழந்தைப் பருவம் முதற்கொண்டே இருந்து வருகிறது. இவனைக் கொன்றுவிடும்படி பல தடவை தீயிலும் தண்ணீரிலும் இவனை அது தள்ளினதுண்டு. உம்மால் ஏதாவது செய்ய இயலுமானால், இரக்கங்கொண்டு எங்களுக்கு உதவி செய்யும்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். இயேசு அவனிடம் "இயலுமானால் என்றாய். நம்பிக்கையுடைய எவனுக்கும் எல்லாம் இயலும்"என்றார். "எனக்கு நம்பிக்கை உண்டு. என்னிடமுள்ள நம்பிக்கையின்மையை நீக்கியருளும்," என்று கண்ணீரோடு கதறினான் தகப்பன். மக்கள் திரளாய் ஓடி வருவதை இயேசு கண்டார். ஆகவே, அவர் அந்த அசுத்த ஆவியை அதட்டி, "ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டு வெளியே போ. இனிமேல் இவனுக்குள் நுழையாதே என்று உனக்குக் கட்டளையிடுகிறேன்," என்றார். அது அலறி அவனை அதிகமாக அலைக்கழித்துவிட்டு வலிப்பு வரச் செய்த பின் வெளியேறிற்று. அவன் செத்தவன் போலக் கிடந்தான். அவன் செத்துப் போனான் என்று பலர் கூறினர். இயேசுவோ, அவன் கையைப் பிடித்து அவனைத் தூக்கிவிட்டார். அவன் குணமடைந்து எழுந்து நின்றான். அவர் வீட்டுக்குள் சென்றபின், அவருடைய சீடர்கள் அவரிடம் தனிமையாக "அதை ஓட்ட ஏன் எங்களால் இயலவில்லை?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "உங்களுடைய நம்பிக்கைக் குறைவு தான் காரணம், உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கை இருந்தால் உங்களால் இயலாத காரியம் ஒன்றுமிராது. நீங்கள் இந்த மலையைப் பார்த்து 'இவ்விடம் விட்டு அப்புறம் போ' என்ற சொல்லும்போது அது போய்விடும் என்று உறுதியாகச் சொல்லுகிறேன். இவ்வகை அசுத்த ஆவியை ஜெபத்தினாலும் நோன்பினாலுமே அன்றி வேறு எதனாலும் வெளியேற்ற இயலாது" என்றார்.

பர்திமேயு (மாற்கு 10:46-52, லூக் 18:35-43)

இயேசு எரிகோ நகருக்கருகில் போய்க்கொண்டிருந்தார். வழியோரத்தில் பார்வையற்ற ஒருவன் உட்கார்ந்து கொண்டு பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அவன் திமேயுவினுடைய மகன் பர்திமேயு. மக்கள் கூட்டமாய் நடந்து போகிற ஓசையை அவன் கேட்டு, "இது என்ன?" என்று கேட்டான், "நசரேனாகிய இயேசு போகிறார்," என்று அவனுக்குச் சொல்லப்பட்டது. உடனே அவன் "இயேசுவே தாவீதின் மைந்தரே, என் மீது இரங்கியருளும்," என்று கத்தினான்."பேசாமல் இரு" என்று பலர் அவனை அதட்டினர். அவனோ, "தாவீதின் மைந்தரே, என் மீது இரங்கியருளும்," என்று இன்னும் உரக்கக் கத்திக் கொண்டிருந்தான். அப்பொழுது இயேசு நின்று அவனைக் கூப்பிடச் சொன்னார். அவர்கள் அவனைக் கூப்பிட்டு, "தைரியமாயிரு, எழுந்திரு, இயேசு உன்னைக் கூப்பிடுகிறார்," என்றனர்.

உடனே அவன் தன் மேலாடையைக் கீழே போட்டுவிட்டு, குதித்தெழுந்து இயேசுவிடம் வந்தான். இயேசு அவனிடம், “நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார். அதற்கு அவன் “அருமைப் போதகரே, நான் பார்வை பெறவேண்டும்,” என்றான். இயேசு அவனிடம், “நீ போகலாம். உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று” என்றார். உடனே அவன் பார்வை பெற்று அவருக்குப் பின்னே அதே வழியில் சென்றான்.

பார்வையற்ற இருவர் (மத். 20:29 -84.)

இயேசுவும் சீடரும் எரிகோ நகரத்தை விட்டுச் செல்கையில் ஒரு பெரிய கூட்டம் அவருக்குப்பின்னே சென்றது. வழியோரத்தில் உட்கார்ந்திருந்த பார்வையற்ற இருவர், இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு “ஆண்டவரே, தாவீதின் மைந்தரே, எங்கள் மீது இரங்கியருளும்” என்று கத்தினார்கள். “பேசாதிருங்கள்” என்று கூட்டத்தினர் அவர்களை அதட்டினர். அவர்களோ, “ஆண்டவரே, தாவீதின் மைந்தரே, எங்கள் மீது இரங்கியருளும்” என்று இன்னும் உரக்கக் கத்திக் கொண்டேயிருந்தனர். இயேசு நின்று அவர்களை அழைத்து, “நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்க, அவர்கள் “ஆண்டவரே எங்களுக்கு பார்வை அளியும்” என்றார்கள். இயேசு மன உருக்கங்கொண்டு அவர்களுடைய கண்களைத் தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து அவரைப் பின்பற்றிச் சென்றார்கள்.

சூம்பின கையுள்ளவன் (மத். 12:9-14,மா. 3:1-6,லூக். 6: 6-11)

ஓர் ஓய்வு நாளில் இயேசு தொழுகைக் கூடத்தில் போதித்துக் கொண்டிருந்தார். வலக்கை சூம்பியிருந்த ஒரு மனிதன் அங்கே இருந்தான். மறை அறிஞரும், பரிசேயரும் அவர் மீது குற்றம் சுமத்தும் நோக்கத்தோடு, “ஓய்வு நாளில் குணமாக்குவது முறையாகுமா?” என்று அவரைக் கேட்டனர். அவர் சூம்பின கையுள்ளவனிடம், “எழுந்து நடுவே நில்” என்றார். அவன் எழுந்து நின்றான். அவர்களைப் பார்த்து, “உங்களுள் எந்த மனிதனாவது தன்னுடைய ஆடு ஓய்வு நாளில் குழியில் தவறி விழுந்துவிட்டால் அதைத் தூக்கியெடாமல் இருப்பானா? ஆட்டைவிட மனிதன் எவ்வளவோ மேலானவன். ஓய்வு நாளில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, உயிரைக் காப்பதோ, அதை அழிப்பதோ, எது சட்டத்திற்கு ஏற்றது என்று உங்களைக் கேட்கிறேன்.”என்றார். அவர்களோ பேசாதிருந்தார்கள், சுற்றிலுமிருந்த எல்லாரையும் பார்த்து விட்டு அந்த மனிதனிடம், “உன் கையை நீட்டு” என்றார். அவன் நீட்டினான். அவனுடைய கை மீண்டும் நலம் பெற்று மறு கையைப் போலாயிற்று. பரிசேயரோ வெளியே போய் அவரைக் கொன்று விடச் சதித்திட்டமிட்டனர்.

அசுத்த ஆவி பிடித்தவன் (மா.1:21-28; லூக். 4:31-37)

ஓர் ஓய்வு நாளில் இயேசு கப்பர்நகூமில் உள்ள தொழுகைக் கூடத்தில் போதித்துக் கொண்டிருந்தார். அவர் மறை அறிஞரைப் போல போதியாமல், அதிகாரமுடையவராய் போதித்ததினால், அங்கிருந்தவர்கள் அவருடைய போதனையைக் கேட்டு வியப்படைந்தனர். அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனிதனும் அந்நேரத்தில் தொழுகைக் கூடத்தில் இருந்தான். அவன், "நசரேயனாகிய இயேசுவே எங்களிடம் உமக்கு என்ன வேலை? எங்களை அழிக்கவா வந்திருக்கிறீர்? நீர் இன்னாரென்று எனக்குத் தெரியும். நீர் தூயர், கடவுளிடமிருந்து வந்தவர்," என்று சொன்னான். இயேசு அந்த அசுத்த ஆவியை அதட்டி, "பேசாதே, இவனை விட்டு வெளியே போ" என்றார். அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, பெரிய கூச்சலிட்டு அவனிடமிருந்து வெளியேறிற்று. எல்லாரும் திகைப்புற்று "இது என்ன? அதிகாரத்தோடும், வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிடுகிறார். அவையும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே!" என்று தங்களிடையே பேசிக் கொண்டனர். அவரைப்பற்றிய புகழ் விரைவில் கலிலேயாவின் சுற்றுப்புறமெங்கும் பரவிற்று.

கேட்கும் திறனற்றவன் (மாற்கு 7:31-37)

இயேசு தீருவிலிருந்து சீதோன் வழியாகச் சென்று தெக்கப்போலி நாட்டையும் கடந்து, கலிலேயாக் கடலை அடைந்தார். அப்பொழுது கேட்கும் திறனற்றவனும் திக்குவாயனுமான ஒருவனை சிலர் அவரிடம் கொண்டுவந்து அவன் மீது கையை வைக்கும்படி அவரை வேண்டிக் கொண்டனர். அவர் அவனைத் தனியே அழைத்துக் கொண்டு போய் தம்முடைய விரல்களை அவன் காதுகளிலிட்டு, உமிழ்ந்து, அவன் நாவைத் தொட்டு, வானத்தை நிமிர்ந்து பார்த்து, பெருமூச்சு விட்டு, அவனை நோக்கி 'எப்பத்தா' என்றார். அதற்கு 'திறக்கப்படுவாயாக' என்பது பொருள். அவனுடைய செவிகள் திறக்கப்பட்டன. நாவின் கட்டும் அவிழ்ந்தது. அவன் செவ்வையாய்ப் பேசினான். நடந்ததை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆனாலும், எவ்வளவுக்கெவ்வளவு அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ அவ்வளவுக்கவ்வளவு மிகுதியாக அவர்கள் அதை அறிவித்து வந்தார்கள். அளவற்ற வியப்புடன், "இவர் எல்லாவற்றையும் நன்றாகச் செய்திருக்கிறார். கேட்கும் திறனற்றோர் கேட்கவும், பேசும் திறனற்றோர் பேசவும் செய்கிறார்," என்று சொன்னார்கள்.

பார்வையற்றவன் (மாற்கு 8:22-26)

பெத்சாயிதா என்னும் ஊரில் சிலர் பார்வையறறவன் ஒருவனை இயேசுவிடம் கொண்டுவந்து, அவனைத் தொடும்படி அவரை வேண்டிக்

கொண்டனர். அவர் பார்வையற்றவனின் கையைப் பிடித்து அவனை ஊருக்கு வெளியே கூட்டிக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, கைகளை அவன்மேல் வைத்து "எதையாவது பார்க்கிறாயா?" என்று கேட்டார். அவன் நிமிர்ந்து பார்த்து "மனிதரைப் பார்க்கிறேன்; அவர்கள் மரங்களைப் போலக் காணப்படுகிறார்கள்; ஆனால் நடந்து திரிகிறார்கள்" என்றான். அவர் மறுபடியும் அவன் கண்களின் மேல் கைகளை வைக்கவே அவன் விழித்துப் பார்த்தான். முற்றிலும் குணமடைந்து எல்லாவற்றையும் தெளிவாகக் காணமுடிந்தது. அவர் அவனிடம், "ஊருக்குள் எங்கேயும் செல்லாதே (ஊரில் இதை யாருக்கும் சொல்லாதே)" என்று சொல்லி அவனை அவனுடைய வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.

பெரும்பாடுள்ள பெண்
(மத். 9:20-22, மா.5:24-34,லூக் 8:45-48)

இயேசு யவீருவின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார். திரளான மக்கள் அவரைப் பின் தொடர்ந்து நெருக்கிக் கொண்டு சென்றார்கள். ஒரு பெண் பன்னிரண்டு ஆண்டுகளாகப் பெரும் பாடுள்ளவளாய் இருந்தாள். அவள் மருத்துவர் பலரிடம் சென்றும், தனக்குண்டானவை அனைத்தையும் செலவழித்தும், யாதொரு பயனும் அடையாமல் முன்பிருந்ததைவிட மோசமான நிலையிலிருந்தாள்.

அவள் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால், " நான் அவருடைய ஆடையை மட்டும் தொட்டால் போதும், குணமாகி விடுவேன்" என்று சொல்லிக் கொண்டு, பின் பக்கமாகக் கூட்டத்தினூடே வந்து அவருடைய மேலாடையைத் தொட்டாள். உடனே அவளுடைய இரத்தப்பெருக்கு நின்று விட்டது. அவளும், தான் நோய் நீங்கி குணமடைந்ததைத் தன் உடலில் உணர்ந்தாள். அந்நேரத்திலேயே இயேசு தம்முடைய வல்லமை தம்மிடமிருந்து வெளிப்பட்டது என்பதை உணர்ந்து, கூட்டத்தினிடையே திரும்பி, "என் ஆடையைத் தொட்டது யார்?" என்று கேட்டார். அவருடைய சீடர்கள் அவரிடம், "திரளான மக்கள் உம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறதைக் கண்டும் 'என்னைத் தொட்டது யார்' என்று கேட்கிறீரே" என்றார்கள்.அவரோ சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பெண் தனக்கு நேர்ந்ததை அறிந்து, அஞ்சி, நடுங்கிக் கொண்டு அவர் முன் வந்து விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும், உடனே குணமடைந்ததையும் எல்லா மக்கள் முன்னிலையிலும் அவருக்கு அறிவித்தாள். அவர் அவளிடம், "மகளே உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கியிருக்கிறது. சமாதானத்தோடு போ, உன் நோய் நீங்கி நலத்தோடிரு" என்றார்.

நோய்தரும் ஆவியால் பீடிக்கப்பட்டப் பெண் (லூக்கா 13:10-17)

ஓய்வுநாள் ஒன்றில் இயேசு ஒரு தொழுகைக் கூடத்தில் போதித்துக் கொண்டிருந்தார். அங்கே இருந்த ஒரு பெண் நோய்தரும் ஆவியால் பதினெட்டு ஆண்டுகளாகப் பீடிக்கப்பட்டுக் கூன் விழுந்து சற்றும் நிமிர இயலாத நிலையில் இருந்தாள். இயேசு அவளைக் கண்டு, அருகே அழைத்து "பெண்ணே உன் நோயிலிருந்து நீ விடுதலை பெற்றுவிட்டாய்" என்று சொல்லி அவள்மேல் தம்முடைய கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து நின்று கடவுளைப் போற்றினாள். ஆனால் தொழுகைக்கூடத் தலைவனோ, ஓய்வுநாளில் இயேசு குணப்படுத்தினதைக் கண்டு சினமடைந்து, கூடியிருந்தவர்களை நோக்கி "நீங்கள் வேலை செய்ய வேண்டிய நாட்கள் ஆறு உண்டு. அந்நாட்களில் வந்து குணமடைந்து கொள்ளுங்கள், ஓய்வு நாளில் வேண்டாம்," என்றான். அதற்கு இயேசு, "போலி பக்தர்களே, நீங்கள் ஓய்வு நாளில் உங்கள் மாட்டையாவது கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறீர்களல்லவா? பாருங்கள்! ஆபிரகாமின் மகளாகிய இவள் சாத்தானால் பதினெட்டு ஆண்டுகளாகக் கட்டப்பட்டிருந்தாள், ஓய்வுநாளில் இவளை இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்து விடக் கூடாதா?" என்று கேட்டார்.அதைக் கேட்டதும் அவருடைய எதிரிகள் அனைவரும் வெட்கமடைந்தனர். கூடியிருந்த எல்லாருமோ அவர் செய்து கொண்டிருந்த வியக்கத்தக்க செயல்கள் எல்லாவற்றையும் குறித்து மகிழ்ச்சியடைந்தனர்.

நீர்க்கோவை நோயாளி (லூக்கா 14:1-6)

ஓர் ஓய்வு நாளில் இயேசு பரிசேயரின் தலைவன் ஒருவனுடைய வீட்டுக்கு உணவு அருந்தப் போயிருந்தார். அங்கே நீர்க்கோவை நோயுள்ள ஒருவன் அவர் முன் இருந்தான். அவ்வேளையில் இயேசு அங்கிருந்த நீதிச்சட்ட அறிஞர்களையும், பரிசேயரையும் பார்த்து, "ஓய்வு நாளில் குணப்படுத்துவது முறையா, இல்லையா?" என்று கேட்டார். அவர்களோ பேசாதிருந்தார்கள். அவர் அவனைத் தொட்டுக் குணப்படுத்தி அனுப்பிவிட்டு, அவர்களிடம் "உங்களுள் ஒருவன் தன்னுடைய மகனாவது, மாடாவது கிணற்றில் விழுந்து விட்டால் ஓய்வு நாளென்றாலும் உடனே அதைத் தூக்கி விடாமல் இருப்பானா?" என்று கேட்டார். அதற்குப் பதில் அளிக்க அவர்களால் இயலாமல் போயிற்று.

பத்து தொழுநோயாளிகள் (லூக்கா 17:11 -19)

இயேசு எருசலேமை நோக்கிப்பயணம் செய்கையில் சமாரியா, கலிலேயா நாடுகளுக்கிடையே நடந்து சென்றார். அவர் ஓர் ஊருக்குள் செல்கையில் பத்து தொழுநோயாளிகள் அவருக்கு எதிரே வந்து, தொலைவில்

நின்று "இயேசுவே, ஐயா, எங்களுக்கு இரங்கியருளும்" என்று உரத்த குரலில் வேண்டினார்கள். அவர் அவர்களிடம், "நீங்கள் போய் உங்களை ஆசாரியரிடம் காட்டுங்கள்" என்றார். அவர்கள் போய்க் கொண்டிருக்கையில் குணமடைந்தார்கள். அவர்களுள் ஒருவன் தான் குணமடைந்ததைக் கண்டதும், உரத்த குரலில் கடவுளைத் துதித்துக் கொண்டே திரும்பி வந்து, இயேசுவின் காலடியில் முகங்குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினான். அவன் ஒரு சமாரியன். அவர் அவனிடம், "குணமடைந்தோர் பத்துப்பேர் அல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? யூதனல்லாத இவனேயன்றி வேறொருவனும் கடவுளுக்குத் துதி செலுத்தும்படி திரும்பி வந்ததாகத் தெரியவில்லையே!" என்று சொல்லி, "நீ எழுந்து போ, உன் நம்பிக்கை நீ மீட்படையும்படி செய்திருக்கிறது" என்றார்.

அரசு அதிகாரியின் மகன் (யோ 4: 46-54)

அரசு அதிகாரி ஒருவனுடைய மகன் கப்பர்நகூமில் நோயுற்றிருந்தான். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்திருக்கிறார், என்பதை அந்த அதிகாரி கேள்விப்பட்டு, அவரிடம் போய் சாகும் தருவாயில் உள்ள தன் மகனைக் குணமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். இயேசு அவனிடம். "அரிய செயல்களையும் அற்புதங்களையும் கண்டாலன்றி உங்களுக்கு நம்பிக்கை ஏற்படாது" என்று சொன்னார். அந்த அதிகாரி, "ஐயா, என் பிள்ளை சாவதற்குள் விரைவில் வாரும்" என்று வேண்டினான். இயேசுவோ, "நீ போகலாம், உன் மகன் முழு நலத்துடன் இருக்கிறான்" என்றார். இயேசுவின் சொல்லை நம்பி அவன் அங்கிருந்து புறப்பட்டுப் போனான். அவனுடைய வேலைக்காரர்கள் அவனுக்கு எதிரே வந்து அவனுடைய மகன் முழு நலத்தோடு இருப்பதாகச் சொன்னார்கள். "எத்தனை மணிக்கு அவன் குணம் அடையத் தொடங்கினான்?" என்று அவன் அவர்களிடம் விசாரித்தான். நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு காய்ச்சல் விட்டது" என்றனர் அவர்கள். அதே நேரத்தில் தான்,"உன் மகன் முழு நலத்தோடு இருக்கிறான்" என்று இயேசு தன்னிடம் சொன்னார் என்பது அவன் நினைவிற்கு வந்தது. இதனால் அவனும் அவனுடைய வீட்டார் அனைவரும் அவரிடம் நம்பிக்கை கொண்டனர். (இயேசு தெய்வ ஆற்றலுக்கு அடையாளமாகத் தாம் செய்த இந்தச் செயலை, யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்த பிறகு செய்தார்.)

பெதஸ்தாவில் உள்ள நோயாளி (யோவான்: 5:1-18)

யூதருடைய பண்டிகை நாளில் இயேசு எருசலேமுக்குப் போனார். அங்கு ஆட்டு வாயிலுக்குப் பக்கத்தில் ஐந்து மண்டபங்களுள்ள ஒரு குளம் இருக்கிறது. அது எபிரேய மொழியில் பெத்சாதா எனப்பட்டது. (பெதஸ்தா

அல்லது பெத்சாய்தா என்றும் அழைப்பர்.) அந்த மண்டபங்களில் பார்வையற்றோர், முடவர், சூம்பின உறுப்புடையோர் ஆகிய பிணியாளிகள் ஏராளமானோர் படுத்திருப்பர். குளத்து நீர் கலங்குவதற்காக அவர்கள் காத்திருப்பார்கள். ஏனெனில், தெய்வதூதன் ஒருவன் சில வேளைகளில் அந்தக் குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்கினபின் எவன் அதனுள் முதலில் இறங்குவானோ அவன் எப்படிப்பட்ட நோயாளியாய் இருந்தாலும் குணமடைவான். முப்பத்தெட்டு ஆண்டுகள் நோயுற்றிருந்த ஒருவனும் அங்கே படுத்திருந்தான். அவன் அந்நிலையில் நெடுங்காலமாக இருந்து வந்ததை இயேசு அறிந்து அவனிடம், “உனக்குக் குணமடைய விருப்பந்தானா?” என்று கேட்டார். நோயாளி அவரிடம், “ஐயா, தண்ணீர் கலக்கப்படும் போது குளத்தில் என்னை இறக்கி விடுவதற்கு ஆள் இல்லை. நான் போவதற்குள் வேறொருவன் எனக்கு முன் இறங்கி விடுகிறான்” என்றான். “உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போ,” என்று இயேசு அவனிடம் சொன்னார். உடனே அவன் குணமடைந்து தன் படுக்கையைத் தூக்கிக் கொண்டு நடந்து போனான்.

யூதர்கள் குணமாக்கப்பட்டவனிடம் , “இன்று ஓய்வு நாள். நீ படுக்கையைத் தூக்கிக் கொண்டு நடப்பது சட்ட விரோதம்” என்றார்கள். அவன் என்னைக் குணமாக்கினவரே என்னிடம் ‘உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போ’ என்று சொன்னார்” என்றான். அப்பொழுது அவர்கள் அவனிடம், “படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போ என்று உனக்குச் சொன்ன அந்த மனிதன் யார்?” என்று கேட்டனர். ஆனால் குணமடைந்தவனுக்கோ அவர் யாரென்று சொல்லத் தெரியவில்லை. ஏனென்றால், அவ்விடத்தில் கூட்டம் அதிகமாயிருந்தது. இயேசுவும் அவ்விடத்திலிருந்து ஏற்கெனவே போய் விட்டார்.

சிறிது நேரத்திற்குப்பின் இயேசு அவனை திருக்கோவிலில் கண்டு “குணமடைந்திருக்கிற நீ, முன்பு இருந்ததைவிடக் கேடானது எதுவும் உனக்கு நேரிடாதிருக்க, இனிமேல் பாவம் செய்யாதே” என்றார். அவன் அந்த யூதரிடம் போய், தன்னைக் குணமாக்கியவர் இயேசு என்று அறிவித்தான். ஓய்வு நாளில் இது போன்றவற்றை இயேசு செய்து வந்ததினால், யூதர்கள் அவருக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினர். அதை அறிந்த இயேசு அவர்களிடம், “என் தந்தை ஓய்வின்றி செயலாற்றி வருகிறார். நானும் அவ்வாறே செயலாற்றுகிறேன்” என்றார். இவ்வாறு அவர் ஓய்வு நாள் விதியை மீறினதினாலும், கடவுளைத் தம்முடைய சொந்தத் தந்தையென்று சொல்லி தம்மை கடவுளுக்குச் சமமாக்கினதாலும், யூதர்கள் அவரைத் கொன்று விடப் பெருமுயற்சி செய்தார்கள்.

பிறவியிலிருந்தே பார்வையற்றவன் (யோவான் 9:1-41)

பார்வையற்ற ஒருவனை இயேசு கண்டபோது அவருடைய சீடர்கள் அவரிடம், "ரபீ, அவன் பார்வையற்றவனாய் பிறந்ததற்கு யார் செய்த பாவம் காரணம்? இவன் செய்ததா?" இவனுடைய பெற்றோர் செய்ததா?" என்று கேட்டனர். இயேசு அவர்களிடம் "அது இவன் செய்த பாவமுமன்று, இவனுடைய பெற்றோர் செய்த பாவமுமன்று. கடவுளின் நற்செயல்கள் இப்பொழுது இவனிடம் விளங்கும் பொருட்டே இவன் இப்படியிருக்கிறான். பகல் இருக்கும் போதே என்னை அனுப்பினவருடைய செயல்களை நாம் செய்தாக வேண்டும். இரவு வருகிறது. அப்பொழுது ஒருவராலும் வேலை செய்ய இயலாது. இப்பொழுது நான் உலகத்தில் இருப்பதால் உலகுக்கு ஒளியாயிருக்கிறேன்," என்று சொன்னார். பின்பு அவர் தரையில் உமிழ்ந்து உமிழ் நீரினால் சேறு உண்டாக்கி, அந்தச் சேற்றை அவனுடைய கண்களில் பூசினார்.அவனிடம் "சீலோவாம் குளத்துக்குப் போய் கண்களைக் கழுவு"என்று கூறினார். (சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவர் என்று பொருள்) அவன் போய், கழுவி, பார்வை பெற்றுத் திரும்பினான்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும், அவனைப் பிச்சைக்காரனாய் அதற்கு முன் பார்த்திருந்தவர்களும் அவனைக் கண்டபோது, "இவன் தானே இங்கே உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தவன்?" என்றனர். சிலர் "இவன் தான்" என்றனர். வேறு சிலரோ "இல்லை, இவன் அவனைப்போல இருக்கிறான்,"என்றனர். அப்பொழுது அந்த மனிதன் "நானே அவன்" என்று சொன்னான். அப்படியானால், "உன் கண்கள் எப்படிப் பார்வை பெற்றன?" என்று கேட்டார்கள். அதற்கு அவன்,"இயேசு சேறுண்டாக்கி, அதை என் கண்களின் மேல் பூசி சீலோவாமுக்குப் போய் கண்களைக் கழுவு," என்றார். நான் போய் கழுவினேன். பார்வை கிடைத்தது," என்று சொன்னான். அப்பொழுது அவர்கள் அவனிடம், "அவர் எங்கே இருக்கிறார்?"என்று கேட்க, அவன்"எனக்குத் தெரியாது" என்றான்.

பரிசேயரின் விசாரணை

முன்பு பார்வையற்றவனாய் இருந்த அவனை அவர்கள் பரிசேயரிடம் கூட்டிக் கொண்டு போனார்கள். இயேசு சேறுண்டாக்கி அவனுடைய கண் பார்வை பெறும்படி செய்த நாள் ஓய்வு நாள் ஆகையால், பரிசேயரும் அவனிடம். "எப்படி பார்வை பெற்றாய்?" என்ற கேள்வியையே கேட்டனர். அதற்கு அவன், "அவர் என் கண்களின் மேல் சேற்றைப் பூசினார். நான் கண்களைக் கழுவினேன். பார்வை பெற்றேன்." என்றான். அப்பொழுது பரிசேயருள் சிலர், "அந்த ஆள் ஓய்வு நாள் விதியைக் கடைப்பிடிக்காதவன். ஆகையால் அவன் கடவுளிடமிருந்து வந்த மனிதனாய் இருக்க முடியாது" என்றனர். வேறு சிலரோ, "பாவியாயிருக்கும் ஒரு மனிதனால் இப்படிப்பட்ட

அரிய செயல்களை எப்படிச் செய்ய இயலும்?" என்றனர். இவ்வாறு அவர்களிடையே பிரிவினை ஏற்பட்டது. ஆகையால் மறுபடியும் பார்வை பெற்றவனிடம், " உன் கண்களுக்குப் பார்வை கொடுத்த அந்த ஆளைக் குறித்து நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டனர். அவன் அவர் இறைவாக்குரைக்கும் ஒரு பெரியார் "என்றான்.

அந்த யூதர் அதை நம்ப மனமில்லாமல் பார்வை பெற்றவனுடைய பெற்றோரை வரவழைத்து அவர்களிடம், " இவன் உங்களுடைய மகன் தானா? இவன் பார்வையற்றவனாய் பிறந்தான் என்றால், இவனுக்கு எப்படி பார்வை கிடைத்தது?" என்று கேட்டனர். அவனுடைய பெற்றோர் அவர்களிடம், "இவன் எங்களுடைய மகன் தான். இவன் பார்வையற்றவனாயப் பிறந்தான். இது தான் எங்களுக்குத் தெரியும். ஆனால் இவனுடைய கண்கள் எப்படி பார்வை பெற்றன. இவனுடைய கண்களுக்குப் பார்வை கொடுத்தது யார்? என்பதோ எங்களுக்குத் தெரியாது. இவன் வயது வந்தவன், தனக்காகத்தானே பேசக் கூடியவன். இவனையே கேட்டுக் கொள்ளுங்கள்," என்று கூறினர். யூதத் தலைவனுக்குப் பயந்ததினால் அவனுடைய பெற்றோர் இப்படிக் கூறினர். ஏனெனில், எவனாவது அவரை மேசியா என்று ஒப்புக்கொண்டால் அவனைத் தங்கள் சபையிலிருந்து விலக்கிவிடுவதென்று அந்த யூதர்கள் ஏற்கனவே தீர்மானித்திருந்தனர். அதனால்தான் அவனுடைய பெற்றோர், "அவன் வயது வந்தவன். அவனையே கேட்டுக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டனர்.

ஆகவே முன்பு பார்வையற்றவனாய் இருந்த அந்த மனிதனை யூதர்கள் மீண்டும் அழைத்து, "நீ கடவுளுக்கு மாட்சிமை அளி. இந்த மனிதன் பாவி என்பது எங்களுக்குத் தெரியும்" என்றார்கள். அதற்கு அவன், "அவர் பாவியா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. நான் பார்வையற்றவனாய் இருந்தேன். இப்போது பார்க்கிறேன் என்பது மட்டுமே எனக்குத் தெரியும்" என்று சொன்னான். அவர்கள் அவனிடம், "அவன் உனக்கு என்ன செய்தான், உன் கண்களுக்கு எப்படிப் பார்வை கொடுத்தான்?" என்று கேட்டார்கள், அதற்கு அவன்,"நான் ஏற்கனவே உங்களுக்குச் சொன்னேன், நீங்களோ அதைச் செவி கொடுத்துக் கேட்கவில்லை. ஏன் அதை மறுபடியும் கேட்க விரும்புகிறீர்கள்? நீங்களும் அவருடைய சீடராக விரும்புகிறீர்களோ?" என்று கேட்டான். அவர்கள் அவனை வைது விட்டு "நீ தான் அவனுடைய சீடன். நாங்கள் மோசேயின் சீடர்கள். மோசேயோடு கடவுள் பேசினார் என்பது எங்களுக்குத் தெரியும். இவன் எங்கிருந்து வந்தான் என்பது எங்களுக்குத் தெரியாது" என்று சொன்னார்கள். அதற்கு அந்த மனிதன், "என்ன ஆச்சரியம்! அவர் என் கண்களுக்குப் பார்வை அளித்திருக்கிறார். என்றாலும் அவர் எங்கிருந்து வந்தார் என்பது உங்களுக்குத் தெரியவில்லையே! பாவிகளின் வேண்டுதலுக்குக் கடவுள் செவி சாய்ப்பதில்லை என்பது நமக்குத்

தெரியும்; ஆனால் ஒருவன் தெய்வ பக்தியுள்ளவனாய் இருந்து அவருடைய விருப்பத்தை நிறைவேற்றினால் அவனுக்கு அவர் செவிசாய்ப்பார். பிறவியிலேயே பார்வையற்றவனாய் இருந்த ஒருவனுடைய கண்களுக்கு யாரும் பார்வை அளித்ததாக உலகம் உண்டானது முதல் எவரும் கேள்விப்பட்டதே இல்லை. அவர் கடவுளிடமிருந்து வந்திருந்தாலன்றி அவரால் ஒன்றும் செய்ய இயலாது,'' என்று சொன்னான். அதைக் கேட்டதும், "பிறந்தது முதல் பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் நீயா எங்களுக்குப் போதிக்க வந்தாய்!'' என்று சொல்லி அவர்கள் அவனைத் துரத்தி விட்டார்கள்.

அவர்கள் அவனைத் துரத்திவிட்டார்கள் என்பதை இயேசு கேள்விப்பட்டார். பிறகு அவர் அவனைக் கண்டுபிடித்தபோது, "கடவுளின் மைந்தரிடம் உனக்கு நம்பிக்கை உண்டா?'' என்று கேட்டார். அதற்கு அவன் "அவர் யார் என்பதைச் சொன்னால் அவரிடம் நம்பிக்கை கொள்ளுகிறேன்,'' என்றான். இயேசு அவனிடம் "நீ அவரைப் பார்த்திருக்கிறாய். இப்போது உன்னோடு பேசிக் கொண்டிருப்பது அவரே'' என்றார். உடனே அவன், "நம்புகிறேன் ஆண்டவரே'' என்று சொல்லி அவரை வணங்கினான். அப்பொழுது இயேசு, "பார்வை இல்லாதவர்கள் பார்க்கும்படியும், பார்வை உள்ளவர்கள் பார்வையற்றவராகும்படியும் தீர்ப்பளிக்கவே நான் இந்த உலகத்துக்கு வந்தேன்,'' என்றார்.

அவரோடிருந்த பரிசேயர் இதைக் கேட்டபோது, "அப்படியானால், நாங்களும் பார்வையற்றவர்களா?'' என்று கேட்டனர். இயேசு அவர்களிடம், "நீங்கள் பார்வையற்றவர்களாயிருந்தால் உங்கள் மீது பாவப்பழி சுமராது. ஆனால் 'எங்களுக்குக் கண் தெரிகிறது' என்று நீங்கள் இப்பொழுது சொல்லுகிறபடியால் உங்கள் பாவப்பழி உங்களை விட்டு நீங்காமல் இருக்கிறது,'' என்றார்.

3.2. வல்லமைச் செயல்கள்

கானாவில் நடந்த திருமணத்தில் (யோவான் 2:1-11)

கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இயேசுவின் தாயும், இயேசுவும் அவருடைய சீடர்களும் அந்தத் திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திராட்சை இரசம் குறைவுபட்டபோது இயேசுவின் தாய் அவரைப் பார்த்து, "அவர்களிடம் திராட்சை இரசம் தீர்ந்து போயிற்று,'' என்று சொன்னார். அதற்கு அவர், "அம்மா நான் என்ன செய்வது? என் நேரம் இன்னும் வரவில்லையே'' என்றார். அவருடைய தாய் பணியாளரிடம் "இவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதைச் செய்யுங்கள்'' என்று சொன்னார். யூதரின் சுத்திகரிப்பு முறைமையை முன்னிட்டு, ஒவ்வொன்றும் இரண்டு, மூன்று குடம் தண்ணீர் கொள்ளளவு கொண்ட ஆறு கற்சாடிகள் அங்கே வைக்கப்பட்டிருந்தன. இயேசு பணியாளரிடம், "இந்தச் சாடிகளில்

தண்ணீர் ஊற்றி நிரப்புங்கள்" என்று சொன்னார். அவர்கள் அவற்றை விளிம்புவரை நிரப்பினார்கள். பின்பு அவர் அவர்களிடம், "இப்பொழுது இதை மொண்டு, பந்தி விசாரிக்கிறவனிடம் கொண்டு போங்கள்" என்று சொல்ல அவர்களும் அவ்வாறே செய்தனர். பந்தி விசாரிக்கிறவன் அதை சுவைத்துப் பார்த்தான். அது எப்படி வந்ததென்பது அவனுக்கு அப்பொழுது தெரியாது. தண்ணீரை மொண்டுவந்த பணியாளருக்கு மட்டுமே தெரியும். ஆகையால், பந்தி விசாரிக்கிறவன், மணவாளனை அழைத்து, "எல்லாரும் தரம் மிகுந்த இரசத்தை முதலில் பரிமாறுவார்கள்; மக்கள் நன்றாய் குடித்தபின் தரத்தில் குறைவானதைக் கொடுப்பார்கள். நீயோ உயர்தரமுள்ள இரசத்தை இதுவரையிலும் வைத்திருந்தாயே" என்று அவனிடம் சொன்னான். இவ்வாறு இயேசு, தெய்வ ஆற்றலுக்கு அடையாளமாகத் தாம் செய்த செயல்களுள் முதலாவதான இந்தச் செயலைச் செய்து, தம் மாட்சிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீடர்கள் அவரிடம் நம்பிக்கை கொண்டார்கள்.

கடல் கொந்தளிப்பை அடக்குதல்
(மத். 8:23-27, மா. 4:35-41, லூக். 8:22-25)

ஒரு நாள் மாலையில் இயேசு சீடர்களிடம் "அக்கரைக்குப் போவோம் வாருங்கள்" என்று சொல்ல அவர்கள் கூட்டத்தை அனுப்பிவிட்டு, படகில் அவரைக் கொண்டு சென்றனர். வேறே படகுகளும் அவருக்குப் பின் சென்றன. அப்பொழுது ஒரு பெரும் புயற்காற்று எழுந்தது. அலைகள் படகின் மீது அடுத்தடுத்து மோதின. படகு தண்ணீரால் நிறைந்து கொண்டு வந்தது. இயேசு படகின் பிற்பகுதியில் தூங்கிக் கொண்டிருந்தார். சீடர்கள் அமிழ்ந்து போகும் இக்கட்டான நிலையில் இருந்தார்கள். அவர்கள் அவரை எழுப்பி, "போதகரே, மடிந்து போகிறோமே! உமக்குக் கவலையில்லையா?" என்றார்கள். அவர் விழித்தெழுந்து காற்றை அதட்டிவிட்டு, கடலைப்பார்த்து "இரையாதே, சும்மா இரு" என்றார். காற்று தணிந்தது. மிகுந்த அமைதி உண்டாயிற்று. இயேசு அவர்களிடம் "ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லையா?" என்றார். அவர்கள் மிகவும் அச்சமுற்று "இவர் யாராய் இருக்கக்கூடும்! காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

5000 பேருக்கு உணவளித்தல்
(மத் 14:13-21,மா.6:30-44,லூக் 9:10-17,யோ6:1-15)

பஸ்கா என்னும் யூதருடைய பண்டிகை நெருங்கி வரும் காலம் அது. முழுக்குநர் யோவான் கொல்லப்பட்டதை இயேசு கேள்வியுற்றார். திருத்தூதுவர்கள் இயேசுவிடம் வந்து தாங்கள் செய்தவை, போதித்தவை யாவற்றையும் பற்றி அவருக்கு அறிவித்தார்கள். இயேசு அவர்களிடம் "சற்று

இளைப்பாறத் தனிமையான ஓர் இடத்துக்குப் போவோம், வாருங்கள்'' என்றார்.ஏனென்றால், பலர் வருவதும் போவதுமாய் இருந்தனர். சாப்பிடக்கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. அவ்வாறே அவர்கள் மட்டும் ஒரு படகில் ஏறி திபேரியாக் கடல் எனப்படும் கலிலேயாக் கடலின் மறுபக்கம் உள்ள பெத்சாயிதா என்னும் ஊருக்குப் போனார்கள். இயேசு மலையின் மேல் ஏறிச் சென்று தம்முடைய சீடரோடு உட்கார்ந்திருந்தார். திரளான மக்கள் அவருக்குப் பின்னே சென்றார்கள். ஏனென்றால் நோயாளிகளிடம் அவர் செய்து வந்த அரிய செயல்களை அவர்கள் கண்டிருந்தார்கள். அவர்கள் ஆயனில்லாத ஆடுகளைப் போல இருந்தார்கள். ஆகையால் அவர்கள் மீது மனவுருக்கங் கொண்டு குணமடைவதற்காக வந்தவர்களைக் குணப்படுத்தினார். கடவுளின் அரசைப்பற்றிஅவர்களோடு பேசினார்.

பொழுது சாயும் நேரத்தில் சீடர்கள் அவரை அணுகி "நாம் இருக்கிற இடம் மனித நடமாட்டமில்லாத இடம். இந்த மக்கள் சுற்றிலும் இருக்கிற ஊர்களுக்கும் பட்டிகளுக்கும் போய் தங்கவும் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களைத் தேடிக் கொள்ளவும் அவர்களை அனுப்பிவிடும்'' என்றனர். அவரோ, "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்'' என்றார்.

இயேசு பிலிப்புவிடம் "இந்த மக்கள் உண்பதற்கு நாம் எங்கே அப்பம் வாங்கலாம்? என்று கேட்டார். தாம் செய்யப் போவதை அறிந்திருந்தும் பிலிப்புவைப் பரிசோதிப்பதற்காக இப்படிக் கேட்டார். அதற்கு பிலிப்பு, "ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தாலும் கூட இருநூறு தினாரியத்து அப்பமும் போதாதே. இங்கே இருக்கும் ஒரு பையனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் இருக்கின்றன. ஆனால், இத்தனை பேருக்கும் அவை எப்படிப் போதும்'' என்றான். இயேசு, "மக்களைப் பந்தி அமரச் செய்யுங்கள்'' என்றார். எல்லாரும் நூறு பேராகவும் ஐம்பது பேராகவும் வரிசை வரிசையாய் பசும்புல் தரையில் உட்கார்ந்தனர். பந்தியில் அமர்ந்த ஆண்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஐயாயிரம்.

இயேசு அந்த அப்பங்களை எடுத்து, வானத்தை நிமிர்ந்து பார்த்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அப்பங்களைப் பிட்டு, அவர்களுக்குப் பரிமாறுவதற்காகச் சீடரிடம் கொடுத்துக் கொண்டே இருந்தார். அந்த இரண்டு மீன்களையும் அவ்வாறே எல்லாருக்கும் பங்கிட்டார். அவர்களுக்கு வேண்டிய மட்டும் கிடைத்தது. அவர்கள் வயிறார உண்டபின் அவர் தம்முடைய சீடரிடம், "மீந்த துணிக்கைகளுள் எதுவும் வீணாகதபடி அவற்றைப் பொறுக்கிச் சேருங்கள்'' என்றார். அவர்களும் மக்கள் மீதமாக விட்ட துணிக்கைகளை

அவ்வாறே சேர்த்து பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினார்கள். இயேசு செய்த இந்த அரிய செயலை அந்த மக்கள் கண்டு, "உலகத்தில் தோன்ற வேண்டிய இறைவாக்குநர் உண்மையில் இவரே" என்றனர். அவர்கள் தம்மைப்பிடித்து அரசராக்கப் போகிறார்கள் என்பதை இயேசு அறிந்து விலகிக் கொண்டு தனியாய் மறுபடியும் மலைக்குச் சென்றார்.

நீர் மீது நடத்தல் (மத் 14:22-33, மா 6:45-52,யோ.6:16-21)

பிறகு இயேசு சீடரைத் தமக்கு முன் மறுகரைக்குப் பெத்சாயிதாவை நோக்கி படகில் செல்லும்படி கட்டாயப்படுத்தினார். அதே சமயத்தில் அவர் மக்களையும் அங்கிருந்து போய்விடும்படி செய்தார். மக்களை அனுப்பின பின் அவர் விண்ணப்பம் செய்வதற்காகத் தனியே ஒரு மலையின் மேல் ஏறினார். பொழுது சாய்ந்த பிறகும் அவர் அங்கேயே தனியாயிருந்தார். அதற்குள்ளாகப் படகு கரையிலிருந்து நெடுந்தொலைவு போய்விட்டது. எதிர் காற்றடித்ததால் அது அலைகளினால் அலைக்கழிக்கப்பட்டது. சீடர்கள் அரும்பாடுபட்டுப் படகைச் செலுத்திக் கொண்டிருந்தனர். இரவின் நான்காம் சாமத்தில் கடல் மீது அவர் நடப்பதைச் சீடர்கள் கண்டு, அவரை ஓர் ஆவியின் தோற்றம் என்று எண்ணி கலங்கி, அச்சத்தால் அலறினார்கள். உடனே இயேசு, "தைரியமாயிருங்கள். நான்தான், அஞ்ச வேண்டாம்" என்று சொன்னார். அதற்குப் பேதுரு, "ஆண்டவரே, நீர்தாமென்றால், நான் தண்ணீர் மீது நடந்து உம்மிடம் வரக் கட்டளையிடும்" என்றார். அவர் "வா" என்றார். அப்பொழுது பேதுரு படகிலிருந்து இறங்கி, தண்ணீர் மீது நடந்து இயேசுவை நோக்கி வந்தார். ஆயினும், கடுங்காற்றைப் பார்த்து அஞ்சி அமிழத் தொடங்குகையில், "ஆண்டவரே என்னைக் காப்பாற்றும்" என்று அலறினார். உடனே இயேசு கையை நீட்டி அவரைப் பிடித்து, "அற்ப நம்பிக்கை உள்ளவனே, ஏன் ஐயங்கொள்ளத் தொடங்கினாய்?" என்றார். அவர்கள் படகில் ஏறியதும் காற்று தணிந்தது. படகில் இருந்தவர்கள் அவரைப் பணிந்து, "உண்மையாக நீர் கடவுளின் மைந்தர்" என்றார்கள்.

4000 பேருக்கு உணவளித்தல் (மத் 15:29-39, மா,8:1-9)

இயேசு ஒரு மலையின் மேல் ஏறி அமர்ந்திருந்த போது, மக்கள் கூட்டங்கூட்டமாய் அவரிடம் வந்தார்கள். அவர்கள் தங்களோடு முடவர், பார்வையற்றோர், ஊனர், பேச்சுத் திறனற்றோர் போன்ற பலரைக் கொண்டு வந்து அவர் காலடியில் விட்டார்கள். அவர் அவர்களைக் குணமாக்கினார். பேச்சுத் திறனற்றோர் பேசுகிறதையும், ஊனர் குணமடைகிறதையும், முடவர் நடக்கிறதையும், பார்வையற்றோர் பார்க்கிறதையும் மக்கள் கண்டு வியப்படைந்து இஸ்ரவேலின் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

பிறகு இயேசு தம்முடைய சீடரிடம், "இவர்களைப் பார்க்கும்போது என் மனம உருகுகிறது. இவர்கள் மூன்று நாட்களாக என்னோடு தங்கியிருககிறார்கள். சாப்பிடுவதற்கு இவர்களிடம் ஒன்றுமில்லை. இவர்களை பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனமில்லை. அனுப்பினால் வழியில் சோர்ந்து போவார்கள். இவர்களுள் சிலர் நெடுந்தொலைவிலிருந்து வந்திருக்கின்றனர்" என்றார். அதற்குச் சீடர்கள் இவ்வளவு பெரிய கூட்டத்தின் பசியை ஆற்றுவதற்குத் தேவையான உணவு இந்தப் பாலைவனத்தில் நமக்கு எப்படி கிடைக்கும்?" என்றனர். இயேசு, "உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன?" என்று கேட்க, அவர்கள் "ஏழு அப்பங்கள்; சில சிறு மீன்களும் இருக்கின்றன" என்று சொன்னார்கள். அவர் கூட்டத்தைப் பார்த்து தரையில் பந்தியிருக்கும்படி கட்டளையிட்டார். பிறகு அந்த ஏழு அப்பங்களையும் மீன்களையும் அவர் எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, பிட்டு, சீடர்களிடம் கொடுத்தார். அவர்கள் மக்களுக்கு பரிமாறினார்கள். எல்லாரும் வயிறார உண்டனர். மீந்த துணிக்கைகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தனர். பெண்களும், பிள்ளைகளும் நீங்கலாக, சாப்பிட்ட ஆண்கள் நாலாயிரம் பேர். பிறகு அவர் மக்களை அனுப்பிவிட்டு, ஒரு படகில் ஏறி தல்மனூத்தா என்னும் இடத்திற்குப் போனார்.

மீன் வாயில் நாணயம் (மத் ,17:24-27)

இயேசுவும் அவருடைய சீடரும் கப்பர்நகூமில் இருந்தபோது கோவில் வரி வசூலிப்போர் பேதுருவிடம், "உங்கள் போதகர் கோவில் வரி செலுத்துகிறதில்லையா?" என்று கேட்டனர். "செலுத்துகிறார்" என்றார் பேதுரு. பிறகு இயேசு வீட்டுக்குள் சென்று பேசத் தொடங்குமுன் பேதுருவிடம், "சீமோனே, இவ்வுலக அரசர்கள் சுங்க வரியையும், தலைவரியையும் யாரிடம் வாங்குகிறார்கள்? தங்கள் பிள்ளைகளிடமா அல்லது மற்றவர்களிடமா? உனக்கு எப்படித் தோன்றுகிறது?" என்று கேட்டார். "மற்றவர்களிடந்தான்," என்று பேதுரு பதில் அளித்தார். அப்பொழுது இயேசு, "ஆகவே பிள்ளைகள் இவ்வகையான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள் அல்ல. ஆயினும் நாம் அவர்களுக்கு தடங்கலாய் இருக்கக்கூடாது. நீ கடலுக்குப் போய், தூண்டில் போட்டு முதலில் அகப்படும் மீனை எடுத்து அதின் வாயைத் திறந்து பார்த்தால், ஒரு வெள்ளி நாணயம் இருப்பதைக் காண்பாய். அதை எடுத்து என் சார்பிலும் உன் சார்பிலும் அவர்களிடம் செலுத்திவிடு" என்றார்.

3.3 இறந்தோரை உயிர்ப்பித்தல்

யவீருவின் மகள் (மத் 9:18-26.மா.5:21-43,லூக் 8:40-56)

இயேசு கடலோரத்தில் திரளான மக்களிடம் போதித்துக் கொண்டிருக்கையில், தொழுகைக் கூடத் தலைவர்களுள் ஒருவனான யவீரு என்ற யூதன் வந்து, அவரைக்கண்டு, அவர் காலில் விழுந்து, "என் மகள்

சாகுந் தறுவாயில் இருக்கிறாள். அவள் குணமாகிப் பிழைத்துக் கொள்ளும் பொருட்டு நீர் வந்து அவள்மேல் உம்முடைய கைகளை வைத்தருளும்'' என்று அவரைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

குணமாக்கப்பட்டுள்ள பெரும் பாடுள்ள பெண்ணுடன் இயேசு, பேசிக் கொண்டிருக்கையில், தொழுகைக் கூடத் தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து அவனிடம், ''உம்முடைய மகள் இறந்துபோய்விட்டாள். போதகரை ஏன் இன்னும் தொந்தரவு செய்கிறீர்?'' என்றனர். அவர்கள் சொன்ன வார்த்தை இயேசுவின் காதில் விழவே அவர் தொழுகைக் கூடத் தலைவனைப் பார்த்து, ''அஞ்சாதே, நம்பிக்கையை மட்டும் விடாதிரு. இப்பொழுது அவள் நலத்தோடிருப்பாள்'' என்றார். பேதுரு, யாக்கோபு, யாக்கோபின் சகோதரன் யோவான் ஆகியோரைத்தவிர வேறு எவரையும் தம்முடன் வரவிடாமல் இயேசு அவர்களோடு தொழுகைக்கூடத் தலைவன் வீட்டுக்குப் போய், மக்கள் சந்தடி செய்வதையும், ஓலமிட்டு அழுது புலம்புவதையும் கண்டார். உள்ளே சென்று ''ஏன் இந்தச் சந்தடி? ஏன் அழுகிறீர்கள்? சிறுமி சாகவில்லை, உறங்குகிறாள்'' என்றார். அவள் செத்துப் போனாள் என்று அவர்களுக்குத் தெரிந்திருந்ததால் அவர்கள் அவரைப் பார்த்து நகைத்தார்கள். ஆனால், அவர் எல்லாரையும் வெளியே அனுப்பிவிட்டு சிறுமியின் தகப்பனையும் தாயையும் தம்முடன் வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு, சிறுமி இருந்த அறைக்குள் சென்று, சிறுமியின் கையைப்பிடித்து ''தலித்தா கூம்'' என்றார். அதற்கு ''சிறு பெண்ணே எழுந்திரு'' என்பது பொருள். உடனே அப்பெண் எழுந்து நடந்தாள். அவளுக்கு வயது பன்னிரண்டு. அதைக் கண்டதும் மக்கள் மிகவும் வியப்புற்று மலைத்துப் போனார்கள். அவர், ''இது யாருக்கும் தெரியக்கூடாது'' என்று அவர்களுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டுவிட்டு, அவளுக்கு உணவு கொடுக்கும்படி சொன்னார்.

நாயீன் ஊர்க் கைம்பெண்ணின் மகன் (லூக் 7: 11-17)

இயேசு நாயீன் என்னும் ஓர் ஊருக்குச் சென்றபோது அவருடைய சீடரும் திரளான மக்களும் அவருடன் சென்றனர். அவர் ஊரின் வாயிலை நெருங்கின போது இறந்து போன ஒருவனை சிலர் தூக்கிக்கொண்டு வெளியே வந்து கொண்டிருந்தனர். தாய்க்கு அவன் ஒரே மகன். அவளோ ஒரு கைம்பெண். அவளுடன் ஊராருள் பலர் பெருங்கூட்டமாய் இருந்தனர். அவளைக் கண்டதும் ஆண்டவர் அவள் மீது மனஉருக்கங்கொண்டு ''அழாதே'' என்றார். பாடை அருகில் சென்று அதைத் தொட்டார். அதைச் சுமந்து வந்தவர்கள் நின்றனர். அப்பொழுது இயேசு ''இளைஞனே எழுந்திரு'' என்றார். இறந்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான். அவர் அவனைத் தாயிடம் ஒப்புவித்தார். ''நம்மிடையே இறைவாக்குநர் ஒருவர்

தோன்றியிருக்கிறார். கடவுள் தம்முடைய மக்களைத் தேடி வந்திருக்கிறார்," என அச்சத்துடன் சொல்லி கடவுளைப் புகழ்ந்தார்கள். அவரைப் பற்றிய இந்தச் செய்தி யூதேயா நாடு முழுவதிலும் சுற்றுப்புற மெங்கும் பரவிற்று.

இலாசர் (யோ.11: 1-44)

பெத்தானியாவில் இலாசரும் அவனுடைய சகோதரிகளான மரியாளும் மார்த்தாளும் வாழ்ந்து வந்தனர். இலாசர் நோயால் வருந்திக் கொண்டிருந்தான். அச்சகோதரிகள் இயேசுவிடம் "ஆண்டவரே உம்முடைய அன்பார்ந்த நண்பன் நோயால் வருந்திக் கொண்டிருக்கிறான்" என்று தெரிவித்தார்கள். அதைக் கேட்ட அவர் "இந்த நோயின் முடிவு சாவு அன்று. கடவுளின் மாட்சிமை விளங்கவும் இதன் மூலம் கடவுளின் மைந்தர் மாட்சிமை பெறவுமே இந்த நோய் வந்திருக்கிறது," என்றார். அம்மூவரிடம் அன்பு கொண்டிருந்த இயேசு இலாசர் நோயுற்றிருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்ட பிறகு தாம் இருந்த இடத்தில் இரண்டு நாட்கள் தங்கியபின். "நாம் யூதேயாவுக்குத் திரும்பப் போவோம், வாருங்கள்," என்று சீடரிடம் சொன்னார். அவர்களோ, "ரபீ, இப்போது தானே யூதர்கள் உம்மேல் கல்லெறிய முயன்றார்கள். மீண்டுமா நீர் அங்கு போகிறீர்?" என்று கேட்டனர். இயேசு மறுமொழியாக, "பகலுக்குப் பன்னிரண்டு மணி நேரம் உண்டு அல்லவா? பகலில் ஒளி வீசுவதால் பகலில் நடப்பவர் இடறி விழுவதில்லை. ஆனால், இரவில் நடப்பவர் இடறி விழுவார். ஏனெனில், அப்பொழுது ஒளி இல்லை" என்றார். இவ்வாறு கூறிய பின், நம் நண்பன் இலாசர் தூங்குகிறான். நான் அவனை எழுப்புவதற்காகப் போகிறேன்" என்றார். சீடர் அவரிடம், "ஆண்டவரே, அவன் தூங்கினால் நலமடைவான்" என்றனர். இயேசு அவன் இறந்ததைக் குறித்து இவ்வாறு பேசியிருக்க, அவன் தூங்கி இளைப்பாறுகிறான் என்று சொன்னதாக அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

இலாசரின் இறப்பு

அப்பொழுது இயேசு "இலாசர் இறந்து போனான்" என்று வெளிப்படையாகச் சொல்லிவிட்டு "நான் அங்கே இல்லாமற் போனதால் நீங்கள் என்னிடம் நம்பிக்கை கொள்ளுவதற்கு உங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கப்போகிறது. உங்களுக்குக் கிடைக்கப்போகும் இந்த நன்மைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். வாருங்கள், நாம் அவனிடம் போவோம்" என்றார். திதிமு என்னப்பட்ட தோமா அதைக் கேட்டு தம் உடன் சீடரைப்பார்த்து "அவரோடு இறப்பதற்கு நாமும் போவோம்" என்று சொன்னார்.

உயிர்த்தெழுதலும் மெய்வாழ்வும் இயேசுவே

இயேசு போய்க் கொண்டிருக்கையில் இலாசரைக் கல்லறையில் வைத்து நான்கு நாள் ஆயிற்று என்பது அவருக்குத் தெரியவந்தது. பெத்தானியா எருசலேமுக்குப் பக்கத்தில் ஏறத்தாழ இரண்டு மைல் தொலைவில் இருந்தது. மார்த்தாளுக்கும் மரியாளுக்கும் ஆறுதல் சொல்ல யூதர் பலர் அங்கே வந்திருந்தனர். இயேசு வந்து கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் மார்த்தாள் அவரை எதிர்கொள்ளச் சென்றாள். மரியாள் வீட்டிலேயே இருந்தாள். மார்த்தாள் இயேசுவிடம் வந்து, "ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் என் தம்பி இறந்திருக்கமாட்டான். இப்போதும் கூட, நீர் கடவுளிடம் கேட்கிறவை எவையோ அவற்றை எல்லாம் கடவுள் உமக்கு அருளுவார் என்பது எனக்குத் தெரியும்" என்று கூறினாள். இயேசு அவளிடம், "உன் தம்பி மீண்டும் உயிர் பெற்று எழுவான்" என்றார். அதற்கு மார்த்தாள், "கடைசி நாளில் நடைபெறும் உயிர்த்தெழுதலின் போது அவனும் உயிர்பெற்று எழுந்திருப்பான் என்பது எனக்குத் தெரியும்" என்றாள். இயேசு அவளிடம், **"உயிர்த்தெழுதலும் நானே : மெய்வாழ்வும்** நானே,என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவன் இறந்து விட்டாலும் மெய்வாழ்வை உடையவன். உயிரோடிருக்கும் ஒருவன் என்னிடம் நம்பிக்கை கொண்டால் அவன் ஒருபோதும் இறக்கமாட்டான். இதை நம்புகிறாயா?" என்று கேட்டார். அதற்கு அவள், "நீரே மேசியா, கடவுளின் மைந்தர். இவ்வுலகில் தோன்றுவார் என எதிர்பார்க்கப்பட்டவர் நீரே என்பதை நம்புகிறேன்," என்று சொன்னாள்.

இயேசு கண்ணீர் சிந்துதல்

இப்படிச் சொன்ன பின்பு அவள் தன் சகோதரி மரியாளிடம் போய், தனியாக அழைத்து, "போதகர் வந்திருக்கிறார். உன்னை அழைக்கிறார்" என்று சொன்னாள். அதைக் கேட்டதும் மரியாள் புறப்பட்டு அவரிடம் சென்றாள். இயேசு அது வரையிலும் ஊருக்குள் வரவில்லை. மார்த்தாள் அவரைக் கண்டு பேசிய இடத்திலேயே இருந்தார். வீட்டில் மரியாளோடிருந்து அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்த யூதர்கள் அவள் புறப்பட்டு விரைவாக வெளியே போவதைக் கண்டு, அவள் கல்லறைக்கு அழுவதற்காகப் போகிறாள் என்று நினைத்து, அவள் பின்னே சென்றனர். மரியாள் இயேசுவைக் கண்டு அவர் காலடியில் விழுந்து "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் தம்பி இறந்திருக்க மாட்டான்" என்றாள். அவள் அழுவதையும், அவளோடு வந்த யூதர் அழுவதையும் கண்ட இயேசு, உள்ளம் துடிதுடித்து பெரிதும் கலக்கமுற்று அவனை எங்கே வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அவர்கள், "வந்து பாரும் ஆண்டவரே" என்றார்கள். அதைக் கேட்டு இயேசு கண்ணீர் விட்டு அழுதார். யூதர்கள் "இவர்

அவனை எவ்வளவாய் நேசித்து வந்திருக்கிறார்,'' என்று பேசிக்கொண்டனர். அவர்களுள் சிலர் பார்வையற்றவனுடைய கண்களுக்குப் பார்வை அளித்த இவர், இவன் சாகாமல் இருக்கவும் செய்திருக்கக்கூடாதா?'' என்றனர்.

இலாசர் உயிர் பெறுதல்

இயேசுவின் உள்ளம் மீண்டும் துடித்தது. அவர் கல்லறை அருகில் சென்றார். அது ஒரு குகை. கல்லால் மூடப்பட்டிருந்தது. இயேசு, “கல்லை அகற்றுங்கள்” என்றார். மார்த்தாள் அவரிடம், “ஆண்டவரே, நான்கு நாட்களாகிவிட்டது. துர்நாற்றம் அடிக்குமே” என்றாள். இயேசு, “உனக்கு நம்பிக்கையிருந்தால் நீ கடவுளின் மாட்சிமையைக் காண்பாய் என்று நான் உன்னிடம் சொல்லியிருக்கிறேன் அல்லவா?'' என்றார். அப்போது கல்லை அகற்றி விட்டார்கள். இயேசு அண்ணாந்து பார்த்து “தந்தையே, நீர் என் வேண்டுதலைக் கேட்டதற்காக உமக்கு நன்றி. நீர் எப்பொழுதும் என் வேண்டுதலைக் கேட்கிறீர் என்பது எனக்குத் தெரியும். எனினும், நீரே என்னை அனுப்பினீர் என்பதை இங்கே சூழநிற்கும் இம்மக்கள் நம்ப வேண்டுமென்றே இதைச் சொல்லுகிறேன்,'' என்றார். இவ்வாறு சொன்னபின் அவர் உரத்த குரலில், “இலாசரே, வெளியே வா'' என்று கூப்பிட்டார். இறந்தவன் வெளியே வந்தான். அவனுடைய கால்களும் கைகளும் துணியால் சுற்றப்பட்டிருந்தன. இயேசு அவர்களிடம், “கட்டுகளை அவிழ்த்து இவனைப் போக விடுங்கள்'' என்று கூறினார்.

பகுதி – 4
உவமைகள்

ஆவிக்குரிய உண்மைகளை விளக்கும் எளிய கதைகளே உவமைகள். விண்ணகச் செய்திகளைக் கற்பிக்க இயேசு மண்ணுலகக் கருவியாக இவற்றை பயன்படுத்தினார். நற்செய்தி நூல்களில் காணப்படும் உவமைகள் பெரும்பாலும் இறையரசு பற்றியவை. சில விண்ணுலகச் செய்திகள் சீடருக்குக் கடினமாகத் தோன்றியதால் இயேசு அவற்றை உவமைகள் மூலம் எளிதில் விளக்கினார். நல்ல சமாரியன், மனம் திருந்திய மைந்தன், பத்துக் கன்னியர் ஆகியவை நம் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றவை.

விதைப்பவன் (மத் 13: 1-9,மா,4: 7-9,லூக் ,8:4-8)

இயேசு கடலோரத்தில் மறுபடியும் போதிக்கத் தொடங்கினார். மக்கள் கூட்டங்கூட்டமாய் வந்து அவரைச் சூழ்ந்து கொண்டதால், அவர் ஒரு படகில் ஏறி அமர்ந்தார். மக்களெல்லாரும் கரையில் நின்றனர். உவமைகள் மூலமாகப் பலவற்றைக்குறித்து அவர் அவர்களோடு பேசினார்.

விதைப்பவன் ஒருவன் விதைக்கச் சென்றான். விதைக்கும் பொழுது சில விதைகள் வழியில் விழுந்தன. பறவைகள் அவற்றை விழுங்கி விட்டன. சில விதைகள், மண் மிகுதியாய் இல்லாத கற்பாறைப் பகுதிகளில் விழுந்தன. மண் ஆழமாய் இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. வெயில் ஏறினபோது வாடி வதங்கி, வேரில்லாமையால் கருகிப் போயின. சில விதைகள் முட் செடிகளினிடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கி விட்டன. சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும் சில அறுபது மடங்காகவும், சில முப்பது மடங்காகவும் பலன் தந்தன. கேட்டுணரும் செவியுள்ளோர் இதைக் கேட்டுக் கொள்ளட்டும்,'' என்றார்.

இயேசு உவமைகள் மூலமாக பேசியதன் நோக்கம் (மத் ,13:10-17,மா4:10-12, லூக் 8-9,10)

சீடர்கள் அவரை அணுகி, "ஏன் அவர்களோடு உவமைகள் மூலமாகப் பேசுகிறீர்?'' என்று கேட்டனர். அதற்கு அவர், "இறையரசின் மறைச் செய்திகளை அறியும் நற்பேறு உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கோ அது அருளப்படவில்லை. உள்ளவனுக்கே கொடுக்கப்படும். தேவைக்கு மேலும் அவன் பெறுவான். இல்லாதவனிடமிருந்தோ உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்.''

"அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியால் நான் உவமைகள் மூலமாக அவர்களோடு பேசுகிறேன். ஏசாயா உரைத்த இறைவாக்கு அவர்களிடம் நிறைவேறுகிறது. ஆண்டவர் அவரிடம் சொன்னதாவது:

"நீங்கள் கேட்டுக் கேட்டு வந்தாலும் உணர்வதில்லை,
பார்த்துப் பார்த்து வந்தாலும் காண்பதில்லை,
இந்த மக்களுடைய உள்ளம் மழுங்கிவிட்டது,
இவர்களுடைய செவி மந்தமாயிற்று,
இவர்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள்.
இல்லாவிடில், ஒரு வேளை இவர்கள் கண்ணால் கண்டு, காதால் கேட்டு, உள்ளத்தால் உணர்ந்து, என் பக்கம் திரும்பலாம்: அப்படித் திரும்பினால் நான் இவர்களைக் குணப்படுத்துவேன்"

ஆனால் உங்கள் கண்களோ நற்பேறு பெற்றவை; அவை காண்கின்றன. உங்கள் காதுகளும் நற்பேறு பெற்றவை; அவை கேட்கின்றன. இறைவாக்குநர், நேர்மையானோர் ஆகியோருள் பலர் நீங்கள் காண்கிறவற்றைக் காண விரும்பியும் காணாது போயினர். நீங்கள் கேட்கிறவற்றைக் கேட்க விரும்பியும் கேளாது போயினர் என்று உங்களுக்குத் திட்டமாகச் சொல்லுகிறேன்."

விதைப்பவன் உவமையின் விளக்கம்
(மத் 13:18-22, மா. 4: 13-20, லூக் 8:11-15)

"ஆகையால், விதைப்பவன் உவமையைக் கவனித்துக் கேளுங்கள். இறையாட்சியின் செய்தியை ஒருவன் கேட்டும் அதை அவன் புரிந்து கொள்ளாமல் இருக்கும் போது, தீயோன் வந்து அவனுடைய உள்ளத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான். இவன்தான் வழியில் விதைக்கப்பட்டவன். கற்பாறை நிலங்களில் விதைக்கப்படுகிறவன் இறை வார்த்தையைக் கேட்டு அதை உடனே மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறவன். அவனுக்குள் அது வேர் கொள்ளுவதில்லை. ஆகையால். இவன் சிறிது காலம் மட்டும் நிலைத்து நின்று, இறை வார்த்தை காரணமாக வேதனையும் துன்பமும் உண்டானவுடனே இடறி விழுகிறான்."

"முட்செடிகளுள்ள இடங்களில் விதைக்கப்படுகிறவன் இறைவார்த்தையைக் கேட்கிறான். ஆயினும் உலகக் கவலையும், செல்வத்தின் வஞ்சகமும் இறைவார்த்தையை நெருக்கி விடுகிறதினால், அது பலனற்றுப் போகிறது."

"நல்ல நிலத்தில் விதைக்கப்படுகிறவனோ, இறை வார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொள்ளுகிறான். இவன் நூறு மடங்காய், அறுபது மடங்காய், முப்பது மடங்காய்ப் பலன் தருகிறான்" என்றார்.

கோதுமையும் களைகளும் (மத் 13: 24-30)

அவர் வேறு ஓர் உவமையையும் எடுத்துரைத்தார். இறையரசு தன் வயலில் நல்ல கோதுமை விதையை விதைத்த மனிதனுக்கு ஒப்பாயிருக்கிறது. எல்லாரும் தூங்குகையில் அவனுடைய பகைவன் கோதுமையிடையே களைகளை விதைத்துவிட்டுப் போனான்.பயிர் வளர்ந்து கதிர் விட்டபோது களைகளும் காணப்பட்டன. வீட்டுத் தலைவனிடம் அவனுடைய வேலையாட்கள் வந்து, "ஐயா, நீர் உமது வயலில் கோதுமை விதையை அல்லவா விதைத்தீர். அதில் களைகள் எப்படி வந்தன?" என்று கேட்டார்கள். அதற்கு அவன்,"என் பகைவன் ஒருவன் இப்படிச் செய்துவிட்டான்," என்றான்." "அப்படியானால், நாங்கள் போய் அவற்றைப் பறித்து எடுக்க வேண்டுமென்பது உமது விருப்பமா?" என்று வேலை ஆட்கள் கேட்டனர். அதற்கு அவன்," "வேண்டாம், களைகளைப் பறித்தெடுக்கும் போது ஒருவேளை கோதுமையையும் அவற்றோடு சேர்த்துப் பிடுங்கி விடுவீர்கள். ஆகையால், அறுவடை வரை இரண்டையும் வளர விடுங்கள், அறுவடைக்காலத்தில் நான் அறுவடை ஆட்களிடம் முதலில் களைகளைப் பறித்தெடுத்து எரிப்பதற்கென்று அவற்றைக் கட்டுகளாகக் கட்டுங்கள். பிறகு கோதுமையை என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் எனச் சொல்லுவேன், என்றான்" என்று சொன்னார்.

உவமையின் விளக்கம் (மத் 13:36-43)

இயேசு மக்களை அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்த போது அவருடைய சீடர்கள் அவரிடம் வயலில் களைகள் என்னும் உவமையை எங்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும் என்றனர். அதற்கு அவர், "நல்ல விதைகளை விதைப்பவர் மானிட மகன். வயல் இவ்வுலகம்; நல்ல விதைகள் கடவுளின் ஆட்சிக்குட்பட்ட மக்கள். களைகள் தீயோனைச் சேர்ந்தவர்கள். அவற்றை விதைக்கும் பகைவன் அலகை. அறுவடை, உலகின் முடிவு. அறுவடை செய்வோர் வான் தூதர். எவ்வாறு களைகளைப் பறித்துத் தீக்கிரையாக்குவார்களோ அவ்வாறே உலக முடிவிலும் நடக்கும். மானிடமகன் தம் வான் தூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய ஆட்சிக்குத் தடையாக உள்ள அனைவரையும், நெறி கெட்டோரையும் ஒன்று சேர்த்து தீச்சூளையில் தள்ளுவார்கள். அங்கே அழுகையும் புலம்பலும் இருக்கும். அப்போது நேர்மையானவர்கள் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவனைப்போல் ஒளி வீசுவர். கேட்டுணரும் செவியுள்ளோர் கேட்கட்டும்" என்றார்.

கடுகு விதை (மத் 13:31-32, மா .4:30-32, லூக் 13:18-19)

"இறையரசை எதற்கு ஒப்பிடலாம்? அல்லது எந்த உவமையால் அதை விளக்கலாம்? அது கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. கடுகு விதை நிலத்தில் விதைக்கப்படுகிறபோது உலகில் உள்ள எல்லா விதைகளையும் விட சிறியதாக இருக்கிறது.எனினும், அது முளைத்து வளர்ந்து எல்லாச் செடிகளையும் விடப் பெரிதாகி பறவைகள் அதன் நிழலில் வந்து தங்கும் அளவிற்குப் பெரிய கிளைகள் விடும்."

முளைத்துப் பயிராகும் விதை (மாற்கு.4:26-29)

"இறையரசு ஒருவன் விதைத்தபின் நாள் தோறும் இரவில் தூங்கிப் பகலில் விழித்திருக்க, அவனுக்குத் தெரியாமலே விதையானது முளைத்துப் பயிராகிறதைப் போல இருக்கிறது. நிலம் தானாகவே முதலில் முளையையும், பிறகு கதிரையும், அதன்பிறகு கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகக் கொடுக்கிறது. பயிர் விளைந்து அறுவடைப்பருவம் வந்ததும் அவன் அறுக்கத் தொடங்குகிறான்."

புளிப்பு மாவு (மத் 13:3,லூக் 13:20-21)

"இறையரசு புளிப்பு மாவுக்கு ஒப்பாயிருக்கிறது. ஒரு பெண் புளிப்புமாவை எடுத்து, அதை மூன்று படி மாவுக்குள் புதைத்து வைக்கிறாள். அதனால் அந்த மாவு முழுவதும் புளித்துப் போகிறது."

புதையல் (மத் 13:44)

"இறையரசு நிலத்தில் மறைந்திருக்கும் புதையலுக்கு ஒப்பாயிருக்கிறது. புதையலை ஒருவன் காண்கிறான், கண்டதும் அதை மறைத்து வைத்துவிட்டு மகிழ்ச்சியுடன் புறப்பட்டுப் போய் தனக்குள்ள யாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக் கொள்ளுகிறான்."

முத்து (மத் 13 : 45-46)

" இறையரசு நல்ல முத்துகளை நாடிச் செல்லும் வணிகனுக்கு ஒப்பாயிருக்கிறது. விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டதும் தனக்குள்ள யாவற்றையும் விற்று அதை வாங்கிக் கொள்ளுகிறான்."

வலை (மத் 13:47-50)

"இறையரசு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொள்ளும் கடலில் வீசப்படும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. வலை நிறைந்ததும் அதை இழுத்துக் கொண்டு போய், கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில்

சேர்த்து வைப்பர்; கெட்டவற்றை வெளியே எறிவர். இவ்வாறே, உலக முடிவிலும் நிகழும். வான்தூதர் நேர்மையானவர்களிடையே இருந்து தீயோரைப் பிரித்து அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும் தீச்சூளையில் அவர்களைத் தள்ளுவர்.''

திருமணவிருந்து (மத் 22:1-14)

இறையரசை இப்படி ஒப்பிட்டும் கூறலாம். ஓர் அரசன் தன் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தான். திருமணத்துக்கு அழைக்கப்பட்டவர்களைக் கூட்டிக் கொண்டு வரும்படி தன் வேலைக்காரரை அனுப்பினான். ஆனால், அழைக்கப்பட்டவர்களுக்கோ வர மனமில்லை. மறுபடியும் அவன் வேறு வேலைக்காரரை அனுப்பி, "கொழுத்த விலங்குகள் அடித்துச் சமைக்கப்பட்ட விருந்து ஆயத்தமாயிருக்கிறது. திருமணத்துக்கு வாருங்கள் என்று நீங்கள் போய் அழைக்கப்பட்டவர்களுக்குச்சொல்லுங்கள்'' என்றுசொன்னான். அழைக்கப்பட்டவர்களோ அதைப் பொருட்படுத்தாமல், ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வாணிகத் தொழிலுக்கும் சென்று விட்டனர். மற்றவர்களோ அவனுடைய வேலைக்காரரைப் பிடித்து இழிவு படுத்திக் கொன்றுவிட்டனர். அதைக் கேட்ட அரசன் சினமடைந்து தன் படையை அனுப்பி, அந்தக் கொலைகாரரை ஒழித்துவிட்டு அவர்களுடைய ஊரைத் தீயிட்டுக் கொளுத்தினான். பிறகு, அவன் தன் வேலைக்காரரிடம், "திருமண விருந்து ஆயத்தமாயிருக்கிறது'' அழைக்கப்பட்டவர்களோ அதற்குத் தகுதியற்றவர்களாப் போய்விட்டார்கள். ஆகையால் நீங்கள் சென்று பெருவீதிகளில் காணும் எல்லாரையும் திருமணத்துக்கு அழைத்து வாருங்கள்'' என்றான். வேலைக்காரர்கள் சென்று வீதிகளில் தாங்கள் கண்ட நல்லார் பொல்லாராகிய எல்லாரையும் விருந்தினராக அழைத்து வந்தனர். திருமண மண்டபமும் நிரம்பிற்று.

விருந்தினரைப் பார்க்க அரசன் உள்ளே வந்தபோது திருமண ஆடை அணிந்திராத ஒருவனைக் கண்டான். அவனிடம், "நண்பனே, திருமண ஆடையில்லாமல் இங்கே எப்படி வந்தாய்?'' என்று கேட்டான். அவனால் பதில் சொல்ல இயலவில்லை. அரசன் பணியாளர்களிடம் "இவனுடைய கையையும் காலையும் கட்டிப் புறம்பே உள்ள இருளில் போடுங்கள். அங்கே அழுகையும் புலம்பலும் இருக்கும்'' என்றான். இவ்வாறு அழைக்கப்பட்டவர் பலர்; தேர்ந்தெடுக்கப்பட்டவரோ சிலர் என்றார்.

விருந்தினருக்கும் விருந்தளிப்போருக்கும் ஒரு போதனை (லூக்கா 14:7-14)

விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தெரிந்தெடுப்பது பற்றி இயேசு அவர்களிடம் "பந்தியில் முதன்மையான இடத்தில் போய் உட்காராதே. ஒரு வேளை உன்னைவிட மதிப்புள்ள ஒருவன் அழைக்கப்பட்டிருந்தால் விருந்தளிப்பவன் உன்னிடம் வந்து 'இவருக்கு இடங்கொடு' என்பான். அப்பொழுது, நீ வெட்கத்தோடு கடைசி இடத்துக்குப் போக நேரிடும். எனவே, நீ கடைசி இடத்தில் உட்கார்ந்து கொள். அப்பொழுது உன்னை அழைத்தவன் உன்னிடம் வந்து, 'நண்பனே, முன்னால் உள்ள உயர்வான இடத்துக்கு வா' என்று சொல்லுவான். அப்பொழுது பந்தியில் இருக்கும் அனைவருக்கும் முன் பெருமையடைவாய். ஏனெனில். தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான்" என்று சொன்னார்.

பிறகு அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனிடம். "நீ விருந்து அளிக்கும் போது உன் நண்பரையோ, சகோதரரையோ, உறவினரையோ, செல்வமுடைய அயலகத்தாரையோ அழைக்க வேண்டாம், அழைத்தால், அவர்களும் உன்னைப் பதிலுக்கு அழைப்பார்கள். அதுவே உனக்குக் கைம்மாறாகி விடும். அப்படிச் செய்யாமால், ஏழைகள், ஊனர்கள், முடவர்கள், பார்வையற்றோர் ஆகியோரை வரவழை. அப்பொழுது நீ நற்பேறு பெற்றவனாவாய். ஏனெனில், அவர்கள் உனக்குக் கைம்மாறு செய்ய இயலாதவர்கள். நேர்மையானவர்கள் உயிர்த்தெழும்போது உனக்குக் கைம்மாறு கிடைக்கும்" என்றார். அவர்களோடு பந்தியில் இருந்தவர்களுள் ஒருவன் இவற்றைக் கேட்டபோது அவரிடம், "இறையாட்சியில் விருந்துண்பவன் நற்பேறு பெற்றவன்" என்றான் அதற்கு அவர்,

பெரிய விருந்து (லூக்கா 14:15-24)

"ஒருவன் பெரிய விருந்தை ஆயத்தம் செய்து பலரை அழைத்திருந்தான். விருந்து நேரம் வந்ததும் அழைக்கப்பட்டவர்களிடம் தன் ஊழியனை அனுப்பி, 'விருந்து ஆயத்தமாய் இருக்கிறது. வாருங்கள் என்று சொல்' என்றான். அவர்கள் அனைவருமே சாக்குப் போக்குச் சொல்லத் தொடங்கினர்."

"முதலாம் ஆள், "ஒரு வயலை வாங்கியிருக்கிறேன், நான் கட்டாயமாய்ப் போய் அதைப்பார்க்க வேண்டும். என்னை மன்னிக்கவும்" என்றான். வேறொருவன்," "ஐந்து ஏர்மாடுகள் வாங்கியிருக்கிறேன்.

அவற்றைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன். என்னை மன்னிக்கவும்'' என்றான். இன்னும் ஒருவன், “திருமணம் செய்தகாரணத்தால் வர இயலவில்லை'' என்றான்.

அந்த ஊழியன் இவற்றைத் தன் தலைவனுக்கு அறிவித்த போது அவன் சினமடைந்து தன் ஊழியனிடம், “நீ விரைந்து சென்று வீதிகளிலும் சந்துக்களிலும் உள்ள ஏழைகளையும், ஊனரையும், பார்வையற்றோரையும், முடவரையும் அழைத்து வா'' என்றான்.

“ஐயா, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று. ஆனால் இன்னும் இடம் இருக்கிறது'' என்று கூறினான் ஊழியன். தலைவன் ஊழியனிடம் “பெருவழிகளிலும், நடைபாதைகளிலும் இருப்பவர்களை வரும்படி கட்டாயப்படுத்து; வீடு நிறைய வேண்டும். அழைக்கப்பட்டவர்களுள் எவரும் என்னுடைய விருந்தைச் சுவைக்கப் போவதில்லை'' என்றான்.

பத்துக் கன்னியர் (மத் 25: 1-13)

“பத்துக் கன்னியர் தம் தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டு மணவாளரை எதிர்கொள்ளச் சென்றனர். அவர்களுள் ஐவர் முன்மதி இல்லாதவர்கள்; ஐவர் முன்மதி உள்ளவர்கள். முன்மதி இல்லாதவர்கள் தீவட்டிகளுடன் எண்ணெயை எடுத்துச் செல்லவில்லை. முன்மதி உள்ளவர்களோ தீவட்டிகளோடு எண்ணெயையும் எடுத்துச் சென்றனர். மணவாளர் வரக் காலந்தாழ்த்தவே, எல்லாரும் தூக்கத்தினால் சோர்வுற்றுத் தூங்கிவிட்டனர். நள்ளிரவில், ‘இதோ மணவாளர்! அவரை எதிர் கொள்ளப் புறப்படுங்கள்’ என்று கூவும் குரல் கேட்டதும், கன்னியர் எல்லாரும் எழுந்து தத்தம் தீவட்டிகளை ஆயத்தம் செய்தனர். அப்பொழுது முன்மதி இல்லாதவர்கள் முன்மதி உள்ளவர்களிடம், “எங்கள் தீவட்டிகள் அணையப்போகின்றன. உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள்''என்று கேட்டனர். அதற்கு முன்மதி உள்ளவர்கள், “இல்லை, ஒருவேளை எண்ணெய் எங்களுக்கும் உங்களுக்கும் போதுமானதாய் இல்லாமல் போகலாம். எனவே நீங்கள் கடையில் எண்ணெயை வாங்கிக் கொள்ளுவது தான் நல்லது'' என்றார்கள். அப்படியே அவர்கள் வாங்கப் போனார்கள். அதற்குள் மணவாளர் வந்துவிட்டார். ஆயத்தமாய் இருந்தவர்கள் அவரோடு திருமண வீட்டிற்குள் போனார்கள்; கதவும் அடைக்கப்பட்டது. பிறகு மற்றக் கன்னியர் வந்து “ஆண்டவனே, ஆண்டவனே, எங்களுக்குக் கதவைத் திறந்தருளும்'' என்று வேண்டினர். ஆனால், அவரோ, “உங்களை நான் அறியேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்'' என்று சொன்னார். இறையரசும் இவ்வாறே இருக்கும். ஆகையால் நீங்கள் விழிப்பாயிருங்கள்ள. ஏனெனில் அந்த நாளும் நேரமும் எப்போது வருமென்று உங்களுக்குத் தெரியாது.''

தாலந்தும் பணியாளரும் (மத் 25:14-30)

இறையரசை இவ்வாறும் விளக்கலாம். ஒருவன் வெளி நாட்டுக்குச் செல்லுமுன் தன் சொத்தை அவனுடைய பணியாளரிடம் ஒப்படைத்தான். அவர்களின் திறமைக்கு ஏற்ப ஒருவனுக்கு ஐந்து தாலந்தும் (5 நாட்கள் கூலி) மற்றொருவனுக்கு இரண்டு தாலந்தும், இன்னொருவனுக்கு ஒரு தாலந்தும் கொடுத்து விட்டுப் பயணம் சென்றான்.

ஐந்து தாலந்தை வாங்கினவன் அதைக் கொண்டு வாணிகம் செய்து இன்னும் ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான். இரண்டு தாலந்து வாங்கினவனும் அவ்வாறே மேலும் இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான். ஒரு தாலந்தை வாங்கினவனோ அதைப் புதைத்து வைத்துவிட்டான். பல நாட்களுக்குப் பின் திரும்பி வந்த தலைவன் பணியாளரிடம் கணக்கு தீர்க்கத் தொடங்கினான். ஐந்து தாலந்து வாங்கினவன், "ஐயா, நீர் என்னிடம் ஐந்து தாலந்து கொடுத்தீர். அதைக் கொண்டு மேலும் ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன்" என்றான். தலைவன் அவனிடம், "மிக நன்று. நீ நல்லவன், நம்பிக்கைக்குரியவன். இச்சிறு காரியத்தில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்ததினால் பெரிய காரியங்களுக்கு உன்னை அதிகாரியாக வைக்கப்போகிறேன். என்னுடைய மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வா" என்றான்.

இரண்டு தாலந்து வாங்கினவனும், "ஐயா, நீர் என்னிடம் இரண்டு தாலந்தை ஒப்படைத்தீர். இதோ இன்னும் இரண்டு தாலந்தைச் சம்பாதித்திருக்கிறேன்," என்றான். தலைவன் அவனிடம், "மிக நன்று. நீ நல்லவன், நம்பிக்கைக்குரியவன். இச்சிறு காரியத்தில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்ததினால், பெரிய காரியங்களுக்கு உன்னை அதிகாரியாக வைக்கப் போகிறேன். என்னுடைய மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வா" என்றான்.

ஒரு தாலந்து வாங்கினவனோ, ஐயா, நீர் கொடூரமானவர். மற்றவர்கள் விதைத்த இடத்தில் அறுவடை செய்பவர், மற்றவர்கள் தூற்றின இடத்தில் சேர்த்துக் குவிப்பவர் என்பது எனக்குத் தெரியும். ஆகையால், உமக்கு அஞ்சி உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்திருந்தேன். இதோ உம்முடைய பணம். எடுத்துக் கொள்ளும்" என்றான். தலைவன் அந்தப் பணியாளானிடம் "நீ பொல்லாதவன்;சோம்பேறி. நான் மற்றவர்கள் விதைத்த இடத்தில் அறுவடை செய்பவன் என்பதும் மற்றவர்கள் தூற்றின இடத்தில் சேர்த்துக் குவிப்பவன் என்பதும் உனக்குத் தெரிந்திருந்ததினால், நீ என் பணத்தை வட்டிக் கடையில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் நான் வந்ததும் என் பணத்தை வட்டியோடு வாங்கியிருப்பேன்" என்று அவனிடம் கூறிவிட்டு அந்தத் தாலந்தை இவனிடமிருந்து வாங்கி பத்துத்

தாலந்து உள்ளவனுக்குக் கொடுங்கள். உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும். அவன் நிறைவாகவும் பெறுவான். இல்லாதவனிடமிருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும். பயனற்ற இந்தப் பணியாளனைப் புறம்பே உள்ள இருளில் போடுங்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்,'' என்று சொன்னான்.

மினாவும் பணியாளர்களும் (லூக் 19:11-27)

இயேசு எருசலேமுக்கு அருகில் இருந்ததால் இறையரசு விரைவில் வெளிப்படும் என்று மக்கள் நினைத்ததினால் அவர் ஓர் உவமையைச் சொன்னார்.

"உயர்குடியில் பிறந்த ஒருவன் அரசனாக ஆட்சி உரிமை பெற்றுவர தொலைவிலுள்ள ஓர் இடத்துக்குப் போனான். போகுமுன், தன் பணியாளருள் பத்துப் பேரை அழைத்து அவர்களிடம் பத்து மினா (நூறு தினாரியத்திற்கு சமமானது ஒரு மினா) நாணயங்கள் கொடுத்து, "நான் திரும்பி வருமளவும் இதைக் கொண்டு வாணிகம் செய்து கொண்டிருங்கள்" என்று சொன்னான். அவனை வெறுத்த அவனுடைய குடி மக்கள், "இவன் எங்கள் அரசனாக வருவது எங்களுக்கு விருப்பமில்லை" என்று தெரிவிக்கும்படி அவன் பின்னே தூதுவர்களை அனுப்பினார்கள். என்றாலும், அவன் அரசனாக ஆட்சி உரிமை பெற்று திரும்பி வந்தான். வந்ததும், தன்னிடம் பணம் வாங்கியிருந்த பணியாளர்கள் எவ்வளவு சம்பாதித்திருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக அவர்களைத் தன்னிடம் அழைத்துவரச் சொன்னான்.

முதலாம் பணியாள், "ஐயா, நீர் கொடுத்த பணத்தின் மூலம் மேலும் பத்து மினா சம்பாதித்திருக்கிறேன்,'' என்றான். தலைவன் அவனிடம் பணியாளனே, நீ நல்லவன்; நன்றாகச் செய்திருக்கிறாய். மிகச் சிறிய காரியத்தில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்ததினால், இது முதல் நீ பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு'' என்றான்.

இரண்டாம் பணியாளனும், "ஐயா நீர் கொடுத்த பணத்தின் மூலம் மேலும் ஐந்து மினா சம்பாதித்தேன்,'' என்றான். தலைவன் அவனிடம், "நீ ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாய் இரு" என்றான்.

பிறகு, அடுத்தவன், "ஐயா, இதோ நீர் கொடுத்த மினா நாணயம். இதை அப்படியே ஒரு துணியில் முடித்து வைத்திருந்தேன். உமக்கு அஞ்சியே இப்படிச் செய்தேன். ஏனெனில், நீர் கொடூரமானவர். முதல் போடாமல் ஊதியத்தை எடுத்துக் கொள்ளுகிறவர்; விதைக்காமல் விளைவின் பலனை எடுத்துக் கொள்ளுகிறவர்" என்றான். அவன் அந்தப் பணியாளனிடம் "நீ பொல்லாதவன் என்று உன் வாயைக் கொண்டே உனக்குத் தீர்ப்பளிக்கிறேன்.

நான் கொடூரமானவன். முதல் போடாமல் ஊதியத்தை எடுத்துக் கொள்ளுகிறவன். விதைக்காமல் விளைவின் பலனை எடுத்துக் கொள்ளுகிறவன் என்பது உனக்குத் தெரிந்திருந்ததல்லவா? அப்படியானால், நீ என் பணத்தை ஏன் வட்டிக்கடையில் போட்டு வைக்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் நான் பணத்தை வட்டியோடு வாங்கியிருப்பேனே'' என்று சொல்லிவிட்டு, அருகில் நின்றவர்களிடம் அந்த நாணயத்தை இவனிடமிருந்து வாங்கி பத்து மினா உள்ளவனுக்கு கொடுங்கள். அதற்கு அவர்கள் "ஐயா, அவனிடம் ஏற்கனவே பத்து மினா இருக்கிறதே'' என்றனர். அப்பொழுது அவன், "உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும். இல்லாதவனிட மிருந்தோ உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்,'' என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் நான் அரசனாக ஆட்சி உரிமை பெறுவதை விரும்பாத என் பகைவர்களை இங்கே கொண்டு வந்து என்முன் வெட்டி வீழ்த்துங்கள்'' என்றான்.

கொடிய குத்தகைக்காரர்
(மத் 21:33-46, மா 12:1-12, லூக் 20:9-19)

"நிலக்கிழார் ஒருவன் ஒரு திராட்சைத் தோட்டம் அமைத்து அதைச் சுற்றிலும் வேலி அடைத்து, அதில் ஆலையை அமைத்து, காவல் மாடமும் கட்டினான். பின்பு, தொழிலாளர்களிடம் குத்தகைக்கு விட்டு விட்டு வெளியூருக்குப் போனான்.பழம் அறுக்கும் காலம் நெருங்கினபோது விளைச்சலில் தனக்குரிய பாகத்தை வாங்கி வரும்படி தன் பணியாளர்களில் சிலரை குத்தகைக்காரரிடம் அனுப்பினான். குத்தகைக்காரரோ, அவனுடைய பணியாளரைப் பிடித்து, ஒருவனை அடித்தார்கள், ஒருவனைக் கொன்றுவிட்டனர், மற்றொருவனைக் கல்லால் அடித்தனர். மீண்டும் அவன் முன்பைவிட மிகுதியான பணியாளரை அனுப்பினான். அவர்களையும் அப்படியே செய்தனர் குத்தகைக்காரர். இறுதியாக, அவன், "என் மகனை மதிப்பார்கள்'' என்று எண்ணி தன் மகனை அனுப்பினான். மகனைக் கண்ட குத்தகைக்காரர், "இவன்தான் சொத்துக்கு உரிமையாளன். இவனைக் கொன்றுவிட்டால். இவனுக்குச் சேரவேண்டிய சொத்து நமக்குக் கிடைக்கும்'' என்று தங்களிடையே பேசிக் கொண்டு, அவனைப் பிடித்துத் திராட்சைத் தோட்டத்துக்கு வெளியே கொண்டு போய்க் கொன்றுவிட்டனர். அப்படியானால், தோட்டத்து உரிமையாளன் வரும்போது அக்குத்தகைக்காரரை என்ன செய்வான்?'' என்று கேட்டார். அவர்கள், "அக்கொடியவரை ஒழித்து விட்டு விளைச்சலின் பலனில் தனக்குரிய பங்கைத் தவறாமல் கொடுக்கும் வேறு குத்தகைக்காரரிடம் தோட்டத்தை ஒப்படைப்பான்" என்றார்கள். இயேசு அவர்களிடம்,

"வீடு கட்டுகிறவர்கள் உதவாதென்று தள்ளிவிட்ட கல்லே
மூலைக்குத் தலைக்கல்லாயிற்று;
அது ஆண்டவராலே நடந்தது,
நம் கண்களுக்கு இது வியப்பாயிருக்கிறது."

என்று நீங்கள் மறைநூலில் படித்ததே இல்லையா? உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறையரசு உங்களிடமிருந்து பிடுங்கப்பட்டு அதன் பலனைத்தரும் ஓர் இனத்துக்குத் கொடுக்கப்படும். இந்தக் கல்லின் மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான்; இது எவன் மேல் விழுமோ, அவனை இது தவிடுபொடியாக்கிவிடும்'' என்றார்.

தலைமை ஆசாரியர்களும் பரிசேயர்களும் அவரது உவமைகளைக் கேட்ட போது. தங்களைக் குறித்தே அவற்றைச் சொன்னார் என்று அறிந்து அவரைக் கைது செய்ய வழி தேடினார்கள். ஆனாலும், மக்கள் அவரை இறைவாக்குநர் என மதித்து வந்ததால் அவர்களுக்கு அஞ்சினர்.

மன்னிக்க மறுத்தவன் (மத் 18: 21-35)

பேதுரு இயேசுவிடம், "ஆண்டவரே என் சகோதரன் எனக்கு விரோதமாகக் குற்றம் செய்து கொண்டேயிருந்தால், நான் எத்தனை முறை அவனை மன்னிக்கவேண்டும்? ஏழு முறை மட்டுமா?'' என்று கேட்டார். அதற்கு இயேசு, "ஏழு முறை மட்டுமன்று; ஏழெழுபது முறை மட்டும்'' என்றார்.

ஓர் அரசன் தன் பணியாளரோடு கணக்கைத் தீர்க்கத் தீர்மானித்து அதைத் தொடங்கிய போது, பதினாயிரம் தாலந்து கடன் பட்டிருந்த ஒருவன் அவனிடம் கொண்டு வரப்பட்டான். அவன் கடனை அடைக்க இயலாத நிலையில் இருந்ததால். அவனையும்,அவனுடைய மனைவி மக்களையும் அவனுக்குள்ள யாவற்றையும் விற்று கடனை அடைக்கும்படி அரசன் ஆணையிட்டான். அப்பொழுது அப்பணியாளர் அவனுடைய காலில் விழுந்து பணிந்து, "சற்றுப் பொருத்தருள்க: எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்றான். அரசன் அவன் மீது இரக்கம் கொண்டு, கடனை மன்னித்து அவனுக்கு விடுதலையளித்தான்.

ஆனால் அதே பணியாளர் வெளியே சென்றதும், தன்னிடம் கடன் பட்டிருந்த தன் உடன் பணியாளரைக் கண்டு, "நீ என்னிடம் பட்ட கடனை இப்பொழுதே திருப்பிக் கொடுக்கிறாயா, இல்லையா?'' என்று சொல்லிக் கொண்டே அவனுடைய தொண்டையை நெறித்தான். அப்பொழுது அந்த உடன் பணியாளர் அவன் காலில் விழுந்து "சற்றுப் பொறுத்தருள்க: உமது கடனைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்று வேண்டிக்கொண்டான். ஆனால் அவனோ அதற்கு உடன்படாமல் அவன் பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்குமட்டும் அவனைச் சிறையில் அடைக்கச் செய்தான். இதைக் கண்டு

வருத்தமுற்ற மற்ற உடன் பணியாளர்கள் அரசனிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விவரித்துச் சொன்னார்கள். அரசன் அந்த அடிமையைத் தன்னிடம் வரவழைத்து, "பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் உன் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்தேனே, நான் உனக்கு இரங்கினது போல, நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கங்காட்டியிருக்க வேண்டாமா?" என்று கேட்டு, சினந்து, அவன் பட்ட கடன் முழுவதையும் தனக்குத் திருப்பிக் கொடுக்குமட்டும், வதைப்போரிடம் அவனை ஒப்புக்கொடுத்தான். "உங்களுள் தன் சகோதரனை மனமார மன்னியாத ஒவ்வொருவனுக்கும் என் விண்ணகத் தந்தையும் இப்படியேதான் செய்வார்" என்றார்.

திராட்சை தோட்ட வேலையாள்கள் (மத் 20:1-16)

"இறையரசு பின்வரும் நிகழ்ச்சியைப் போன்றது. ஒரு திராட்சைத் தோட்ட உரிமையாளர் தன் தோட்டத்தில் வேலை செய்ய ஆள்களைத் தேடி விடியற்காலத்தில் புறப்பட்டுப் போனான். நாளொன்றுக்கு ஒரு தினாரியம் என்று கூலி பேசி வேலையாள்களைத் தோட்டத்திற்கு அனுப்பினான். ஏறக்குறைய காலை ஒன்பது மணிக்கும் கடைத் தெருவில் வேலையின்றி நின்று கொண்டிருந்தவர்களிடம், "நீங்களும் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள். நியாயமான கூலி கொடுப்பேன்" என்று சொன்னான். அவர்களும் போனார்கள். அவன் பகல் பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும் போய் அப்படியே செய்தான். மாலை ஐந்து மணிக்கும் அவன் போய் வேறு சிலர் நிற்பதைக் கண்டு, அவர்களிடம், "ஏன் இப்படி நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான். அவர்கள், "எவரும் எங்களைக் கூலிக்கு அமர்த்தவில்லை" என்றார்கள். அவன் அவர்களிடம், "நீங்களும் என் திராட்சை தோட்டத்துக்குப் போங்கள்" என்றான்.

மாலையானதும் தோட்ட உரிமையாளர் தன் மேற்பார்வையாளரிடம், "பிந்தி வந்தவர் தொடங்கி முந்தி வந்தவர்கள் வரை வேலையாள்களுக்குக் கூலி கொடு" என்று சொன்னான். ஐந்து மணிக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு ஒரு தினாரியம் கொடுக்கப்பட்டது. ஆகையால், முதலில் வந்தவர்கள் தங்களுக்கு மிகுதியாகக் கிடைக்கும் என்று எண்ணினர். ஆனால் அவர்களுக்கும் ஒரு தினாரியமே கொடுக்கப்பட்டதால் தோட்ட உரிமையாளருக்கு எதிராக முணுமுணுத்து, "கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணி நேரமே வேலை செய்தார்கள். நாங்களோ நாள் முழுவதும் பாடுபட்டதோடு வெயிலின் கொடுமையையும் சகித்தோம். ஆயினும் இவர்களை எங்களுக்குச் சமமாக்கி விட்டீரே" என்றார்கள். அவர்களுள் ஒருவனிடம் தோட்டத்து உரிமையாளர், "நண்பனே, நான் உனக்கு அநியாயம்

செய்யவில்லை. நீ என்னிடம் ஒரு தினாரியத்துக்கு சம்மதிக்கவில்லையா? உனக்கு உரியதை வாங்கிக் கொண்டு போ. உனக்குக் கொடுத்தது போல கடைசியில் வந்த இவனுக்கும் கொடுப்பது என் விருப்பம். என்னுடையதை நான் விரும்புகிறபடி செய்ய எனக்கு உரிமை இல்லையா? நான் தாராளமுள்ளவனாய் இருப்பதினால் உனக்கு ஏன் பொறாமை? இவ்வாறே பிந்தினோர் முந்தினோரும் முந்தினோர் பிந்தினோரும் ஆவார்கள்'' என்றார்.

நல்ல சமாரியன் (லூக் 10:25-37)

நீதிச் சட்ட அறிஞன் ஒருவன் இயேசுவைப் பரிசோதிக்கும் எண்ணத்துடன் ''போதகரே, கடவுள் வாக்களித்த என்றுமுள்ள மெய்வாழ்வைப் பெற்றுக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?'' எனக் கேட்டான். அதற்கு அவர், ''நீதிச் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது என்ன?'' என்று கேட்டார். அவன், ''உன் கடவுளாகிய ஆண்டவரிடம் உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் முழு ஆற்றலோடும், உன் முழு மனதோடும் அன்பு கொள்ளுவாயாக. உன்னிடம் நீ அன்பு கொள்ளுவது போல அடுத்தவனிடமும் அன்பு கொள்ளுவாயாக என்று எழுதப்பட்டிருக்கிறது,'' என்றான். ''நீர் சரியாகச் சொன்னீர், அப்படியே செய்யும்; மெய்வாழ்வு கிடைக்கும்'' என்றார் இயேசு. ஆனால் அவன் தன்னிடம் தவறு ஒன்றுமில்லை எனக் காட்ட விரும்பி இயேசுவிடம் ''எனக்கு அடுத்தவன் எனப்படுகிறவன் யார்?'' என்று கேட்டான். அதற்கு இயேசு, ''ஒருவன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் சென்றான். செல்லுகையில் கொள்ளைக்காரர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் ஆடைகளை உரிந்து, அவனை அடித்து, குற்றுயிராக விட்டுச் சென்றார்கள். ஆசாரியர் ஒருவர் தற்செயலாக அவ்வழியே வந்தார். அவனைக் கண்டதும் ஒரு பக்கமாக விலகிச் சென்றார். அப்படியே ஒரு இலேவியனும் அந்த இடத்துக்கு வந்தான். அவனைக் கண்டதும் அவனும் ஒரு பக்கமாக விலகிச் சென்றான். பயணம் செய்து கொண்டிருந்த சமாரியனே அவனைக் கண்டபோது மன உருக்கங்கொண்டு அவனருகே சென்றான். காயங்களில் எண்ணெயும் திராட்சை இரசமும் வார்த்து, அவற்றைக் கட்டி, தான் ஏறிவந்த விலங்கின் மீது அவனை ஏற்றி ஒரு சத்திரத்துக்குக் கொண்டு போய் அவனைக் கவனித்துக் கொண்டான். மறுநாள் இரண்டு தினாரியத்தைச் சத்திரக்காரன் கையில் கொடுத்து, ''நீ இவனைக் கவனமாகப் பார்த்துக் கொள். இதற்கு மேல் ஏதேனும் நீ செலவழித்தால் நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தந்து விடுகிறேன்,'' என்றான். கொள்ளைக்காரர் கையில் அகப்பட்டவனுக்கு இம்மூவருள் யார் அடுத்திருப்பவனாக உமக்குத் தோன்றுகிறது?'' எனக்கேட்டார். அதற்கு அவன், ''அவனுக்கு இரக்கம் காட்டினவனே,'' என்றான். ''நீரும் போய் அப்படியே செய்யும்'' என இயேசு கூறினார்.

காணமற்போன ஆடு (மத் 18:12-14,லூக் 15 : 1-7)

ஆயக்காரர், பாவிகள் ஆகிய எல்லாரும் இயேசு சொல்லுவதைக் கேட்க அவரிடம் வந்தனர். அதனால் பரிசேயரும் வேத அறிஞரும் இவன் பாவிகளைச் சேர்த்துக் கொண்டு அவர்களோடு சாப்பிடவும் செய்கிறானே," என்று சொல்லி முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது இயேசு, "கெட்டழிந்து போனதை மீட்கவே மனுமைந்தர் வந்திருக்கிறார். உங்களுள் எவனாவது தன்னுடைய நூறு ஆடுகளுள் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் நடுக்காட்டிலே விட்டுவிட்டு, காணாமற் போனதைக் கண்டுபிடிக்கும் வரை தேடித்திரியாமல் இருப்பானா? கண்டுபிடித்தால், மகிழ்ச்சியோடு அதைத் தன் தோள் மீது போட்டுக் கொண்டு, வீட்டுக்கு வந்து, நண்பரையும், அயலகத்தாரையும் வரவழைத்து அவர்களிடம் "காணாமற் போன என் ஆட்டைக் கண்டு பிடித்துவிட்டேன். என்னோடு சேர்ந்து மகிழ்ந்து கொண்டாடுங்கள்" என்பான். அவ்வண்ணமே, மனமாற்றம் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நேர்மையானவர்களின் பொருட்டு உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனமாற்றமடையும் ஒரே பாவியின் பொருட்டு விண்ணுலகில் உண்டாகும் மகிழ்ச்சி மிகுதியாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

காணாமற் போன வெள்ளிக்காசு (லூக் 15: 8-10)

"பத்துவெள்ளிக்காசை வைத்திருந்த எந்தப்பெண்ணாவது அவற்றுள் ஒரு காசை இழந்துவிட்டால், விளக்கை ஏற்றி, வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும் வரையிலும் கவனத்தோடு தேடாமல் இருப்பாளா? கண்டு பிடித்தால், தன் தோழிகளையும் அயலகத்தாரையும் வரவழைத்து, 'காணமாற் போயிருந்த வெள்ளிக்காசைக் கண்டு பிடித்து விட்டேன். என்னோடு சேர்ந்து மகிழ்ந்து கொண்டாடுங்கள்' என்பாள். அவ்வண்ணமே, ஒரே ஒரு பாவி மனமாற்றம் அடைந்தாலும் அவன் பொருட்டு, கடவுளின் தூதர்களிடையே மகிழ்ச்சி உண்டாகும்."

மனமாற்றமடைந்த மைந்தன் (லூக் 15 : 11-32)

மேலும் அவர், "ஒரு மனிதனுக்கு மைந்தர் இருவர் இருந்தனர். அவர்களுள் இளையவன் தந்தையிடம் சென்று, 'அப்பா, சொத்தில் எனக்குரியதை எனக்குக் கொடுக்க வேண்டும்,' என்று கேட்டான். அவனும் தன் சொத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான். சில நாட்களுக்குள் இளைய மகன் தனக்குரிய எல்லாவற்றையும் விற்றுப் பணத்தைத் திரட்டிக் கொண்டு வெளி நாட்டுக்குப் போனான். அங்கே அவன் ஒழுக்கக்கேடான வாழ்க்கை நடத்தி பணத்தைச் செலவு செய்துவிட்டான். அந்த நாட்டில் கொடிய பஞ்சம் வந்தது. வறுமையில் வாடிய அவன் அந்த நாட்டினன் ஒருவனை

அண்டிப் பிழைப்பதற்காக அவனிடம் சென்றான். அவன் தன் பண்ணையில் பன்றி மேய்க்க அவனை அனுப்பினான். பன்றி தின்னும் தவிட்டையாவது தின்று வயிற்றை நிரப்பலாமென்று அவனுக்கு ஆவல் உண்டாயிற்று. ஆனால் எவரும் அவனுக்கு எதையும் கொடுக்கவில்லை.''

"அவனுக்கு மனத் தெளிவு ஏற்பட்ட போது அவன், 'என் தந்தை வீட்டில் எத்தனையோ கூலியாள்களுக்கு தேவைக்கு மேலாகவே உணவு கிடைக்கிறது. நானோ இங்கே பசியால் மடிகிறேன். நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், 'அப்பா, விண்ணுலகுக்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன். இனி நான் உம்முடைய மைந்தன் என்று சொல்லப்படுவதற்குத் தகுதி அற்றவன். உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்'' என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டுத் தன் தந்தையிடம் வந்தான். அவன் தொலைவில் வரும்போதே தந்தை அவனைக் கண்டுவிட்டான்.கண்டதும், அவன் மனம் உருகி, ஓடி, அவனைக் கட்டித்தழுவி முத்தமிட்டான். மைந்தனோ. தந்தையிடம். ''அப்பா, விண்ணுலகுக்கும் உமக்கும் விரோதமாகப் பாவம் செய்தேன். இனி நான் உம்முடைய மைந்தன் என்று சொல்லப்படுவதற்குத் தகுதியற்றவன்'' என்று சொன்னான்.

ஆனால் தந்தையோ தன் வேலைக்காரரை அழைத்து, "நீங்கள் உடனே முதல் தரமான உடையைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்துங்கள். இவன் விரலுக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணியுங்கள். கொழுத்த கன்றை அடித்துச் சமையுங்கள். நாம் உண்டு களிப்போம். இந்த என் மைந்தன் இறந்து போனவன், இப்பொழுது உயிரோடு வந்திருக்கிறான். காணாமற்போனவன், இப்பொழுது கிடைத்துவிட்டான்,'' என்றான். அவர்கள் அப்படியே செய்து களிப்புடன் கொண்டாட்டங்களைத் தொடங்கினார்கள்.

வயலில் இருந்த அவனுடைய மூத்த மைந்தன் திரும்பி வீட்டிற்கருகில் வந்தபோது அங்கு நடந்த ஆடல் பாடல்கள் அவன் காதில் விழுந்தன. வேலைக்காரருள் ஒருவனிடம், "இது என்ன?'' என்று அவன் வினவினான். அதற்கு அவன், "உம்முடைய தம்பி வந்துவிட்டார். நலத்துடன் மீண்டும் வந்ததினால் உம்முடைய தந்தை கொழுத்த ஒரு கன்றை அடித்திருக்கிறார்'' என்றான். அப்பொழுது அவன் சினமடைந்து உள்ளே வர மறுத்து அவன் தந்தையிடம், "இத்தனை ஆண்டுகள் நான் (உமக்காக) உழைத்து வருகிறேன். உமது கட்டளையை ஒருபோதும் மீறினதில்லை. அப்படி யிருந்தும், என் நண்பரோடு நான் களிப்புடன் இருப்பதற்கு நீர் ஓர் ஆட்டுக் குட்டியைக் கூட எனக்கென்று ஒருபோதும் கொடுத்ததில்லை. ஆனால் விலை மகளிருடன் சேர்ந்து உமது சொத்தை அழித்து விட்டுத் திரும்பி வந்துள்ள உமது மைந்தனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே,'' என்றான்.

அதற்கு அவன், "மைந்தனே, நீ எப்பொழுதும் என்னுடன் இருக்கிறாய். என்னுடையவை எல்லாம் உன்னுடையவையே. இப்பொழுது நாம் களிகூர்ந்து மகிழுவது முறையே. ஏனெனில், உன் தம்பியாகிய இவன் மறைந்து போனவன். ஆனால் இப்பொழுது உயிரோடு வந்திருக்கிறான்; காணாமற்போயிருந்த இவன், இப்பொழுது கிடைத்துவிட்டான்' என்று சொன்னான்" என்றார்.

நேர்மையற்ற கண்காணிப்பாளன் (லூக் 16 : 1-13)

மேலும் இயேசு தம் சீடரை நோக்கி, "செல்வமுடையவன் ஒருவனுக்கு ஒரு கண்காணிப்பாளன் இருந்தான். அவன் தன் தலைவனுடைய சொத்துக்களை அழித்துக் கொண்டிருப்பதாகத் தலைவனுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது தலைவன் அவனை வரவழைத்து, "நான் உன்னைக் குறித்து இப்படிக் கேள்விப்படுகிறேனே, இது என்ன? இனிமேல் நீ என் கண்காணிப்பாளனாய் இருக்க முடியாது, உன் கணக்கை ஒப்புவித்து விடு," என்றான்.

அந்த ஊழியன், "நான் என்ன செய்வேன்? என் தலைவன் என்னை கண்காணிப்பு வேலையிலிருந்து தள்ளிவிடுகிறாரே; மண்ணைக் கொத்தி வேலை செய்ய எனக்கு வலிமையில்லை. பிச்சை எடுக்கவும் வெட்கமாயிருக்கிறது. ஆனால் நான் என்ன செய்ய வேண்டும் என்பது இப்பொழுது எனக்குத் தெரிந்துவிட்டது. வேலையைவிட்டு நான் தள்ளப்படும் போது மற்றவர்கள் என்னை ஏற்றுக்கொள்ளுவதற்காக நான் அதைச் செய்யப் போகிறேன்," என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

பிறகு, அவன் தன்னுடைய தலைவனிடம் கடன்பட்டவர்களை ஒவ்வொருவராக அழைத்து, முதலாவது வந்தவனைப் பார்த்து, "நீ என் தலைவனிடம் வாங்கின கடன் எவ்வளவு?" என்று கேட்டான். "நூறு குடம் எண்ணெய்" என்றான் அவன். "நீ உன் சீட்டை வாங்கி ஐம்பது என்று எழுது" என்று கண்காணிப்பாளன் அவனிடம் கூறினான். பிறகு வேறொருவனைப் பார்த்து "நீ வாங்கின கடன் எவ்வளவு?" என்று கேட்டான். "நூறு கலம் கோதுமை" என்றான் அவன். கண்காணிப்பாளன் அவனிடம் "நீ உன் சீட்டை வாங்கி எண்பது என்று எழுது" என்றான். நேர்மையற்ற அந்தக் கண்காணிப்பாளன் இவ்வாறு முன்மதியுடன் செய்ததால், ஒளியின் பிள்ளைகளைவிட இந்த யுகத்தின் பிள்ளைகள் தங்கள் தலைமுறைக்கு ஏற்றவாறு விவேகமாக நடந்து கொள்ளுகிறார்கள். சிறிய காரியத்தில் உண்மையுள்ளவனே பெரிய காரியத்திலும் உண்மை உள்ளவனாய் இருப்பான். சிறிய காரியத்தில் நேர்மையில்லாதவன் பெரிய காரியத்திலும் நேர்மை இல்லாதவனாய் இருப்பான். அநீதத்திற்கேதுவான உலகப்

பொருளைக் கையாளுவதில் நீங்கள் உண்மை அற்றவர்களாய் இருந்தால், யார் உங்களிடம் மெய்ப்பொருளை நம்பி ஒப்புவிப்பார்கள்? வேறொருவனுக்கு உரியதில் நீங்கள் உண்மையற்றவர்களாய் இருந்தால், யார் உங்களுக்கு எதையும் சொந்தமாகக் கொடுப்பார்கள்?

வீட்டு வேலைக்காரன் எவனும் இரண்டு தலைவர்களுக்கு வேலைக்காரனாய் இருக்க முடியாது; ஏனென்றால் அவன் ஒருவனைப் பகைத்து, மற்றவரிடம் அன்பு கொள்ளுவான். அல்லது ஒருவரோடு சேர்ந்து கொண்டு, மற்றவனைப் புறக்கணிப்பான். ஒரே சமயத்தில் கடவுளுக்கும் உலகப் பொருளுக்கும் வேலை செய்ய உங்களால் இயலாது'' என்றார்.

விழிப்பாயிருக்கும் நம்பிக்கைக்குரிய ஊழியர்கள்
(லூக் 12:35-48)

''உங்கள் அரைக் கச்சைகள் கட்டப்பட்டும், விளக்குகள் எரிந்து கொண்டும் இருக்கட்டும். திருமண விருந்திலிருந்து தங்கள் தலைவன் திரும்பி வந்து தட்டும்போது உடனே திறப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிற மனிதருக்கு ஒப்பாயிருங்கள். தலைவன் வரும்போது விழிப்பாய் இருக்கிற அவன் ஊழியர்களே நற்பேறு பெற்றவர்கள். அவன் அரைக் கட்டிக் கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச் செய்து அவர்களண்டை வந்து பணிவிடை செய்வான். இதை நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். அவன் இரவின் இரண்டாம் அல்லது மூன்றாம் சாமத்திலாவது வந்து அவ்வூழியர்கள் அப்படியே இருக்கக் கண்டால் அவர்கள் நற்பேறு பெற்றவர்கள். திருடன் எந்த நேரத்தில் வருவான் என்பது வீட்டுத்தலைவனுக்குத் தெரிந்திருந்தால், அவன் தன் வீட்டைக் கன்னமிட இடங் கொடுக்கமாட்டான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுமைந்தர் வருவார். ஆகையால் நீங்களும் எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.''

அப்பொழுது பேதுரு, ''ஆண்டவரே, இந்த உவமையை எங்களைக் குறித்துச் சொல்லுகிறீரா அல்லது எல்லாரையும் குறித்துச் சொல்லுகிறீரா?'' என்று கேட்டார். அதற்கு ஆண்டவர், ''நம்பிக்கைக்குரியவனும் விவேகமுள்ளவனுமான ஊழியன் ஒருவன் தன் தலைவனுடைய வேலைக்காரருக்கு ஏற்ற வேளையில் படியளக்கும்படி அவனால் கண்காணிப்பாளனாய் நியமிக்கப்பட்டான் என்று வைத்துக் கொள்ளுவோம். தலைவன் அவனை அப்படிச் செய்கிறவனாய்க் கண்டால் அந்த ஊழியன் நற்பேறு பெற்றவனாவான். தலைவன் தனக்குள்ள யாவற்றின் மேலும் அவனை அதிகாரியாக அமர்த்துவான் என்ற உண்மையை உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆனால், அந்த ஊழியன் 'என் தலைவர் இப்பொழுது வரமாட்டார்.' என்று தன் உள்ளத்தில் சொல்லிக் கொண்டு

வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடித்து, உண்டு, குடித்து வெறித்திருந்தால் அந்த ஊழியன் எதிர்பாராத ஒரு நாளிலும், அறியாத ஒரு நேரத்திலும், அவனுடைய தலைவன் வந்து, அவனைக் கடுமையாகத் தண்டித்து வஞ்சனையாளருக்குரிய கதிக்கு ஆளாக்குவான். தலைவனுடைய விருப்பம் என்ன என்பதை அறிந்திருந்தும் அதன்படி முன்னேற்பாடு எதுவும் செய்யாமலும் நடவாமலும் இருக்கும் ஊழியனுக்குப் பல அடிகள் கிடைக்கும். ஆனால், அதை அறியாத ஒருவன் தண்டனைக்குரியவற்றைச் செய்தாலும், அவனுக்குச் சில அடிகளே கிடைக்கும். எவனிடம் மிகுதியாகக் கொடுக்கப்படுகிறதோ, அவனிடம் மிகுதியாக எதிர்பார்க்கப்படும்; எவனிடம் மிகுதியாக ஒப்புவிக்கப்படுகிறதோ, அவனிடம் அதை விட மிகுதியாகக் கேட்கப்படும்.''

விடாப்பிடியாகக் கேட்கும் நண்பன் (லூக் 11 : 5-13)

இயேசு சீடர்களை நோக்கி ''உங்களுள் ஒருவன் தன் நண்பனிடம் நள்ளிரவில் போய், ''நண்பனே, பயணம் செய்யும் நண்பன் ஒருவன் என்னிடம் வந்திருக்கிறான். அவனுக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமில்லை; மூன்று அப்பங்களை நீ எனக்குக் கடனாகத் தர வேண்டும்'' எனக் கேட்கிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது அவன் உள்ளிருந்து, ''என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று: என் பிள்ளைகளும் என்னோடு படுத்திருக்கிறார்கள். எழுந்து உனக்குக் கொடுக்க என்னால் இயலாது'' என்று சொல்லுவதுண்டு அல்லவா? அவன் தனக்கு நண்பனாய் இருப்பதை முன்னிட்டு, எழுந்து அவனுக்குக் கொடுக்காவிட்டாலும், அவன் வெட்கமின்றி விடாப்பிடியாகக் கேட்கிறதை முன்னிட்டாவது எழுந்து அவனுக்குத் தேவையான மட்டும் கொடுப்பான் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.''

''கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டுபிடிப்பீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். கேட்கிறவன் கண்டுபிடிக்கிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களுள் எந்தத் தகப்பனாவது தன் மகன் அப்பத்தைக் கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாக பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால் தேளைக் கொடுப்பானா? பொல்லதவராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பொருள்களை நன்கொடையாக வழங்க அறிந்திருக்கிறீர்கள் என்றால், விண்ணுலகில் இருக்கிற தந்தை தம்மிடம் கேட்கிறவர்களுக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எவ்வளவு திண்ணம்,'' என்றார்.

விடாப்பிடியாகக் கேட்கும் கைம்பெண்ணும் நீதிபதியும் (லூக் 18: 1-8)

சோர்ந்து போகாமல் எப்பொழுதும் கடவுளிடம் வேண்டுதல் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்த இயேசு ஓர் உவமையை அவர்களுக்குச் சொன்னார்.

''ஒரு பட்டணத்தில் நீதிபதி ஒருவன் இருந்தான். அவன் கடவுளுக்கு அஞ்சாதவன், மனிதரை மதியாதவன். அந்தப்பட்டணத்தில் இருந்த ஒரு கைம்பெண் அவனிடம் அடிக்கடி சென்று, ''எனக்கு நீதி வழங்கி என் பகைவரின் கையிலிருந்து என்னைத் தப்புவியும்'' என்று விண்ணப்பம் செய்து வந்தாள்.

''சிறிது காலம் அவனுக்கு மனமில்லாதிருந்தது. பிறகு அவன் 'நான் கடவுளுக்கு அஞ்சாதவன், மனிதரை மதியாதவன். ஆயினும், இந்தக் கைம்பெண் என்னைத் தொந்தரவு செய்கிறதை முன்னிட்டாவது இவளுக்கு நியாயம் வழங்குவேன். இல்லாவிடில், இவள் ஓயாமல் வந்து என்னை நச்சரித்து விடுவாள்' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்'' என்றார். ''நேர்மையற்ற அந்த நீதிபதி சொன்னதைக் கவனியுங்கள். இப்படியிருக்க, கடவுள் தம்மால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தம்மை நோக்கி இரவும் பகலும் கதறும்போது அவர்களுக்குப் பொறுமையோடு செவி சாய்த்து நியாயம் வழங்காமல் இருப்பாரா? அல்லது காலம் தாழ்த்துவாரா? விரைவிலேயே அவர்களுக்கு நியாயம் வழங்குவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

பரிசேயனும் ஆயக்காரனும் (லூக் 18 : 9-14)

தாங்கள் நேர்மையானவர்களென நம்பி, மற்றவர்களை இழிவாகக் கருதி வந்த சிலரைப் பார்த்து இயேசு இந்த உவமையைச் சொன்னார்.

''இருவர் கடவுளிடம் வேண்டுதல் செய்யக் கோவிலுக்குச் சென்றனர். ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன், நின்று கொண்டு, ''கடவுளே உமக்கு நன்றி செலுத்துகிறேன். ஏனெனில், நான் மற்றவர்களைப்போல கொள்ளைக்காரன், அநீதன், கெட்ட நடத்தையுள்ளவன் அல்ல; ஆயக்காரனாகிய இவனைப் போலுமில்லை. அனைத்திலும் பத்தில் ஒரு பாகத்தைக் காணிக்கையாகச் செலுத்துகிறேன்,'' என்று தனக்குள்ளே விண்ணப்பம் செய்தான். ஆனால், ஆயக்காரன் தொலைவில் நின்று, வானத்தை நிமிர்ந்து நோக்கவும் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு ''கடவுளே பாவியாகிய எனக்கு இரங்கியருளும்'' என்றான். அவனல்ல, இவனே கடவுளால் ஏற்றுக் கொள்ளப்பட்டவனாய் வீடு திரும்பினான். ஏனென்றால், தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவனோ உயர்த்தப் படுவான் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்,'' என்றார்.

இரு மைந்தர்கள் (மத் 21: 28-32)

"ஒருவனுக்கு இரண்டு மைந்தர்கள் இருந்தனர். அவன் மூத்தவனிடம், "மகனே இன்று நீ திராட்சைத் தோட்டத்துக்குப் போய் வேலை செய்" என்றான். அதற்கு அவன், "போகமாட்டேன்" என்றான். ஆனால், பிறகு தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு புறப்பட்டுப்போனான். மற்றவனிடம் அப்படி சொன்னபோது அவன் "போகிறேன், அப்பா" என்றான். ஆனால் போகவில்லை. இவ்விருவருள் எவன் தந்தையின் விருப்பப்படி செய்தவன்? என்று கேட்டார். "மூத்தவனே" என்றார்கள் அவர்கள். இயேசு அவர்களிடம் "ஆயக்காரரும், விலைமகளிரும் உங்களுக்கு முன் கடவுளின் அரசினுள் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கத்தைக் காட்டுவதற்காக உங்களிடம் வந்திருந்தும் நீங்கள் அவரை நம்பவில்லை; ஆனால் ஆயக்காரரும் விலைமகளிரும் அவரை நம்பினார்கள். நீங்களோ அதைப் பார்த்த பிறகும் அவரை நம்பும் பொருட்டு உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை" என்றார்.

செல்வம் மிகுந்த மதிகேடன் (லூக் 12 : 13-21)

ஒருவன் இயேசுவிடம், "போதகரே, மரபுரிமையாக வரும் எங்கள் சொத்தைப் பாகம் பிரித்து என் பங்கை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குச் சொல்லும்" என்று கேட்டுக் கொண்டான். அவர் அந்த ஆளை நோக்கி, "என்னை உங்களுக்கு நீதிபதியாக அல்லது பங்கிடுவோனாக ஏற்படுத்தினவன் யார்?" என்று கேட்டார். பிறகு அவர் அவர்களைப் பார்த்து "எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாமல் விழிப்புடன் எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், ஒருவனுடைய மெய்வாழ்வு அவனுடைய செல்வப் பெருக்கில் இல்லை," என்றார். ஓர் உவமையையும் அவர்களுக்குச் சொன்னார். செல்வமுடைய ஒருவனது நிலத்தில் விளைச்சல் நன்றாக இருந்தது. அதைக்கண்டு அவன் தனக்குள் சிந்தனை செய்து, நான் என்ன செய்வேன்? என் விளை பொருள்களைச் சேர்த்து வைப்பதற்கு இடம் இல்லையே. ஒன்று செய்வேன். என் களஞ்சியங்களை இடித்துப் பெரியவையாய்க் கட்டி, எல்லாத் தானியத்தையும் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, "நெஞ்சே, பல்லாண்டுகளுக்கு வேண்டிய பொருளெல்லாம் உனக்கு இருக்கின்றன. நீ கவலையற்று இளைப்பாறு. உண்டு குடித்துக் களிப்புடன் இரு என்று சொல்லிக் கொள்ளுவேன்," என்றான். ஆனால் கடவுள் அவனிடம், "மதிகேடனே, இன்று இரவே உன் உயிர் உன்னைவிட்டு நீங்கப்போகிறது. அப்பொழுது நீ சேர்த்து

வைத்தவை யாருடையவையாகும்?" என்று கேட்டார். "தனக்காகவே பொருளைச் சேர்த்துக் கொண்டு கடவுளுக்கென்று செல்வமுடையவனாய் இராதவன் இவ்வாறே இருப்பான்" என்றார்.

செல்வந்தனும் இலாசரும் (லூக் 16: 18-31)

செல்வமுடைய மனிதன் ஒருவன் இருந்தான். அவன் செந்நிற உடையும் பட்டாடையும் அணிந்து கொண்டு நாள்தோறும் உண்டு களித்து வளமாய் வாழ்ந்து வந்தான். இலாசரு என்னும் ஏழை மனிதன் ஒருவனும் இருந்தான். அவன் புண்கள் நிறைந்தவனாய் அந்தச் செல்வந்தன் வீட்டு வாயிலருகில் கிடந்தான். அவனுடைய மேசையிலிருந்து விழும் துணிக்கைகளால் தன் பசியை ஆற்றிக்கொள்ள ஆவலோடு காத்திருப்பான். நாய்கள் அவனுடைய புண்களை நக்கும். ஒரு நாள் அந்த ஏழை இறந்து போனான். தெய்வ தூதர்கள் அவனை ஆபிரகாமின் மடியிலே கொண்டு போய் விட்டார்கள். பிறகு அந்தச் செல்வந்தனும் இறந்து, அடக்கம் பண்ணப்பட்டான். அவன் பாதாளத்தில் வேதனைப்படுகையில் உயரப் பார்த்தான். அப்பொழுது தொலைவில் ஆபிரகாமையும், அவர் மடியில் இலாசருவையும் கண்டான். உடனே அவன், "தந்தை ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, இலாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து என் நாவைக் குளிரச் செய்யும்படி அவனை அனுப்பும். இந்தச் தீச்சுடரிலே வேதனைப்படுகிறேனே," என்று உரத்துச் சொன்னான். ஆபிரகாம், "மகனே, உன் வாழ்நாளில் எல்லா நலன்களையும் பெற்று இன்புற்றிருந்தாய். இலாசரு அடைந்ததோ இன்னல். அதை நினைத்துப்பார். இப்பொழுது அவன் இங்கே ஆறுதல் அடைகிறான். நீயோ வேதனைப்படுகிறாய். மேலும் எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே ஒரு பெரும் பிளப்பு இருக்கிறது. ஆகையால் இவ்விடத்திலிருந்து உங்களிடம் வரவிரும்புகிறவர்கள் கடந்து வர இயலாது. அவ்விடத்திலிருந்து ஒருவரும் எங்களிடம் கடந்து வரவும் இயலாது" என்றார்.

அதற்கு அவன், "அப்படியானால், தந்தையே, நீர் அவனை என் தந்தை வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன். எனக்கு உடன் பிறந்தார் ஐவர் உண்டு. வேதனையுள்ள இந்த இடத்துக்கு அவர்களும் வராதபடி அவன் போய் அவர்களுக்கு எச்சரிக்கை செய்யட்டும்," என்றான். ஆபிரகாம், "அவர்களுக்கு மோசேயும் இறைவாக்குநர்களும் இருக்கிறார்கள் அவர்களுக்குச் செவிசாய்க்கட்டும்" என்று சொன்னார். அதற்கு அவன் "இல்லை, தந்தை ஆபிரகாமே, இறந்தவர்களுள் ஒருவன் அவர்களிடம் போனால் மன மாற்றம் அடைவார்கள்" என்றான். "அவர்கள் மோசேயும் இறைவாக்குநரும் கூறியவற்றிற்குச் செவிசாய்க்காதவர்கள் இறந்தோரிடமிருந்து ஒருவன் உயிரோடெழுந்து போனாலும் நம்பமாட்டார்கள்," என்றார் ஆபிரகாம்.

கனி கொடாத அத்திமரம் (லூக் 13: 6-9)

ஒருவன் தன் திராட்சைத் தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைத்திருந்தான். அவன் அதில் கனியைத்தேடி வந்தபோது ஒன்றையும் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி, "இதோ பார், மூன்று ஆண்டுகளாக இந்த அத்திமரத்தில் கனியைத்தேடி வருகிறேன். ஆனால் ஒன்றையும் காணவில்லை. இதை வெட்டிவிடு. இது நிலத்தை ஏன் பாழாக்கிக் கொண்டிருக்க வேண்டும்?" என்றான். அதற்கு அவன், "ஐயா இந்த ஆண்டும் இது இருக்கட்டும். நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போட்டுப் பார்க்கிறேன். அடுத்த ஆண்டு கனி கொடுக்குமானால் நல்லது. இல்லை என்றால் வெட்டிவிடலாம்" என்று சொன்னான்" என்றார்.

பழையதும் புதியதும்

"ஒருவனும் புதிய ஆடையிலிருந்து ஒரு துண்டைக் கிழித்து, அதை பழைய ஆடையோடு இணைக்கமாட்டான். இணைத்தால் அது புதிய ஆடையைக் கிழித்து விடும். புதிய துண்டும் பழையதோடு பொருந்தாது. அவ்வாறே, ஒருவனும் புதிய திராட்சை இரசத்தைப் பழைய துருத்திகளில் ஊற்றி வைக்கமாட்டான். ஊற்றிவைத்தால் புதிய இரசம் துருத்திகளைக் கிழித்து விடும்; இரசமும் சிந்திப்போகும், துருத்திகளும் கெட்டுப் போகும். புதிய இரசத்தைப் புதிய துருத்திகளில் ஊற்றி வைக்க வேண்டும். அப்பொழுது இரண்டும் பத்திரமாய் இருக்கும். பழைய இரசத்தைக் குடித்தவன் புதியதை விரும்பமாட்டான். பழையதே நல்லது என்று சொல்லுவான்" என்றார்.

பார்வையற்றவன் பார்வையற்றவனை வழி நடத்துதல் (லூக் 6: 39-40)

பார்வையற்றவனைப் பார்வையற்றவனால் வழி நடத்த இயலுமா? அவர்கள் இருவரும் குழியில் விழுவார்கள் அல்லவா? சீடன் எவனும் தன் குருவைவிடத் தேறினவனாகப் போவதில்லை. அவன் முழுப்பயிற்சி பெற்றாலும் தன் குருவைப் போலவே தான் இருப்பான்.

இயேசு இப்படிப்பட்ட பல உவமைகளின் மூலம் தெய்வ வார்த்தையை அவர்கள் கேட்டறியும் திறமைக்கு ஏற்றவாறு அவர்களுக்குப் போதித்து வந்தார். உவமைகள் இல்லாமல் அவர் அவர்களோடு எதையும் பேசவில்லை. ஆனால் தம்முடைய சீடருக்கோ எல்லாவற்றையும் அவர்களோடு தனித்திருக்கையில் விளக்கிக் காட்டினார்.

"என் நாவினால உவமைகளை உரைப்பேன்
உலகத்தோற்றமுதல் மறைநதிருக்கிறவற்றை விவரிப்பேன்."

என்று இறைவாக்குநர் உரைத்தது இவ்வாறு நிறைவேறிற்று.

பகுதி - 5

இயேசுவின்போதனைகள்

இயேசு கிறிஸ்துவினுடைய போதனையின் முத்துச் சிதறல்கள்.

- △ *உலகிற்கு ஒளி நீங்கள். மனிதர் உங்கள் நற்செயல்களைக் கண்டு விண்ணுலகில் இருக்கும் உங்கள் தந்தையைப் புகழ்ந்து போற்றும்படி உங்களுடைய ஒளி அவர்கள் முன் சுடர் வீசுவதாக.*
- △ *உங்கள் பகைஞரிடம் அன்பு கொள்ளுங்கள்.*
- △ *உங்களை வெறுக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.*
- △ *மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.*
- △ *நேர்மையானவர்களையன்று, பாவிகளையே மனமாற்றம் அடையும்படி அழைக்க வந்தேன்.*
- △ *பலியையன்று, இரக்கத்தையே விரும்புகிறேன்.*
- △ *கடவுள் தம்முடைய ஒரே மைந்தர்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் கெட்டு அழிந்து போகாமல் என்றுமுள்ள மெய்வாழ்வைப் பெறும்படி அவரைத் தந்து அருளியதின் மூலம் அவர் உலகத்தின் மீது இந்த அளவுக்கு அன்பு கூர்ந்துள்ளார்.*

இயேசுவின் போதனைகள்

மலையிலிருந்து வழங்கிய அருளுரை (மத் 5-7)

திரளான மக்கள் இருப்பதைக் கண்டு இயேசு மலைமீது ஏறி அமர்ந்தார். அவருடைய சீடர்கள் அவரிடம் வந்தார்கள். அவர் அவர்களுக்கு அருளிய அருளுரை.

நற்பேறு பெற்றோர்

தம் எளிய ஆன்மிக நிலையை உணர்ந்தவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; விண்ணரசு அவர்களுக்குரியது.

துயரத்தில் ஆழ்ந்திருக்கிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; அவர்களுக்குக் கடவுளின் ஆறுதல் கிடைக்கும்.

பணிவுடையவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; அவர்கள் உலகை உடமையாகப் பெறுவார்கள்.

நீதி நிலவ வேண்டுமென்பதில் மிகுந்த வேட்கை கொண்டவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; கடவுள் அவர்கள் வேட்கையை நிறைவேற்றுவார்.

இரக்கம் காட்டுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; கடவுள் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்.

தூய உள்ளமுடையவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; அவர்கள் கடவுளைக் காண்பார்கள்.

அமைதி நிலவச் செய்கிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; அவர்கள் கடவுளின் மைந்தர்கள் எனப்படுவார்கள்.

நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; விண்ணரசு அவர்களுக்குரியது.

என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றித் தீமையானவற்றை எல்லாம் பொய்யாகச் சொன்னால், நீங்கள் நற்பேறு பெற்றவர்களாவீர்கள். மனமகிழ்ந்து களிகூருங்கள்: விண்ணுலகில் உங்கள் பலன் மிகுதியாகும். உங்களுக்கு முன் வாழ்ந்த இறைவாக்குநரும் இவ்வாறே துன்புறுத்தப்பட்டனர்.

உப்பும் ஒளியும்

உலகிற்கு உப்பு நீங்கள். உப்பு சாரத்தை இழந்துவிட்டால் எதைக் கொண்டு அதை மீண்டும் சாரமுள்ளதாக்க முடியும்? அது எதற்கும் உதவாது; வெளியே எறியப்பட்டு மனிதரால் மிதிக்கப்படும்.

உலகிற்கு ஒளி நீங்கள். மலைமேல் இருக்கும் ஊர் மறைந்திராது. யாரும் விளக்கை ஏற்றி ஒரு பாத்திரத்தின் கீழ் மறைத்து வைப்பதில்லை; விளக்குத் தண்டின் மீது தான் வைப்பர். அப்பொழுது அது வீட்டிலுள்ள அனைவருக்கும் வெளிச்சம் தரும். மனிதர் உங்களுடைய நற்செயல்களைக் கண்டு விண்ணுலகிலிருக்கும் உங்கள் தந்தையைப் புகழ்ந்து போற்றும்படி உங்களுடைய ஒளி அவர்கள் முன் சுடர்வீசுவதாக.

நீதிச்சட்டமும் இறைவாக்குகளும்

நான் நீதிச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நீக்கிவிட வந்தேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நீக்கிவிட அன்று; நிறைவேற்றவே நான் வந்தேன். விண்ணும் மண்ணும் ஒழியாதிருக்கும் வரையில், நீதிச்சட்டத்திலுள்ள ஒரு சிறு எழுத்தோ, ஓர் எழுத்தின் பகுதியோ ஒழியாது. அதன்படி நடக்கவேண்டிய யாவும் நடந்தே தீரும் என்று உறுதியாகச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தத் திருக்கட்டளைகளுள் மிகச் சிறிதான

ஒன்றைத் தான் மீறுவதோடு மற்றவர்களும் அவ்வாறே நடக்கும்படி எவன் போதிக்கிறானோ, அவன் விண்ணரசில் மிகச் சிறியவன் எனப்படுவான். ஆனால், இவற்றைத் தானும் கடைப்பிடித்து அவ்வாறே பிறரும் செய்யவேண்டுமென்று எவன் போதிக்கிறானோ, அவன் விண்ணரசில் பெரியவன் எனப்படுவான். **மறை அறிஞர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியை விட உங்கள் நீதி மிகவும் மேம்பட்டதாய் இராவிட்டால், நீங்கள் விண்ணரசினுள் நுழையப்போவதில்லை.**

சினம்

"கொலை செய்யாதே; கொலை செய்கிறவன் வழக்குமன்றத் தீர்ப்புக்கு ஆளாவான்" என்று முன்னோருக்குச் சொல்லப்பட்டதெனக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தன் சகோதரன் மீது சினம் கொள்ளுகிறவன் எவனும் வழக்குமன்றத் தீர்ப்புக்கு ஆளாவான். தன் சகோதரனை ஒன்றுக்கும் உதவாதவனே என்று சொல்லுகிறவன், தலைமைச்சங்கத் தீர்ப்புக்கு ஆளாவான். 'மதிகேடனே' என்று சொல்லுகிறவன் எரி நரகத்துக்குள்ளாவான். ஆகையால் நீ உன் காணிக்கையைப் படைக்கப் பீடத்தை நோக்கி வரும் போது, உன் சகோதரனுக்கு உன் மேல் மனவருத்தம் உண்டென்பது அங்கே உன் நினைவிற்கு வந்தால், அப்பீடத்தினருகில் உன் காணிக்கையை வைத்து விட்டு, போய், முதலில் அந்தச் சகோதரனோடு உறவைச் சீர் செய்து கொள். பிறகு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.

"உன் எதிரி உன்னை நீதிபதியிடம் ஒப்படைக்காமலும். நீதிபதி உன்னைக் காவலனிடம் ஒப்படைக்காமலும், நீ சிறையில் அடைத்து வைக்கப்படாமலும் இருக்க நீ நீதிமன்றத்துக்குப் போகும் போதே உன் எதிரியோடு சமரசம் செய்து கொள். இல்லாவிடில் நீ காசு முழுவதும் கொடுத்துத் தீர்க்கும் வரையில் சிறையிலிருந்து வெளியேறவே மாட்டாய்."

கற்பு நெறி

'கற்பு நெறி தவறாதே' என்று சொல்லப்பட்டதெனக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், ஒரு பெண்ணை கெட்ட எண்ணத்தோடு பார்க்கிற எவனும் தன் உள்ளத்தில் அவளிடம் கற்பு நெறி தவறி நடந்து கொள்ளுகிறான். நீ பாவக்குழியில் இடறிவிழ உன் வலக்கண் காரணமாயிருந்தால் அதைப் பிடுங்கி எறிந்துவிடு. உன் உடல் முழுவதும் நரகத்தில் எறியப்படுவதைவிட, உன் உறுப்புகளுள் ஒன்றை நீ இழப்பதே உனக்கு நலம். நீ பாவக்குழியில் இடறி விழ உன் வலக்கை காரணமாயிருந்தால் அதைத் தறித்து எறிந்து விடு. உன் உடல் முழுவதும் நரகத்துக்குள் போவதைவிட உன் உறுப்புகளுள் ஒன்றை நீ இழப்பதே மேல் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மனைவியை விலக்குதல்

'தன் மனைவியை விலக்கிவிடும் எவனும் அவளுக்கு விலக்குச் சீட்டைக் கொடுத்து விலக்க வேண்டும்' என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால், ஒருவன் தன் மனைவியை அவளது கற்பு நெறி தவறிய நடத்தையின் பொருட்டேயன்றி வேறு எந்தக் காரணத்திற்காகவும், விலக்குதல் கூடாது. அப்படி ஒருவன் விலக்கினால் அவன் அவளைக் கற்பு நெறி தவறச் செய்கிறான். அப்படி விலக்கப்பட்டவளை மணக்கிறவன் கற்பு நெறி தவறினவன் ஆவான் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆணையிடுதல்

'ஆணையிட்டுக் கூறும் எதையும் நிறைவேற்றத் தவறாதே; ஆணையிட்டு நேர்ந்து கொண்ட யாவற்றையும் ஆண்டவருக்குச் செலுத்து' என்று முன்னோருக்குச் சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், வானத்தின் மேல் ஆணையிட வேண்டாம்; ஏனெனில், அது கடவுளின் அரியணை. பூமியின் மேல் ஆணையிட வேண்டாம்; ஏனெனில், அது அவரது பாதப்படி. எருசலேம் மேல் ஆணையிடவேண்டாம்; ஏனெனில், அது விண்ணரசரின் நகரம். உன் தலைமேலும் ஆணையிட வேண்டாம்; ஏனெனில், உன் தலை முடியுள் ஒன்றையேனும் வெண்மையாக்கவோ, கறுப்பாக்கவோ உன்னால் இயலாது. உண்டு அல்லது இல்லை என்று மட்டும் சொல்லுங்கள். இதற்கு மிஞ்சிச் சொல்லுவதெல்லாம் தீமையால் விளைவதாகும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

பழிவாங்குதல்

'கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்' என்று சொல்லப்பட்டிருக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், உனக்குத் தீங்கு செய்பவனைத் தடுத்து நிறுத்த வேண்டாம். உனது வலது கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்காட்டு. உன்னோடு வழக்காடி உன் துண்டை எடுத்துக் கொள்ள விரும்புகிறவனுக்கு உன் சட்டையையும் எடுத்துக் கொள்ள இடங்கொடு. உன்னை ஒரு மைல் தொலைவு வரும்படி கட்டாயப்படுத்துகிறவனோடு இரண்டு மைல் தொலைவு செல். உன்னிடம் கேட்கிறவனுக்குக் கொடு; உன்னிடம் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு கொடுக்க மறுக்காதே, என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

பகைஞரிடம் அன்பு கொள்

'அடுத்தவனிடம் அன்பு கொள்; உன்னுடைய எதிரியை பகை' என்று சொல்லப்பட்டிருக்கிறதெனக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், உங்கள் பகைஞரிடம் அன்பு கொள்ளுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களுக்கு ஆசி கூறுங்கள். உங்களை வெறுக்கிறவர்களுக்கு நன்மை

செய்யுங்கள். உங்களைத் தூற்றுகிறவர்களுக்காகவும் துன்புறுத்து கிறவர்களுக்காகவும் கடவுளிடம் வேண்டுதல் செய்யுங்கள். இப்படிச் செய்வதால் விண்ணுகிலுள்ள உங்கள் தந்தைக்கு நீங்கள் பிள்ளைகளாவீர்கள். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் கதிரவனை ஒளிவீசச் செய்கிறார். நீதி நெறியைக் கடைப்பிடிப்போருக்கும், கடைப்பிடியாதோருக்கும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடம் அன்புள்ளவர்களாய் இருப்பவர்களிடமே நீங்கள் அன்பு கொள்ளுவீர் களானால், உங்களுக்கு என்ன பலன்? ஆயக்காரரும் இப்படித்தானே செய்கிறார்கள். உங்களுடைய சகோதரருக்கு மட்டும் வணக்கம் சொல்லுவீர்களானால், நீங்கள் அவ்வாறு செய்வதில் என்ன சிறப்பு இருக்கிறது? கடவுளை அறியாத பிற இனத்தவரும் இப்படித்தானே செய்கிறார்கள். எனவே, விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை எல்லா நற்பண்பும் நிறைந்தவராய் இருப்பது போல நீங்களும் எல்லா நற்பண்பும் நிறைந்தவர்களாய் இருங்கள், என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சமயச் சடங்குகள் செய்யும் முறை

உங்கள் சமயச் சடங்குகளை மனிதர் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் செய்யாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் விண்ணுலகிலிருக்கிற உங்கள் தந்தையிடமிருந்து உங்களுக்குப் பலன் கிடைக்காது.

எனவே, நீங்கள் ஏழைக்கு உதவி செய்யும்போது, போலி பக்தர்கள் தொழுகைக் கூடங்களிலும் தெருக்களிலும் மனிதர் புகழவேண்டுமென்று செய்வதுபோல செய்யாதீர். அவர்கள் தங்கள் பலனைப் பெற்றுவிட்டார்கள் என்பதை உங்களுக்குத் திட்டமாகச் சொல்லுகிறேன். நீங்கள் ஏழைக்கு உதவி செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது உங்களுடைய அறச் செயல்கள் மறைவாய் இருக்கும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தை அதற்காக உங்களுக்கு கைம்மாறு அளிப்பார்.

கடவுளிடம் வேண்டுதல் செய்யும் முறை

நீங்கள் போலி பக்தரைப்போல கடவுளிடம் வேண்டுதல் செய்ய வேண்டாம். ஏனெனில், அவர்கள் தொழுகைக் கூடங்களிலும், தெருச் சந்திகளிலும் நின்று கொண்டு, மனிதர் பார்க்க வேண்டுமென்று கடவுளிடம் வேண்டுதல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனைப் பெற்றுவிட்டார்கள் என்று திட்டமாகச் சொல்லுகிறேன்.

நீங்கள் கடவுளிடம் வேண்டுதல் செய்யும் போது உங்கள் அறைக்குள் சென்று, கதவை அடைத்துக் கொண்டு. கண்ணுக்கு மறைவாயுள்ள உங்கள்

தந்தையை நோக்கி வேண்டுதல் செய்யுங்கள். மறைவாயுள்ளதைக் காணும் உங்கள் தந்தை உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். அல்லாமலும், நீங்கள் கடவுளிடம் வேண்டுதல் செய்யும் போது, பிற இனத்தவரைப்போல வீண் சொற்களைச் சொல்லி உளறிக் கொண்டிருக்க வேண்டாம். ஏராளமான சொற்களைப் பயன்படுத்துவதால், தாங்கள் வேண்டிக்கொள்ளுவது அருளப்படும், என்று அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப்போலச் செய்ய வேண்டாம். நீங்கள் வேண்டிக்கொள்ளுவதற்கு முன்னமே, உங்களுக்கு என்னென்ன தேவை என்பது உங்கள் தந்தைக்குத் தெரியும். ஆகையால் நான் சொல்லுகிறபடி அவரிடம் வேண்டுதல் செய்யுங்கள்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே;
உமது தூய திருப்பெயர் போற்றப்படுவதாக;
உமது அருளாட்சி வருவதாக;
உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல
மண்ணுலகிலும் நிறைவேறுவதாக;
அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை
இன்று எங்களுக்குத் தந்தருளும்;
எங்களுக்குத் தீமை செய்கிறவர்களை நாங்கள்
மன்னிக்கிறதுபோல
நாங்கள் செய்த தீமைகளை எங்களுக்கு மன்னித்தருளும்;
எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்;
தீமையினின்று எங்களை விடுவித்தருளும்;
ஆட்சியும், வல்லமையும், மாட்சிமையும் என்றென்றைக்கும்
உம்முடையவையே. ஆமென்.

மனிதனுடைய குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில், உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்.

நோன்பு இருக்கும் முறை

நீங்கள் நோன்பு இருக்கும்போது போலி பக்தரைப்போல முக வாட்டத்தோடு இருக்கவேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மனிதர் பார்க்க வேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகத்தை விகாரப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்கள் பலனைப் பெற்று விட்டார்கள் என்பதைத் திட்டமாக உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் நோன்பு இருக்கும்போது முகத்தைக் கழுவி, தலையில் எண்ணெய் தடவிக் கொள்ளுங்கள். அப்படிச் செய்தால் நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத்

தெரியாது. கண்ணுக்கு மறைவாயிருக்கிற உங்கள் தந்தைக்குத்தான் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தை உங்களுக்கு கைம்மாறு அளிப்பார்.

உண்மைச் செல்வம்

உங்களுக்கெனச் செல்வத்தை மண்ணுலகில் சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழிவை உண்டாக்கும்; திருடர்களும் கன்னமிட்டுத் திருடுவார்கள். விண்ணுலகில் செல்வத்தைச் சேமித்து வையுங்கள். அங்கே பூச்சியோ, துருவோ அழிப்பதில்லை; திருடர்களும் கன்னமிட்டுத் திருடுவதுமில்லை. எங்கே உங்கள் செல்வம் இருக்கிறதோ அங்கே உங்கள் மனமும் இருக்கும்.

உடலுக்கு விளக்கு

கண்தான் உடலுக்கு விளக்கு. உன் கண் நலமாயிருந்தால் உன் உடல் முழுவதும் ஒளியுள்ளதாயிருக்கும். உன் கண் நலமற்றதாய் இருந்தால், உன் உடல் முழுவதும் இருள் உள்ளதாயிருக்கும். எனவே உன்னிலுள்ள அந்த ஒளியே இருளாயிருந்தால் அந்த இருள் எவ்வளவு இருளாயிருக்கும்!

கடவுளா ? உலகப் பொருளா?

இரு தலைவர்களுக்கு வேலைக்காரனாயிருக்க எவனாலும் இயலாது. ஏனென்றால், அவன் ஒருவனைப் பகைத்து மற்றவரிடம் அன்பு கொள்ளுவான் அல்லது ஒருவனோடு சேர்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பான். உங்களால் ஒரே சமயத்தில் கடவுளுக்கும் உலகப் பொருளுக்கும் பணிவிடை செய்ய இயலாது.

கவலைப்படாதீர்

ஆகையால் உயிர் வாழ்வதற்கு, என்ன உண்போம், என்ன குடிப்போம் என்றோ, உடலை மறைக்க, என்ன உடுப்போம் என்றோ கவலைப்படாதீர். உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா? வானத்துப் பறவைகளைப் பாருங்கள். அவை விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. ஆயினும், உங்கள் விண்ணகத் தந்தை அவற்றிற்கு உணவளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் எவ்வளவோ மேலானவர்கள் அல்லவா? கவலைப்படுவதினால் உங்களுள் யாராவது தன் வாழ்நாளோடு ஒரு மணி நேரத்தைக் கூட்ட இயலுமோ? மிகச்சிறிய காரியத்தைக் கூட உங்களால் செய்ய இயலாதிருக்க, மற்றவற்றிற்காக நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? உடைக்காகவும் நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? வன மலர்கள் எப்படி உண்டாகின்றன என்பதைக் கவனியுங்கள். அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை. ஆயினும்,

சாலமோன் கூடத் தன் முழு மாட்சிமையிலும் அவற்றுள் ஒன்றைப் போலவும் உடுத்தியிருந்ததில்லை.

அற்ப நம்பிக்கை உள்ளவர்களே,இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் எறியப்படும் காட்டுப் புல்லுக்கே கடவுள் இவ்வாறு உடுத்துகிறார் என்றால், உங்களுக்கு அவர் உடுத்துவது எவ்வளவு திண்ணம்! ஆகையால், எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைப்பட வேண்டாம். ஏனெனில், இவை எல்லாம் உங்களுக்குத் தேவை என்பது உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். கடவுளை அறியாத பிற இனத்தவரே இவற்றை எல்லாம் நாடுவர். நீங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளின் ஆட்சிக்கு உட்படுவதையும், அவரது நீதி நெறிப்படி நடப்பதையும் முழு ஆர்வத்தோடு நாடுங்கள். அப்பொழுது இவை அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படவேண்டாம். நாளைக்காகக் கவலைப்படுதலை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம். அந்தந்த நாளுக்கு அதனதன் தொல்லை போதும்.

பிறருக்குத் தீர்ப்பளித்தல்

நீங்கள் குற்றவாளிகளென்று தீர்ப்புப் பெறாதிருக்க வேண்டுமானால், பிறரைக் குற்றவாளிகள் என்று தீர்ப்புக் கூறாதீர்கள். ஏனெனில், நீங்கள் பிறருக்கு அளிக்கும் தீர்ப்பின்படியே உங்களுக்கும் தீர்ப்பளிக்கப்படும்; நீங்கள் பிறருக்கு அளக்கிற அளவின்படி உங்களுக்கும் அளக்கப்படும். நீங்கள் உங்கள் கண்ணிலுள்ள மரக்கட்டையைக் கவனியாமல் உங்கள் சகோதரன் கண்ணிலுள்ள துரும்பின் மேல் ஏன் கவனம் செலுத்துகிறீர்கள்? அல்லது நீங்கள் உங்கள் சகோதரனிடம் உன் கண்ணிலுள்ள துரும்பை எடுத்துவிடுகிறேன் என்று எப்படிச் சொல்லலாம்? உங்கள் கண்ணிலே தான் மரக்கட்டை இருக்கிறதே! போலி பக்தனே, முதலில் உன் கண்ணிலுள்ள மரக்கட்டையை எடுத்து விடு. பிறகு உன் சகோதரன் கண்ணிலுள்ள துரும்பை எடுக்க உனக்குத் தெளிவான பார்வை கிடைக்கும்.

தூய்மையான எதையும் நாய்களுக்குக் கொடாதீர்கள்; உங்களிடமுள்ள முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதீர்கள்; போட்டால், அவை தங்கள் கால்களால் அவற்றை மிதித்து விட்டுத் திரும்பி உங்களைப் பீறிவிடும்.

கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள்; அப்பொழுது கண்டுபிடிப்பீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டுபிடிக்கிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களுள் யாருடைய மகனாவது அப்பம் கேட்டால் அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? அல்லது

மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பானா? பொல்லாதவராகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பொருள்களை நன்கொடையாக வழங்க அறிந்திருக்கிறீர்கள் என்றால், விண்ணுலகிலிருக்கிற உங்கள் தந்தை தம்மிடம் கேட்கிறவர்களுக்கு நலமானவற்றை கொடுப்பது எவ்வளவு திண்ணம்!

பொன்னான விதி

பிறர் உங்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். நீதிச்சட்டம், இறைவாக்குகள் ஆகியவற்றின் செம்பொருள் இதுவே.

இடுக்கமான வாயில்

இடுக்கமான வாயில் வழியாக உட்செல்லுங்கள்; அழிவுக்குச் செல்லும் வாயில் அகலமானது. வழி விரிவானது; அந்த வழியாக உட்செல்பவர் பலர். ஏனென்றால், மெய்வாழ்வுக்குச் செல்லும் வாயில் இடுக்கமானது, வழி ஒடுக்கமானது; அதைக் கண்டுபிடிப்போரும் சிலரே.

மரமும் கனியும்

பொய்யாக இறைவாக்குரைப்போரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடம் வருவார்கள். ஆனால், உள்ளுக்குள் அவர்கள் பீறித்தின்னும் ஓநாய்கள். அவர்களுடைய செயல்களைக் கொண்டே அவர்களை அறிந்து கொள்வீர்கள். முட்செடிகளில் திராட்சைப் பழங்களையும் நெருஞ்சிச் செடிகளில் அத்திப் பழங்களையும் பறிப்பார் உண்டோ? நல்ல மரம் நல்ல கனிகளைக் கொடுக்கும். நச்சு மரம் நச்சுக்கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் நச்சுக்கனிகளைக் கொடாது. நச்சு மரம் நல்ல கனிகளைக் கொடாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டப்பட்டு நெருப்பில் இடப்படும். அதனாலேதான், அவர்களுடைய செயல்களைக் கொண்டே நீங்கள் அவர்களை அறிந்து கொள்ளுவீர்கள் என்றேன்.

சொல்லும் செயலும்

என்னை நோக்கி, ஆண்டவரே, ஆண்டவரே என்று கூப்பிடுகிற எல்லாரும் விண்ணரசிற்குள் செல்லப் போவதில்லை. விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் திருவுளத்தின்படி செய்கிறவனே அங்கே செல்வான். அந்நாளில் பலர் என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே உமது பெயரால் நாங்கள் திருவாக்குகள் உரைத்தோமே, உமது பெயரால் பேய்களை ஓட்டினோமே, உமது பெயரால் பல வல்லமைச் செயல்களைச்

செய்தோமே என்பார்கள். அப்பொழுது நான் அவர்களிடம், நெறிகேடானச் செயல்களைச் செய்கிறவர்களே, ஒருபோதும் நான் உங்களை அறிந்ததில்லை. என்னை விட்டு அகன்று போங்கள் என்று தீர்ப்புக் கூறிவிடுவேன்.

இருவகையான வீடுகள்

எனவே, நான் சொன்ன இந்த மொழிகளைக் கேட்டு இவற்றின்படி செய்கிற எவனும் கற்பாறை மீது தன் வீட்டைக் கட்டின அறிவாளியை ஒத்திருக்கிறான். பெருமழை சொரிந்து வெள்ளம் வந்தது. புயற்காற்றும் வீசிற்று. அவை அந்த வீட்டின் மீது மோதியும் அது விழவில்லை. ஏனெனில், அதன் அடித்தளம் கற்பாறை மீது எழுப்பப்பட்டிருந்தது. நான் சொன்ன இந்த மொழிகளைக் கேட்டு இவற்றின்படி செய்யாதிருக்கிற எவனும் மணல் மீது தன் வீட்டைக் கட்டின அறிவிலியை ஒத்திருக்கிறான். பெருமழை சொரிந்து வெள்ளம் வந்தது; புயற்காற்றும் வீசிற்று. அவை அந்த வீட்டின் மீது மோதவே அது விழுந்து முற்றிலும் அழிந்தது.

இயேசு இப்படிக் கூறி முடித்த போது, மக்கள் அவருடைய போதனையைக் குறித்து வியப்படைந்தார்கள். அவர் அவர்களிடையே இருந்த மறை அறிஞரைப் போலப் போதியாமல் அதிகாரமுள்ளவராய்ப் போதித்து வந்தார்.

சமவெளியில் வழங்கிய அருளுரை (லூக் 6 : 17 -49)

இயேசு பன்னிருவருடன் மலையிலிருந்து இறங்கி வந்து சமதளமான இடத்தில் நின்றார். அவருடைய மற்றச் சீடருள் பலரும் யூதேயா, எருசலேம், தீரு, சீதோன் கடற்கரைகளிலுமிருந்து வந்த திரளான மக்களும் அங்கே இருந்தனர். அவரது போதனையைக் கேட்கவும், தங்கள் பிணிகளைத் தீர்த்துக் கொள்ளவும் அவர்கள் வந்திருந்தனர். அசுத்த ஆவியின் தொல்லைக்குள்ளானவர்களும் வந்திருந்தனர். அவர்களும் அவரால் குணமாக்கப்பட்டார்கள். அவரிடமிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினதால் அனைவரும் தம் கையால் அவரைத் தொடுவதற்கு முயற்சி செய்தனர்.

நற்பேறு பெற்றோர் (லூக் 6: 20 -23)

இயேசு தம்முடைய சீடரை நோக்கி பசியாய் இருக்கிற நீங்கள் நற்பேறு பெற்றவர்கள், கடவுள் உங்கள் பசியைப் போக்குவார்.

இப்போது அழுகிற நீங்கள் நற்பேறு பெற்றவர்கள், நீங்கள் மகிழ்வீர்கள்.

கேடு (லூக் 6 : 24 -36)

செல்வந்தர்களே, உங்களுக்குக் கேடு வரும். ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்துவிட்டீர்கள்.

இப்பொழுது நிறைவுள்ளவர்களாய் இருக்கிறவர்களே, உங்களுக்குக் கேடு வரும். இனிமேல் பசியோடிருப்பீர்கள்.

இப்பொழுது மகிழ்வுடன் இருக்கிறவர்களே, இனிமேல் துயரப்பட்டு அழுவீர்கள். எல்லா மனிதரும் உங்களைப் புகழ்ந்து பேசும் போது உங்களுக்குக் கேடு வரும். அவர்கள் மூதாதையரும் இறைவாக்குநருக்கு அப்படியே செய்தனர்.

பிறருக்குத் தீர்ப்பளித்தல் (லூக் 6 : 37 -38)

பிறரைத் தண்டனைக்கு ஆளாக்காதீர்கள்; அப்பொழுது நீங்களும் தண்டனைக்கு ஆளாகமாட்டீர்கள். மன்னியுங்கள், அப்பொழுது உங்களையும் கடவுள் மன்னிப்பார். கொடுங்கள்; அப்பொழுது உங்களுக்குச் கொடுக்கப்படும். அழுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி நன்றாக அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் அளக்கும் அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

மனைவியை விலக்கிவிடுதல்
(மத் 19 : 1 - 12, மா. 10: 1-12; லூக் 16:18)

பரிசேயர் : கணவன்தன்மனைவியை எந்தக் காரணத்திற்காகவாவது விலக்கி விடுவது முறையாகுமா?"

இயேசு : ஆதியிலே படைப்புக் கர்த்தா அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் " ஆகையால் கணவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுப் பிரிந்து தன் மனைவியோடு சேர்ந்திருப்பான்." இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள் என்றுரைத்தார்" என்றும் நீங்கள் படித்ததில்லையா? ஆகையால் இனிமேல் அவர்கள் இருவரல்ல, ஒரே உடலாய் இருப்பார்கள். எனவே, கடவுள் இணைத்தவர்களை மனிதன் பிரிக்காதிருப்பானாக.

பரிசேயர் : அப்படியானால் விலக்குச் சீட்டைக் கொடுத்து அவளை விலக்கிவிடலாம் என்று மோசே கட்டளையிட்டது ஏன் ?

இயேசு : உங்கள் அறிவு குறைவாய் இருப்பதினால்தான் உங்கள் மனைவியரை விலக்கி விடலாம் என்று உங்களுக்கு அனுமதி கொடுத்தார். தொடக்கக்

காலத்தில் இப்படி இருந்ததில்லை. அவருடைய சீடர்கள்: கணவன் மனைவி உறவு இப்படியிருக்க வேண்டு மென்றால் மணம் செய்யாமல் இருப்பதுதான் நல்லது.

இயேசு : அருள் பெற்றவர்கள் தவிர வேறு எவராலும் நான் சொல்லுவதை ஏற்றுக் கொள்ள இயலாது. பிறக்கும் போதே அண்ணகராய் பிறந்தவர்களும் உண்டு; மனிதரால் அண்ணகராக்கப்பட்டவர்களும் உண்டு. விண்ணரசின் பொருட்டு தங்களை அண்ணகராக்கிக் கொண்டவர்களும் உண்டு. இதை ஏற்றுக் கொள்ளக் கூடியவன் ஏற்றுக்கொள்ளட்டும்.

நோன்பிருத்தலைப் பற்றிய கேள்வி

(மத் 9:14-17,மா.2:18-22, லூக்; 5:33-39)

பரிசேயரும் மறை

அறிஞரும்: யோவானுடைய சீடர்கள் அடிக்கடி நோன்பிருந்து வேண்டுதல் செய்து வருகிறார்கள். பரிசேயருடைய சீடர்களும் அப்படியே செய்கிறார்கள்; உம்முடைய சீடர்களோ எல்லா நாட்களிலும் உணவும் பானமும் அருந்துகிறார்களே!

இயேசு : மணவாளன் தன்னுடைய தோழரோடு இருக்குமளவும் அந்தத் தோழரை நோன்பிருக்கும்படிச் செய்ய உங்களால் இயலுமா? மணவாளன் அவர்களை விட்டுப் பிரிக்கப்படும் காலம் வரும்; அக்காலத்தில் நோன்பிருப்பார்கள்"

மரமும் கனியும் (மத் 12: 33-37, லூக் 6: 43-45)

மரம் நல்லது என்றால், கனியும் நல்லதாயிருக்கும். மரம் கெட்டது என்றால் கனியும் கெட்டதாய் இருக்கும். விரியன் பாம்பின் குட்டிகளே, நீங்களே பொல்லாதவர்களாய் இருக்கும்போது, நலமானவற்றை உங்களால் எப்படிப் பேச இயலும்? உள்ளத்தில் நிறைந்துள்ளதையே வாய் பேசும். நல்ல மனிதன் நல்ல களஞ்சியத்திலிருந்து நல்லவற்றை எடுத்து அளிக்கிறான்; மனிதர் பேசும் ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் இறுதித் தீர்ப்பு நாளில் அவர்கள் கணக்கு கொடுக்கவேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீ குற்றமற்றவன் என்று தீர்ப்பு பெறுவதும் உன் சொற்களாலேதான்; நீ குற்றவாளி என்று தீர்ப்புப் பெறுவதும் உன் சொற்களாலேதான்," என்றார்.

உண்மைச் செல்வம் (லூக் 12: 32-34)

"சிறு மந்தையே, அஞ்சவேண்டாம். ஏனெனில் உங்களுக்கு அந்த ஆட்சியைக் கொடுக்க உங்கள் தந்தை திருவுளம் கொண்டிருக்கிறார். உங்களுக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடுங்கள். ஒருபோதும் பழமையாகப் போகாத பணப்பைகளை, அதாவது குறையாத செல்வத்தை விண்ணுலகில் உங்களுக்கென வைத்துக் கொள்ளுங்கள்."

இடுக்கமான வாயில் (லூக் 13:22-30)

இயேசு ஊர்கள் வழியாக நடந்து செல்கையில் போதித்துக் கொண்டே எருசலேமை நோக்கிப் பயணம் செய்தார். அப்பொழுது ஒருவன் அவரிடம் "ஆண்டவரே, மீட்புப் பெறப்போகிறவர்கள் சிலர் தானோ?" என்று கேட்டான்.

அவர் அங்கு இருந்தவர்களிடம் நீங்கள் இடுக்கமான வாயில் வழியாக உட்செல்லக் கடும் முயற்சி செய்யுங்கள்; பலர் உட்செல்ல முயல்வர்; ஆனால் அவர்களால் இயலாமல் போகும். வீட்டுத் தலைவன் எழுந்து வந்து கதவைப் பூட்டிய பின்பு நீங்கள் வெளியே நின்று கொண்டு. "ஆண்டவரே, எங்களுக்குத் திறந்தருளும்" என்று சொல்லி கதவைத் தட்டுவீர்கள்; ஆனால் அவர், "நீங்கள் எங்கிருந்து வந்தவர்களோ? உங்களை எனக்குத் தெரியாது"என்று சொல்லுவார்.

நீங்கள் "உமது முன்னிலையில் நாங்கள் உணவும் பானமும் அருந்தியிருக்கிறோம். நீர் எங்கள் வீதிகளில் போதித்திருக்கிறீர்" என்று சொல்லுவீர்கள். ஆனாலும் அவர், "நீங்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்று எனக்குத் தெரியாது . நேர்மையற்றவர்களே, எல்லாரும் என்னை விட்டு அகன்று போங்கள்" என்று சொல்லுவார்.

"ஆபிரகாம், ஈசாக்கு , யாக்கோபு இறைவாக்குநர் அனைவரும் கடவுளின் அரசில் இருப்பதையும், நீங்கள் புறம்பே தள்ளப்படுவதையும் நீங்கள் அங்கே காணும்போது அழுகையும் சஞ்சலமும் இருக்கும். கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலுமிருந்து மனிதர்கள் வந்து கடவுளின் அரசிலே பந்தியில் அமருவார்கள். பிந்தினோர் சிலர் முந்தினோராவர்; முந்தினோர் சிலர் பிந்தினோராவர்," என்றார்.

இயேசுவைப் பின்பற்றிச் செல்ல விரும்பினவர்கள்

(மத் 8:18-22,16:24-28,லூக் 9:23-27, 57-62;14:25-33)

மறைஅறிஞன் : போதகரே, நீர் எங்கே சென்றாலும் நான் உம்மை பின்பற்றி வருவேன்,

இயேசு	:	நரிகளுக்கு வளைகள் உண்டு. வானத்துப் பறவைகளுக்குக் கூடுகள் உண்டு; மனுமைந்தருக்கோ தலைசாய்க்கக்கூட இடமில்லை,
இயேசு ஒரு சீடனிடம்	:	நீ என்னைப் பின்பற்றிவா
சீடன்	:	முதலில் நான் போய் என் தகப்பனை அடக்கம் செய்துவிட்டு வர விடைகொடும்.
இயேசு	:	இறந்தோர் இறந்தோரை அடக்கம் செய்யட்டும். நீ போய் கடவுளின் ஆட்சியை விளம்பரப்படுத்து.
மற்றொரு சீடன்	:	ஆண்டவரே உம்மைப் பின் பற்றிவருவேன். ஆயினும், முதலில் நான் போய் என் வீட்டிலுள்ளவர்களிடம் சொல்லிவிட்டு வர எனக்கு விடைகொடும்.
இயேசு	:	கலப்பையில் கையை வைத்த பிறகு பின்னால் இருக்கிறவற்றைத் திரும்பிப் பார்க்கிற எவனும் கடவுளின் அரசுக்குத் தகுதியற்றவன்.

பிறகு இயேசு தம் சீடரைப்பார்த்து, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தனக்குரிய சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றி வரட்டும். என்னிடம் வருகிற ஒருவன் தன் தகப்பன், தாய், மனைவி, மக்கள்,சகோதரர் சகோதரிகளையும், ஏன் தன் உயிரையுமே வெறுத்து விடாதவனாய் வந்தால் எனக்குச் சீடனாய் இருக்கமுடியாது.எவன் தன் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள விரும்புகிறானோ அவன் அதை இழந்து விடுவான். என் பொருட்டுத் தன் உயிரை எவன் இழக்கிறானோ, அவன் அதைக் கண்டு கொள்ளுவான். மனிதன் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் அவனது ஆன்மாவை இழந்து விட்டால் அவன் அடையும் பயன் என்ன? மனிதன் தன் ஆன்மாவுக்கு ஈடாக எதைக் கொடுக்க இயலும்?"

"எந்த மனிதனாவது கோபுரம் கட்ட விரும்பினால் அவன் முதலில் உட்கார்ந்து, அதைக் கட்டி முடிப்பதற்குப் போதுமான பொருள் உண்டா என்று செலவைக் கணக்கிட்டுப் பாராமல் இருப்பானா? அப்படிச் செய்யாவிட்டால், அடித்தளமிட்ட பிறகு கட்டிமுடிக்க அவனால் இயலாமற்போகும்போது. பார்ப்பவர்கள் எல்லாரும் 'இவன் கட்டத் தொடங்கினான். முடிக்கவோ இயலவில்லை' என்று ஏளனம் செய்யத் தொடங்குவார்கள். எந்த அரசனாவது

வேறொர் அரசனோடு போர்புரியப் போகும்போது தன்னுடைய பதினாயிரம் பேரைக் கொண்டு, தன்னை எதிர்த்து வருவோனுடைய இருபதினாயிரம் பேரை எதிர்க்க இயலுமா? என்று முதலில் அமர்ந்து ஆராயாமல் இருப்பானா? எதிர்க்க இயலாது என்று கண்டால், எதிரி தொலைவில் இருக்கையிலேயே தன்னுடைய தூதுவர்களை அனுப்பி சமாதானத்துக்கான நிபந்தனைகளைக் கேட்பானல்லவா? அவ்வாறே, உங்களுள் எவனும் தனக்கு உள்ளவை எல்லாவற்றையும் விற்றுவிடாவிடில் எனக்குச் சீடனாய் இருக்க இயலாது.''

''எவனாவது என்னைக் குறித்தும், என் வார்த்தைகளைக் குறித்தும் வெட்கப்பட்டால் அவனைக் குறித்து மனுமைந்தரும், தமக்கும், விண்ணகத் தந்தைக்கும் தூய தூதருக்கும் உரிய மாட்சிமையில் வரும்போது வெட்கமடைவார். அப்பொழுது அவனவன் செய்கைக்குத் தக்கபடி அவனவனுக்குப் பதிலளிப்பார். இங்கே நிற்கிறவர்களுள் சிலர் கடவுளின் அரசைக் காணுமுன் இறக்கப்போவதில்லை என்று திட்டமாக உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார்.

ஆயக்காரர் பாவிகளுடன் உண்ணல்
(மத் 9:9-13; மா 2:13-17;லூக் 5: 27-32)

இயேசு சுங்கச் சாவடியில் உட்கார்ந்திருந்த அல்பேயுவின் மகன் குலேவி மத்தேயுவிடம். ''என்னைப் பின்பற்றி வா'' என்றார். அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு எழுந்து அவரைப் பின்பற்றிச் சென்றார். பிறகு இயேசு அவருடைய வீட்டில் விருந்துண்ண அமர்ந்த போது, ஆயக்காரர், பாவிகள் ஆகியவர்களுள் பலர் அவரோடும் அவருடைய சீடரோடும் விருந்துண்ண அமர்ந்தனர். இப்படிப்பட்டவர்கள் பலர் அவரைப் பின்பற்றிச் சென்றனர். அவர் பாவிகளோடும் ஆயக்காரரோடும் உணவு அருந்துவதைப் பரிசேயரைச் சேர்ந்த மறை அறிஞர் கண்டு அவருடைய சீடரிடம் ''இவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் சாப்பிடுகிறாரே! இது என்ன?'' என்று கேட்டனர்.

இது அவருடைய காதில் விழவே, அவர் ''நோயற்றவர்களுக்கன்று, நோயுள்ளவர்களுக்கே மருத்துவர் தேவை. பலியை அன்று, இரக்கத்தையே விரும்புகிறேன், என்பதன் கருத்து இன்னதென்பதை நீங்கள் போய்க் கற்றுத் தெரிந்து கொள்ளுங்கள். நேர்மையானவர்களையன்று, பாவிகளையே மனமாற்றம் அடையும்படி அழைக்க வந்தேன்'' என்றார்.

இயேசுவின் மன உருக்கம் (மத் 9: 35-38)

இயேசு எல்லா ஊர்களுக்கும், பட்டிகளுக்கும் சென்று அவருடைய தொழுகைக்கூடங்களில் போதித்து, அருளாட்சியின் நற்செய்தியை அறிவித்து, எல்லா வகையான வாதைகளையும், பிணிகளையும் குணமாக்கி வந்தார். மக்கள் கூட்டங்களை அவர் கண்ட போது அவர்கள் மேல் மன உருக்கம் கொண்டார்; ஏனெனில் அவர்கள் ஆயனில்லாத ஆடுகளைப்போல அலைக்கழிக்கப்பட்டும் கவனிப்பாரற்றும் இருந்தார்கள். அப்பொழுது அவர் தம்முடைய சீடர்களிடம், "அறுவடை மிகுதி, வேலையாள்களோ குறைவு. ஆகையால், அறுவடைக்குச் சொந்தக்காரர் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்.

ஓய்வு நாளுக்கு ஆண்டவர் மனுமைந்தரே (மத் 12 : 1-8,மா 2 : 23-28, லூக் 6 : 1- 5)

இயேசு ஓர் ஓய்வு நாளன்று வயல் வழியே போனார். அப்பொழுது அவருடைய சீடர்கள் பசியோடிருந்ததால், கதிர்களைக் கொய்து தின்னத் தொடங்கினார்கள். அதைக் கண்ட பரிசேயர் இயேசுவிடம் "இதோ பாரும் ஓய்வு நாளில் செய்யத் தகாததை உம்முடைய சீடர்கள் செய்கிறார்களே" என்று சொன்னார்கள். அதற்கு அவர், "தாவீதும் அவருடன் இருந்தவர்களும் பசியோடு இருந்த போது அவர் செய்ததைக் குறித்து நீங்கள் படித்ததில்லையா? அவர் அபியத்தார் என்னும் தலைமை ஆசாரியர் காலத்தில் கடவுளின் வீட்டிற்குள் சென்று ஆசாரியர் தவிர வேறெவரும் உண்ணக் கூடாத படையல் அப்பங்களைத் தாம் உண்டதுமல்லாமல் அவற்றைத் தம்முடன் இருந்தவர்களுக்கும் கொடுத்தாரே. ஓய்வுநாள்களில் ஆசாரியர் கோவிலில் வேலை செய்து, ஓய்வு நாள் விதிகளை மீறினாலும் அவர்கள் குற்றமற்றவர்கள் என்பதையாவது நீங்கள் நீதிச்சட்ட நூலில் படித்ததில்லையா? கோவிலைவிடப் பெரியவர் இங்கே இருக்கிறார். 'பலியை அன்று, இரக்கத்தையே விரும்புகிறேன்,' என்பதன் கருத்து இன்னதென்பதை நீங்கள் அறிந்திருந்தால் குற்றமற்றவர்களைக் குற்றப்படுத்தி இருக்கமாட்டீர்கள். மனிதனுக்காக ஓய்வுநாள் உண்டாக்கப்பட்டதே அன்றி, ஓய்வுநாளுக்காக மனிதன் உண்டாக்கப்படவில்லை. மனுமைந்தர் ஓய்வு நாளுக்கும் ஆண்டவர்" என்றார்.

தேர்ந்து கொள்ளப்பட்ட தாசர் (மத் 12 : 15 -21)

இயேசுவுக்குப் பின் சென்ற அனைவரையும் அவர் குணமாக்கினார். தம்மைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது என்று அவர்களுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டார். இறைவாக்குநர் ஏசாயாவால் உரைக்கப்பட்டது இவ்வாறு நிறைவேறிற்று.

" இதோ, நான் தேர்ந்து கொண்ட என் தாசர்,
இவரே என் அன்பர் , எனக்கு உகந்தவர்.
இவர் மீது என் ஆவியை அமரச் செய்வேன்.
இவர் எல்லா நாட்டினருக்கும் என் தீர்ப்பை அறிவிப்பார்.
இவர் வாக்கு வாதம் செய்யமாட்டார், கூக்குரல் இடவும் மாட்டார்.
இவர் வீதிகளில் குரல் எழுப்புவதில்லை.
நியாயத்தை வெற்றி பெறச் செய்யும் வரை
இவர் நெரிந்த நாணலை முறியார்;
மங்கி எரிகிற திரியை அணையார்.
எல்லா நாட்டினரும் இவரது திருப்பெயரையே
தங்கள் நம்பிக்கையாகக் கொண்டிருப்பர்,"
என்பதே அந்த இறைவாக்கு.

தூய ஆவியானவருக்கு விரோதமான பழிப்புரை
(மத் 12:30 -37. மா 3: 28-30)

என்னோடு இராதவன் எனக்குப் பகைஞனாய் இருக்கிறான். என்னோடு சேர்ந்து கொண்டு ஒன்று கூட்டாதவன் சிதறடிக்கிறான். எந்தப் பாவமும் எந்தப் பழிப்புரையும் மனிதருக்கு மன்னிக்கப்படும். ஆனால் ஆவியானவரைப் பற்றிய பழிப்புரையோ மன்னிக்கப்படமாட்டாது. மனுமைந்தருக்கு விரோதமாக யாராவது ஒரு வார்த்தை பேசினால், அது அவனுக்கு மன்னிக்கப்படும். ஆனால் எவன் தூய ஆவிக்கு விரோதமாகப் பேசுகிறானோ அவனுக்கு அது இந்த யுகத்திலும் இனி வரப்போகும் யுகத்திலும் மன்னிக்கப்படமாட்டாது. அவன் தீராத பாவத்திற்கே ஆளாவான்.

அற்புத அத்தாட்சி கேட்டல்
(மத் 12:38-42, 16:1-4,மா 8:11-13. லூக் 12:54-56)

பரிசேயரும் சதுசேயரும் இயேசுவிடம் வந்து அவரைப் பரிசோதிக்கும் வகையில் அவரைப்பற்றி வானத்திலிருந்து வரும் ஓர் அற்புத அத்தாட்சியைத் தங்களுக்குக் காட்டும்படி கேட்டனர். அதற்கு அவர் "பொழுது சாயும்போது வானம் சிவந்திருந்தால், வானிலை நேர்த்தியாய் இருக்கும் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்." காலை நேரத்தில் வானம் சிவந்து மந்தாரமாய் இருந்தால், இன்றைக்குக் காற்றும் மழையும் இருக்கும் என்று சொல்லுகிறீர்கள். மேற்கில் மேகம் எழும்புகிறதை நீங்கள் காணும் போது மழை பெய்யும் என்று உடனே சொல்லுகிறீர்கள். அப்படியே மழை பெய்கிறது. தெற்கிலிருந்து காற்று வீசும் போது, வெப்பம் மிகுதியாகும் என்று சொல்லுகிறீர்கள். அப்படியே நடக்கிறது. வானத்தின் நிலையைக் கண்டறிய நீங்கள் அறிந்திருக்கிறீர்களே, காலத்தின் அறிகுறிகளைக் கண்டறிய உங்களால் இயலாதா?"

“பொல்லாத, நம்பிக்கையற்ற சமுதாயந்தான் அற்புத அத்தாட்சி தேடும். அதற்கு இறைவாக்குநர் யோனாவின் அத்தாட்சியைத் தவிர வேறு அத்தாட்சி கொடுக்கப்படுவதில்லை. எவ்வாறு யோனா மூன்று நாட்கள் அல்லும் பகலும் திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்தாரோ அவ்வாறே மனுமைந்தரும் மூன்று நாள் அல்லும் பகலும் பூமிக்குள்ளே இருப்பார். யோனா நினிவே நகர மக்களுக்கு எப்படி அத்தாட்சியாய் இருந்தாரோ, அப்படியே மனுமைந்தரும் தம்மில் தாமே இந்தக் காலத்து மக்களுக்கு இருப்பார்.”

“இறுதித் தீர்ப்பின் போது நினிவே நகரத்து மக்கள் இக்காலத்து மக்களோடு தாங்களும் எழுந்து நின்று, இவர்கள்மேல் குற்றம் சுமத்துவார்கள். ஏனெனில், அவர்கள் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு மனமாற்றம் அடைந்தவர்கள். இதோ, இங்கே இருப்பவர் யோனாவைவிடப் பெரியவர்.”

“இறுதித் திர்ப்பின்போது தென்னாட்டு அரசி இந்தச் சமுதாயத்தின் ஆண் மக்களோடு தானும் எழுந்து நின்று இவர்கள் மேல் குற்றம் சுமத்துவார். ஏனெனில், இவர் உலகின் கடை முனையிலிருந்து சாலமோனின் ஞானத்தைக் கேட்க வந்தவர். இதோ, இங்கே இருப்பவர் சாலமோனைவிடப் பெரியவர்.”

முன்னோர் பரம்பரை (மத் 15 : 1- 20, மா 7: 1-23)

ஒரு நாள் பரிசேயரும் எருசலேமிலிருந்து வந்திருந்த மறை அறிஞர் சிலரும் இயேசுவிடம் வந்தனர். அவருடைய சீடருள் சிலர் தீட்டான, அதாவது, கழுவாத கைகளால் சாப்பிடுவதை அவர்கள் கண்டனர். பரிசேயரும் மற்றெல்லா யூதரும் முன்னோரின் பரம்பரையைப் பின்பற்றி கைகளை முறைப்படி கழுவாமல் சாப்பிடுவதில்லை. கடையிலிருந்து வாங்கி வந்த பொருட்களையும் முறைப்படி கழுவாமல் சாப்பிடுவதில்லை. அப்படியே கிண்ணங்கள், பாண்டங்கள், செப்புக்குடங்கள், ஆகியவற்றைக் கழுவுவார்கள். இவை தவிர, பரம்பரை வழக்கப்படி பின்பற்ற வேண்டியவை இன்னும் பல இருந்தன. ஆகவே, பரிசேயரும், மறை அறிஞரும் அவரிடம் “உம்முடைய சீடர் நம் முன்னோரின் பரம்பரையின்படி நடவாமல் தீட்டான கையால் சாப்பிடுவதேன்?” என்று கேட்டனர்.

இயேசு அவர்களிடம், “போலி பக்தராகிய உங்களைக் குறித்து ஏசாயா சரியாய் இறைவாக்கு உரைத்திருக்கிறார்; அது: “இந்த மக்கள் உதட்டினால் என்னை உயர்வாகப் போற்றுகிறார்கள். ஆனால் அவர்கள் உள்ளமோ என்னை விட்டு நெடுந்தொலைவில் இருக்கிறது. மனிதருடைய கட்டளைகளை ஞான போதனையாகப் போதிக்கிறார்கள். ஆகையால், இவர்கள் என்னை வழிபடுவது வீண்,” என்று எழுதப்பட்டிருக்கிறது.

"நீங்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு, மனித பரம்பரையைப் பின்பற்றி வருகிறீர்கள். உங்கள் பரம்பரை வழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக கடவுளின் திருக்கட்டளைகளை நன்றாக ஒதுக்கிவிட்டீர்கள்!"

"உன் தகப்பனையும் தாயையும் உயர்வாக மதிப்பாயாக என்றும் தகப்பனையாவது தாயையாவது தூற்றுகிறவன் சாகவே சாவானாக" என்றும் மோசே சொல்லியிருக்கிறார். ஆனால் ஒருவன் தன் தகப்பனையோ தாயையோ பார்த்து, "உங்களுக்கு உதவியாக என்னால் கொடுக்க வேண்டியதை நேர்ந்து கொண்ட காணிக்கையாக ஆக்கிவிட்டேன்" என்று சொன்னால், அதன் பிறகு அவன் தன் தகப்பனுக்கோ, தாய்க்கோ எந்த உதவியும் செய்ய வேண்டியதில்லை என்று நீங்கள் சொல்லி உதவி செய்யாதபடி அவனைத் தடுத்து விடுகிறீர்கள். வழி வழியாக நீங்கள் போதித்து வந்த இந்தப் பரம்பரை வழக்கத்தின் மூலம் கடவுளின் வார்த்தையைப் பயனற்றதாக்கி வருகிறீர்கள். நீங்கள் செய்கிற வேறு பல காரியங்களும் இப்படியே இருக்கின்றன," என்று சொன்னார்.

பிறகு அவர் கூட்டத்தை மறுபடியும் தம்மிடம் அழைத்து; "நீங்கள் எல்லாரும் நான் சொல்லுவதை நன்றாகக் கவனித்துப் புரிந்து கொள்ளுங்கள். வெளியே இருந்து மனிதனுக்குள்ளே சென்று அவனை மாசுப்படுத்தக் கூடியது எதுவுமில்லை; மனிதனுக்குள்ளிருந்து வெளியே வருகிறவையே அவனை மாசுப்படுத்தும். கேட்டுணரும் காதுள்ளவன் கவனித்துக் கொள்ளட்டும்" என்றார்.

அப்பொழுது சீடர்கள் அவரை அணுகி, "பரிசேயர் இந்த வார்த்தையைக் கேட்டு வருத்தமடைந்தனர் என்பது உமக்குத் தெரியுமா?" என்று கேட்டனர். அதற்கு அவர் "என் தந்தை நடாத நாற்றுகளெல்லாம் வேரோடு பிடுங்கப்படும். அவர்களை அப்படியே விட்டுவிடுங்கள். அவர்கள் பார்வையற்றவரை வழி நடத்தும் பார்வையற்றோர். பார்வையற்றவனைப் பார்வையற்றவன் வழி நடத்தினால் இருவரும் குழியிலேதான் விழுவார்கள்." என்றார்.

"இந்த உவமையை எங்களுக்கு விளக்கிக் காட்டியருளும்" என்று பேதுரு கேட்க அவர் "நீங்களும் இந்த அளவிற்கு உணர்வற்றவர்களாய் இருக்கிறீர்களா? வெளியே இருந்து மனிதனுக்குள்ளே செல்லும் எதுவும் அவனை மாசுப்படுத்த இயலாது, ஏனென்றால், அது அவனுடைய உள்ளத்திற்குள் நுழையாமல் வயிற்றில் சென்று வெளியே கழிந்து போகும். இதை நீங்கள் உணரவில்லையா?" என்றார். இப்படிச் சொன்னதால் அவர் எல்லா உணவுப் பொருட்களையும் தூயதாக்கிவிட்டார். அவர் மேலும் அவர்களிடம், "மனிதனுக்குள்ளிருந்து வெளியே வருவதுதான் அவனை

மாசுப்படுத்தும். ஏனெனில், மனிதனுடைய உள்ளத்திலிருந்து தீய எண்ணங்களும், அவை விளைவிக்கும் ஒழுக்கக்கேடு, களவு, கொலை, கற்புநிலை தவறுதல், பேராசை, பொல்லாங்கு, கபடு, காமம், பொறாமை, வசைமொழி, பெருமை, மதிகேடு, ஆகியவை வெளிவரும். பொல்லாங்கான இவையெல்லாம் உள்ளத்திலிருந்து வெளிவந்து மனிதனை மாசுப்படுத்தும். கை கழுவாமல் சாப்பிடுவது மனிதனை மாசுப்படுத்தாது," என்றார்.

பரிசேயரின் புளிப்பு மாவு (மத் 16 : 5-12, மா 8: 14-21)

இயேசு கடலின் மறுகரைக்குச் செல்லுகையில், சீடர்கள் அப்பங்களை எடுத்துச் செல்ல மறந்து விட்டனர். படகில் அவர்களிடம் ஒரே ஒரு அப்பம் மட்டும் இருந்தது. இயேசு அவர்களிடம் "பரிசேயர், சதுசேயர், ஏரோது ஆகியோரின் புளிப்புமாவைக் குறித்து விழிப்பாயும், எச்சரிக்கையாயும் இருங்கள்" என்று சொன்னார். ஆனால், அவர்களோ நாம் அப்பங்களை எடுத்து வராததாலே தான் இப்படிச் சொல்லுகிறார்" என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டிருந்தனர். அதை அறிந்த இயேசு, "அற்ப நம்பிக்கை உள்ளவர்களே, உங்களிடம் அப்பம் இல்லாததைக் குறித்து ஏன் உங்களிடையே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? இன்னுமா நீங்கள் உணராமலும், புரிந்து கொள்ளாமலும் இருக்கிறீர்கள்? உங்கள் உள்ளம் மந்தமாய்ப் போயிற்றா? உங்களுக்குக் கண் இருந்தும் காணாமலும், காது இருந்தும் கேளாமலும் இருக்கிறீர்கள்.

நான் சொன்னது அப்பத்தைப் பற்றியன்று என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளாதது ஏன்? மீண்டும் சொல்லுகிறேன், "பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் போலி பக்தியாகிய புளிப்பு மாவைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். வெளியாக்கப்படாத மறை செய்தியுமில்லை; அறியப்படாத இரகசியமுமில்லை ஏனெனில், நீங்கள் இருட்டில் பேசினது எதுவோ, அது வெளிச்சத்தில் கேட்கப்படும். நீங்கள் உள் அறையிலே காதில் சொன்னது எதுவோ அது வீடுகளின் மேலிருந்து வெளிப்படையாக அறிவிக்கப்படும். அப்பொழுது தான் 'எச்சரிக்கையாய் இருங்கள்' என்று அவர் சொன்னது அப்பத்திற்கான புளிப்பு மாவைக் குறித்து அன்று, பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் போதனையைக் குறித்தே என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

திரளான மக்கள் இயேசுவிடம் வருதல் (மா 3 : 7 - 12)

இயேசு தம் சீடர்களோடு கடற்கரைக்குப் போனார். கலிலேயாவைச் சேர்ந்த திரளான மக்கள் அவருக்குப்பின் சென்றார்கள். யூதேயா, எருசலேம், இதுமேயா, யோர்தானுக்கு அக்கரைப்பகுதி, தீரு, சீதோன் ஊர்களின்

சுற்றுப்புறங்கள் ஆகிய இடங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் அவர் செய்தவற்றை எல்லாம் கேள்விப்பட்டு அவரிடம் வந்தார்கள். அவர் பலரைக் குணமாக்கினதால் நோயாளிகள் எல்லாரும் அவரைத் தொடவேண்டுமென்று திரண்டு வந்து அவர் மேலே விழும் அளவுக்கு அவரிடம் வந்தனர். கூட்டம் தம்மை நெருக்கி விடாதபடி தமக்கு ஒரு படகை ஆயத்தமாக வைத்திருக்க அவர் தம் சீடர்களிடம் சொன்னார். அசுத்த ஆவிகளும் அவரைக் காணும்போதெல்லாம் அவர் காலில் விழுந்து 'நீர் கடவுளின் மைந்தர்,' என்று கத்தின. இயேசு தம்மைப் பற்றி அந்த ஆவிகள் தெரிவிக்கக் கூடாது என்று அவற்றிற்கு மிகவும் கண்டிப்பாகக் கட்டளையிட்டார்.

அசுத்த ஆவி திரும்பி வருதல் (மத் 12: 43-45, லூக் 11:24-26)

"அசுத்த ஆவி ஒன்று ஒருவனை விட்டு வெளியேறிய பின் வறண்ட இடங்களில் அலைந்து திரிந்து இளைப்பாறும் இடம் தேடியும் அதைக் கண்டுபிடிக்காவிடில், நான் விட்டுவந்த என் வீட்டுக்கே திரும்பிப் போவேன் என்று சொல்லும்; பிறகு வந்து, இவ்வீடு காலியாய் இருப்பதையும், பெருக்கி அழகாக வைக்கப்பட்டிருப்பதையும் கண்டு, திரும்பிப் போய் தன்னைவிடப் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடு கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனிதனுடைய பின் நிலைமை முன் நிலைமையைவிடக் கேடுள்ளதாகும். இந்தப் பொல்லாத சமுதாயத்துக்கும் இப்படியே நடக்கும்" என்றார்.

இயேசு இவற்றைச் சொல்லுகையில் கூட்டத்திலிருந்த ஒரு பெண் அவரை நோக்கி "உம்மைச் சுமந்த வயிறும், நீர் பாலுண்ட மார்பகமும் நற்பேறு பெற்றவை," என்று உரத்துச் சொன்னார். அதற்கு அவர் இன்னும் சரியாகச் சொன்னால், "கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே நற்பேறு பெற்றவர்கள்," என்றார்.

இயேசுவைப் பற்றி பேதுரு கூறியது
(மத் 16:13-20, மா.8:27-30,லூக்.9:18-20)

இயேசு செசரியாவில் இருக்கும்போது தம் சீடரைப்பார்த்து மனுமைந்தரை மக்கள் யார் என்று சொல்லுகிறார்கள்? என்று கேட்க, அவர்கள் சிலர் திருமுழுக்குநர் யோவான் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா அல்லது இறைவாக்குநருள் ஒருவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அவர் "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்? என்று அவர்களைக் கேட்க, சீமோன் பேதுரு, "நீர் என்றுமுள்ள கடவுளின் மைந்தராகிய மேசியா" என்று பதிலளித்தார்.

இயேசு அவரிடம், "யோனாவின் மகனாகிய சீமோனே, நீ நற்பேறு பெற்றவன். ஏனெனில், மனித அறிவு இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. விண்ணுலகில் இருக்கிற என் தந்தையே இதை உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். உன் பெயர் பேதுரு. இந்தக் கற்பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாள உலகின் சக்தி அதை வெல்லாது. விண்ணரசின் திறவு கோல்களை உன்னிடம் தருவேன். மண்ணுலகில் கூடாதென்று தடை செய்வது எதுவோ அது விண்ணுலகில் தடை செய்யபட்டதாகும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது எதுவோ அது விண்ணுலகில் அனுமதிக்கப்பட்டதாகும்" என்றார். தாம் மேசியா என்பதை எவருக்கும் சொல்ல வேண்டாம் என்று சீடருக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டார்.

இயேசு தம் பாடுகளையும் மரணத்தையும் முன்னறிவித்தல்
(மத் 16 : 21-23,மா. 8: 31-9 :1,லூக் 9: 22-27)

இயேசு தாம் எருசலேமுக்குப் போய், மூப்பர், தலைமை ஆசாரியர்கள் மறை அறிஞர் ஆகியோரால் தகாதவர் என்று தள்ளப்படவும், பல பாடுகள் அடையவும் கொல்லப்பட வேண்டும் என்பதையும், மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்பப்படவேண்டும் என்பதையும் தம் சீடருக்கு அது முதல் எடுத்துச் சொல்லிவந்தார். இதை அவர் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லிவந்தார்.

அதற்காகப் பேதுரு அவரைத் தனியாக அழைத்து, அவரைக் கடிந்து கொண்டார். "ஆண்டவரே, இது வேண்டாம். உமக்கு இப்படி ஒருபோதும் நேரிடாது," என்று சொன்னார். ஆனால் அவர் திரும்பிப் பேதுருவைப் பார்த்து, "சாத்தானே, எனக்குப் பின்னாலே போ, நீ எனக்குத் தடங்கலாய் இருக்கிறாய். கடவுளின் சிந்தனைக்கேற்பச் சிந்தியாமல் மனிதரின் சிந்தனைக்கேற்ப சிந்திக்கிறாய்" என்று சொன்னார்.

இயேசு மறுதோற்றம் அடைதல்
(மத் 17:1-13,மா 9: 2-13,லூக் 9: 28-36)

ஆறு நாட்களுக்குப் பிறகு, இயேசு பேதுருவையும், யாக்கோபையும், அவர் சகோதரன் யோவானையும் தனியே அழைத்து அவர்களை ஓர் உயர்ந்த மலைக்குக் கூட்டிக் கொண்டு போனார். அவர் ஜெபம் செய்கையில் அவருடைய முகத்தோற்றம் மாறிற்று. அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எவராலும் சலவை செய்ய இயலாத அளவுக்கு வெண்மையாக ஒளி வீசின. மோசே, எலியா ஆகிய இருவர் மாட்சிமையுடன் தோன்றி அவரோடு உரையாடினர். அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகும் அவருடைய

மரணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். பேதுருவும் அவரோடு இருந்தவர்களும் தூக்க மயக்கமாய் இருந்தார்கள். அவர்கள் விழித்தபோது அவருடைய மாட்சியையும் அவரோடு நின்ற இருவரையும் கண்டார்கள். சீடர் அந்தக் காட்சியைக் கண்டபோது பேதுரு இயேசுவினிடம், "ஆண்டவரே நாம் இங்கேயே இருப்பது நல்லது. நீர் விரும்பினால் உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை நாங்கள் அமைக்கிறோம்," என்று தாம் சொன்னது இன்னதென்று தெரியாமலே சொன்னார். இவற்றை அவர் சொல்லிக் கொண்டிருக்கையில் ஒளிமயமான மேகம் ஒன்று தோன்றி அவர்கள் மேல் நிழலிட்டது. அவர்கள் அந்த மேகத்தால் சூழப்பட்டிருக்கையில் அச்சமுற்றார்கள். அந்த மேகத்தினின்று, "இவரே என் அன்பார்ந்த மைந்தர். இவரைத் தெரிந்து கொண்டேன். இவரால் பெருமகிழ்ச்சி அடைகிறேன்," என்ற ஒரு வாக்கு பிறந்தது. அதைக் கேட்டதும் சீடர் அச்சம் மேலிட்டவர்களாய் முகங்குப்புற விழுந்தனர். இயேசு அவர்களண்டை வந்து, அவர்களைத் தொட்டு "எழுந்திருங்கள், அஞ்சவேண்டாம்," என்றார். அவர்கள் ஏறிட்டுப்பார்த்தார்கள். அப்பொழுது இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை.

அவர்கள் மலையிலிருந்து இறங்கி வருகையில், இயேசு, "மனுமைந்தர் இறந்தோரிடமிருந்து உயிரோடு எழுப்பப்படும் வரை இந்தக் காட்சியைப்பற்றி ஒருவருக்கும் சொல்லக் கூடாது," என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். எனவே, அவர்கள் தாங்கள் கண்டவற்றுள் எதையும் அந்நாட்களில் எவருக்கும் அறிவிக்கவில்லை. அவற்றைத் தங்கள் மனத்திலேயே வைத்துக் கொண்டு, "இறந்தோரிடமிருந்து உயிரோடு எழுந்திருப்பது என்கிறாரே. இது என்ன?" என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள்.

பிறகு அவர்கள் அவரிடம், "எலியாதான் முதலில் வர வேண்டுமென்று மறை அறிஞர்கள் சொல்லுகிறார்களே; அது எப்படி?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், எலியா எல்லாவற்றையும் சீர்ப்படுத்த முதலில் வருவார் என்பது உண்மை தான். எலியா ஏற்கனவே வந்துவிட்டார். அவரை அறிந்து கொள்ளாமல் தாங்கள் விரும்பியபடியெல்லாம் அவருக்குச் செய்துவிட்டார்கள். அவரைக் குறித்து மறைநூலில் எழுதியிருக்கிறபடி இது நடந்தது. எனினும், மனுமைந்தர் பாடுகள் பல அடையவும், புறக்கணிக்கப்படவும் வேண்டுமென்று அவரைக் குறித்து எழுதியிருக்கிறதே; அது என்ன?" என்று கேட்டார். அவர் திருமுழுக்குநர் யோவானைக் குறித்தே தங்களோடு பேசினார் என்பதைச் சீடர்கள் அப்போது அறிந்து கொண்டார்கள்.

இயேசு தம் மரணத்தைப்பற்றி மீண்டும் முன்னறிவித்தல்
(மத் 17: 22-23, மா.9:30-32, லூக். 9:43-45)

இயேசுவும் சீடரும் கலிலேயா வழியாகப் போனார்கள். அது யாருக்கும் தெரியக்கூடாது என்று அவர் விரும்பினார். ஏனெனில், அவர் தம்முடைய சீடருக்கு போதனை செய்து கொண்டே போனார். அவர் அவர்களிடம், "மனுமைந்தர் மனிதர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொன்று விடுவார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் உயிர்த்தெழுவார்," என்று சொன்னார். அவர் சொன்னதை அவர்கள் விளங்கிக் கொள்ளாதபடி அது அவர்களுக்கு மறைவாய் இருந்தது. அதைக் குறித்து அவரிடம் கேட்கவும் அஞ்சினார்கள்.

விண்ணரசில் மிகப் பெரியவன் யார் ?
(மத், 18 : 1-7, மா.9:33-37, லூக் 9:46-48)

இயேசுவும் சீடரும் கப்பர்நகூமில் வீட்டில் இருந்தபோது, இயேசு, "வழியில் நீங்கள் எதைப்பற்றி விவாதம் செய்து கொண்டு வந்தீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள் அமைதியாய் இருந்தார்கள். ஏனெனில், வழியில் அவர்கள் தங்களுள் மிகப் பெரியவன் யார் என்று ஒருவரோடு ஒருவர் விவாதம் செய்திருந்தார்கள். அவ்வேளையில் சீடர் "விண்ணரசில் மிகப் பெரியவன் யார்?" என்று அவரிடம் கேட்டனர். அவர் அவர்களிடம், "எவனாவது முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாரையும்விடக் கடையனாகவும் எல்லாருக்கும் பணியாளனாகவும் இருக்கட்டும்," என்று சொன்னார். பிறகு ஒரு சிறு பிள்ளையைக் கொண்டு வந்து அதை அவர்கள் நடுவே நிறுத்தி, அதை அணைத்துக் கொண்டு, "இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளுள் ஒன்றை என் பெயரால் எவன் ஏற்றுக் கொள்ளுகிறானோ அவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான். என்னை எவன் ஏற்றுக்கொள்ளுகிறானோ அவன் என்னையன்று, என்னை அனுப்பினவரையே ஏற்றுக் கொள்ளுகிறான். இந்தச் சிறுபிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவனே விண்ணரசில் மிகப் பெரியவன். நீங்கள் மனமாற்றமடைந்து சிறு பிள்ளைகளைப்போல் ஆனாலன்றி விண்ணரசினுள் செல்லமாட்டீர்கள். இது உறுதி என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

பாவக்குழியில் இடறிவிழுதல்
(மத். 18 : 6 -9, மா. 4: 42 -48, லூக். 17: 1-10)

"என்னிடம் நம்பிக்கை கொண்டுள்ள இந்தச் சிறுவருள் ஒருவன் பாவக்குழியில் இடறிவிழ எவன் காரணமாய் இருக்கிறானோ அவன் கழுத்தில் ஒரு பெரிய ஏந்திரக் கல்லைக் கட்டி, நடுக்கடலில் அவனை மூழ்கடிப்பதே அவனுக்கு நலம். பாவக்குழியில் இடறிவிழச் செய்கிறவற்றின் பொருட்டு ஐயோ உலகத்துக்குக் கேடு வரும். அவ்வாறு இடறி விழச் செய்பவை வந்தே

தீரும். ஆனால், அவை எந்த மனிதனால் வருகின்றனவோ, ஐயோ அந்த மனிதனின் நிலை பரிதாபமே!''

“நீங்கள் விழிப்பாய் இருங்கள். உன் சகோதரன் பாவம் செய்தால் அவனைக் கடிந்து கொள்; அவன் மனமாற்றமடைந்தால் அவனை மன்னித்து விடு. ஒரே நாளில் அவன் ஏழு முறை உனக்கு விரோதமாகக் குற்றம் செய்ய நேர்ந்து, ஏழு முறையும் உன்னிடம் வந்து, “நான் மனமாற்றம் அடைந்திருக்கிறேன்'' என்று சொன்னால் அவனை நீ மன்னிக்க வேண்டும்,'' என்றார்.

பிறகு திருத்தூதுவர் ஆண்டவரிடம், “எங்கள் நம்பிக்கை பெருகுமாறு செய்தருளும்'' என்றனர். அதற்கு ஆண்டவர், “கடுகு விதையை ஒத்த நம்பிக்கை உங்களுக்கு இருக்குமானால், நீங்கள் இந்தக் காட்டத்தி மரத்தைப் பார்த்து, “நீ பெயர்ந்து போய்க் கடலில் வேரூன்றி நில்'' என்று சொன்னாலும் அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.''

“உங்களுள் ஒருவன் தன்னுடைய அடிமை உழுதுவிட்டு அல்லது மந்தையை மேய்த்து விட்டு வயலில் இருந்து வந்ததும் அவனிடம், “நீ உடனே வந்து சாப்பிட உட்காரு'' என்றா சொல்லுவான்? நீ எனக்குச் சாப்பாடு ஆயத்தம் செய்து, அரை கட்டிக் கொண்டு நான் சாப்பிடும் வரையில் எனக்குப் பணிவிடை செய். அதற்குப் பிறகு நீ சாப்பிடலாம் என்றல்லவா சொல்லுவான். தான் கட்டளையிட்டவற்றை அந்த அடிமை செய்ததற்காக அவனுக்கு நன்றி கூறுவானா? கூறமாட்டான் அல்லவா? அதுபோலவே, நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்து முடித்தபின்பு “நாங்கள் பயனற்ற வெறும் அடிமைகள்: எங்கள் கடமையைத் தான் செய்தோம் என்று சொல்லுங்கள்'' என்றார்.

பாவம் செய்யும் சகோதரனைப் பற்றியது
(மத் 18 : 15-20, லூக் 17: 3-4)

“உன் சகோதரன் ஒருவன் உனக்கு விரோதமாக ஏதாவது ஒரு பாவம் செய்து விட்டால், நீ அவனிடம் போய், அவனது பாவத்தை அவனுக்கு உணர்த்து. நீயும் அவனும் தனித்திருக்கையில் அப்படிச் செய். உன் சகோதரன் உனக்குச் செவி சாய்த்தால், நீ அவனைக் காப்பாற்றியவனாவாய். அவன் உனக்குச் செவி சாய்க்காமல் போனால் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்குமூலத்தால் எல்லாக் காரியங்களும் நிலைநாட்டப்படவேண்டும் என்பதற்கு இசைய இரண்டொருவரை உன்னுடன் கூட்டிக் கொண்டு அவனிடம் மீண்டும் போ. அவர்களுக்கும் அவன் செவி சாய்க்காமல் போனால், அதைச் திருச்சபைக்குத் தெரியப்படுத்து. திருச்சபைக்கும் அவன் செவிசாய்க்காமல் போனால் அவன் உனக்கு அன்னியனாகவும் ஆயக்காரனாகவும் இருக்கட்டும்.''

“மண்ணுலகில் நீங்கள் கூடாது என்று தடை செய்பவை எவையோ அவை விண்ணுலகில் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீங்கள் அனுமதிப்பவை எவையோ அவை விண்ணுலகில் அனுமதிக்கப்படும். அல்லாமலும் உங்களுள் யாராவது இருவர் தாம் வேண்டிக்கொள்ளும் எந்தக் காரியத்தையாவது குறித்து மண்ணுலகில் ஒருமனப்பட்டிருந்தால் அது விண்ணுலகில் இருக்கிற என் தந்தையினால் அவர்களுக்கு அருளப்படும். ஏனெனில், எங்கே இரண்டு மூன்றுபேர் என் பெயரால் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் நான் இருக்கிறேன்,” என்றார்.

நமக்கு விரோதமாக இராதவன் நம் சார்பாக இருக்கிறான்
(மா. 9: 38-41, லூக் 9: 49-50)

யோவான் இயேசுவிடம் “போதகரே, ஒருவன் உமது திருப்பெயரால் பேய்களைத் துரத்துகிறதைக் கண்டோம். அவன் நம்மைப் பின்பற்றி வராதவன். ஆகையால், அவனைத் தடுக்கப்பார்த்தோம்,” என்றார். அதற்கு இயேசு, “அவனைத் தடுக்கவேண்டாம். என்பெயரால் வல்லமைச் செயல் ஒன்றைச் செய்தவுடனே, என்னைக் குறித்துக் தீயதாய் பேசக்கூடியவன் எவனுமில்லை. நமக்கு விரோதமாக இராதவன் நம் சார்பாக இருக்கிறான். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாய் இருக்கிறீர்கள் என்பதற்காக உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் எவன் குடிக்கக் கொடுக்கிறானோ அவன் தன் பலனைப் பெறாமல் போவதில்லை என்று உங்களுக்கு உறுதியாக சொல்லுகிறேன்”

இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தல்
(மத் 19: 13-15, மா, 10 :13-16, லூக் 18:15-17)

இயேசு சிறு பிள்ளைகளைத் தொட்டு ஆசீர்வதிக்கவேண்டுமென்று அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர். கொண்டு வந்தோரைச் சீடர்கள் கடிந்து கொண்டார்கள். இயேசுவோ அதைக்கண்டு சினமடைந்து, “சிறு பிள்ளைகள் என்னிடம் வர அவர்களுக்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைசெய்யாதீர்கள்; கடவுளின் அரசு அப்படிப்பட்டவர்களுடையது. ஒரு சிறு பிள்ளை ஏற்பது போல கடவுளின் அரசை ஏற்றுக்கொள்ளாதவன் எவனும் அதனுள் செல்ல இயலாது. இது உறுதி,” எனக் கூறிவிட்டு, அவர்களை அணைத்துக் கொண்டு அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

செல்வமுடைய ஒருவனது கேள்வி
(மத் 19:16-30, மா. 10:17-13; லூக். 18:18-30)

யூதத் தலைவன் ஒருவன் : நல்ல போதகரே கடவுள் வாக்களித்த என்றுமுள்ள மெய்வாழ்வைப் பெற நான் என்ன செய்யவேண்டும்.

இயேசு : ஏன் என்னை நல்லவர் என்று அழைக்கிறாய்? கடவுள் ஒருவரைத் தவிர நல்லவர் எவருமில்லை. நீ என்றுமுள்ள மெய்வாழ்வுக்குள் செல்ல விரும்பினால் திருக்கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்"

யூதத்தலைவன் : எந்தத் திருக்கட்டளைகளை?

இயேசு : கொலை செய்யாதே, கற்பு நெறி தவறாதே, களவு செய்யாதே, வஞ்சனை செய்யாதே, பொய்ச்சாட்சி சொல்லாதே,உன் தகப்பனையும் தாயையும் உயர்வாக மதிப்பாயாக. மேலும் நீ உன்னிடம் அன்பு கொள்ளுவது போல அடுத்தவனிடமும் அன்பு கொள்ளவேண்டும்.

யூதத்தலைவன் : இவற்றை எல்லாம் என் இளமைப்பருவம் முதற்கொண்டே நான் கடைப்பிடித்து வந்திருக்கிறேன். இன்னும் என்னிடம் உள்ள குறைபாடு என்ன?

இயேசு : உன்னிடம் குறைபாடு ஒன்று இருக்கிறது. நீ முற்றிலும் தேறினவனாயிருக்க விரும்பினால், நீ போய் உனக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்து விடு. விண்ணுலகில் உனக்குச் செல்வம் கிடைக்கும். பிறகு வந்து என்னைப் பின்பற்றி நட. அவன் மிகுந்த செல்வம் உடையவனாய் இருந்த படியால் இந்த வார்த்தையைக் கேட்டதும் முகம் வாடி வருத்தத்தோடு போய்விட்டான்.

இயேசு தம் சீடரிடம் : செல்வம் உடையவர்கள் கடவுளின் அரசினுள் செல்லுவது எவ்வளவு அரிது பாருங்கள். செல்வத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கடவுளின் அரசினுள் செல்லுதல் மிகவும் அரிது. செல்வம் உடையவன் ஒருவன் கடவுளின் அரசினுள் செல்லுவதைக் காட்டிலும் ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவதே எளிது எனலாம்.

சீடர்கள் : அப்படியானால் யார்தான் மீட்புப் பெற இயலும்.

இயேசு : மனிதருக்கு இது இயலாது, கடவுளுக்கே அப்படியன்று; கடவுளுக்கு எல்லாம் இயலும்

பேதுரு : நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மை பின்பற்றி வந்தவர்களாயிற்றே, எங்களுக்கு என்ன கிடைக்கும்?

இயேசு : யாவும் புதிதாக்கப்படும் காலத்தில் மனுமைந்தர் தமது மாட்சிமை பொருந்திய அரியணையில் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றி வந்த நீங்களும் இஸ்ரவேல் மக்களின் பன்னிரண்டு குலங்களையும் விசாரணை செய்து தீர்ப்பளிக்கிறவர்களாய் பன்னிரண்டு அரியணைகளில் வீற்றிருப்பீர்கள். மேலும் என் பெயரின் பொருட்டு வீடுகளையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனை யாவது, தாயையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டுவிட்டவன் எவனும் இப்போதுள்ள காலத்தில் நூறு மடங்காக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்மாரையும், பிள்ளைகளையும், நிலங்களையும், இவற்றோடு துன்பங்களையும் அடைவான். வரப்போகும் காலத்தில் கடவுள் வாக்களித்த என்றுமுள்ள மெய்வாழ்வையும் பெற்றுக் கொள்ளுவான். ஆனாலும், முந்தினோராய் இருக்கிறவர்களுள் பலர் பிந்தினோராயும், பிந்தினோராய் இருக்கிறவர்களுள் பலர் முந்தினோராயும் இருப்பார்கள்.

நீதிச்சட்டமும் கடவுளின் அரசும் (லூக் 16: 14-17)

"ஒரே சமயத்தில் கடவுளுக்கும் உலகப் பொருளுக்கும் வேலை செய்ய உங்களால் இயலாது," என்று இயேசு சொன்னதைக் கேட்டு பண ஆசைபிடித்த பரிசேயர்கள் அவரை இகழ்ந்தார்கள். அவர் அவர்களிடம், "மனிதர் முன் உங்களை நீங்கள் நீதிமான்களாகக் காட்டிக் கொள்ளுகிறீர்கள். ஆனால், கடவுள் உங்கள் உள்ளத்தை அறிந்திருக்கிறார். மனிதரிடையே மேன்மையாக எண்ணப்படுவது கடவுள் பார்வைக்கு அருவருப்பானது. நீதிச்சட்டமும் இறைவாக்குநரும் யோவான் காலம் வரையிலும்தான். அதற்குப் பிறகு கடவுளுடைய அரசின் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருகிறது. யாவரும் அதற்குள் நெருக்கியடித்துக் கொண்டு நுழையப்பார்க்கிறார்கள். விண்ணும் மண்ணும் ஒழிந்து போனாலும் போகலாம். ஆனால் நீதிச்சட்டத்தில் ஓர் எழுத்தின் பகுதியாகிலும் அழியாது."

இயேசு தம் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றி மூன்றாம் முறை அறிவித்தல்
(மத் 20:17-19, மா. 10: 32-34,லூக் 18: 31-34)

பிறகு இயேசு பன்னிருவரையும் ஒரு பக்கமாக அழைத்து, "நாம் இப்பொழுது எருசலேமுக்குப் போகிறோம். மனுமைந்தரைப்பற்றி இறைவாக்குநர் எழுதியுள்ளவை யாவும் அங்கே நிறைவேறித்தீரும். மனுமைந்தர் தலைமை ஆசாரியர்களிடமும், மறை அறிஞர்களிடமும் ஒப்புக்கொடுக்கப்படுவார். அவர்கள் அவருக்குக் கொலைத் தீர்ப்பளிப்பார்கள். அவரை ஏளனம் செய்து அவர்மேல் துப்பி, வாரினால் அடித்து, சிலுவையில் அறையும்படி யூதரல்லாதாரிடம் ஒப்புக்கொடுப்பார்கள். மூன்றாம் நாளில் அவர் உயிரோடு எழுந்திருப்பார்," என்றார். ஆனால், அவர்களோ இவற்றுள் ஒன்றையும் புரிந்து கொள்ளவில்லை. அவர் கூறியது அவர்களுக்கு மறைபொருளாய் இருந்தது. சொல்லப்பட்டவற்றை அவர்கள் அறிந்து கொள்ளாமலே இருந்தார்கள்.

ஒரு தாயின் வேண்டுகோள் (மத், 20: 20-28, மா. 10: 35-45)

செபெதேயுவின் மைந்தர் யாக்கோபு, யோவான் ஆகியோருடைய தாய், தன் மைந்தருடன் வந்து அவரிடம் ஒரு வேண்டுகோள் செய்வதற்காக அவரைப் பணிந்து நின்றாள்.

இயேசு : உனக்கு என்ன வேண்டும்?

அவள் : உம்முடைய மாட்சிமை பொருந்திய அரசில் என் மைந்தர்களாகிய இவ்விருவரும் ஒருவன் வலப்பக்கத்திலும் ஒருவன் இடப்பக்கத்திலும் அமர்ந்திருக்கும்படி அருள் புரியவேண்டும்.

இயேசு : நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்பதே உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பானத்தை உங்களால் குடிக்க முடியுமா? நான் பெறும் முழுக்கை உங்களால் பெறமுடியுமா?

அவர்கள் : எங்களால் முடியும்.

இயேசு : ஆம், நான் குடிக்கும் பானத்தை நீங்கள் குடிக்கத்தான் போகிறீர்கள்; நான் பெறும் முழுக்கையும் பெறத்தான் போகிறீர்கள். ஆனால் என் வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் அமர்ந்திருக்கும்படி அருள்புரிவதோ என் உரிமையன்று. அவ்விடங்கள் யாருக்கென்று குறிக்கப் பட்டிருக்கின்றனவோ அவர்களுக்கே அவை அருளப்படும்.

இவற்றைக் கேட்டு மற்றப் பத்துப்பேரும் யாக்கோபின்மீதும்யோவான் மீதும்சினங்கொண்டனர். இயேசு அவர்களைத் தம்மிடம் அழைத்து, "மக்களை ஆளுகிறவர்களாய்க் கருதப்படுகிறவர்கள் அவர்கள் மீது இறுமாப்புடன் ஆட்சி செலுத்துவது உண்டு என்பதும், மக்களுடைய மேல் அதிகாரிகள் அவர்கள் மீது சர்வாதிகாரம் செலுத்துவது உண்டு என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால், உங்களிடையே அப்படி இருக்கலாகாது. உங்களுள் எவன் பெரியவனாயிருக்க விரும்புகிறானோ, அவன் உங்களுக்குப் பணியாளனாகவே இருக்கட்டும். உங்களுள் எவன் தலைவனாயிருக்க விரும்புகிறானோ, அவன் எல்லாருக்கும் அடிமையாகவே இருக்கட்டும். ஏனெனில், மனுமைந்தரும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும் எல்லாரையும் மீட்டுக் கொள்ளும் பொருட்டுத் தம் உயிரையே மீட்புப் பொருளாகக் கொடுக்கவும் வந்தார்" என்றார்.

இயேசுவும் சகேயுவும் (லூக் 19 : 1-10)

இயேசு எரிகோ நகர் வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அவ்வூரில் சகேயு என்ற ஒருவன் இருந்தான். ஆயக்காரருக்குத் தலைவனான அவன் மிகுந்த செல்வம் உடையவன். இயேசு எப்படியிருப்பாரோ என்று பார்க்க அவன் வழி தேடினான். ஆனால் அவன் குள்ளனாய் இருந்ததினாலும், கூட்டம் அதிகமாய் இருந்ததினாலும் அவரைப் பார்க்க இயலவில்லை. அவர் போய்க் கொண்டிருந்த வழியில் முன்னதாக ஓடி, அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டத்தி மரத்தின் மேல் ஏறிக் கொண்டான். இயேசு அந்த இடத்துக்கு வந்தபோது அண்ணாந்து பார்த்து அவனிடம், "சகேயுவே, விரைவாக இறங்கிவா. இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும்," என்றார். அவன் விரைவாக இறங்கி வந்து அவரை மகிழ்ச்சியோடு வரவேற்றான். அதைக் கண்ட யாவரும், "இது என்ன, பாவியான ஒரு மனிதனிடம் இவர் தங்கப் போயிருக்கிறாரே" என்று முணுமுணுத்தனர்.

சகேயு முன்வந்து ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே, நான் இப்பொழுதே என் சொத்தில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். நான் அநியாயமாக வாங்கியிருந்தால் அவற்றை எல்லாம் நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்," என்றான். இயேசு, "இன்று இந்த வீட்டாருக்கு மீட்பு வந்திருக்கிறது. இவனும் ஆபிரகாமின் மகன் தானே. காணாமல் போயிருப்பதைத் தேடி அதை மீட்கவே மனுமைந்தர் வந்திருக்கிறார்," என்று சொன்னார்.

பாவியான பெண்ணுக்கு மன்னிப்பளித்தல் (லூக் 7 : 36 -50)

பரிசேயருள் ஒருவன் இயேசுவைத் தன்னோடு விருந்துண்ண வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அவர் அந்தப் பரிசேயனுடைய

வீட்டுக்குப் போய் உணவு உட்கொள்ள உட்கார்ந்தார். அந்த ஊரில் பாவியான பெண் ஒருத்தி இருந்தாள். இயேசு பரிசேயனுடைய வீட்டில் சாப்பிடுகிறார் என்பதை அறிந்து அவள் ஒரு வெள்ளைக்கல் பரணியில் நறுமணத் தைலம் கொண்டு வந்து, அவருக்குப் பின்னால் பாதத்தருகில் அழுது கொண்டு நின்று அவர் பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் கூந்தலினால் துடைத்து, அவர் பாதங்களை முத்தமிட்டு, நறுமணத் தைலத்தைப் பூசினாள். அதைக் கண்ட சீடர் சினமடைந்து, "ஏன் இந்த வீண் செலவு? இதைப் பெரிய தொகைக்கு விற்று ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே," என்றார்கள்.

இயேசு அவர்களுடைய எண்ணத்தை அறிந்து அவர்களிடம், "ஏன் இந்தப் பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? இவள் எனக்குச் செய்தது ஒரு நல்ல செய்கை. ஏனெனில், ஏழைகள் என்றும் உங்களோடு இருக்கிறார்கள். நானோ உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை. இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள். அவள் இந்தத் தைலத்தை என் உடலின் மீது ஊற்றின செய்கை என்னை அடக்கம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தும் செய்கையாகும். உலகம் முழுவதும் எங்கெங்கே இந்த நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இவள் செய்தது இவளை நினைவு கூர்வதற்கு ஏதுவாகக் கூறப்படும் என்று உறுதியாகச் சொல்லுகிறேன்," என்றார்.

அவரை அழைத்த தொழுநோயாளியாகிய பரிசேயன் அதைக் கண்டு, "இந்த ஆள் இறைவாக்குநராய் இருந்தால் தம்மைத் தொடுகிற பெண் யார் என்பதையும், எப்படிப்பட்டவள் என்பதையும் அறிந்திருப்பார். இவள் பாவியாயிற்றே," என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். இயேசு அவனிடம், "சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்ல வேண்டும்," என்றார். அதற்கு அவன், "சொல்லும் போதகரே," என்றான். அப்பொழுது அவர், "ஒருவனிடம் இருவர் கடன்பட்டிருந்தனர். ஒருவன் ஐந்நூறு தினாரியமும், மற்றவன் ஐம்பது தினாரியமும் கொடுக்க வேண்டியதிருந்தது. அவர்களால் கடனைத் தீர்க்க இயலாதிருக்கவே அவன் இருவரையும் மன்னித்துவிட்டான். அவர்களுள் எவன் அவனிடம் மிகுந்த அன்புடையவனாய் இருப்பான்? அதைச் சொல்," என்றார். அதற்குச் சீமோன், "எவனுக்கு மிகுதியாக மன்னித்துவிட்டானோ அவனே என்று நினைக்கிறேன்," என்றான். அவர் அவனிடம், "சரியாகத் தீர்ப்பளித்தாய்," என்று கூறி அந்தப் பெண்ணின் பக்கம் திரும்பி சீமோனிடம், "இந்தப் பெண்ணைப் பார்த்தாயா? உன் வீட்டிற்குள் வந்தேன். நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை. இவளோ தன் கண்ணீரினால் என் பாதங்களை நனைத்து, கூந்தலினால் அவற்றைக் துடைத்தாள். நீ எனக்கு முத்தம் கொடுக்கவில்லை. இவளோ நான் உள்ளே வந்ததிலிருந்து என் பாதங்களை ஓயாமல் முத்தமிட்டுக் கொண்டிருக்கிறாள்.

நீ என் தலைக்கு எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் நறுமணத் தைலம் பூசினாள்.''

“இவள் செய்த பல பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப்பட்டுள்ளன. இவள் காட்டிய பேரன்பிலிருந்து இது தெரிகிறது. எவனுக்குச் சிறிதளவு மன்னிக்கப்படுகிறதோ, அவன் சிறிதளவே அன்பு காட்டுவான்,'' என்று சொல்லி அவளைப் பார்த்து, “உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன'' என்றார்.

அப்பொழுது அவரோடு கூடச் சாப்பிட்டவர்கள், “இவர் யார்? பாவங்களையும் மன்னிக்கிறாரே!'' என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டனர். அவர் அந்தப் பெண்ணிடம், “உன் நம்பிக்கை நீ மீட்படையும்படி செய்திருக்கிறது. நீ சமாதானத்தோடு போ,'' என்று சொன்னார்.

பெண்களின் பணிவிடை (லூக் 8: 1-3)

அதற்கப்பால் இயேசு ஊர் ஊராய்ச் சென்று கடவுளுடைய அரசின் அருட்செய்தியை அறிவித்து வந்தார். பன்னிருவரும் அவருடன் இருந்தனர். மேலும் பொல்லாத ஆவிகளினின்றும், நோய்களினின்றும் குணமாக்கப்பட்டிருந்த பெண்கள் சிலரும், ஏழு பேய்கள் நீங்கின மகதலேனாள் என்ற மரியாளும், ஏரோதுவின் காரியக்காரனான கூசா என்பவனின் மனைவி யோவன்னாளும் சூசன்னாளும் மற்றும் பல பெண்களும் அவர்களோடு இருந்தார்கள். இவர்கள் தங்கள் பொருள்களைக் கொண்டு அவர்களுக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்.

சமாரியாவில் உள்ள ஓர் ஊரார் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்தல் (லூக் 9: 51-56)

இயேசு மேலே எடுத்துக் கொள்ளப்படும் காலம் கிட்டியபோது, எருசலேமுக்குப் போக வேண்டுமென்று தீர்மானித்து, அத்திசை நோக்கிப்புறப்பட்டார். தமக்கு முன்பாகத் தூதுவர்களை அனுப்பினார். அவர்கள் போய் அவருக்கான முன்னேற்பாடுகளைச் செய்ய சமாரியருடைய ஊர் ஒன்றுக்குச் சென்றார்கள். அவர் எருசலேம் நோக்கிப் போய்க் கொண்டிருந்த காரணத்தால் அவ்வூரார் அவரை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அதைக் கண்டபோது அவருடைய சீடர் யாக்கோபும் யோவானும், “ஆண்டவரே, (எலியா செய்தது போல) வானத்திலிருந்து நெருப்பு இறங்கி வந்து இவர்களை அழிக்கும்படி, நாங்கள் கட்டளையிடுவது உமக்கு விருப்பமா?'' என்று கேட்டார்கள். அவரோ திரும்பிப் பார்த்து அவர்களைக் கடிந்து கொண்டார். பிறகு, “நீங்கள் எத்தகைய

ஆவியுள்ளவர்கள் என்பதை அறிந்து கொள்ளவில்லை. மனுமைந்தர் மனிதருடைய உயிரை அழிப்பதற்கு அன்று. அதற்கு மீட்பு அருளுவதற்கே வந்தார்!" என்றார்.

மார்த்தாளும் மரியாளும் (லூக் 10 : 38-42)

இயேசுவும் அவருடைய சீடர்களும் ஓர் ஊருக்குச் சென்றனர். அங்கே மார்த்தாள் என்னும் ஒரு பெண் அவரைத் தன் வீட்டில் வரவேற்றாள். அவளுக்கு மரியாள் என்னும் ஒரு சகோதரி இருந்தாள், மரியாள் ஆண்டவர் காலடியில் உட்கார்ந்து அவளுடைய வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பல வேலைகளில் ஈடுபட்டு அல்லல்பட்டுக் கொண்டிருந்தாள். அவள் அவரிடம் வந்து, "ஆண்டவரே, என் சகோதரி என்னைத் தனியே வேலை செய்ய விட்டுவிட்டு வந்திருக்கிறாளே, உமக்கு அக்கறை இல்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளிடம் சொல்லும்" என்றாள். அதற்கு ஆண்டவர், "மார்த்தாளே, நீ பல காரியங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே. அந்த நல்ல பங்கை மரியாள்தான் தேர்ந்து கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படமாட்டாது" என்றார்.

மனமாற்றம் அடைந்தாலன்றி அழிந்து போவீர்கள்(லூக் 13 : 1-5)

பிலாத்து கலிலேயர் சிலருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடு கலந்தான் என்ற செய்தியை சிலர் இயேசுவுக்கு அறிவித்தனர். அவர் அதைக் கேட்டு, "அந்தக் கலிலேயருக்கு இவை நேர்ந்ததால் அவர்கள் மற்றெல்லாக் கலிலேயரையும் விடப் பெரும்பாவிகள் என்று நினைக்கிறீர்களா? அப்படியன்று. சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதே; அவர்கள் மற்றெல்லா மனிதரையும் விடப் பெருங்குற்றவாளிகளென்று நினைக்கிறீர்களா? அப்படியன்று. நீங்களும் மனமாற்றம் அடையாவிடில், எல்லாரும் அவ்வண்ணமே அழிந்து போவீர்கள்" என்றார்.

இயேசு எருசலேமுக்காக வருந்துதல் (மத் 23 : 37-39 , லூக் 13 : 31-35)

அந்நேரத்தில் பரிசேயர் சிலர் அவரிடம் வந்து, "நீர் இங்கிருந்து புறப்பட்டுப் போய்விடும். ஏரோது உம்மைக் கொல்ல வேண்டுமென்றிருக்கிறான்," என்று கூறினர். அவர் அவர்களிடம், "இன்றும், நாளையும் பேய்களை ஓட்டுவேன், பிணிகளைத் தீர்ப்பேன். மூன்றாம் நாளில் நான் என் பணியில் முழுநிறைவு பெறுவேன், என்று நீங்கள் போய் அந்த நரியிடம் சொல்லுங்கள். இருந்தாலும் நான் இன்றும் நாளையும் அதற்கடுத்த நாளும் தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கவேண்டும். ஏனெனில்,

இறைவாக்குநர் ஒருவர் எருசலேமுக்கு வெளியே மடிவதென்பது நடக்க முடியாத காரியம்."

"எருசலேமே, எருசலேமே, இறைவாக்குநரைக் கொன்று உன்னிடம் அனுப்பப்பட்டவர்களைக் கல்லால் அடிக்கும் நகரமே! கோழி தன் குஞ்சுகளைச் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனையோ முறை உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள விரும்பினேன். உங்களுக்கோ விருப்பம் இல்லாமல் போயிற்று. இப்பொழுதோ உங்கள் வீடு கைவிடப்பட்டதாயிற்று. ஆண்டவரின் திருப்பெயரால் வருகிறவர் ஆசி பெறுவாராக என்று நீங்கள் சொல்லும் நாள் வருமட்டும் என்னைக் காணவே மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்றார்.

இயேசு மனிதரை அறிவார் (யோ 2: 23-25)

பஸ்காப் பண்டிகைக் காலத்தில் இயேசு எருசலேமில் இருக்கையில், அவர் செய்த அரிய செயல்களைக் கண்ட பலர் அவரது திருப்பெயரில் நம்பிக்கை வைத்தனர். ஆனால், இயேசுவோ அவர்களை நம்பித் தம்மை அவர்களிடம் ஒப்படைத்துவிடவில்லை. ஏனெனில், அவர் எல்லா மனிதரையும் அறிந்திருந்தார். எந்த ஒரு மனிதனைப் பற்றியும் அவருக்கு யாரும் எதையும் எடுத்துச் சொல்லுவது தேவையில்லாதிருந்தது. மனிதன் உள்ளத்திலிருப்பதை அவர் தாமாகவே தெரிந்து கொள்ளுகிறவர்.

இயேசுவும் நிக்கொதேமுவும் (யோ 3 : 1-21)

நிக்கொதேமு என்ற யூதத் தலைவர் ஒரு பரிசேயர். அவர் ஓர் இரவு இயேசுவிடம், "ரபீ, நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பது எங்களுக்குத் தெரியும். கடவுள் தன்னோடு இருந்தாலன்றி நீர் செய்யும் இந்த அரிய செயல்களை ஒருவனாலும் செய்ய முடியாது," என்றார்.

இயேசு : ஒருவன் மறுபடியும் பிறந்தாலன்றிக் கடவுளின் அரசைக் காண முடியாது.

நிக்கொதேமு : வயதான பின் ஒருவன் எப்படிப் பிறக்கமுடியும்? அவன் தாயின் வயிற்றில் இரண்டாம் முறை நுழைந்து பிறக்க முடியுமா?

இயேசு : ஒருவன் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலன்றி அவனால் கடவுளின் அரசினுள் செல்லமுடியாது. ஊன் இயல்பினால் பிறப்பது ஊன் இயல்புடையது. ஆவியினால் பிறப்பது ஆவியின் இயல்புடையது. நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து வியப்படைய வேண்டாம். காற்று, தனக்கு விருப்பமான

இடத்தில் வீசுகிறது. அதன் ஓசையை நீ கேட்கிறா ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்பதும், எங் செல்லுகிறது என்பதும் உனக்குத் தெரியா ஆவியினால் பிறந்த எவனும் அப்படியே தா இருப்பான்.

நிக்கொதேமு : இது எப்படி நடக்க முடியும் ?

இயேசு : நீ இஸ்ரவேல் மக்களுக்குப் போதகனாய் இருந்தும், இ உனக்குத் தெரியவில்லையா? எங்களுக்குத் தெரிந்ததை சொல்லுகிறோம். நாங்கள் கண்டதை எங்க சாட்சியத்தில் கூறுகிறோம். ஆனால், நீங்களோ எங்க சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளுவதில்லை மண்ணுலகுக்கு அடுத்த வற்றை நான் உங்களுக்கு சொன்னேன். நீங்களோ நம்பவில்லை. அப்படியிருக்க விண்ணுலகுக்கு அடுத்தவற்றை நான் உங்களுக்கு சொன்னால் அதை நீங்கள் எப்படி நம்பப் போகிறீர்கள் விண்ணுலகிலிருந்து இறங்கி வந்தவராகி மனுமைந்தரைத் தவிர வேறு யாரும் விண்ணுலகிற் ஏறிப்போகவில்லை. மோசே யினால் வெண்கலப் பாம் பாலை நிலத்தில் உயர்த்தப்பட்டது. அதுபோல மனுமைந்தரும், அவரிடம் நம்பிக்கை கொண்டிருக்கி ஒவ்வொரு வனுக்கும் அவரால் என்றுமுள்ள மெய்வாழ்வு கிடைக்கும்படி உயர்த்தப்படவேண்டும்.

"கடவுள் தம்முடைய ஒரே மைந்தர் மீது நம்பிக்கை கொள்ளு எவரும் கெட்டு அழிந்து போகாமல் என்றுமுள்ள மெய்வாழ்வை பெறும்படி அவரைத் தந்து அருளியதின் மூலம் அவர் உலகத்தின் மீ இந்த அளவுக்கு அன்புகூர்ந்துள்ளார். எனவே, தம் மைந்த உலகத்துக்குக் குற்றத் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கடவுள் அவ உலகத்துக்கு அனுப்பவில்லை. மாறாக, உலகம் அவரால் மீட்பு பெறவேண்டுமென்றே அவரை அனுப்பினார். அவரிடம் நம்பிக் கொண்டிருக்கிறவன் குற்றவாளி என்ற தீர்ப்புப் பெறுவதில்லை. ஆனா அவரிடம் நம்பிக்கை கொண்டிராதவனோ, கடவுளின் ஒரே மைந்தரி திருப்பெயரில் நம்பிக்கை வைக்காததால், அவன் ஏற்கெனவே குற்றவா என்ற தீர்ப்புக்கு உள்ளாகிவிட்டான். மனிதருடைய செய்கைக பொல்லாதவையானதால், ஒளி உலகத்தில் வந்திருந்தும் அவர்கள் அந் ஒளியை விரும்பாமல் இருளையே விரும்பினார்கள். அவர்களுக்கு இது தெய்வத் தீர்ப்பு. தீமை செய்பவன் எவனும் ஒளியை வெறுக்கிறான். அவ

தன் செய்கைகள் வெளிக்குத் தெரியக்கூடாது என்பதற்காக ஒளியிடம் வராமல் இருக்கிறான். ஆனால் சத்தியத்தை நடைமுறையில் கடைப்பிடிக்கிறவனோ தன் செய்கைகள் கடவுளுக்குட்பட்ட நிலையில் செய்யப்பட்டவை என்பது வெளிக்குத் தெரியும்படி ஒளியிடம் வருகிறான்."

இயேசுவும் சமாரியா நாட்டுப் பெண்ணும் (யோ. 4:1-42)

யோவானை விட இயேசுவே மிகுதியான சீடரைச் சேர்த்துக் கொண்டு அவர்களுக்குத் திருமுழுக்கு கொடுக்கிறார் எனப் பரிசேயருக்குச் செய்தி எட்டிற்று. ஆனால், உண்மையில் இயேசு தாமே திருமுழுக்கு கொடுக்கவில்லை. அவருடைய சீடர்களே கொடுத்தார்கள். பரிசேயருக்குச் செய்தி எட்டியதை இயேசு அறிந்தபோது, அவர் யூதேயாவை விட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போகையில், அவர் சமாரியா நாடு வழியாகச் செல்ல வேண்டியதாயிருந்தது. அவர் சமாரியாவில் உள்ள சீகார் என்னும் ஊரை அடைந்தார். அந்த ஊர் யாக்கோபு தம்முடைய மகன் யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கருகில் இருக்கிறது. யாக்கோபின் கிணறும் அங்கேயே இருக்கிறது. இயேசு பயணத்தினால் களைப்புற்று அந்தக் கிணற்றுக்கு அருகில் வந்து உட்கார்ந்தார். அப்பொழுது நேரம் ஏறக்குறைய பகல் பன்னிரண்டு மணி இருக்கும்.

ஒரு சமாரியப் பெண் தண்ணீர் மொள்ள அங்கே வந்தாள். (அந்நேரத்தில் அவருடைய சீடர்கள் உணவு வாங்கி வருவதற்காக ஊருக்குள்ளே சென்றிருந்தார்கள்.)

இயேசு : குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடு.

பெண் : நீர் யூதர்; நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்க தண்ணீர் கேட்பது எப்படி?

(சமாரியர் பயன்படுத்தும் கலன்களை யூதர்கள் பயன்படுத்தமாட்டார்கள்)

இயேசு : கடவுளின் ஈவு இன்னதென்பதும், குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று கேட்கிறவர் இன்னாரென்பதும் உனக்குத் தெரிந்திருந்தால் நீயே அவரிடம் கேட்டிருப்பாய். அவரும் உனக்கு மெய்வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார்.

பெண் : ஐயா, தண்ணீர் மொள்ள உம்மிடம் ஒன்றுமில்லை, கிணறும் ஆழமானது. அப்படியிருக்க, உமக்கு மெய்வாழ்வு தரும் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கும்? நம்முடைய தந்தையாகிய யாக்கோபுவை விட நீர் பெரியவரா? அவர் இந்தக் கிணற்றை எங்களுக்கு வெட்டிக் கொடுத்தார். அவரும் அவருடைய

பிள்ளைகளும். கால்நடைகளும் இதிலே தான் தண்ணீர் குடிப்பது வழக்கம்.

இயேசு : இந்தத் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் மீண்டும் தாகமெடுக்கும். ஆனால் நான் கொடுக்கும் தண்ணீரை எவர் குடிக்கிறாரோ, அவருக்கு ஒருபோதும் தாகமெடுக்காது. நான் **கொடுக்கும் தண்ணீர் அவர் என்றுமுள்ள மெய்வாழ்வை பெறும்படி அவருக்குள்ளே பொங்கி எழும் நீரூற்றாய் இருக்கும்.**

பெண் : ஐயா, எனக்குத் தாகமெடாமலும், தண்ணீர் மொள்ள நான் இங்கு வராமலும் இருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தாரும்.

இயேசு : நீ போய் உன் கணவனை இங்கே அழைத்துக் கொண்டு வா.

பெண்: எனக்குக் கணவன் இல்லையே.

இயேசு : எனக்குக் கணவன் இல்லை என்று நீ சொன்னது சரிதான். உனக்கு ஐந்து கணவர் இருந்தனர். இப்போது உன்னுடன் இருப்பவன் உன்னுடைய கணவன் அல்ல. நீ சொன்னது உணமையே.

பெண் : ஐயா, நீர் ஓர் இறைவாக்குநர் என்பதைக் கண்டு கொண்டேன். எஙகள் மூதாதையர் இந்த மலையில் தொழுது வந்தனர். நீங்களோ, தொழ வேண்டிய இடம் எருசலேமில் தான் இருக்கிறது என்கிறீர்கள்.

இயேசு : அம்மா, என்னை நம்பு. காலம் வருகிறது. அப்பொழுது நீங்கள் விண்ணகத் தந்தையைத் தொழுவது இந்த மலையிலும் அன்று. எருசலேமிலும் அன்று. நீங்கள் யாரைத் தொழுகிறீர்கள் என்று தெரியாமலே தொழுது வருகிறீர்கள்; எங்களுக்கோ நாங்கள் யாரைத் தொழுகிறோம் என்பது தெரியும். ஏனெனில் மீட்புப் பெறுதல் யூதரிடமிருந்துதான் தொடங்குகிறது. ஆயினும் காலம் வரும்; ஏன்? இப்பொழுதே வந்திருக்கிறது. உண்மையாய்த் தொழுகிறவர்கள் இனிமேல் விண்ணகத் தந்தையை ஆவியோடும் உண்மையோடும் தொழுவார்கள். இப்படிப்பட்டவர்களே தம்மைத் தொழ வேண்டுமென்று விண்ணகத் தந்தை விரும்புகிறார். **கடவுள் ஆவியாய் இருக்கிறார். அவரைத் தொழுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழவேண்டும்.**

பெண் : கிறிஸ்து எனப்படும் மேசியா வருவார் என்பது எனக்குத் தெரியும். அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்.

இயேசு : உன்னோடு பேசுகிற நானே அவர்.

அந்நேரத்தில் அவருடைய சீடர்கள் திரும்பி வந்தார்கள். இயேசு ஒரு பெண்ணோடு பேசிக் கொண்டிருக்கிறதைக் கண்டு அவர்கள் திகைப்படைந்தார்கள். ஆனாலும், "என்ன விசாரிக்கிறீர்?" என்றாவது, "ஏன் அவளோடு பேசுகிறீர்?" என்றாவது யாரும் கேட்கவில்லை.

அந்தப் பெண் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே சென்று, அங்கிருந்த மக்களிடம், வாருங்கள் ஒருவர் நான் செய்த ஒவ்வொரு செயலையும் எனக்குச் சொல்லிவிட்டார்; அவரை வந்து பாருங்கள்; ஒருவேளை அவர் மேசியாவாக இருக்கலாம் என்று சொன்னாள். அவர்களும் ஊரைவிட்டுப் புறப்பட்டு அவரிடம் வந்தார்கள்.

இதற்கிடையில் சீடர்கள் அவரிடம், "ரபீ சாப்பிடவாரும்" என்று கூப்பிட்டார்கள். அதற்கு அவர், "உண்பதற்கு உணவு என்னிடம் இருக்கிறது. அதை நீங்கள் அறியீர்கள்" என்றார். சீடர்கள் அதைக் கேட்டு ஒருவரை ஒருவர் பார்த்து, "யாராவது இவருக்கு உணவு கொண்டு வந்திருப்பார்களோ" என்று பேசிக் கொண்டார்கள். இயேசு அவர்களிடம், "என்னை அனுப்பினவருடைய திருவுளப்படி செய்து அவருடைய வேலையை முடிப்பதே என் உணவு. இன்னும் நான்கே மாதங்கள் இருக்கின்றன. பிறகு அறுவடை வந்துவிடும் என்று நீங்கள் சொல்லுகிறது உண்டல்லவா? ஆனால் நான் சொல்லுகிறேன்," "அதோ வயல் பக்கமாக ஏறிட்டுப் பாருங்கள். பயிர் வெண்மையாகி ஏற்கெனவே அறுவடைக்குப் பக்குவமாயிருக்கிறது. அறுவடை செய்கிறவன் இப்பொழுதே கூலியை வாங்கிக் கொண்டிருக்கிறான். என்றுமுள்ள மெய்வாழ்வுக்குள்ள பலனைச் சேகரித்துக்கொண்டும் இருக்கிறான். ஆகவே, விதை விதைக்கிறவனும், அறுவடை செய்கிறவனும் ஒருமிக்க மகிழ்ச்சியடைகிறார்கள். நீங்கள் வருந்தி உழைத்து விளைவிக்காததை அறுவடை செய்ய உங்களை அனுப்பினேன். மற்றவர்கள் உழைத்தார்கள். அவர்களுடைய உழைப்பின் பலன் உங்களுக்குக் கிடைத்துவிட்டது. இதன் மூலம், 'விதை விதைக்கிறவன் ஒருவன், விளைவை அறுக்கிறவன் வேறொருவன்' என்கிற பழமொழியின் உண்மை விளங்குகிறது" என்றார்.

"நான் செய்த ஒவ்வொரு செயலையும் எனக்குச் சொல்லிவிட்டார்" என்று அந்தப் பெண் கூறிய சாட்சியம் காரணமாக அந்த ஊர்ச் சமாரியருள் பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர். ஆகையால் அந்தச் சமாரியர்கள் அவரிடம்

வந்தபோது அவரைத் தங்களுடன் தங்கியிருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். அவரும் அங்கே இரண்டு நாட்கள் தங்கினார். அச்சமயம் அவர் கூறிய வார்த்தைகள் காரணமாக இன்னும் பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர். அவர்கள் அந்தப் பெண்ணிடம், "இப்பொழுது நாங்கள் நம்புவது நீ சொன்னதால் அன்று; அவர் சொன்னதை நாங்களே நேரில் கேட்டோம். அவர் உண்மையாகவே உலகத்தின் மீட்பர் என்பதைத் தெரிந்து கொண்டோம்," என்றார்கள்.

திருமைந்தருடைய அதிகாரம் (யோ. 5:19-29)

இயேசு யூதர்களிடம், "திருமைந்தர் தாமாகவே எதையும் செய்ய இயலாது; தந்தை எதைச் செய்கிறாரென்று தாம் காண்கிறாரோ அதை மட்டும்தான் அவரால் செய்ய இயலும். தந்தை எவற்றைச் செய்கிறாரோ அவற்றை மைந்தரும் அப்படியே செய்கிறார். தந்தை மைந்தரை நேசித்து தாம் செய்கிறவற்றை எல்லாம் அவருக்குக் காட்டுகிறார். நீங்கள் வியப்படையும் வகையில் இன்னும் மேலான செயல்களையும் அவருக்குக் காட்டுவார். தந்தை இறந்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல, மைந்தரும் தாம் திருவுளம் கொண்டவர்களை உயிர்ப்பிக்கிறார். தந்தை எவருக்கும் தீர்ப்பு அளிப்பதில்லை. தந்தையைக் கனப்படுத்துவது போல எல்லாரும் மைந்தரையும் கனப்படுத்த வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் முழுவதையும் அவர் மைந்தரிடம் ஒப்படைத்திருக்கிறார். மைந்தரைக் கனப்படுத்தாதவன் அவரை அனுப்பின தந்தையை கனப்படுத்தாதவன் ஆவான்."

"என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பினவரை நம்புகிறவன் இப்பொழுதே என்றுமுள்ள மெய்வாழ்வு உடையவனாய் இருக்கிறான். அவன் குற்றத்தீர்ப்புக்கு உள்ளாகாமல், இறப்பிலிருந்து மெய்வாழ்வுக்குள் வந்திருக்கிறான்."

"காலம் வரும்; ஏன், இப்பொழுதே வந்திருக்கிறது. உயிர் அற்றவர்கள் இது முதல் கடவுளின் மைந்தருடைய குரலைக் கேட்பார்கள். அதற்குச் செவி சாய்ப்பவர்களே மெய்வாழ்வைப் பெறுவார்கள். தாம் மெய்வாழ்வுக்குப் பிறப்பிடமாய் இருக்கிறது போல மைந்தரும் மெய்வாழ்வுக்குப் பிறப்பிடமாய் இருக்கும்படி தந்தை அருள் கூர்ந்திருக்கிறார். மேலும் அவர் மனுமைந்தராய் இருக்கிறபடியால் தீர்ப்பு அளிக்கும் அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் வியப்படைய வேண்டாம். ஏனெனில் பிணக்குழியில் உள்ள அனைவரும் அவருடைய குரலைக் கேட்டு வெளியே வரும் காலம் வருகிறது. அப்பொழுது நல்லவை செய்தவர்கள்

மெய்வாழ்வை அடைவதற்கென்றும், தீயவை செய்தவர்கள் தண்டனைத் தீர்ப்பு பெறுவதற்கென்றும் உயிர்த்தெழுந்து வெளியே வருவார்கள் என்று மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.''

இயேசுவைப் பற்றிய சாட்சிகள் (யோ. 5:30-47)

''எதையும் நானாவே செய்ய இயலாது, தந்தையிடமிருந்து கேட்டு அதன்படியே நான் தீர்ப்பளிக்கிறேன். என் விருப்பத்தை அன்று, என்னை அனுப்பின தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே என் நோக்கமாய் இருப்பதால் என் தீர்ப்பு நியாயமானதாகவே இருக்கும். என்னைக் குறித்து நானே சாட்சி கூறினால், என் சாட்சியம் செல்லாது, என்னைக் குறித்துச் சாட்சி கூறுவதற்கு வேறொருவர் இருக்கிறார். அவர் என்னைக் குறித்துக் கூறுகிற சாட்சியம் உண்மை என்பது எனக்குத் தெரியும்.''

''நீங்கள் யோவானிடம் ஆள் அனுப்பிக் கேட்டுப் பார்த்தீர்கள். அவரும் சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கூறினார். மனித சாட்சியம் எனக்குத் தேவையில்லை. நீங்கள் மீட்புப் பெறவேண்டும் என்பதற்காக இதைச் சொல்லுகிறேன். யோவான் எரிந்து சுடர் விடும் விளக்காய் இருந்தார். நீங்களும் விருப்பத்துடன் சிறிது காலம் அவருடன் ஒளியில் அகமகிழ்ந்தீர்கள். ஆனால், எனக்கோ அவருடைய சாட்சியத்தைவிட மேலான சாட்சியம் ஒன்று உண்டு. நான் செய்து முடிக்கும்படி தந்தை எனக்குக் கொடுத்து அருளிய செயல்களே, அதாவது நான் செய்து வரும் செயல்களே தந்தை என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துக் சாட்சி அளிக்கின்றன. அல்லாமலும், என்னை அனுப்பின தந்தை கூட என்னைக் குறித்துச் சாட்சி அளித்திருக்கிறார். நீங்களோ ஒருபோதும் அவர் குரலைக் கேட்டதில்லை. அவர் உருவத்தைக் கண்டதில்லை. அவர் வார்த்தை உங்களிடம் நிலைத்திருப்பதும் இல்லை. ஏனெனில், அவர் அனுப்பினவரை நீங்கள் நம்பவில்லை. நீங்கள் மறை வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறீர்கள். அவற்றின் மூலம் என்றுமுள்ள மெய்வாழ்வு கிடைப்பதாக நினைக்கிறீர்கள். அந்த வாக்கியங்களே என்னைக் குறித்துச் சாட்சி கூறுகின்றன. என்றாலும் மெய்வாழ்வைப் பெறும்படி என்னிடம் வர உங்களுக்கு மனமில்லை.''

''நான் மனிதருடைய புகழை நாடுவதில்லை. ஆனால் உங்களை நான் நன்கு அறிவேன். உங்கள் உள்ளத்தில் கடவுளின் அன்பு இல்லை. நான் என் தந்தையின் பெயரால் வந்திருக்கிறேன். நீங்களோ என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. வேறு ஒருவன் தன் சொந்தப் பெயரால் வந்தால் அவனை ஏற்றுக் கொள்ளுவீர்கள். ஒரே கடவுளிடமிருந்து வரும் மாட்சிமையை நாடாமல் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு வரும் புகழை ஏற்றுக்கொள்ளும் நீங்கள் எப்படி

என்னை நம்ப இயலும்? தந்தையின் முன்னிலையில் நான் உங்கள் மீது குற்றம் சுமத்தப்போகிறேன் என்ற எண்ணத்தை விட்டுவிடுங்கள். உங்கள் மீது குற்றம் சுமத்துகிற ஒருவர் இருக்கிறார். அவர் நீங்கள் நம்பி இருக்கிற மோசேயே. மோசேயை நீங்கள் நம்பியிருந்தால் என்னையும் நம்பியிருப்பீர்கள். ஏனெனில், அவர் என்னைக் குறித்து எழுதியிருக்கிறார். அவர் எழுதினதை நீங்கள் நம்பவில்லையானால், நான் சொல்லுவதை நீங்கள் எப்படி நம்புவீர்கள்?'' என்று கேட்டார்.

மெய்வாழ்வு தரும் உணவு இயேசுவே (யோ. 6 : 22 -59)

மக்கள் (கடலின்) அடுத்த கரையில் நின்று கொண்டிருந்தார்கள். அங்கே ஒரே ஒரு படகைத்தவிர வேறு படகுகள் இருந்ததில்லை என்பதையும், அந்தப் படகில் சீடர்கள் மட்டும் போனார்களேயன்றி இயேசு அவர்களோடு போகவில்லை என்பதையும் அவர்கள் கண்கூடாகப் பார்த்திருந்தார்கள். அப்பொழுது திபேரியாவிலிருந்து வேறு படகுகள் வந்து, ஆண்டவர் கடவுளுக்கு நன்றி செலுத்திக் கொடுத்த உணவை மக்கள் சாப்பிட்ட இடத்திற்குப் பக்கமாகக் கரையோரத்தில் நின்றன. அங்கே இயேசுவும் இல்லை, அவருடைய சீடரும் இல்லை என்பதை மக்கள் தெரிந்து கொண்டதால், தாங்களும் அந்தப் படகுகளில் ஏறிக்கொண்டு இயேசுவைத் தேடி கப்பர்நகூமுக்கு வந்தார்கள்.

கடலின் மறுகரையில் அவர்கள் அவரைக்கண்டு "ரபீ, நீர் எப்பொழுது இங்கு வந்தீர்?'' என்று கேட்டார்கள். அதற்கு இயேசு "நீங்கள் என்னைத் தேடுவது தெய்வ ஆற்றலுக்கு அடையாளமான செயல்களைக் கண்டு புரிந்து கொண்டதினால் அன்று, அப்பங்களை வயிறார உண்டதனாலேதான் என்று மிகவும் திட்டமாகச் சொல்லுகிறேன். அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். என்றுமுள்ள மெய்வாழ்வுக்கென்று இருக்கின்ற அழிந்து போகாத உணவுக்காக உழையுங்கள். அதை மனுமைந்தர் உங்களுக்குக் கொடுப்பார். அவர் மீதே தந்தையாகிய கடவுள் தமது அதிகார முத்திரையைப் பொறித்திருக்கிறார்'' என்றார்.

மக்கள் : கடவுளுக்கடுத்த செயல்களை நாங்கள் செய்ய வேண்டுமென்றால், அதற்கு என்ன செய்ய வேண்டும்?

இயேசு : கடவுள் அனுப்பினவரிடம் நம்பிக்கை கொள்ளுவதே அவருக்கடுத்த செயல்

மக்கள் : அப்படியானால் நாங்கள் கண்ணால் கண்டு உம்மை நம்ப வேண்டுமென்றால் நீர் அதற்காகக் காட்டும் அற்புத அத்தாட்சி என்ன? நீர் செய்யும் செயல்தான் என்ன? 'அவர்கள் உண்பதற்கு அவர் வானத்திலிருந்து அப்பம் அருளினார்' என்று மறைநூலில் எழுதியுள்ளபடி நம்முடைய மூதாதையர் வனாந்தரத்தில் மன்னாவை உண்டனரே.

இயேசு : மோசே உங்களுக்குக் கொடுத்தது வானத்திலிருந்த வந்த உணவு அன்று. வானத்திலிருந்து உங்களுக்கு மெய்யான உணவை அருளுகிறவர் என் தந்தையே. விண்ணுலகினின்று இறங்கி வந்து உலகத்துக்கு மெய்வாழ்வு அருளுகிற உணவே கடவுள் அருளும் உணவு என்று மிகவும் உறுதியாகச் சொல்லுகிறேன்.

மக்கள் : ஆண்டவரே, இந்த உணவையே எங்களுக்கு எப்பொழுதும் தர வேண்டும்.

இயேசு : மெய்வாழ்வு தரும் உணவு நானே. என்னை வந்தடைகிறவனுக்குப் பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொள்ளுகிறவனுக்கு ஒருபோதும் தாகம் இராது. என்னிடம் நம்பிக்கை கொள்ளாமல் இருக்கிறீர்கள். தந்தை எனக்குக் கொடுக்கும் யாவரும் என்னிடம் வந்து சேருவார்கள். என்னை வந்தடைந்தவனை நான் ஒருபோதும் தள்ளிவிடமாட்டேன். ஏனென்றால், என் சொந்த விருப்பத்தை அன்று; என்னை அனுப்பினவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கே நான் விண்ணுலகிலிருந்து வந்திருக்கிறேன். அவர் எனக்குக் கொடுத்தவர்களுள் ஒருவரையும் நான் இழந்து விடாமல், கடைசி நாளில் அவர்கள் எல்லாரையும் உயிரோடு எழுப்ப வேண்டும் என்பதே என்னை அனுப்பினவருடைய விருப்பம். மைந்தரைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளுகிற எவருக்கும் என்றுமுள்ள மெய்வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதே என் தந்தையின் விருப்பம். நான் அவரைக் கடைசி நாளில் உயிரோடு எழுப்புவேன்.

"விண்ணுலகினின்று இறங்கி வந்த உணவு நானே" என்று அவர் சொன்னதால் யூதர்கள் அவரைப்பற்றி முணுமுணுத்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இவன் யோசேப்பின் மகன் அல்லவா? இவனுடைய தகப்பனையும்

தாயையும் நமக்குத் தெரியுமே. அப்படியிருக்க, இவன் நான் விண்ணுலகினின்று இறங்கி வந்திருக்கிறேன் என்று சொல்லுவது எப்படி?'' என்று பேசிக் கொண்டார்கள்.

அதைக் கேட்ட இயேசு "உங்களிடையே முணுமுணுப்பு வேண்டாம். என்னை அனுப்பின தந்தை யாரை ஈர்த்துக் கொள்ளுவாரோ அவரைத் தவிர வேறு யாராலும் என்னை வந்தடைய இயலாது. என்னை வந்தடைந்தவரை நான் கடைசி நாளில் உயிரோடு எழுப்புவேன். எல்லா மக்களும் கடவுளால் போதிக்கப்பட்டவர்களாவார்கள், என்று இறைவாக்கு நூற்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. தந்தையிடம் கேட்டுக் கற்றுக் கொள்ளும் எவரும் என்னை வந்தடைவார்கள். இதனால் கடவுளிடமிருந்து வந்தவர் மட்டுமின்றி வேறு சிலரும் தந்தையைக் கண்டிருக்கின்றனர் என்று கொள்ளலாகாது. தந்தையைக் கண்டிருக்கிறவர் இவர் ஒருவரே. இவரிடம் நம்பிக்கை கொள்ளுகிறவன் என்றுமுள்ள மெய்வாழ்வை உடையவனாய் இருக்கிறான். மெய்வாழ்வைத்தரும் உணவு நானே. உங்கள் மூதாதையர் வனாந்தரத்தில் மன்னாவை உண்டுவந்த போதிலும் இறந்து போயினர். ஆனால் இந்த உணவை உண்ணும் எவரும் இறப்பதில்லை. விண்ணுலகினின்று இறங்கி வந்த மெய்வாழ்வாகிய உணவு நானே. இந்த உணவை ஒருவன் உண்டால் அவன் என்றைக்கும் மெய்வாழ்வை உடையவனாய் இருப்பான். நான் கொடுக்கப்போகும் உணவு என் ஊனே; உலகம் மெய்வாழ்வைப் பெறுவதற்காக நான் இதைக் கொடுக்கிறேன்.''

இதைக் கேட்ட யூதரிடையே ஒரு தர்க்கம் உண்டாயிற்று. "நாம் உண்பதற்கு இவர் தன் ஊனை எப்படிக் கொடுக்க இயலும்?'' என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்

இயேசு அவர்களிடம்: "நீங்கள் மனுமைந்தரது ஊனை உண்டு அவரது இரத்தத்தைக் குடித்தாலன்றி உங்களுக்குள் மெய்வாழ்வு உடையவர்களாய் இருக்கமாட்டீர்கள்.''

"என் ஊனை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவன் என்றுமுள்ள மெய்வாழ்வை உடையவனாய் இருப்பான். நான்

அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன். மெய்யான உணவு என் ஊனே. மெய்யான பானம் என் இரத்தமே. என் ஊனை உண்டு என் இரத்தத்தைக் குடிக்கிறவன் எனக்குள் தங்கியிருக்கிறான். நானும் அவனுக்குள் தங்கியிருக்கிறேன். மெய்வாழ்வுக்குப் பிறப்பிடமாகிய தந்தை என்னை அனுப்பினார். நான் தந்தையால் மெய்வாழ்வு பெற்றவன். அதுபோல என்னை உண்பவனும் என்னால் மெய்வாழ்வைப் பெற்றவனாயிருப்பான்.

என்றுமுள்ள மெய்வாழ்வளிக்கும் வார்த்தைகள் (யோ6:60-71)

அவருடைய சீடருள் பலர் இதைக்கேட்டு, "இது கடினமான போதனை. இதை ஏற்றுக் கொள்ள யாரால் இயலும்?" என்றனர். தம்முடைய சீடர்கள் அதைக் குறித்து முணுமுணுப்பதை அறிந்து கொண்ட இயேசு தாமாகவே அவர்களிடம், "இதைக் கேட்க உங்களுக்கு அருவருப்பாய் இருக்கிறதா? அப்படியானால், மனுமைந்தர் தாம் முன்பு இருந்த இடத்திற்கு ஏறிச் செல்வதை நீங்கள் காண நேரிட்டால் அது உங்களுக்கு எப்படியிருக்கும்? மெய்வாழ்வை அளிப்பது ஆவியே. ஊன் ஒன்றுக்கும் உதவாதது. நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தைகள் ஆவி; அவையே மெய்வாழ்வு. அப்படியிருந்தும், என்னிடம் நம்பிக்கை கொள்ளாத சிலர் உங்களிடையே இருக்கின்றனர்," என்று சொன்னார். நம்பிக்கை கொள்ளாதவர் இன்னார் என்றும் தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறவர் இன்னார் என்பதும் இயேசுவுக்குத் தொடக்கத்திலிருந்தே தெரியும். ஆகையால், அவர் "இதனாலேதான், தந்தை எவனுக்கு அருள் தந்திருக்கிறாரோ அவனைத் தவிர வேறெவனும் என்னை வந்தடைய இயலாது என்று நான் முன்பே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்." என்றார்.

இதைக் கேட்டதும் அவருடைய சீடருள் பலர் அவரை விட்டுப் பின்வாங்கத் தொடங்கினர். அதன் பின் அவர்கள் அவரோடு சேர்ந்து நடந்து போகவில்லை. அதைக் கண்ட இயேசு பன்னிருவரையும் பார்த்து, "நீங்களும் போய்விட மாட்டீர்களே?" என்று கேட்டார்.

அதற்குச் சீமோன் பேதுரு, அவரிடம், "ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? என்றுமுள்ள மெய்வாழ்வளிக்கும் வார்த்தைகள் உம்மிடந்தான் உண்டு. நீரே கடவுளின் பரிசுத்தர் என்று நாங்கள் இப்பொழுது நம்புகிறோம். இதை அறிந்து கொண்டோம்," என்று சொன்னார். அதற்கு இயேசு பன்னிருவராகிய உங்களை நானே தேர்ந்து கொண்டேன் அல்லவா? ஆயினும், உங்களுள் ஒருவன் பிசாசாய் இருக்கிறான்," என்று சொன்னார். அவர் இதை இஸ்காரியோத்தூர் சீமோனுடைய மகனான யூதாசைக் குறித்துச் சொன்னார். பன்னிருவருள் ஒருவனான அவனே அவரைக் காட்டிக் கொடுக்கப் போகிறவன்.

இயேசுவின் சகோதரருக்கிருந்த நம்பிக்கையின்மை (யோ 7:1 -9)

அதன்பின் இயேசு கலிலேயா நாட்டில் உள்ள பல இடங்களுக்குச் சென்றார். ஆனால் யூதேயா நாட்டிற்குச் செல்ல அவர் விரும்பவில்லை. ஏனெனில் அங்கிருந்த யூதர்கள் அவரைக் கொன்றுவிட வழி தேடிக் கொண்டிருந்தார்கள். யூதரின் கூடாரப் பண்டிகை நெருங்கியிருந்ததால் அவருடைய சகோதாரர்கள் அவரிடம் நீர் இவ்விடத்தை விட்டு யூதேயாவுக்குப் போகவேண்டும். உம்முடைய சீடர் நீர் செய்யும் செயல்களைப் பார்க்கட்டும். நாடறிந்தவராய் இருக்க விரும்பும் எவரும் மறைவில் எதையும் செய்யமாட்டார். நீர் இந்தக் காரியங்களைச் செய்கிறவரென்றால், உலகத்துக்கே உம்மை இன்னாரென்று வெளிப்படுத்தி விடலாமே" என்று சொன்னார்கள். அவருடைய சகோதரர்கள் அவரிடம் நம்பிக்கை கொண்டிராததால் இப்படிச் சொன்னார்கள்.

இயேசு அவர்களிடம், "எனக்கேற்ற நேரம் இன்னும் வரவில்லை. உங்களுக்கோ எந்தக் காலமும் ஏற்றதுதான். உலகத்தால் உங்களைப் பகைக்க இயலாது. என்னையோ அது பகைக்கிறது. ஏனெனில், அதன் செயல்கள் பொல்லாதவை என்பதை நான் அதற்கு எடுத்துக் காட்டி வருகிறேன். நீங்கள் பண்டிகைக்குப் போங்கள். நான் இந்தப் பண்டிகைக்கென்று செல்லப்போவதில்லை. ஏனெனில், எனக்கேற்ற நேரம் இன்னும் வரவில்லை," என்று சென்னார். இப்படிச் சொல்லிவிட்டு அவர் கலிலேயாவிலேயே இருந்து விட்டார்.

இயேசு கூடாரப் பண்டிகைக் காலத்தில் போதித்தல் (யோ. 7:10-20)

என்றாலும் அவருடைய சகோதரர் பண்டிகைக்குப் போய் விட்ட பின்பு அவரும் போனார். ஆனால் வெளிப்படையாகப் போகாமல் சற்று மறைவாகப் போனார்.

பண்டிகயைின் போது யூதர்கள் 'அந்த ஆள் எங்கே' என்று கேட்டுக் கொண்டே அவரைத் தேடினார்கள். கூட்டத்தில் பலர் அவரைப் பற்றி முணு முணுத்துக் கொண்டு பேசினர். சிலர் 'அவர் நல்லவர்' என்றனர். வேறு சிலரோ 'இல்லை அவன் மக்களை ஏமாற்றுகிறவன்' என்றனர். யூதத் தலைவர்களைப் பற்றிய அச்சம் காரணமாக அவரைக் குறித்து ஒருவனும் வெளிப்படையாகப் பேசவில்லை.

பண்டிகை ஆசரிப்பில் பாதி முடிந்ததும், இயேசு திருக்கோவிலுக்குப் போய் போதித்தார். அதைக் கண்ட யூதர்கள் வியப்படைந்து, "போதனையே பெறாத இந்த ஆளுக்கு இவ்வளவு கல்வியறிவு எப்படி வந்தது?" என்றார்கள். இயேசு அவர்களைப் பார்த்து "நான் போதிக்கும் போதனை என்னுடையதன்று. அது என்னை அனுப்பினவருடையதே. அவரது

விருப்பத்தை நிறைவேற்ற ஒருவனுக்கு மனமுண்டானால் அவன் இந்தப் போதனை கடவுளிடமிருந்து வருகிறதா அல்லது அதை நானாகவே போதிக்கிறேனா என்று அறிந்து கொள்ளுவான். தானாகவே எதையும் சொல்லுகிறவர் தன் சொந்த மாட்சிமையை நாடுகிறவர். தன்னை அனுப்பினவருடைய மாட்சிமையை நாடுகிறவரே உண்மையுள்ளவர். அவரிடம் நேர்மைக்கேடு இராது. மோசே உங்களுக்கு நீதிச்சட்டத்தைக் கொடுத்திருக்கிறார். அல்லவா? அப்படியிருந்தும், உங்களுள் எவனும் அந்த நீதிச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில்லை. இப்பொழுது ஏன் என்னைக் கொல்லப் பார்க்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அந்த மக்கள், "உன்னை ஏதோ ஒரு பேய்பிடித்திருக்கிறது. யாரும் உன்னைக் கொல்லப் பார்க்கவில்லையே!" என்றார்கள்.

ஓய்வு நாளில் குணமாக்கினது நியாயமே (யோ. 7 :21-24)

இயேசு அவர்களிடம், "அன்று நான் ஒரு செயலைச் செய்தேன். அது உங்கள் எல்லாருக்கும் வியப்பாய் இருந்தது. ஆனால், இதை ஒட்டியே மோசே உங்களுக்கு விருத்தசேதன ஆசரிப்பை நியமித்திருக்கிறார். உண்மையில் அது மோசேயினிடமிருந்து வந்ததன்று. நம் மூதாதையரிடமிருந்து வந்ததாகும். அதன்படி நீங்கள் ஓய்வு நாளிலும் விருத்தசேதனம் செய்கிறீர்கள். மோசேயின் நீதிச்சட்டப்படி ஓய்வு நாளில் ஒருவன் விருத்தசேதனம் செய்யப்படுகிறான் என்றால், ஓய்வு நாளில் நான் ஓர் ஆளை முற்றும் குணப்படுத்தினேன் என்பதற்காக என் மீது சினங்கொள்ளலாமா? வெளித்தோற்றத்தைப் பார்த்துத் தீர்ப்புக் கூறுவதை விட்டு விட்டு நீதியோடு தீர்ப்பளியுங்கள்" என்று சொன்னார்.

இந்த ஆள் மேசியாவா? (யோ 7 : 25 - 31)

அப்பொழுது எருசலேம் நகரத்தாருள் சிலர், "இவரைத் தானே கொல்லத் தேடுகிறார்கள்? இவர் இங்கே வெளிப்படையாக நின்று பேசிக் கொண்டிருக்கிறார். எவனும் இவரிடம் போய் எதையும் சொல்லுவதாகத் தெரியவில்லையே! ஒருவேளை இவரே மேசியா என்பதை அதிகாரிகள் திட்டமாக அறிந்து கொண்டார்களோ? ஆனால், இவர் எந்த இடத்திலிருந்து வந்தவர் என்பது நமக்குத் தெரியும். மேசியா வரும்போது அவர் எங்கிருந்து வருகிறார் என்பது எவருக்கும் தெரியாமல் அல்லவா இருக்கும்!" என்றனர். ஆகவே, இயேசு திருக்கோவிலில் போதிக்கையில் உரத்த குரலில், "நான் யார் என்பதும், எங்கிருந்து வந்திருக்கிறேன் என்பதும் உங்களுக்குத் தெரியும் என்றா சொல்லுகிறீர்கள்? எப்படியிருந்தாலும் நானாகவே வரவில்லை. நான் அனுப்பப்பட்டேன். என்னை அனுப்பினவர் மெய்ப்பொருளானவர். அவரை நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. நானே அவரை அறிந்திருக்கிறேன். அவரிடமிருந்தே நான் வந்திருக்கிறேன். அவரே என்னை அனுப்பினார்."

இப்படிச் சொன்னதால் அவர்கள் அவரைப் பிடித்துக் கொண்டுபோக முயன்றார்கள். ஆனால் அவருடைய நேரம் அது வரையிலும் வராததால், ஒருவரும் அவர் மேல் கை வைக்கவில்லை. பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர். மேசியா வரும்போது இவர் செய்திருக்கிறதை விடவா மிகுதியான அரிய செயல்களைச் செய்யப் போகிறார்,'' என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

இயேசுவைப் பிடிக்க ஆள் அனுப்புதல் (யோ. 7:32-36)

இப்படி மக்கள் அவரைப் பற்றிப் பேசிக் கொண்டது பரிசேயர் காதில் விழுந்தது. ஆகையால், தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும் அவரைப் பிடித்து வரும்படி காவலரை அனுப்பினார்கள். இதை அறிந்த இயேசு நான் இன்னும் சிறிது காலம் தான் உங்களோடு இருப்பேன். பிறகு என்னை அனுப்பினவரிடம் சென்று விடுவேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் கண்டு பிடிக்கமாட்டீர்கள். நான் இருக்கும் இடத்துக்கு உங்களால் வரவும் இயலாது,'' என்று சொன்னார்.

அதைக் கேட்ட யூதர்கள், ''நாம் கண்டு பிடிக்க இயலாதபடி இவர் எங்கே போய் விடுவார்? கிரேக்கரிடையே சிதறலாக வாழும் யூதரிடம் சென்று கிரேக்கருக்குப் போதனை செய்வாரோ? நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் கண்டு பிடிக்க மாட்டீர்கள். நான் இருக்கும் இடத்துக்கு உங்களால் வரவும் இயலாது என்று சொன்னாரே, இதற்குப் பொருள் என்ன?'' என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள்.

மெய்வாழ்வாகிய தண்ணீர் (யோ. 7: 37-39)

பண்டிகையின் கடைசி நாள் மிக முக்கிய நாள். அந்நாளில் இயேசு எழுந்து நின்று ''ஒருவனுக்குத் தாகம் இருந்தால் அவன் என்னிடம் வந்து பானம் பருகுவானாக. என்னிடம் நம்பிக்கை கொண்டுள்ளவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து மறை வாக்கியம் சொல்லுகிறபடி மெய்வாழ்வாகிய தண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்,'' என்று உரத்துச் சொன்னார். தம்மிடம் நம்பிக்கை கொள்ளுகிறவர்களுக்கு அருளப்படவிருக்கும் ஆவியானவரைக் குறித்து அவர் இப்படிச் சொன்னார். அதுவரை இயேசு மாட்சிமைக்கு உயர்த்தப்படாதிருந்ததால் ஆவியானவரும் அது வரை அருளப்படாதிருந்தார்.

மக்களிடையே பிரிவினை (யோ. 7 : 40-44)

சிலர் இந்த வார்த்தைகளைக் கேட்டு, ''எதிர்பார்க்கப்படு இறைவாக்குநர் மெய்யாகவே இவர் தாம்'' என்றனர். சிலர் ''மேசியா இவரே'' என்றனர். வேறு சிலரோ, ''கலிலேயா நாட்டிலிருந்தா மேசியா வருவார் தாவீதின் மரபிலிருந்தும், தாவீது குடியிருந்த பெத்லெகேம் ஊரிலிருந்து

வருவார் என்றல்லவா மறைநூல் கூறுகிறது?'' என்றனர். இவ்வாறு அவரால் மக்களிடையே பிரிவினை ஏற்பட்டது. அவர்களுள் சிலர் அவரைக் கைது செய்ய வேண்டுமென்றிருந்தனர். ஆனால் அவர் மேல் ஒருவரும் கை வைக்கவில்லை.

யூதத் தலைவரின் நம்பிக்கையின்மை (யோ.7:45-52)

பிறகு தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும் அனுப்பியிருந்த காவலர்கள் அவர்களிடம் திரும்பி வந்தார்கள். "நீங்கள் ஏன் அவனைக் கொண்டு வரவில்லை?'' என்று அவர்கள் காவலர்களிடம் கேட்க, "அந்த மனிதன் பேசுவதுபோல எவனும் ஒருபோதும் பேசினதில்லை'' என்று காவலர்கள் சொன்னார்கள். அப்பொழுது பரிசேயர் அவர்களிடம், "நீங்களுமா மோசம் போனீர்கள்? அதிகாரிகளுள் யாராவது அவனிடம் நம்பிக்கை கொண்டவர்களாய் இருக்கிறார்களா? அல்லது பரிசேயருள் அப்படிப்பட்டவர் உண்டா? இந்தப் பாமர மக்களுக்கு நீதிச்சட்டம் தெரியாது. இவர்கள் சபிக்கப்பட்டவர்கள்'' என்றனர்.

அவர்களுள் ஒருவர் நிக்கொதேமு என்பவர். அவரே முன்பு இயேசுவிடம் வந்தவர். அவர் அவர்களிடம், "ஒருவரை விசாரியாமலும், அவர் செய்தது இன்னதென்பதை அறியாமலும் அவரைக் குற்றவாளி என்று நம்முடைய சட்டம் தீர்ப்பளிக்குமா?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள், "நீர் கலிலேயாவிலிருந்து வந்தவரல்லவே? மறைநூலை ஆராய்ந்து பாரும். இறைவாக்குநர் எவரும் கலிலேயாவில் தோன்றுவதில்லை என்பதை அப்பொழுது தெரிந்து கொள்வீர்'' என்று சொன்னார்கள்.

கற்பு நெறி தவறிய பெண் (யோ. 8.1-11)

ஒலிவ மலைக்குச் சென்ற இயேசு விடியற்காலத்தில் மறுபடியும் திருக்கோவிலுக்கு வந்தார். அங்கிருந்த மக்கள் எல்லாரும் அவரிடம் வந்தனர். அவர் அவர்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கும்போது கற்பு நெறி தவறிய ஒரு பெண்ணை மறை அறிஞரும் பரிசேயரும் கூட்டிக் கொண்டு வந்து நடுவில் நிறுத்தி அவரிடம், "போதகரே, இந்தப் பெண் கற்பு நெறி தவறி நடக்கும்போதே பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவளைக் கல்லால் அடித்துக் கொல்லவேண்டும் என்பது நீதிச்சட்டத்தில் மோசே நமக்கு இட்டுள்ள கட்டளை. நீர் என்ன சொல்லுகிறீர்?'' என்று கேட்டனர். அவரிடம் ஏதாவது ஒரு குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இப்படிக் கேட்டு அவரைப் பரிசோதித்தார்கள்.

இயேசுவோ குனிந்து விரலினால் தரையில் எழுதிக் கொண்டிருந்தார். நிமிர்ந்து பார்த்து அவர் அவர்களிடம், "உங்களுள் ஒரு பாவமும்

செய்யாதவன் எவனோ அவன் முதலில் இவளைக் கல்லால் அடிக்கட்டும்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார். அந்தப் பெண் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

இயேசு : பெண்ணே எங்கே அவர்கள்? நீ குற்றவாளி என்று ஒருவரும் தீர்ப்புக் கூறவில்லையா?

பெண் : இல்லை, ஐயா

இயேசு : நீ குற்றவாளீ என்று நானும் தீர்ப்புக் கூறவில்லை. நீ போகலாம். இனி ஒருபோதும் பாவம் செய்யாதே.

உலகத்துக்கு ஒளி இயேசுவே (யோ. 8 : 12-20)

இயேசு : நானே உலகத்துக்கு ஒளி என்னைப் பின்பற்றுகிறவன் ஒருபோதும் இருளில் நடக்கமாட்டான். அவன் மெய் வாழ்வாகிய ஒளியைப் பெற்றிருப்பான்.

பரிசேயர் : நீரே உம்மைக் குறித்துச் சாட்சி சொல்லுவதால் உமது சாட்சியம் செல்லாது

இயேசு : நானே என்னைக் குறித்துச் சாட்சி கூறினாலும் என் சாட்சியம் செல்லும். ஏனெனில், நான் எங்கிருந்து வந்தேன். எங்கே செல்லுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் மனிதப் போக்கின்படி தீர்ப்புக் கூறுகிறீர்கள். நான் ஒருவரைப் பற்றியும் தீர்ப்புக் கூறுவதில்லை. அப்படி நான் தீர்ப்புக் கூற நேர்ந்தால், என் தீர்ப்பு நீதியுள்ளதாய் இருக்கும். ஏனெனில், நான் தனிமையாக தீர்ப்புக் கூறுவதில்லை. என்னை அனுப்பினவராகிய தந்தை என்னோடு இருக்கிறார். ஒரே சாட்சியத்தை இருவர் கூறினால் அது உண்மையானதாய் இருக்கும் என்று உங்கள் நீதிச்சட்டத்திலேயே எழுதியிருக்கிறதே. நானும் என்னைக்குறித்துச் சாட்சி கூறுகிறேன். என்னை அனுப்பினவராகிய தந்தையும் என்னைக் குறித்துச் சாட்சி கூறுகிறார்.

பரிசேயர் : உம்முடைய தந்தை எங்கே இருக்கிறார்?

இயேசு : நீங்கள் என்னையும் அறிந்து கொள்ளவில்லை. என் தந்தையையும் அறிந்து கொள்ளவில்லை. என்னை நீங்கள் அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள்.

திருக்கோவிலில் காணிக்கைப் பெட்டிக்கு அருகிலிருந்து போதிக்கையில் அவர் இந்த வார்த்தைகளைச் சொன்னார். என்றாலும் ஒருவரும் அவரைக் கைது செய்யவில்லை. ஏனெனில் அவருடைய நேரம் இன்னும் வரவில்லை.

இயேசு : நான் செல்லப்போகிறேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் உங்கள் பாவம் நீங்காமலே நீங்கள் சாவீர்கள். நான் செல்லும் இடத்துக்கு உங்களால் வர இயலாது.

யூதர்கள் : நான் செல்லும் இடத்துக்கு உங்களால் வர இயலாது என்கிறாரே! ஒரு வேளை தற்கொலை செய்து கொள்ளப் போகிறாரோ!

இயேசு : நீங்கள் மண்ணினின்று தோன்றியவர்கள். நான் விண்ணினின்று தோன்றியவன். நீங்கள் இந்த உலகத்துக்கு உரியவர்கள். நான் இந்த உலகத்துக்கு உரியவன் அல்ல. அதனாலேதான் நீங்கள் உங்கள் பாவங்கள் நீங்காமலே சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நான் யாரோ, அவர்தான் நான் என்பதை நீங்கள் நம்பாவிட்டால் உங்கள் பாவங்கள் நீங்காமலே சாவீர்கள்.

யூதர்கள் : நீர் யார்?

இயேசு : நான் யாரென்று தொடக்கத்தில் உங்களுக்குச் சொல்லி வந்தேனே அவர்தான் நான். உங்களைக் குறித்து நான் சொல்லக் கூடியவையும் தீர்ப்பு அளிக்கக்கூடியவையும் பல உண்டு. ஆனால் என்னை அனுப்பினவரிடம் கேட்டவற்றையே நான் உலகத்துக்குச் சொல்லுகிறேன். அவர் சத்திய வாசகர்'' என்றார். அவர் தங்களிடம் விண்ணகத் தந்தையைக் குறித்துப் பேசினார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

"நீங்கள் மனுமைந்தரை உயர்த்தினபின், நான் யாரோ, அவர்தான் நான் என்றும், நானாகவே எதையும் செய்கிறதில்லை; தந்தை எனக்குக் கற்பித்தபடியே நான் இவற்றைச் சொல்லுகிறேன் என்றும் அறிந்து கொள்ளுவீர்கள். என்னை அனுப்பினவர் என்னோடு இருக்கிறார். அவருக்கு உகந்தவற்றையே நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே விட்டுவிடவில்லை அவர் இவற்றைச் சொல்லுகையில் பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

சத்தியம் விடுதலை அளிக்கும். (யோ 8 : 31 -38)

இயேசு : உங்கள் வாழ்க்கை என் வார்த்தையில் வேரூன்றியதாய் இருக்குமானால் மெய்யாகவே நீங்கள் என் சீடர்களாய் இருப்பீர்கள், சத்தியத்தையும் அறிந்து கொள்ளுவீர்கள். அந்தச் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

யூதர்கள் : நாங்கள் ஆபிரகாமின் மரபினர்கள். நாங்கள் ஒருபோதும் ஒருவருக்கும் அடிமைகளாய் இருந்ததில்லை; நீங்கள் விடுதலை அடைவீர்கள் என்று நீர் எப்படிச் சொல்லலாம்?

இயேசு : பாவம் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமை. அடிமையாய் இருப்பவன் எப்பொழுதும் வீட்டில் நிலைத்திருக்கமாட்டான். மகனே எப்பொழுதும் நிலைத்து இருப்பவர். ஆகவே மைந்தர் உங்களுக்கு விடுதலை அளித்துவிட்டால் நீங்கள் மெய்யாகவே விடுதலை பெற்றவர்களாவீர்கள். நீங்கள் ஆபிரகாமின் மரபினர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆயினும் நீங்கள் என்னைக் கொல்ல வழி தேடுகிறீர்கள். ஏனென்றால் என் வார்த்தை உங்கள் உள்ளத்தில் இடம் பெறவில்லை. நான் என் தந்தையிடம் கண்டு கொண்டவற்றை எடுத்துரைக்கிறேன். நீங்கள் உங்கள் தந்தையிடமிருந்து கற்றதை உங்கள் செய்கையில் காட்டுகிறீர்கள்.

யூதர்கள் : ஆபிரகாமே எங்கள் தந்தை

இயேசு : நீங்கள் உண்மையில் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருந்தால் ஆபிரகாம் செய்தவற்றைச் செய்வீர்கள். ஆனால், நீங்களோ, கடவுளிடம் கேட்ட சத்தியத்தை உங்களுக்கு எடுத்துச் சொன்ன என்னைக் கொல்ல வழி தேடுகிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யமாட்டாரே. உங்களுக்குத் தந்தையாயிருப்பவனுடைய செயல்களையே நீங்கள் செய்கிறீர்கள்.

யூதர்கள் : என்ன? நாங்கள் முறைகேடான வழியில் பிறந்தவர்களா? இல்லவே இல்லை. எங்களுக்கு ஒரே தந்தை தான் உண்டு. அவர் கடவுளே.

இயேசு : கடவுள் உங்களுக்குத் தந்தையாய் இருந்தால், நீங்கள் என்னிடம் அன்பு கொள்ளுவீர்கள். ஏனெனில் நான் கடவுளிடமிருந்தே வந்திருக்கிறேன். நானாக வரவில்லை. அவரே என்னை அனுப்பினார். என் பேச்சை நீங்கள் புரிந்து

கொள்ளாமல் இருப்பது ஏன்? என் சொல்லுக்குச் செவி சாய்க்க இயலாத நிலையில் நீங்கள் இருப்பதுதான் காரணம். பிசாசுதான் உங்களுக்குத் தந்தை. உங்கள் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் நீங்கள் ஆர்வம் காட்டி வருகிறீர்கள். அவன் ஆதிமுதல் மனித கொலைகாரனாகவே இருந்து வருகிறான். அவனிடம் சத்தியம் இல்லாததால், அவன் சத்தியத்தில் நிலைகொள்ளவில்லை. பொய் பேசும்போது அவன் தன் இயல்பான குணத்தையே காட்டுகிறான். ஏனெனில் அவன் பொய்யன், பொய்க்குத் தந்தையும் அவனே. நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறேன். அதனாலேதான் நீங்கள் என்னிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. என்னிடம் பாவம் உண்டென்று உங்களுள் யாராலாவது மெய்ப்பிக்க இயலுமா? நான் சத்தியத்தை சொல்லியிருக்க நீங்கள் ஏன் என்னிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. கடவுளுக்கு உரியவனாய் இருப்பவர், கடவுளின் சொல்லுக்குச் செவி சாய்ப்பர். நீங்கள் கடவுளுக்கு உரியவர்கள் ஆகாததனாலே தான் செவி சாய்க்காமல் இருக்கிறீர்கள்.

யூதர்கள் : நீ ஒரு சமாரியன்; பேய்பிடித்தவன் என்று நாங்கள் சொல்லுவது சரிதானே?

இயேசு : நான் பேய்பிடித்தவன் என்று சொல்லுவது தவறு. நான் என் தந்தையைக் கனப்படுத்துகிறேன். நீங்களோ என்னை இழிவுபடுத்துகிறீர்கள். நான் என் மாட்சிமையை நாடவில்லை. அதை நாடுகிறவர் ஒருவர் இருக்கிறார். அவரே தீர்ப்புக் கூறுகிறவர். ஒருவன் என் சொல்லைக் கடைப்பிடித்து நடந்தால் அவன் ஒருபோதும் சாகமாட்டான் என்று மிகவும் உறுதியாகச் சொல்லுகிறேன்.

யூதர்கள் : நீ பேய்பிடித்தவன் என்பது இப்பொழுது எங்களுக்குத் திட்டமாகத் தெரிந்துவிட்டது. ஆபிரகாம் இறந்து போனார். இறைவாக்குநர்களும் இறந்து போனார்கள். ஆனால் நீயோ 'ஒருவன் என் சொல்லைக் கடைப்பிடித்து நடந்தால் அவன் ஒருபோதும் சாகமாட்டான் என்கிறாய். அப்படியானால், எங்கள் தந்தை ஆபிரகாமைவிட நீ பெரியவனா? உன்னை நீ யாரென்று சொல்லிக் கொள்ளுகிறாய்.

இயேசு : நானே எனக்கு மகிமை அளித்துக் கொண்டால் என் மாட்சிமைக்கு மதிப்பில்லை. எனக்கு மாட்சிமை அளிப்பவர் என் தந்தையே. அவரை நீங்கள் உங்கள் கடவுள் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் நீங்கள் அவரை அறிந்து கொள்ளவில்லை. நான் அவரை அறிந்திருக்கிறேன். அவரை அறிந்து கொள்ளவில்லை என்று நான் சொன்னால், நானும் உங்களைப் போன்ற பொய்யனாவேன். நான் அவரை அறிந்து அவருடைய சொல்லைக் கடைப்பிடித்து நடக்கிறேன். உங்களுடைய தந்தையாகிய ஆபிரகாம் என் நாளைக் காணப்போகிறவராய் இருந்ததற்காக அகமகிழ்ந்தார். அதையும் கண்டு களிகூர்ந்தார்.

யூதர்கள் : உனக்கு இன்னும் ஐம்பது வயது கூட ஆகவில்லையே. நீயா ஆபிரகாமைப் பார்த்திருக்கிறாய்?

இயேசு : ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருந்து வருகிறேன் என்பதை உங்களுக்கு மிகவும் உறுதியாகச் சொல்லுகிறேன்.

அப்பொழுது அவர்கள் அவர்மேல் எறிவதற்காகக் கற்களை எடுத்தார்கள். இயேசுவோ திருக்கோவிலிலிருந்து மறைந்து போய்விட்டார்.

ஆட்டுத் தொழுவம் (யோ. 10 : 1 - 10)

"ஆட்டுத் தொழுவம் ஒன்றினுள் வாயில் வழியாகச் செல்லாமல் வேறு வழியாக ஏறிச் செல்லுகிறவன் திருடனாய் அல்லது கொள்ளைக்காரனாய் இருப்பான். வாயில் வழியாக உள்ளே செல்லுகிறவனே ஆடுகளின் ஆயன். காவற்காரன் அவனுக்குக் கதவைத் திறப்பான். ஆடுகள் அவனுடைய குரலுக்குச் செவிசாய்க்கும். அவன் தன் சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, அவற்றை வெளியே நடத்திச் செல்லுவான். அவன் தன்னுடைய எல்லா ஆடுகளையும் வெளியே ஓட்டிவந்த பின், அவற்றிற்கு முன் போவான். ஆடுகளும் அவன் பின்னே செல்லும். ஏனெனில், அவற்றிற்கு அவனது குரல் தெரியும். வேறு ஒருவன் பின்னே அவை செல்லுவதில்லை. வேறு ஆளின் குரல் அவற்றிற்குத் தெரியாததால் அவை அவனை விட்டு ஓடிப்போகும்." இயேசு சொன்ன இந்த உபமானத்தின் கருத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

ஆகையால், இயேசு மறுபடியும் அவர்களைப் பார்த்து உறுதியாகச் சொன்னதாவது: **தொழுவத்தின் வாயில் நானே. எனக்கு முன்பாக**

வந்தவர்கள் எல்லாரும் திருடர்கள். அவர்கள் கொள்ளைக்காரர்கள். அவர்களுக்கு ஆடுகள் செவிசாய்க்கவில்லை. நானே வாயில். என் வழியாக ஒருவன் உட்சென்றால் அவனை நான் காத்தருளுவேன். அவன் உள்ளேயும் வருவான். வெளியேயும் செல்லுவான்; சென்று மேய்ச்சலைக் காண்பான். திருடன் ஆடுகளைத் திருடுவதற்கும், கொல்லுவதற்கும், அழிப்பதற்குமே வருவான். நானோ அவை என்றுமுள்ள மெய்வாழ்வைப் பெறும் பொருட்டும் அதை முழுநிறைவாகப் பெறும் பொருட்டும் வந்திருக்கிறேன்.

மெய்யான ஆயன் இயேசுவே (யோ. 10 : 11-21)

மெய்யான ஆயன் நானே. மெய்யான ஆயன் ஆடுகளுக்காகத் தன் உயிரையும் கொடுப்பான். கூலிக்கு மேய்ப்பவனோ ஓநாய் வருவதைக் கண்டதும் ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப்போவான். ஏனெனில் அவன் உண்மையான ஆயனுமல்ல; ஆடுகளுக்குச் சொந்தக்காரனுமல்ல. ஓநாய் ஆடுகளை இழுத்துச் சென்று அவற்றைச் சிதறடிக்கும். அவன் கூலிக்கு மேய்ப்பவனாய் இருப்பதால் ஓடிப்போகிறான். ஆடுகளைப் பற்றி அவனுக்கு அக்கறை இல்லை. நானோ மெய்யான ஆயன். விண்ணகத் தந்தை என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் விண்ணகத் தந்தையை அறிந்திருக்கிறது போலவும், நான் என்னுடைய ஆடுகளை அறிந்திருக்கிறேன். அவையும் என்னை அறிந்திருக்கின்றன. என் ஆடுகளுக்காக என் உயிரையும் கொடுப்பேன். எனக்குச் சொந்தமான வேறு ஆடுகள் உண்டு. அவை இந்தத் தொழுவத்தில் இல்லை. அவற்றையும் நான் நடத்திக் கொண்டு வரவேண்டும். அவை என் குரலுக்குச் செவிசாய்க்கும். அப்பொழுது எல்லாம் ஒரே மந்தையாய் இருக்கும். அதற்கு, ஆயனும் ஒருவனே. நான் என் உயிரைக் கொடுக்கிறபடியால் விண்ணகத் தந்தை என்னிடம் அன்பு கொள்ளுகிறார். நான் அதை மீண்டும் பெற்றுக் கொள்ளும்படி கொடுக்கிறேன். வேறு ஒருவன் அதை என்னிடமிருந்து பறிப்பதில்லை. நானாகவேதான் அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு செய்யும்படிதான் என் தந்தை எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்'' என்றார்.

இந்த வார்த்தைகள் காரணமாக யூதர்களிடையே மறுபடியும் பிரிவினை ஏற்பட்டது. பலர், "இவனை ஒரு பேய் பிடித்திருக்கிறது. ஏதேதோ பிதற்றுகிறான். இவன் சொல்லுவதை ஏன் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்றனர். சிலர், "இந்த வார்த்தைகள் பேய்பிடித்தவன் சொல்லக்கூடியவை அல்ல. குருடனுடைய கண்களுக்குப் பார்வை கொடுக்கப் பேயால் இயலுமா?'' என்றனர்.

யூதர்கள் இயேசுவை ஏற்க மறுத்தல் (யோ. 10 : 22-42)

அப்பொழுது எருசலேமில் பீட அர்ப்பணிப்புப் பண்டிகை நடைபெற்றுக் கொண்டிந்தது. இயேசு திருக்கோவிலில் சாலமோன் மண்டபத்தில் உலாவிக் கொண்டிருந்தார். யூதர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு "இப்படி நீர் எங்களை எவ்வளவு காலம் காக்க வைப்பீர்? நீர் தான் மேசியா என்றால் அதை எங்களுக்குத் தெளிவாகச் சொல்லிவிடும்'' என்றார்கள்.

இயேசு : "நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆனால் நீங்கள் நம்பாமல் இருக்கிறீர்கள். என் தந்தையின் பெயரால் நான் செய்கிற செயல்களே என்னைக் குறித்துச் சாட்சி கூறுகின்றன. என்றாலும், நீங்கள் நம்பாமல் இருக்கிறீர்கள். ஏனென்றால், நீங்கள் என் மந்தையைச் சேராத ஆடுகள். என் ஆடுகள் என் குரலுக்குச் செவி சாய்க்கும். நான் அவற்றை அறிந்திருக்கிறேன். அவை என்னைப் பின்பற்றி வருகின்றன. நான் அவற்றிற்கு என்றுமுள்ள மெய்வாழ்வைக் கொடுக்கிறேன். அவை ஒருபோதும் அழியப்போவதுமில்லை. எவனும் அவற்றை என் கையிலிருந்து பறித்துக் கொள்ளப்போவதுமில்லை. அவற்றை எனக்கு அருளிய என் தந்தை எல்லாரையும் விடப் பெரியவர். அவற்றை அவர் கையிலிருந்து பறித்துக் கொள்ள எவராலும் இயலாது. நானும் என் தந்தையும் ஒன்றே.

அப்பொழுது அவரைக் கல்லால் அடிப்பதற்காக யூதர்கள் மறுபடியும் கல்லை எடுத்தார்கள்.

இயேசு : விண்ணகத் தந்தையினுடைய பல நல்ல செயல்களை உங்களுக்குச் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள் எந்தச் செயலுக்காக என்னைக் கல்லால் அடிக்கப் பார்க்கிறீர்கள்.

யூதர்கள் : நல்ல செயல்கள் எதற்காகவும் அன்று. தெய்வ நிந்தனைக்காகக் கல்லால் அடிக்கப் போகிறோம். நீ ஒரு மனிதனாயிருந்தும் உன்னைக் கடவுளாக்கிக் கொள்ளுகிறாய்,

இயேசு : உங்கள் நீதிச்சட்ட நூலில், 'நீங்கள் தேவர்கள் எனச் சொன்னேன்'' என்று எழுதியிருக்கிறதல்லவா? கடவுளின் வார்த்தை யாருக்கு உரைக்கப்பட்டதோ அவர்களை அவர்

தேவர்கள் என்று சொல்லி அழைத்திருக்கிறார். மறைநூல் கூறுவதைத் தள்ளிவிட இயலாது. அப்படியானால், விண்ணகத் தந்தை தமக்கு உரிமையாக்கிக் கொண்டு உலகத்திற்கு அனுப்பியிருக்கிற என்னைக் கடவுளின் மைந்தர் என்று நான் சொன்னதால், "தெய்வ நிந்தனை கூறுகிறாய்" என்று நீங்கள் சொல்லலாமா? என் தந்தையின் செயல்களை நான் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்ப வேண்டாம். ஆனால், அவற்றை நான் செய்கிறேன் என்றால், என்னை நீங்கள் நம்பாமல் போனாலும் அந்தச் செயல்களையாவது நம்புங்கள். அதன் மூலம் விண்ணகத் தந்தை எனக்குள்ளும், நான் விண்ணகத் தந்தைக்குள்ளும் இருக்கிறதைக் கண்டறிந்து கொள்ளுவீர்கள் அதனால் அவர்கள் அவரைப் பிடித்துக் கொண்டுபோக மறுபடியும் முயன்றார்கள். அவரோ அவர்கள் கையில் அகப்படாமல் விலகிவிட்டார்.

அவர் மறுபடியும் யோர்தான் ஆற்றைக் கடந்து யோவான் முதலில் திருமுழுக்குக் கொடுத்து வந்த இடத்துக்குப் போய் அங்கே தங்கினார். பலர் அவர் இருந்த இடத்துக்கு வந்தனர். அவர்கள், "யோவான் இவரைப் பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையே" என்று பேசிக் கொண்டார்கள். அங்கே பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

பகுதி 6

இயேசுவின்இறுதிநாட்கள்

பெத்தானியாவில் இயேசு (யோ, 12 : 1-11)

பஸ்காப் பண்டிகைக்கு ஆறு நாட்களுக்கு முன்பு இயேசு பெத்தானியாவுக்குப் போனார். அது அவர் உயிரோடு எழுப்பின இலாசருவின் ஊர். அங்கே அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது. மார்த்தாள் பணிவிடை செய்தாள். அவரோடு பந்தியில் அமர்ந்தவர்களுள் இலாசரும் ஒருவன். அப்பொழுது, கலப்பற்றதும், விலை உயர்ந்ததுமான நளதம் என்னும் தைலத்தில் ஓர் இராத்தல் கொண்டு வந்து மரியாள் இயேசுவின் பாதங்களில் பூசி, தன் கூந்தலினால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். அந்தத் தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது. அவருடைய சீடருள் ஒருவனும், அவரைக் காட்டிக் கொடுக்க இருந்தவனுமான யூதா இஸ்காரியோத்து, "இந்தத் தைலத்தை முந்நூறு திநாரியத்துக்கு விற்று அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே" என்றான். அவன் இப்படிச் சொன்னது ஏழைகளுக்காகக் கவலைப்பட்டதனாலன்று. அவன் ஒரு திருடன். பணப்பெட்டி அவனிடம் இருந்ததால், அதில் போடப்படுவதிலிருந்து அவன் எடுத்துக் கொள்ளுவதுண்டு. அதனாலே தான் இப்படிச் சொன்னான்.

அப்பொழுது இயேசு, "இவளைத் தடைச் செய்யாதே, அப்படியே விட்டுவிடு. என் அடக்க நாளை முன்னிட்டு இதைச் செய்யட்டும். ஏழைகள் எப்பொழுதும் உங்களிடையே இருக்கிறார்கள். ஆனால் நானோ எப்பொழுதும் உங்களிடையே இருக்கப்போவதில்லை" என்றார்.

இயேசுவைக் கொன்றுவிடச் சதித்திட்டம்

(இலாசர் இறந்ததும்) மரியாளைப் பார்க்க வந்திருந்த யூதருள் பலர் இயேசு செய்தவற்றைக் கண்டபோது அவரிடம் நம்பிக்கை கொண்டார்கள். சிலரோ, புறப்பட்டுப் போய் பரிசேயரிடம் இயேசு செய்தவற்றை அவர்களுக்குத் தெரிவித்தனர். அதன்பேரில் தலைமை ஆசாரியர்களும், பரிசேயரும் தலைமைச் சங்கத்தைக் கூட்டி "இந்த மனிதன் பல அற்புதச் செயல்களைச் செய்து கொண்டிருக்கிறான். நாம் சும்மா இருக்கிறோமே! இவனை இப்படியே விட்டுவிட்டால் எல்லாரும் இவரிடம் நம்பிக்கை கொள்ளுவர். அப்பொழுது உரோமர்கள் வந்து நம்முடைய திருத்தலத்தையும் இனத்தையும் கைப்பற்றி அழித்துவிடுவார்கள்" என்று சொன்னார்கள்.

அவர்களுள் ஒருவர் காய்பா. அந்த ஆண்டின் தலைமை ஆசாரியர். அவர் மற்றவர்களிடம், "உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. ஓர் இனம் முழுவதும் அழிந்து போவதைவிட மக்கள் பொருட்டு ஒரே ஒரு மனிதன் சாவது உங்களுக்கு நலம் என்பதைக் கூட நீங்கள் சிந்திக்காமல் போனீர்கள்" என்று சொன்னார். இதை அவர் தாமாக யோசித்துச் சொல்லவில்லை. அவர் அந்த ஆண்டில் தலைமை ஆசாரியராய் இருந்ததால், "இயேசு யூத மக்களுக்காக இறக்கப் போகிறார்." அவர் அந்த மக்களுக்காக மட்டுமன்றி, சிதறலாக வாழ்கிற கடவுளின் பிள்ளைகளை ஒன்று சேர்த்து ஒரே கூட்டமாக்க வேண்டுமென்று இவர்களுக்காகவும் இறக்கப் போகிறார்" என்பதை இறைவாக்காக உரைத்தார். ஆகவே அவரைக் கொன்றுவிட வேண்டுமென்பதே அன்றுமுதல் அவர்களது தீர்மானமாய் இருந்தது.

ஆகையால், இயேசு அதன்பின் யூதரிடையே வெளிப்படையாக நடமாடவில்லை. அவ்விடம் விட்டுப் புறப்பட்டு பாலை நிலத்துக்கு அருகிலுள்ள எப்பிராயீம் என்னும் ஊருக்குப் போய் அங்கே அவர் தம்முடைய சீடருடன் தங்கியிருந்தார்.

யூதரின் பஸ்காப் பண்டிகையும் நெருங்கி வந்தது. பண்டிகைக்கு முன் தங்களை முறைப்படி சுத்தி செய்து கொள்ளுவதற்காகப் பலர் நாட்டுப்புறங்களிலிருந்து எருசலேமுக்குச் சென்றனர். அங்கே அவர்கள் இயேசுவைத் தேடினார்கள். அவர்கள் திருக்கோவிலில் நிற்கையில் ஒருவரை ஒருவர் பார்த்து "உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? அவர் பண்டிகைக்கு வரமாட்டார் போலத் தோன்றுகிறதே" என்று பேசிக்கொண்டார்கள்.

தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும் அவரைப் பிடிக்க நினைத்து அவர் இருக்கும் இடம் யாருக்காவது தெரிந்திருந்தால் அதைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார்கள். ஆனால், பண்டிகைக் காலத்தில் (கொல்ல) வேண்டாம். மக்களிடையே கலகம் உண்டாகிவிடும்" என்றும் பேசிக்கொண்டார்கள்.

இலாசருவைக் கொன்றுவிடச் சதித்திட்டம் (யோ. 12 : 9-11)

இயேசு பெத்தானியாவில் இருந்ததை அறிந்த யூதர்கள் ஒரு பெருங்கூட்டமாய் வந்தார்கள். அவர்கள் இயேசுவை முன்னிட்டு மட்டும் வரவில்லை. அவர் இறந்தோரிடமிருந்து உயிரோடு எழுப்பின இலாசருவைப் பார்ப்பதற்காகவும் வந்தார்கள். அதைக் கண்ட தலைமை ஆசாரியர்கள் இலாசருவையும் கொன்று விடுவதென்று தீர்மானித்தார்கள். ஏனெனில், அவன் காரணமாகப் பல யூதர்கள் இயேசுவிடம் நம்பிக்கை வைத்தனர்.

இயேசு எருசலேமுக்குள் அரசகோலத்துடன் செல்லுதல்
(மத். 21 : 1-11, மா. 11 :1-11, லூக். 19:28-38, யோ. 12: 12-19)

இயேசு எருசலேமை நோக்கி நடந்து போனார். அவர் ஒலிவ மலைக்கு அருகிலுள்ள பெத்பகே, பெத்தானியா என்னும் ஊர்களை நெருங்கின போது, தம்முடைய சீடருள் இருவரிடம், உங்களுக்கு எதிரே இருக்கிற அந்த ஊருக்குப் போங்கள். அதனுள் செல்லும்போது இதுகாறும் ஒரு மனிதனும் ஏறியிராத கழுதைக்குட்டி ஒன்று கட்டியிருப்பதைக் காண்பீர்கள். அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள். யாராவது உங்களிடம், "இதை ஏன் அவிழ்க்கிறீர்கள்?" என்று கேட்டால் "ஆண்டவருக்கு இது தேவை" என்று கூறுங்கள்" எனச் சொல்லி அவர்களை அனுப்பினார்.

அனுப்பபட்டவர்கள் போய் அவர் தங்களிடம் சொன்னபடியே இருக்கக் கண்டார்கள். கழுதைக்குட்டியை அவர்கள் அவிழ்க்கையில், அதற்கு உடையவர்கள் "குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் "இது ஆண்டவருக்குத் தேவை" என்று பதில் சொன்னார்கள். அந்த மனிதர்கள் அவர்களைப் போகவிட்டனர். அவர்கள் அதை இயேசுவிடம் ஓட்டி வந்தார்கள். அதன்மேல் தங்கள் மேலாடைகளைப் போட்டு இயேசுவை அதன் மேல் உட்கார வைத்தார்கள். இயேசு இலாசருவைக் கல்லறையை விட்டு வெளியே வரும்படி கூப்பிட்டு அவனை இறந்தோரிடமிருந்து உயிரோடு எழுப்பினபோது அவரோடு இருந்த மக்கள் அங்கே நடந்ததைக் குறித்து சாட்சி கூறிவந்தார்கள். அவர் அந்த அரிய செயலைச் செய்தார் என்று மக்கள் கேள்விப்பட்டிருந்ததால் அவர்கள் அவரை எதிர்கொள்ளப் போனார்கள். அவர் போகையில் பலர் தம் மேலாடைகளை வழியிலே விரித்தார்கள். வேறு பலர் வயல் வெளிகளில் வெட்டிய இலை தழைகளையும் மரக்கிளைகளையும் வழியில் பரப்பினார்கள். குருத்தோலைகளை எடுத்துக் கொண்டு வந்த மக்களும் சீடர் கூட்டத்தார் அனைவரும் உரத்த முழக்கம் எழுப்பித் தாங்கள் கண்ட எல்லா வல்லமைச் செயல்களுக்காவும் மகிழ்ச்சியோடு

ஓசன்னா! ஆண்டவரின் திருப்பெயரால் வருகிறவர்
கடவுளின் ஆசி பெறுவாராக.
இஸ்ரவேலின் அரசர் கடவுளின் ஆசிபெறுவாராக!
வருகிற ஆட்சி, நம் தந்தையாகிய தாவீதின் ஆட்சி
ஆசி பெறுகுவதாக!
சீமோன் மகளே, அஞ்சவேண்டாம்,
இதோ உன் அரசர் வருகிறார்,

அவர் கழுதைக் குட்டியின் மேல் ஏறிவருகிறார்,
இதோ, உன் அரசர் சாந்தகுணமுள்ளவராய்
உன்னிடம் வருகிறார்."
விண்ணுலகில் சமாதானம்,
விண்ணகத்தில் மாட்சிமை,
விண்ணகத்தில் ஓசன்னா!"
என்று கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இறைவாக்குநர் மூலமாக உரைக்கப்பட்டது நிறைவேற இது நடந்தது.

அவர் பட்டணத்தை நெருங்கினபோது அதைப் பார்த்து, அதற்காகப் புலம்பி அழுது "இந்த நாளிலும் சமாதானத்துக்கு ஏதுவானவற்றை நீ அறிந்திருந்தாயானால் எவ்வளவோ நலமாயிருக்கும். ஆனால் இப்பொழுதோ அவை உன் கண்களுக்கு மறைவாய்ப் போயின. உனக்கு ஒரு காலம் வரும், அக்காலத்தில் உன் பகைவர்கள் உன்னைச் சூழ மதில் எழுப்பி உன்னை வளைந்து கொண்டு, எல்லாப் பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும், உன் பிள்ளைகளையும் அடியோடு அழித்து, உன்னில் கல்லின்மேல் கல் இராதபடி செய்வார்கள். ஏனென்றால், கடவுள் உன்னைத் தேடிவந்த வேளையை நீ அறிந்து கொள்ளாமற் போனாய்'' என்று சொன்னார்

அவர் எருசலேமுக்குள் சென்ற போது நகரத்தார் எல்லாரும் கலக்கமுற்று "இவர் யார்?" என்று கேட்டனர். "இவர்தாம் இறைவாக்குநர் இயேசு, கலிலேயா நாட்டு நாசரேத்தூரைச் சார்ந்தவர்" என்று கூட்டத்தார் பதிலளித்தனர்.

அப்பொழுது கூட்டத்திலிருந்த பரிசேயருள் சிலர் அவரிடம், "போதகரே, உம்முடைய சீடரை அதட்டி வையும்" என்று கேட்டுக் கொண்டார். அதற்கு அவர், "இவர்கள் அமைதியாய் இருந்தாலும் இந்தக் கற்களே ஆரவாரம் செய்யும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

"பாருங்கள், இதோ, உலகமே அவன் பின்னே போய்விட்டது. நம்மால் ஒன்றும் செய்ய இயலவில்லையே" என்று பரிசேயர் தங்களிடையே பேசிக் கொண்டனர்.

இவற்றின் கருத்தை அவருடைய சீடர் அந்நேரத்தில் புரிந்து கொள்ளவில்லை. இயேசு மாட்சிமைக்கு உயர்த்தப்பட்ட பிறகு தான் இவை அவரைக் குறித்து எழுதப்பட்டவை என்பதும், இவற்றையே அவருக்குச் செய்தார்கள் என்பதும் அவர்கள் நினைவிற்கு வந்தன. மாலை நேரம் வந்து விட்டதால் இயேசு பன்னிருவருடன் பெத்தானியாவுக்குப் போனார்.

அத்திமரம் சபிக்கப்படுதல் (மத், 21 : 18-22; மா. 11:12-14, 20-26)

மறுநாள் (திங்கட்கிழமை) காலையில் அவர்கள் பெத்தானியாவிலிருந்து நகரத்திற்குத் திரும்பி வருகையில் அவருக்குப் பசித்தது. இலைகள் அடர்ந்த ஓர் அத்தி மரத்தைத் தொலைவில் அவர் கண்டு, அதில் ஏதாவது கிடைக்குமா என்று பார்க்கப் போனார். ஆனால் அதன் அருகில் சென்றபோதோ, அதில் இலைகளைத்தவிர வேறு ஒன்றையும் காணவில்லை. ஏனெனில், அது அத்திப்பழக்காலமன்று.

இயேசு அதைப்பார்த்து, "இனி ஒருபோதும் ஒருவனும் உன் பழத்தைப் பறித்துத் தின்னாதிருப்பானாக" என்றார். அவர் சொன்னது அவருடைய சீடர்களின் காதில் விழுந்தது.

இயேசு திருக்கோவிலைப் புனிதமாக்குதல்
(மத் 21: 12-17; மா11:15-19; லூக் 19:45-48;யோ 2 : 13-22)

பின்பு இயேசு திருக்கோவிலுக்குள் சென்றார். அங்கு ஆடு, மாடு, புறா விற்கிறவர்களையும், காசுக்கடை அமைத்துக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறவர்களையும் கண்டு கயிற்றினால் ஒரு சாட்டையைச் செய்து அவர்கள் எல்லாரையும், ஆடு மாடுகள் அனைத்தையும் திருக்கோவிலுக்கு வெளியே துரத்தினார். திருக்கோவில் வழியாக வாணிகப் பொருள்கள் எதையும் எடுத்துச் செல்ல அவர் எவருக்கும் இடம் கொடுக்கவில்லை. காசுக்காரருடைய சில்லறைகளைச் சிந்திச் சிதறி, பலகைகளைக் கவிழ்த்துப்போட்டார். புறா விற்றுக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து, "இவற்றை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள். என் வீடு எல்லா நாட்டினருக்கும் ஜெபவீடு என்று மறைநூலில் எழுதப்பட்டிருக்கிறது. நீங்களோ அதைக் கொள்ளைக்காரரின் குகையாக்குகிறீர்கள். என் தந்தையின் வீட்டை வணிக அங்காடியாக்க வேண்டாம்" என்றார். அவருடைய சீடர்கள், "உமது வீட்டைப் பற்றிய ஆர்வம் என்னை எரித்துவிடும்" என்று மறைநூலில் எழுதப்பட்டுள்ளதை நினைவுபடுத்திக் கொண்டார்கள்.

பிறகு அவர் திருக்கோவிலில் போதித்தார். குருடரும் சப்பாணியரும் அவரிடம் வந்தனர். அவர் அவர்களைக் குணமாக்கினார். தலைமை ஆசாரியரும் மறைஅறிஞரும் அவர் செய்த வியப்பூட்டும் செயல்களையும், "தாவீதின் மைந்தருக்கு ஓசன்னா! என்று பிள்ளைகள் திருக்கோவிலில் ஆர்ப்பரிக்கிறதையும் கண்டு சினங்கொண்டு அவரை நோக்கி, "இவர்கள் சொல்லுகிறது உமக்குக் கேட்கிறதா?" என்று கேட்டனார். அவர், "ஆம், கேட்கிறது. சிறுவருடைய வாயும் குழந்தைகளின் வாயும் உம்மைப் புகழ்ந்து ஏத்தும்படி செய்தீர்" என்று மறைநூலில் படித்ததே இல்லையா?" என்றார்.

யூதர்கள் அவரைப் பார்த்து, "நீர் இப்படிச் செய்யலாம் என்பதற்கு ஆதாரமாக எங்களுக்குக் காட்டும் அடையாளம் என்ன?" என்று கேட்டார்கள்.

அதற்கு இயேசு, "இந்தக் கோவிலை இடித்துவிடுங்கள். நான் இதை மூன்று நாளில் எழுப்புவேன்" என்று அவர்களிடம் சொல்ல, யூதர்கள், "இந்தக் கோவில் கட்டப்பட நாற்பத்தாறு ஆண்டுகள் ஆயிற்றே; இதை நீர் மூன்றே நாளில் எழுப்பிவிடுவீரோ?" என்று கேட்டனர். ஆனால், அவர் சொன்னதோ அவரது உடலாகிய கோவிலைப்பற்றியது. அவர் இப்படிச் சொன்னதை அவர் இறந்தோரிடமிருந்து உயிரோடு எழுப்பப்பட்ட பின் அவருடைய சீடர்கள் நினைவுபடுத்திக்கொண்டு மறை வாக்கியத்தையும் இயேசு சொன்ன சொல்லையும் நம்பினார்கள்.

தலைமை ஆசாரியரும் மறைஅறிஞரும் அவரைக் கொன்றுவிட வழி தேடினார்கள். ஆனால், மக்களெல்லாரும் அவருடைய போதனையைக் கேட்டு வியப்படைந்திருந்ததால், அவரைப் பற்றிய அச்சம் அவர்களுக்கு இருந்தது.

இயேசுவின் அதிகாரத்தைப் பற்றி கேள்வி
(மத் : 21:23-27; மா:11:27-33; லூக். 20:1-8)

மறுநாள் காலையில் (செவ்வாய்க்கிழமை) அவர்கள் அவ்வழியே போய்க் கொண்டிருந்த போது அந்த அத்திமரம் வேரோடு பட்டுப் போயிருந்ததைக் கண்டார்கள். பேதுரு நடந்ததை நினைவுகூர்ந்து அவரிடம், "ரபீ, இதோ நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிருக்கிறது," என்றார். அதைக் கேட்ட இயேசு அவர்களிடம், "கடவுளிடம் நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் ஐயம் இன்றி நம்பினால் இந்த அத்திமரத்துக்கு நான் செய்ததை நீங்களும் செய்வீர்கள். அதுவுமின்றி நீங்கள் இந்த மலையைப் பார்த்து 'நீ பெயர்ந்து கடலில் போய் விழு' என்று சொன்னாலும், நீங்கள் சொன்னது நிறைவேறும் என்று உங்கள் உள்ளத்தில் ஐயம் எதுவுமின்றி நம்பினாலும் நீங்கள் சொன்னது அப்படியே நடக்கும்."

"நீங்கள் நம்பிக்கையோடு ஜெபத்தின் மூலம் கேட்பவை எவையாயினும் அவற்றை எல்லாம் பெற்றுக்கொள்ளுவீர்கள். நீங்கள் மன்றாடிக் கேட்டுக்கொள்பவை எவையோ அவற்றை எல்லாம் பெற்றுவிட்டோம் என்று நம்புங்கள். அப்பொழுது நீங்கள் பெறுவீர்கள். நீங்கள் ஜெபம் செய்து கொண்டிருக்கும் போது, ஒருவனுக்கு விரோதமாக உங்களுக்கு இருக்கும் மனக்குறை எதுவாயினும் அவனை மன்னித்துவிடுங்கள். அப்பொழுது விண்ணுலகில் இருக்கிற உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார். நீங்கள் மன்னிக்காவிட்டால் விண்ணுலகில்

இருக்கிற உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்'' என்று சொன்னார்.

இயேசு திருக்கோவிலில் மக்களுக்குப் போதித்துக் கொண்டே அருட்செய்தியை அறிவிக்கையில் தலைமை ஆசாரியரும் மறைஅறிஞரும் மூப்பரோடு சேர்ந்து அவரிடம் வந்து “நீர் எந்த அதிகாரத்தைக் கொண்டு இவற்றைச் செய்கிறீர்? இவற்றைச் செய்ய உமக்கு அதிகாரம் கொடுத்தவர் யார்?'' என்று கேட்டனர்.

இயேசு அவர்களிடம், “நானும் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்கள் எனக்குப் பதில் சொல்லுங்கள். அப்பொழுது நானும் எந்த அதிகாரத்தைக் கொண்டு இவற்றைச் செய்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். திருமுழுக்கு கொடுக்கும் அதிகாரம் யோவானுக்கு கடவுளிடமிருந்து வந்ததா, மனிதரிடமிருந்து வந்ததா? இதற்குப் பதில் சொல்லுங்கள்,'' என்றார்.

அவர்கள் தங்களிடையே கலந்து பேசி, “கடவுளிடமிருந்து என்று சொன்னால் பின் ஏன் நீங்கள் அவரை நம்பவில்லை என்று கேட்பார். மனிதரிடமிருந்து என்று சொல்லுவோமா?'' எனப்பேசிக் கொண்டார்கள். ஆனால், யோவான் உண்மையிலேயே இறைவாக்குரைக்கும் ஒரு பெரியார் என்று மக்களெல்லாரும் கருதி வந்ததால் அவர்களுக்கு அஞ்சி, இயேசுவிடம், “எங்களுக்குத் தெரியாது'' என்று சொல்லிவிட்டார்கள்.

அப்பொழுது இயேசு, “நானும் எந்த அதிகாரத்தைக் கொண்டு இவற்றைச் செய்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லமாட்டேன்,'' என்றார்.

வரி செலுத்துவது பற்றி
(மத்.22:15-22; மா.12:13-17; லூக் 20:20-26)

இயேசுவை மாநிலத் தலைவன் கைக்குள்ளும், அவனது ஆட்சிக்குட்பட்டவற்றிலும் அகப்படுத்த எண்ணி, அவருடைய பேச்சில் ஏதாவது குற்றம் கண்டுபிடிப்பதற்கென்று உண்மையுள்ளவர்கள் போல நடிக்கக் கூடிய தங்கள் சீடரை ஏரோதியருடன் பரிசேயர்கள் அனுப்பினர். அவர்கள் இயேசுவிடம், “போதகரே, நீர் உண்மையுள்ளவர், தெய்வ மார்க்கத்தை உண்மையாகப் போதிக்கிறீர்; நீர் எவருக்கும் அஞ்சுவதில்லை; ஏனெனில், நீர் யாருக்கும் தனிச்சலுகை காட்டாதவர். இவை எல்லாம் எங்களுக்குத் தெரியும். ஆகவே உரோமப் பேரரசனுக்கு நாம் வரி செலுத்துவதைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீரென்று எங்களுக்குச் சொல்லும்; அது முறையா, இல்லையா?''என்று கேட்டார்கள்.

இயேசு அவர்களுடைய தீய நோக்கத்தை அறிந்து கொண்டு, "போலி பக்தர்களே, ஏன் என்னைப் பரிசோதிக்கிறீர்கள்? வரிக்கென்று பயன்படுத்தும் நாணயம் ஒன்றை எனக்குக் காட்டுங்கள்" என்றார். அவர்கள் ஒரு திநாரிய நாணயத்தை அவரிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள். அவர் அவர்களிடம், "இந்த உருவமும் பெயரும் யாருடையவை?" என்று கேட்க "உரோமப் பேரரசனுடையவை," என்றார்கள். அதற்கு அவர், "அப்படியானால் பேரரசனுக்குரியதைப் பேரரசனுக்கும், கடவுளுக்குரியதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்," என்றார். அதைக் கேட்டு அவர்கள் வியப்படைந்து அவரிடமிருந்து போய்விட்டார்கள்.

உயிர்த்தெழுதல் பற்றி

(மத் 22:23-33; மா.12:18-27 லூக். 20:27-40)

உயிர்த்தெழுதல் என்பது இல்லை என்று சாதிக்கும் சதுசேயருள் சிலர் அவரிடம் வந்து "போதகரே, ஒருவன் மனைவியோடு வாழ்ந்தும் பிள்ளையில்லாமல் இறந்து போனால் அவன் மனைவியை அவனுடைய சகோதரன் மணம் செய்து, தன் சகோதரனுக்கு மகப்பேறு உண்டாக்க வேண்டுமென்று மோசே எங்களுக்கு எழுதித் தந்திருக்கிறாரே. இவ்வாறிருக்க. சகோதரர் எழுவர் இருந்தனர். அவர்களுள் மூத்தவன் ஒரு பெண்ணை மணந்தான். ஆனால் பிள்ளை இல்லாமலே இறந்து போனான். பிறகு இரண்டாம் மூன்றாம் சகோதரர் அவளை மணந்தனர். அப்படியே ஏழு பேரும் அவளை மணந்து பிள்ளை இல்லாமலே இறந்து விட்டனர். கடைசியில் அந்தப் பெண்ணும் இறந்துவிட்டாள். அவர்கள் உயிர்த்தெழுந்தபின் அவள் அவர்களுள் யாருக்கு மனைவியாய் இருப்பாள்? ஏழு பேரும் முறையே அவளை மனைவியாகக் கொண்டிருந்தனரே," என்று கேட்டார்கள்.

இயேசு அவர்களிடம், "இம்மையின் மக்கள் பெண் கொண்டும் கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும், இறந்தோரிடமிருந்து உயிர்தெழுந்த நிலையையும் அடையத் தகுதியுள்ளவர்களாக எண்ணப்பட்டவர்கள் அங்கே சென்றபின் பெண் கொள்ளுவதுமில்லை, கொடுப்பதுமில்லை. ஏனெனில், இறப்பு என்பதே அங்கு இல்லை. அவர்கள் தெய்வ தூதரைப் போல் இருப்பார்கள். உயிர்த்தெழுதலின் மக்கள் என்பதால் அவர்கள் கடவுளின் மக்கள். இறந்தவர்கள் எழுப்பப்படுவார்கள் என்பதை மோசேயும் முட்செடியைப்பற்றிய நூற்பகுதியில் குறித்துக் காட்டியிருக்கிறார். எப்படியெனில், அவர் ஆண்டவரை, 'ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்' என்று குறிப்பிடுகிறார். அவர் இறந்தோரின் கடவுள் அல்ல, உயிருள்ளோரின் கடவுளே. ஏனென்றால், அவரைப்

பொருத்தமட்டில் எல்லாரும் உயிரோடு இருக்கிறார்கள்," என்றார். மறைஅறிஞருள் சிலர் அதைக் கேட்டபோது, "போதகரே நீர் நன்றாகச் சொல்லிவிட்டீர்" என்றனர்.

முதன்மையான திருக்கட்டளை (மத்: 22:34-40; மா.12:28-34)

'இயேசு சதுசேயர் வாயை அடங்கச் செய்தார்' என்று கேள்விப்பட்ட பரிசேயர்கள் ஒன்று சேர்ந்து அவரிடம் வந்தார்கள். அவர்களுள் நீதிச்சட்ட அறிஞனாயிருந்த ஒருவன் அவரைப் பரிசோதிக்கும் வகையில் அவரிடம் வந்து, "திருக்கட்டளைகள் எல்லாவற்றுள்ளும் முதன்மையானது எது?" என்று கேட்டான்.

இயேசு அவனிடம், "இஸ்ரவேலே கேள்; நம்முடைய கடவுளாகிய ஆண்டவர்தாம் ஆண்டவர். உன் கடவுளாகிய ஆண்டவரிடம் உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் முழு மனத்தோடும், உன் முழு ஆற்றலோடும் அன்பு கொள்ளுவாயாக என்பதே முதன்மையான திருக்கட்டளை. உன்னிடம் அன்பு கொள்ளுவது போல அடுத்தவனிடமும் அன்பு கொள்ளுவாயாக என்பது இரண்டாம் திருக்கட்டளை, இவற்றைவிட முக்கியமான திருக்கட்டளை வேறொன்றும் இல்லை. இவ்விரு திருக்கட்டளைகளிலும் நீதிச்சட்டம் முழுமையும், இறைவாக்குநரின் போதனையும் அடங்கியிருக்கின்றன," என்றார்.

அதைக் கேட்ட மறைஅறிஞன் "இது சரிதான் போதகரே, கடவுள் ஒருவரே. அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை" என்று நீர் சொன்னது உண்மையே. அவரிடம் முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும், முழு ஆற்றலோடும் அன்பு கொள்ளுவதும், தன்னிடம் அன்பு கொள்ளுவது போல அடுத்தவனிடமும் அன்பு கொள்ளுவதுமே, எரிக்கப்படும் எல்லாப் பலிகளையும், மற்றப் பலிகளையும் விட மேல்" என்றான்.

அவன் விவேகமாக விடை அளித்ததை இயேசு கண்டு அவனை நோக்கி, "நீ கடவுளின் அரசிற்குத் தொலைவில் இல்லை," என்றார்.

மேசியாவைப் பற்றி
(மத்.22:41-46; மா.12:35- 37; லூக். 41-44)

பரிசேயர் கூடியிருந்த அந்த வேளையில் இயேசு அவர்களைப் பார்த்து, "மேசியாவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய மைந்தர்?" என்று கேட்டார். "அவர் தாவீதின் மைந்தர்" என்றார்கள். அதற்கு அவர், "அப்படியானால், தாவீது ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டு, அவரை ஆண்டவர் என்று சொல்வது எப்படி ?

(கடவுளாகிய) ஆண்டவர் என் ஆண்டவரிடம்
நான் உம்முடைய பகைவரை
உமது காலடியின் கீழ்ப் போடுகிறேன்
அதுவரை நீர் என் வலப்பக்கத்தில் அமர்ந்திரும் என்றார்.

என்று கூறியிருக்கிறாரே. தாவீதே மேசியாவை ஆண்டவரென்று அழைத்திருக்கிறாரே. தாவீதே மேசியாவை ஆண்டவரென்று அழைத்திருக்கிறாரென்றால், அவர் தாவீதுக்கு மைந்தராய் இருப்பது எப்படி?" என்று கேட்டார்.

அவருக்கு மறுமொழியாக ஒருவனாலும் ஒரு வார்த்தை கூடச் சொல்ல இயலாமல் போயிற்று. அன்று முதல் ஒருவனும் அவரிடம் கேள்வி கேட்கத் துணியவில்லை.

கிரேக்கர் இயேசுவைக் காண விரும்புதல் (யோ 12: 20 - 26)

பண்டிகையின்போது தொழுவதற்காக வந்தவர்களுள் சிலர் கிரேக்கர். அவர்கள் கலிலேயா நாட்டு பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவிடம் வந்து, "ஐயா, இயேசுவைக் கண்டு பேச விரும்புகிறோம்" என்று சொன்னார்கள். அவர் அந்திரேயாவிடம் போய் அதைச் சொன்னார். பிறகு அந்திரேயாவும் பிலிப்பும் இயேசுவிடம் வந்து அதைத் தெரிவித்தார்கள். இயேசு அவர்களுக்கு மறுமொழியாக, "மனுமைந்தர் மாட்சிமை அடையும் நேரம் வந்து விட்டது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால், அது தனி மணியாகவே இருக்கும். அது மடிந்தாலோ மிகுந்த பலனைக் கொடுக்கும் என்று உறுதியாகச் சொல்லுகிறேன். தன் உயிரை நேசிப்பவன் அதை இழந்து விடுவான். இந்த உலகத்தில் இருக்கும்போது தன் உயிரை வெறுப்பவனோ அதை என்றுமுள்ள மெய்வாழ்வுக்கென்று காத்துக் கொள்ளுவான். ஒருவன் எனக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்றால் அவன் என்னைப் பின்பற்றி வரட்டும். அப்பொழுது நான் எங்கே இருக்கிறேனோ அங்கே எனக்குப் பணிவிடை செய்கிறவனும் இருப்பான். ஒருவன் எனக்குப் பணிவிடை செய்தால் அவனுக்கு விண்ணகத் தந்தை மேன்மை அருளுவார்," என்றார்.

இயேசு தம் மரணத்தைப் பற்றிக் கூறுதல் (யோ 12 : 27 -36)

"இப்பொழுது என் ஆன்மா கலங்குகிறது. நான் என்ன சொல்லுவேன்? தந்தையே, இந்த நேரத்திலிருந்து என்னைக் காத்தருளும் என்பேனோ? இல்லை, இதற்காகத்தானே நான் இந்த நேரத்திற்குள்ளாக வந்திருக்கிறேன். தந்தையே, உமது திருப்பெயரின் மாட்சிமை விளங்கும்படி செய்யும்" என்றார்.

அப்பொழுது "மாட்சிமை விளங்கும்படி செய்தேன். மீண்டும் விளங்கும்படி செய்வேன்," என்று வானத்திலிருந்து ஒரு வாக்கு பிறந்தது. அங்கே நின்று அதைக் கேட்ட மக்கள் "இடியொலி முழங்கிற்று" என்றார்கள். ஆனால் சிலர், "தெய்வ தூதன் ஒருவன் அவரோடு பேசினான்," என்றனர்.

இயேசுவோ, "இந்த வாக்கு என் பொருட்டன்று. உங்கள் பொருட்டே பிறந்தது. இப்பொழுதே இந்த உலகத்தின் மீது தீர்ப்புக் கூறப்படுகிறது. இப்பொழுதே இந்த உலகத்திற்கு அடுத்தவற்றின் தலைவன் புறம்பே தள்ளப்படப் போகிறான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்படும்போது எல்லாரையும் என்னிடம் ஈர்த்துக் கொள்ளுவேன்." தாம் இன்னவிதமாக மரணம் அடையப்போகிறார் என்பதைக் குறித்துக்காட்ட இப்படிச் சொன்னார்.

அதைக் கேட்ட மக்கள் அவரிடம், "மேசியா என்றென்றைக்கும் இருக்கிறார் என்று திருச்சட்டநூலில் கூறப்பட்டுள்ளதை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படியிருக்க, மனுமைந்தர் உயர்த்தப்பட வேண்டும் என்று நீர் எப்படிச் சொல்லலாம்? இந்த மனுமைந்தர் யார்?" என்று கேட்டார்கள்.

இயேசு அவர்களிடம், "இன்னும் சிறிது காலம் ஒளி உங்களோடு இருக்கும். இருளில் நீங்கள் அகப்பட்டுக் கொள்ளாதபடி, ஒளி உங்களோடு இருக்கும்போது ஒளியில் நடந்து கொண்டேயிருங்கள். இருளில் நடந்து செல்பவன் எவனுக்கும் தான் செல்லுவது எங்கே என்பது தெரியாது. நீங்கள் ஒளியின் மக்களாகும்படி ஒளி உங்களோடு இருக்கையில் ஒளியில் நம்பிக்கை வையுங்கள்" என்று சொன்னார். இப்படிச் சொன்ன பின் இயேசு அவர்களை விட்டகன்று மறைந்து கொண்டார்.

யூதர்களின் நம்பிக்கையின்மை (யோ 12 : 37 - 38)

தெய்வ ஆற்றலுக்கு அடையாளமாக அவர் இத்தனைச் செயல்களை அவர்கள் கண்காணச் செய்திருந்தும் யூதர்கள் அவரிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. இறைவாக்குநர் ஏசாயா,

"ஆண்டவரே, எங்கள் மூலமாக கேள்விப்பட்டதை எவன் நம்பினான்? ஆண்டவருடைய புயம் வெளிப்படுத்தப்பட்டது எவனுக்கு விளங்கிற்று?" என்று சொன்ன சொல் இவ்வாறு நிறைவேறிற்று. மேலும் இறைவாக்குநர் ஏசாயா,

"அவர்கள் தங்கள் கண்களால் காணாமலும்
உள்ளத்தால் உணராமலும்

நான் அவர்களைக் குணமாக்கும்படி
அவர்கள் மனமாற்றம் அடையாமலும் இருப்பதற்காக
அவர்கள் கண்களை அவர் குருடாக்கி,
அவர்கள் உள்ளத்தை மந்தமாக்கினார்"

என்று சொல்லியிருக்கிறவாறே அவர்களால் நம்பிக்கை கொள்ள இயலாமல் போயிற்று. ஏசாயா அவருடைய மாட்சிமையைக் கண்டிருந்ததால் இவ்வாறு சொன்னார். மேசியாவைக் குறித்தே இப்படிப் பேசினார்.

அப்படிப்பட்ட நிலையிலும் அதிகாரிகளுள் பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர். ஆனால் அவர்கள் பரிசேயருக்கு அஞ்சி அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாதிருந்தார்கள். அவர்கள் அப்படி ஒப்புக்கொண்டால் அவர்களுடைய சபையிலிருந்து விலக்கப்படுவார்கள். இவ்வாறு அவர்கள் கடவுளால் ஏற்றுக் கொள்ளப்படுவதைவிட மனிதரால் ஏற்றுக் கொள்ளப்படுவதையே மிகுதியாக விரும்பினார்கள்.

இயேசு சொன்ன வார்த்தையே தீர்ப்பளிக்கும் (யோ 12:44-50)

பிறகு இயேசு உரத்த குரலில், "என்னிடம் நம்பிக்கை கொள்பவன் என்னிடமன்று, என்னை அனுப்பினவரிடமே நம்பிக்கை கொள்ளுகிறான். என்னைக் காண்பவனும் என்னை அனுப்பினவரையே காண்கிறான். என்னிடம் நம்பிக்கை கொள்பவன் எவனும் இருளிலிருந்து என்றும் நீங்கியிருக்க வேண்டுமென்றே நான் ஒளியாய் இவ்வுலகத்திற்கு வந்திருக்கிறேன். ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டு அவற்றைக் கடைப்பிடித்து நடவாதிருந்தால், அவனுக்குத் தீர்ப்பளிப்பவன் நான் அல்ல. ஏனென்றால் நான் உலகத்துக்குக் குற்றத் தீர்ப்பு அளிப்பதற்காக வரவில்லை. உலகத்தை விடுவிப்பதற்காவே வந்தேன். என்னைப் புறக்கணித்து என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவன் குற்றவாளி என்று தீர்ப்புச் செய்ய ஒன்று இருக்கிறது. நான் உரைத்த வாக்கே அவன் குற்றவாளி என்று கடைசி நாளில் தீர்ப்புச் செய்யும். ஏனெனில் அதை நானாகவே உரைக்கவில்லை. என்னை அனுப்பின தந்தை நான் எதைச் சொல்ல வேண்டும், எதைப் போதிக்க வேண்டும் என்பதை எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவரது கட்டளையே என்றுமுள்ள மெய்வாழ்வு என்பது எனக்குத் தெரியும். ஆகையால், நான் சொல்லுகிறவை தந்தை என்னைச் சொல்லும்படி சொன்னவையே" என்று கூறினார்.

பரிசேயரின் போலி பக்தி
(மத் 23:1-36,மா12:38-40,லூக் 11 : 37 -52,20:45-47)

இயேசு தம்முடைய சீடரை நோக்கிக் மறைஅறிஞரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். அவர்கள் நீண்ட அங்கிகளை அணிந்து கொண்டு நடந்து திரியவும், சந்தை வெளிகளில் வணக்கம், தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகள், விருந்துகளில் முதன்மையான இடங்கள் இவற்றைப் பெறவும் விரும்புகிறார்கள்."

"மறைஅறிஞரும் பரிசேயரும் மோசேயின் பதவியில் வீற்றிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் உங்களுக்கு என்னென்ன சொல்லுகிறார்களோ அவற்றின் படி ஒழுங்காக நடந்து வாருங்கள். அவர்கள் நடத்தையையோ பின்பற்றாதீர்கள். ஏனென்றால், அவர்கள் சொல்லுவார்கள், ஆனால் அதன்படி நடப்பதில்லை."

"பளுவான சுமைகளைக் கட்டி மனிதர் தோள் மேல் வைக்கிறார்கள். ஆனால், அவற்றைச் சுமந்து செல்லக் கைகொடுத்து உதவமாட்டார்கள்."

"தங்கள் செய்கைகளையெல்லாம் மனிதர் காணவேண்டுமென்றே செய்கிறார்கள். நீண்ட அங்கிகளை அணிந்து கொண்டு தங்கள் நெற்றிப்பட்டங்களை அகலமாக்கி, ஆடையின் குஞ்சங்களைப் பெரிதாக்கி நடந்து திரிய விரும்புகிறார்கள்."

"விருந்துகளில் முதன்மையான இடங்களையும், தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும், சந்தைவெளிகளில் வணக்கத்தையும், 'ரபீ' என்று மனிதரால் அழைக்கப்படுவதையும் நாடுகிறார்கள். நீங்களோ மக்கள் உங்களை 'ரபீ' என்று அழைக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு குருவாயிருக்கிறவர் ஒருவரே. நீங்கள் எல்லாரும் சகோதரர்கள். மண்ணுலகில் ஒருவனையும் தந்தை என்று நீங்கள் அழைக்க வேண்டாம். உங்களுக்குத் தந்தை ஒருவரே. அவர் விண்ணுலகில் இருக்கிறார். மக்கள் உங்களைத் தலைவர்கள் என்று அழைக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள். மேசியா ஒருவரே உங்கள் தலைவர். உங்களிடையே பெரியவனாயிருப்பவன் உங்களுக்குப் பணியாளனாய் இருக்கட்டும். **தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான்.**

"போலி பக்தர்களாகிய மறை அறிஞரே, பரிசேயரே, உங்களுக்குக் கேடு வரும். விண்ணரசிற்குள் மனிதர்கள் செல்லாதபடி அவர்களுக்கு எதிரில் அதன் கதவைப் பூட்டிவிடுகிறீர்கள். நீங்களும் அதனுள் செல்லுவதில்லை; செல்ல முயலுகிறவர்களையும் செல்லவிடுவதில்லை."

"போலி பக்தர்களாகிய மறைஅறிஞரே, பரிசேயரே உங்களுக்குக் கேடு வரும். கைம்பெண்களின் சொத்துக்களைக் கைப்பற்றி நீங்கள் விழுங்கிவிடுகிறீர்கள். அதே சமயத்தில் வெளிப்பார்வைக்கு கடவுளிடம் நீண்ட நேரம் வேண்டுதலும் செய்கிறீர்கள்.இதன் பொருட்டு நீங்கள் கடுமையான தண்டனை பெறுவீர்கள்."

"போலி பக்தர்களாகிய மறை அறிஞரே, பரிசேயரே, உங்களுக்குக் கேடு வரும். ஒருவனை உங்கள் மார்க்கத்தில் சேர்க்கும்படி தரையையும் தண்ணீரையும் கடந்து செல்லுகிறீர்கள். அவன் வந்து சேரும்போது, அவனை உங்களைவிட இரண்டு மடங்கு நரகத்துக்குத் தகுதியுள்ளவனாக்கி விடுகிறீர்கள்."

"குருட்டு வழிகாட்டிகளே, உங்களுக்கு கேடு வரும். எவனாவது திருக்கோவிலின் மேல் ஆணையிட்டால், அதனால் ஒன்றுமில்லை என்றும், ஆனால் எவனாவது திருக்கோவிலின் பொன்னின்மேல் ஆணையிட்டால், அவன் அதற்குக் கட்டுப்பட்டவன் என்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே, எது பெரிது? பொன்னா அல்லது பொன்னைப் புனிதமாக்கும் திருக்கோவிலா? மேலும் எவனாவது பலிபீடத்தின் மேல் ஆணையிட்டால், அதனால் ஒன்றுமில்லை என்றும், ஆனால் எவனாவது அதன் மேலுள்ள காணிக்கையின் மேல் ஆணையிட்டால் அவன் அதற்குக் கட்டுப்பட்டவன் என்றும் சொல்லுகிறீர்கள். குருடரே, எது பெரிது? காணிக்கையா அல்லது காணிக்கையைப் புனிதமாக்கும் பலிபீடமா? பலிபீடத்தின் மேல் ஆணையிடுகிறவன், அதன் மேலும், அதன் மீதுள்ள எல்லாவற்றின் மேலும் ஆணையிடுகிறான். திருக்கோவிலின் மேல் ஆணையிடுகிறவன், அதன் மேலும், அதில் குடிகொண்டிருப்பவர் மேலும் ஆணையிடுகிறான். வானத்தில் மேல் ஆணையிடுகிறவன் கடவுளின் அரியணை மேலும், அதில் வீற்றிருக்கிறவர் மேலும் ஆணையிடுகிறான்."

இயேசு உணவு அருந்துவதற்கு முன் தம்மைச் சுத்திகரித்துக் கொள்ளாததைப் பரிசேயன் கண்டு வியப்படைந்தான்.

"போலி பக்தர்களாகிய மறை அறிஞரே, பரிசேயரே உங்களுக்கு கேடு வரும். நீங்கள் உணவுப் பாத்திரங்களின் வெளிப்புறத்தைத் துப்புரவாக்குகிறீர்கள். உங்கள் உட்புறமோ பேராசையினாலும் பொல்லாங்கினாலும், கொள்ளையாலும், தீய இச்சையாலும் நிறைந்திருக்கிறது. குருட்டுப் பரிசேயனே, மதிகேடனே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையா? முதலில் பாத்திரத்தின் உட்புறத்தைத் துப்புரவாக்கு. அப்பொழுது யாவும் உங்களுக்கு துப்புரவாயிருக்கும்."

“போலி பக்தர்களாகிய மறை அறிஞரே, பரிசேயரே உங்களுக்குக்கேடு வரும். நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவை புறம்பே அழகாய்க் காணப்படுகின்றன. அவற்றின் உள்ளேயோ இறந்தவர்களின் எலும்புகளும் எல்லா வகையான அசுத்தமும் நிறைந்திருக்கும். அவ்வாறே, நீங்கள் புறம்பே நேர்மையானவர்கள் போல மனிதருக்கு காணப்படுகிறீர்கள். ஆனால் உள்ளேயோ போலித்தனத்தாலும் அக்கிரமத்தாலும் நிறைந்திருக்கிறீர்கள்.”

போலி பக்தர்களாகிய மறை அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு கேடு வரும். நீங்கள் மருக்கொழுந்து, பூண்டு, புதினா, வெந்தயம், சீரகம் ஆகியவற்றுள் பத்தில் ஒரு பாகத்தைச் செலுத்துகிறீர்கள். ஆனால், நீதிச்சட்டத்தில் முக்கியம் பெற்றிருக்கும் அன்பு, நியாயம், இரக்கம், கடவுளைப்பற்றிய நம்பிக்கை ஆகியவற்றைக் கைக்கொள்ளாமல் விட்டுவிட்டீர்கள். அவற்றைச் செலுத்துவதை விட்டுவிடாமலே, இவற்றை நீங்கள் கைக்கொண்டு வந்திருக்க வேண்டும். குருட்டு வழிகாட்டிகளே, நீங்கள் கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறீர்கள்.”

“போலி பக்தர்களாகிய மறை அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு கேடு வரும். நீங்கள் இறைவாக்குநரின் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள். நேர்மையானவர்களின் கல்லறைகளை அலங்கரிக்கிறீர்கள். எங்கள் மூதாதையர் காலத்தில் நாங்கள் இருந்திருந்தால், இறைவாக்குநரின் இரத்தத்தை அவர்கள் சிந்திய பழிக்கு நாங்கள் உடந்தையாக இருந்திருக்கமாட்டோம் என்கிறீர்கள். இப்படிச் சொல்லுவதால் நீங்கள் இறைவாக்குநர்களைக் கொன்றவர்களின் மைந்தரென்பதற்கு நீங்களே சாட்சிகளாகிறீர்கள். ஆகவே, உங்கள் மூதாதையர் தொடங்கின செயலை நீங்கள் செய்து முடித்துவிடுங்கள்.”

“பாம்புகளே, விரியன் குட்டிகளே, உங்களால் நரகத் தண்டனைக்கு எப்படித் தப்ப முடியும்? ஆகையால், நான் இப்பொழுது இறைவாக்குநர்களையும், ஞானிகளையும், மறைஅறிஞரையும் உங்களிடம் அனுப்பப் போகிறேன். அவர்களுள் சிலரைக் கொல்லுவீர்கள். சிலுவையிலும் அறைவீர்கள். சிலரை உங்கள் தொழுகைக் கூடங்களில் வாரினால் அடிப்பீர்கள், ஊர் ஊராய்த் துரத்தி துன்புறுத்தவும் செய்வீர்கள். நீங்கள் இப்படிச் செய்வதினால், நீதிமான் ஆபேலுடைய இரத்தம் முதல் திருக்கோவிலுக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொன்ற பரகியாவின் மகனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியில் சிந்தப்பட்ட எல்லா நீதிமான்களின் இரத்தத்திற்கும் உங்களிடம் பழிவாங்கப்படும். அந்தத் தண்டனைகளெல்லாம் இந்தத் தலைமுறை மீதே சுமரும்.”

"நீங்கள் மறைந்திருக்கிற பிணக்குழிகளைப்போல இருக்கிறீர்கள். இதை அறியாமல் மனிதர் அவற்றின் மீது நடக்கிறார்கள்'' என்றார். அதைக் கேட்ட நீதிச்சட்ட அறிஞன் ஒருவன் அவரிடம், "போதகரே, இவ்வாறு சொல்லுவதனால் எங்களையும் நீர் அவமானப்படுத்துகிறீரே'' என்றான்.

ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கை
(மா. 12 : 41 -44, லூக் 21: 1- 4)

பிறகு இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிரே உட்கார்ந்து காணிக்கைப் பெட்டியில் மக்கள் எவ்வகையில் பணம் போடுகிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தார். மிகுந்த செல்வமுடையவர் பலர் மிகுதியாகப் போட்டனர். ஓர் ஏழைக் கைம்பெண்ணும் அங்கே வந்து இரண்டு காசைப் போட்டாள். அப்பொழுது அவர் தம் சீடரை அழைத்து "ஓர் உண்மையை உங்களுக்குச் சொல்லுகிறேன். காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட எல்லாரையும் விட இந்த ஏழைக் கைம்பெண்ணே மிகுதியாகப் போட்டிருக்கிறாள். எப்படியெனில், அவர்கள் எல்லாரும் தங்கள் செல்வப் பெருக்கிலிருந்து எடுத்துப் போட்டனர். ஆனால் இவளோ, தன் வறுமையிலிருந்து தன்னிடமிருந்த யாவற்றையும், தன் பிழைப்புக்கென்று வைத்திருந்த எல்லாவற்றையுமே எடுத்துப் போட்டுவிட்டாள்'' என்றார்.

திருக்கோவிலின் அழிவைப் பற்றிய முன்னறிவிப்பு
(மத் 21 : 1-2,மா. 13: 1-2, லூக் 21 : 5-6)

இயேசு திருக்கோவிலை விட்டுப் புறப்பட்டுப் போகையில். அவருடைய சீடர்கள் திருக்கோவிலைச் சேர்ந்த கட்டடங்களை அவருக்குக் காட்டுவதற்காக அவரிடம் வந்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து "இவற்றையெல்லாம் பார்க்கிறீர்களே. இவ்விடத்தில் கல்லின் மேல் கல் இராதபடி எல்லாம் இடிக்கப்படப் போகின்றன என்று உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன் என்று சொன்னார்.

துன்பங்களின் தொடக்கம்
(மத். 24 : 3 - 14, மா. 13: 3 - 13,லூக் 21: 7 - 19)

இயேசு திருக்கோவிலுக்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள ஒலிவ மலையில் உட்கார்ந்திருக்கையில் பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா என்பவர்கள் அவர்களிடம் வந்து, "இவை எப்போது நடக்கும்? இவை எல்லாம் நிறைவேறித் தீரும் காலத்திற்கான அறிகுறி என்ன? எங்களுக்குச் சொல்லும்'' என்றார்கள்.

இயேசு, "அவர்களிடம் ஒருவனும் உங்களை ஏமாற்றிவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். என் பெயரை வைத்துக் கொண்டு 'நானே மேசியா' என்று சொல்லும் பலர் தோன்றி பலரை ஏமாற்றுவர்.''

போர் முழக்கத்தையும், போர்ச் செய்திகளையும் கேட்கும்போது கலங்காதீர்கள். இவை நடக்கத்தான் வேண்டும். ஆனால் அப்போதும்கூட முடிவு வந்துவிடாது. நாட்டை எதிர்த்து நாடும், அரசை எதிர்த்து அரசும் எழும். இங்கும் அங்கும் நில நடுக்கங்கள் ஏற்படும். பஞ்சம் உண்டாகும். கோரக்காட்சிகளும் வானத்தில் பெரிய கெடு குறிகளும் தோன்றும். இவை துன்பங்களின் தொடக்கமே. ஆனால் நீங்கள் விழிப்பாய் இருங்கள்.

இவை எல்லாம் நடப்பதற்கு முன்பு உங்களை வழக்கு மன்றங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள். தொழுகைக்கூடங்களில் நீங்கள் அடிக்கப்படுவீர்கள். என் பொருட்டு ஆளுநர் முன்னும் அரசர் முன்னும் நிறுத்தப்பட்டு துன்புறுத்தப்படுவீர். இதுவே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பதற்கு ஏற்ற சமயமாக அமையும். அவர்கள் முன் என்னைப்பற்றி சாட்சி கூறுவீர்கள். அவர்கள் உங்களைக் கொண்டுபோய் விசாரணைக்கு ஒப்புக்கொடுக்கும்போது என்ன சொல்லுவது என்று நீங்கள் முன்னதாகவே கவலைப்படவேண்டாம். நீங்கள் உங்கள் மனத்தில் உங்கள் எதிர்வாத வழக்கை முன்பே உருவாக்கிக் கொள்ளக்கூடாது. அந்த நேரத்தில் உங்களுக்கு எது அருளப்படுமோ, அதையே சொல்லுங்கள். நானே உங்களுக்கு நாவன்மையையும் ஞானத்தையும் கொடுப்பேன், உங்களை எதிர்ப்பவர் எவராலும் அவற்றை எதிர்க்கவோ, மறுக்கவோ இயலாது. ஏனெனில், பேசுகிறவர் நீங்களல்ல, தூய ஆவியானவரே.

உங்கள் பெற்றோரும், சகோதரரும் உறவினரும் நண்பரும் உங்களைக் காட்டிக் கொடுப்பார்கள். சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத் தீர்ப்புக்கு ஒப்புக்கொடுப்பார்கள். பெற்றோரை எதிர்த்துப் பிள்ளைகள் எழுந்து அவர்களைக் கொன்றுவிடும்படி செய்வார்கள். என் பெயரின் பொருட்டு நீங்கள் எல்லாருடைய பகைக்கும் ஆளாவீர்கள். ஆயினும் உங்கள் தலையில் உள்ள ஒரு முடி கூட அழிந்து போகாது. நீங்கள் இறுதிவரை உறுதியாய் நிற்பதன் மூலம் உங்கள் ஆன்மா காக்கப்பெறும்.

அப்பொழுது பலர் கடவுளைப் பற்றிய நம்பிக்கையில் தடுமாற்றம் அடைந்து ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுப்பார்கள். பொய்யாக இறைவாக்குரைப்போர் பலர் எழுந்து, ஏராளமான பேரை ஏமாற்றுவார்கள். அக்கிரமம் மிகுதியாவதால் பலருடைய அன்பு தணிந்து போகும். அருளாட்சியைப் பற்றிய இந்த நற்செய்தி உலகம் எங்குமுள்ள எல்லா நாட்டினருக்கும் இறைச் சான்றாக அறிவிக்கப்படும். அதன் பின் முடிவு வரும்.

பேரழிவு (மத்: 24: 15-28, மா.13:14-18,லூக் 21: 20-24)

எருசேலம் நகரம் படைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது அதன் அழிவு நெருங்கி விட்டது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். மேலும், இறைவாக்குநர் தானியேல் மூலமாக

உரைக்கப்பட்ட, பாழாக்கும் அருவருப்பான பொருள் புனிதமான இடத்தில் நிற்பதைக் காணும்போது யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகட்டும். எருசலேம் நகரத்தில் உள்ளவர்கள் வெளியேறிவிடட்டும். நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள் நகருக்குள் வராதிருக்கட்டும். வீட்டின் மேல்தளத்தில் இருப்பவன் தன் வீட்டிற்குள் இருப்பவற்றை எடுப்பதற்காக இறங்கிப் போகவேண்டாம். வயலில் இருப்பவன் தன் மேலாடையை எடுப்பதற்காகத் திரும்பிச் செல்லவேண்டாம்.

அந்நாட்களில் கருத்தரித்திருப்பவர்கள், பால் கொடுக்கிறவர்கள் ஆகியோருடைய நிலை ஐயோ, பரிதாபம். நீங்கள் ஓடிப்போவது மாரிக்காலத்திலாவது, ஓய்வு நாளிலாவது நேரிடாதிருக்கும்படி கடவுளிடம் மன்றாடுங்கள். ஏனெனில், அந்த நாட்கள் மிகுந்த துன்பம் நிறைந்த நாட்களாயிருக்கும். மக்கள் மீது கடவுளின் சினமும் வரும். அவர்கள் கூர்மையான வாளால் வீழ்த்தப்படுவார்கள். எல்லா நாடுகளுக்கும் கைதிகளாகக் கொண்டு போகப்படுவார்கள். யூதரல்லாதாருக்கான காலம் முடிவுறும் வரையிலும் எருசலேம் அவர்களால் மிதியுண்டதாய்க் கிடக்கும்.அப்படிப்பட்ட துன்பம் கடவுள் உலகைப் படைத்தது முதல் இது வரையிலும் இருந்ததில்லை. இனிமேல் இருக்கப்போவதுமில்லை. ஆண்டவர் அந்த நாட்களைக் குறைக்காவிடில் எந்த மனிதனும் பிழைத்திருக்கமாட்டான். ஆனால் அவர் தாம் தேர்ந்து கொண்டவர்களின் பொருட்டு அந்த நாட்களைக் குறைத்திருக்கிறார்.

அப்பொழுது எவனாவது ஒருவன் உங்களிடம், "இதோ, மேசியா இங்கே இருக்கிறார் அல்லது அங்கே இருக்கிறார்" என்று சொன்னால் நம்பாதீர்கள். ஏனெனில் போலியான மேசியாக்களும் பொய்யாக இறைவாக்குரைப்போரும் எழுந்து, கடவுளால் தேர்ந்து கொள்ளப் பட்டவர்களை ஏமாற்ற, அரிய பெரிய செயல்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். இதை உங்களுக்கு முன்னதாகவே சொல்லிவிட்டேன். ஆகையால், அதோ வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொன்னால் புறப்பட்டுப் போகாதீர்கள். இதோ உள்ளறையில் இருக்கிறார் என்றால் நம்பாதீர்கள். ஏனெனில் மனுமைந்தருடைய வருகை மின்னல் கிழக்கில் தோன்றி மேற்குவரைக்கும் மின்னுவது போல இருக்கும். பிணம் எங்கே இருக்குமோ அங்கே கழுகுகள் வந்து கூடும்.

மனுமைந்தரின் வருகை
(மத் ,24:29-31, மா.13: 24-27, லூக் 21: 25-28)

"அந்த நாட்களின் துன்பம் முடிந்தவுடனே .கதிரவன் இருண்டு விடும்.நிலா ஒளி வீசாது; விண்மீன்கள் வானத்தினின்று விழும். வானத்தின் ஆற்றல்கள் அசைக்கப்படும். கடலும் அலைகளும் முழங்கும். அப்பொழுது

மனுமைந்தரைக் குறிக்கும் ஓர் அடையாளம் வானத்தில் தோன்றும். உலகிலுள்ள எல்லா நாட்டு மக்களும் மன வேதனை அடைந்து புலம்பி அழுவார்கள். மனுமைந்தர் வல்லமையோடும் மாபெரும் மாட்சிமையோடும் வானத்தின் மேகங்கள் மீது வருகிறதைக் காண்பார்கள். பெரிய எக்காள முழக்கத்தோடு அவர் தம்முடைய தூதரை அனுப்புவார். அவர்கள் வானத்தின் ஒரு விளிம்பிலிருந்து மறு விளிம்புவரைக்கும் நான்கு திசைகளிலும் இருந்து அவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள். இவை நடைபெறத் தொடங்கும்போது நீங்கள் நிமிர்ந்து தலைதூக்கி நில்லுங்கள்.''

அத்திமரத்தின் படிப்பினை
(மத்; 24:32-35, மா.13: 28-31,லூக் 21: 29-33)

''அத்தி மரத்தையும் மற்றுமுள்ள எல்லா மரங்களையும் பாருங்கள். அவை தளிர்விட்டதும் கோடைக்காலம் நெருங்கிவிட்டது என்று நீங்களாகவே அறிந்து கொள்ளுகிறீர்கள். அவ்வாறு இந்நிகழ்ச்சிகள் நடைபெறுவதை நீங்கள் காணும்போது கடவுளின் அரசு நெருங்கிவிட்டது என்று அறிந்து கொள்ளுங்கள்.எல்லாம் நடைபெறும் வரையிலும் இத்தலைமுறை ஒழிந்து போவதே இல்லை என்று உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும். என் வார்த்தைகளோ ஒருபோதும் ஒழிவதில்லை.''

விழிப்பாயிருங்கள்
(மத். 24:36 -44, மா. 13: 32-37, லூக் 21:34-38)

"அந்த நாளையும் அந்த நேரத்தையும் விண்ணகத் தந்தை தவிர வேறு எவரும் அறியார். விண்ணுலகிலுள்ள தூதரும் அறியார், மனுமைந்தரும் அறியார். அந்த நாள் திடீரென்று கண்ணியைப் போல உங்களைச் சூழ்ந்து கொள்ளும். அது உலகெங்கும் வாழும் அனைவருக்கும் வந்தே தீரும்.''

''நோவாவின் காலத்தில் எப்படி இருந்ததோ, அப்படியே மனுமைந்தர் வருகையும் இருக்கும். பெருவெள்ளத்துக்கு முற்பட்ட காலத்தில் நோவா பேழைக்குள் சென்ற நாள் வரையிலும், மக்கள் உண்டும் குடித்தும் பெண் கொண்டும் பெண் கொடுத்தும் வந்தார்கள். பெருவெள்ளம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு செல்லும்வரை அதைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாதிருந்தது. அவ்வாறே, மனுமைந்தர் வருகை சமயத்தில் நடக்கும்.''

''வயலில் இரண்டு பேர் இருப்பார்கள். ஒருவன் உயரே எடுத்துக்கொள்ளப்படுவான். மற்றவன் அங்கேயே விட்டுவிடப்படுவான். இரண்டு பெண்கள் ஏந்திரக் கல்லில் அரைத்துக் கொண்டிருப்பார்கள். ஒரு

பெண் உயரே எடுத்துக் கொள்ளப்படுவாள். மற்றவளோ விட்டுவிடப்படுவாள். திருடன் எந்தச் சாமத்தில் வருவானென்பது வீட்டுத் தலைவனுக்குத் தெரிந்தால் அவன் விழித்திருப்பான். தன் வீட்டைக் கன்னமிட இடங்கொடுக்கமாட்டான்."

"அந்த நேரம் எப்பொழுது வரும் என்பது உங்களுக்குத் தெரியாது. இது ஒருவன் தன் வீட்டை விட்டுப் புறப்பட்டு வெளி நாட்டுக்குச் செல்லும்போது, தன் ஊழியருக்கு அதிகாரம் கொடுத்து ஒவ்வொருவனுக்கும் அவனவன் வேலையையும் குறிப்பிட்டு, காவல்காரனை விழிப்பாயிருக்கும்படி கட்டளையிடுவது போல இருக்கிறது. வீட்டுத் தலைவன் எப்போது வருவாரென்பது உங்களுக்குத் தெரியாது. அது மாலையோ, நள்ளிரவோ, சேவல் கூவும் நேரமோ, காலையோ என்பது உங்களுக்குத் தெரியாது. அவர் திடீரென்று வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாய் நேரில் காணாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்."

"அந்நாளில் இயேசு பகற்காலத்தில் திருக்கோவிலில் போதிப்பார். இரவுக்காலத்தில் வெளியே போய், ஒலிவ மலையில் தங்குவார். எல்லா மக்களும் அவர் சொல்லுவதைக் கேட்க திருக்கோவிலில் வந்துகூடுவார்கள்."

"ஆகையால், இனிமேல் நடக்கப்போகும் இவற்றிற்கெல்லாம் நீங்கள் தப்புவதற்கும், மனுமைந்தர் முன்னிலையில் நிற்பதற்கும் ஆற்றல் பெறும்படி கடவுளிடம் வேண்டுதல் செய்து எல்லா நேரத்திலும் விழிப்பாயிருங்கள். சிற்றின்பம், குடிவெறி, இம்மைக்குரிய கவலைகள் ஆகியவற்றால் உங்கள் உள்ளம் ஒருபோதும் மந்தமாகப் போகாதபடி நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள்."

எல்லா நாட்டினருக்கும் வரும் தீர்ப்பு (மத் 25 : 31-46)

தெய்வதூதர் புடை சூழ, மனுமைந்தர் தமது மாட்சிமை விளங்க வரும்போது, தமது மாட்சிமை பொருந்திய அரியணையில் வீற்றிருப்பார். அப்பொழுது அவருடைய முன்னிலையில் எல்லா நாட்டு மக்களும் ஒன்று சேர்க்கப்படுவார்கள். ஆட்டிடையன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிப்பது போல, அவர்களை அவர் பிரித்து, செம்மறி ஆடுகளைத் தம் வலப்பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தம் இடப்பக்கத்திலும் நிறுத்துவார்.

பிறகு, அரசர் தம் வலப்பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, "வாருங்கள், என் தந்தையின் ஆசி பெற்றவர்களே, உலகத் தோற்றமுதல் உங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அரசை உங்களுக்கு உரியதாக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில், பசியுள்ளவனாயிருந்தபோது எனக்கு உணவு கொடுத்தீர்கள்; தாகமுள்ளவனாயிருந்தபோது என் தாகத்தைத் தீர்த்தீர்கள்;

அந்நியனாயிருந்தபோது, என்னை ஏற்றுக் கொண்டீர்கள். ஆடையில்லாமல் இருந்தபோது எனக்கு ஆடை கொடுத்தீர்கள்; நோயுற்றிருந்த போது என்னைக் கவனித்துக் கொள்ள வந்தீர்கள்; சிறையிலிருந்தபோது என்னைப் பார்க்க வந்தீர்கள்'' என்பார். அப்பொழுது அந்தச் சான்றோர்கள், "ஆண்டவரே, உம்மை நாங்கள் எப்பொழுது பசியுள்ளவராகக் கண்டு உணவு கொடுத்தோம்? எப்பொழுது தாகமுள்ளவராகக் கண்டு தாகம் தீர்த்தோம்? உம்மை எப்பொழுது அந்நியராகக்கண்டு ஏற்றுக் கொண்டோம்? எப்பொழுது ஆடையில்லாதவராகக் கண்டு ஆடை கொடுத்தோம்? உம்மை எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையிலிருக்கிறவராகக் கண்டு உம்மைப் பார்க்க வந்தோம்?'' என்று கேட்பார்கள். அதற்கு அரசர் "இந்த மிகச் சிறியரான என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் செய்தது எதுவோ அதை எனக்கே செய்தீர்கள்`` என்று உறுதியாகச் சொல்லுகிறேன்" என்பார்.

பிறகு, இடப்பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, "சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டகன்று, பிசாசுக்கும் அவனுடைய தூதருக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள அணையா நெருப்புக்குள் விழுங்கள். ஏனெனில், பசியுள்ளவனாயிருந்தபோது நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை; தாகமுள்ளவனாயிருந்தபோது, என் தாகத்தைத் தீர்க்கவில்லை: அந்நியனாக இருந்தபோது நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆடையில்லாமல் இருந்தபோது நீங்கள் எனக்கு ஆடை கொடுக்கவில்லை. நோயுற்றிருந்தபோதும் சிறையிலிருந்த போதும் நீங்கள் என்னைக் கவனித்துக் கொள்ள வரவில்லை,''என்பார். அதற்கு அவர்கள் "ஆண்டவரே, நாங்கள் உம்மை எப்பொழுது பசியுள்ளவராகவோ, தாகமுள்ளவராகவோ, அந்நியராகவோ, ஆடை இல்லாதவராகவோ, நோயுற்றவராகவோ, சிறையில் அடைக்கப்பட்ட வராகவோ கண்டு உமக்குப் பணிவிடை செய்யாதிருந்தோம்?'' என்று கேட்பார்கள். அப்பொழுது அவர், மிகச் சிறியராகிய இவர்களுள் ஒருவனுக்கு நீங்கள் செய்யாதிருந்தது எதுவோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள், என்பார். எனவே இவர்கள் என்றுமுள்ள தண்டனையைப் பெறச் செல்வார்கள். சான்றோர்களோ என்றுமுள்ள மெய்வாழ்வை அடையச் செல்வார்கள்'' என்றார்.

இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாசு உடன்படுதல்
(மத். 26:14-16, மா.14:10-11,லூக் 22:3-6)

தலைமை ஆசாரியர்களும் மறை அறிஞரும் இயேசுவை எப்படிக் கொல்லுவதென்று வழி தேடிக் கொண்டிருந்தார்கள். மக்களைப் பற்றிய அச்சம் அவர்களுக்கு இருந்தது.

பன்னிருவருள் ஒருவனாகிய யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான். யூதாசு புறப்பட்டுப் போய், தான் எப்படிக் காட்டிக் கொடுப்பதென்று தலைமை

ஆசாரியர்களோடும் காவற்படைத் தலைவரோடும் கலந்து பேசினான். அவர்கள் மனமகிழ்ந்து அவர்களுக்குப் பணம் கொடுப்பதென்று அவனோடு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதற்கு அவன் உடன்பட்டு, மக்கள் கூட்டமில்லாத வேளையில் அவரை அவர்களுக்குக் காட்டிக் கொடுப்பதற்கெனச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

பஸ்காவை ஆயத்தம் செய்தல்
(மத். 26:17-25, மா. 14 : 12-21, லூக் 22: 7-13)

புளிப்பில்லாத அப்பப் பண்டிகையில் பஸ்காவுக்குரிய ஆடு பலியிடப்பட வேண்டிய நாளில் இயேசு பேதுருவையும் யோவானையும் அழைத்து "நீங்கள் போய் நமக்காக பஸ்கா விருந்தை ஆயத்தம் செய்யுங்கள்" என்று சொன்னார்.

அவர்கள் "நாங்கள் எங்கே ஆயத்தம் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்?" எனக் கேட்டார்கள்.

அதற்கு அவர், "இதோ, இந்த நகரத்திற்குள் நீங்கள் சென்றதும் ஒருவன் தண்ணீர்க்குடம் சுமந்து கொண்டு உங்களுக்கு எதிரே வருவான். அவனுக்குப் பின்னால் போய் அவன் செல்லும் வீட்டிற்கு நீங்களும் சென்று அந்த வீட்டுத் தலைவனிடம், "என் நேரம் நெருங்கிவிட்டது. என் சீடரோடு நான் பஸ்கா விருந்தை உண்பதற்கான அறை எங்கே இருக்கிறது" என்று போதகர் உம்மிடம் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள்.அவன் மேல் மாடியில் பெரிய அறை ஒன்றை உங்களுக்குக் காட்டுவான். அதில் கம்பளம் முதலியன விரித்திருக்கும். அங்கே நீங்கள் விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்றார்.

அவர்கள் போய் அவர் தங்களுக்குச் சொன்னபடியே யாவும் இருக்கக் கண்டு பஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள்.

பஸ்காவும் திருவிருந்தும்
(மத் 26: 26-30,மா.14:17-26,லூக் 22:14-23, யோ. 13:1-30)

குறித்த நேரம் வந்த போது இயேசு பந்தியில் அமர்ந்தார். திருத்தூதுவரும் அவரோடு அமர்ந்தனர். அப்பொழுது அவர் அவர்களிடம், "நான் பாடுகள் அடையுமுன்னே உங்களோடு இந்தப் பஸ்கா விருந்தை உட்கொள்ள மிக மிக ஆவலோடு இருந்தேன். கடவுளின் அரசில் இது நிறைவேறுமட்டும் நான் இனி இதை உட்கொள்ளுவதே இல்லை. அவர் பாத்திரத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களிடம், "நீங்கள் இதை வாங்கி உங்களிடையே பங்கிட்டுக் கொள்ளுங்கள். கடவுளின் அரசு வருமட்டும் இனி நான் திராட்சைப் பழரசத்தை அருந்துவதில்லை" என்றார்.

சீடரின் பாதங்களைக் கழுவுதல்

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, இயேசு, தந்தை எல்லாவற்றையும் தம் கையில் ஒப்புவித்திருப்பதையும், தாம் கடவுளிடமிருந்து வந்து கடவுளிடமே திரும்பிச் செல்லுவதையும் அறிந்திருந்ததால், பந்தியை விட்டு எழுந்து மேலாடையைக் கழற்றி வைத்து விட்டு ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு, ஒரு கலத்தில் தண்ணீரை ஊற்றி, சீடருடைய பாதங்களைக் கழுவி, தாம் இடுப்பில் கட்டியிருந்த துண்டினால் துடைத்துக் கொண்டு வந்தார்.

சீமோன் பேதுரு : ஆண்டவரே என் பாதங்களை நீர் கழுவலாமா?

இயேசு : நான் செய்வது இன்னதென்பது உனக்கு இப்பொழுது தெரியாது. இனிமேல் புரிந்து கொள்ளுவாய்

பேதுரு : நீர் ஒருபோதும் என் பாதங்களைக் கழுவக் கூடாது இயேசு: நான் உன்னைக் கழுவாவிட்டால், நீ என்னுடையவற்றில் பங்கு கொள்ள இயலாது.

சீமோன்பேதுரு : அப்படியானால் ஆண்டவரே, என் பாதங்களை மட்டுமின்றி என் கைகளையும் என் தலையையும் கூடக் கழுவவேண்டும்.

இயேசு : குளித்தவன் தன் பாதங்களை மட்டும் கழுவினால் போதும். மற்றப்படி அவன் முழுவதும் தூய்மையாய் இருக்கிறான். நீங்கள் தூய்மையாய் இருக்கிறீர்கள். ஆனால் எல்லாரும் தூய்மையாய் இல்லை தம்மைக் காட்டிக் கொடுப்பவன் யாரென்று அவருக்குத் தெரிந்திருந்ததால் அவர்கள் எல்லாரும் தூய்மையாய் இல்லை.

திருவிருந்தை ஏற்படுத்துதல்

சீடர்களுடைய பாதங்களைக் கழுவின பின்பு, அவர் தம்முடைய மேலாடையை அணிந்து கொண்டு மீண்டும் பந்தியில் அமர்ந்தார். அவர்கள் சாப்பிடுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, துதி செலுத்தி, அதைப்பிட்டு சீடருக்குக் கொடுத்து, "இதை வாங்கி உட்கொள்ளுங்கள் இது என் உடல்" என்றார். பிறகு பாத்திரத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி, அவர்களுக்குக் கொடுத்து, "இதிலுள்ளதை எல்லாரும் அருந்துங்கள். ஏனெனில் இது புது உடன்படிக்கைக்குரிய என் இரத்தம். இது பாவமன்னிப்புக்கென்று எல்லாருக்காகவும் சிந்தப்படுகிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்," என்றார்.

"நீங்கள் என்னைப் போதகர் என்றும், ஆண்டவர் என்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுவது சரியே. நான் போதகர்தான், ஆண்டவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் பாதங்களைக் கழுவியிருப்பதால், நீங்கள் ஒருவருடைய பாதங்களை ஒருவர் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியாகச் செய்து காட்டினேன். வேலைக்காரன் தன் தலைவனை விடப் பெரியவன் அல்ல. தூதுவனாக அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரைவிடப் பெரியவன் அல்ல. இவை உங்களுக்குத் தெரிந்து இருப்பதால் இவற்றை நடைமுறையிலும் காட்டுவீர்களானால் நீங்கள் நற்பேறு பெற்றவர்களாயிருப்பீர்கள்!"

"உங்கள் எல்லாரையும் பற்றி பேசவில்லை. நான் தேர்ந்து கொண்டவர்கள் இன்னாரென்பது எனக்குத் தெரியும். ஆனாலும் 'என்னுடைய அப்பத்தை உண்டவன் எனக்கு இரண்டகமாகத் தன் குதிகாலைத் தூக்கினான்' என்கிற மறைவாக்கியம் நிறைவேறியாக வேண்டுமே! அது நடக்கும் பொருட்டு, நான் யாரோ, அவரே நான் என்று நீங்கள் நம்பும் பொருட்டு, இப்பொழுதே, அது நடப்பதற்கு முன்னதாகவே, அதை உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான். என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன், என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்."

காட்டிக் கொடுப்பவன் யார் ? (யோ , 13: 21-30)

இப்படிச் சொன்னபின் இயேசு உள்ளம் கலங்கியவராய், "உங்களுள் ஒருவனே என்னைக் காட்டிக் கொடுக்கப்போகிறான், என்று மிகவும் திட்டமாக உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்று வெளிப்படையாகக் கூறினார். மனுமைந்தர் தமக்கென்று தீர்மானிக்கப்பட்ட பாதையிலே செல்லுகிறார். என்றாலும், அவரைக் காட்டிக்கொடுக்கிற மனிதனுக்குக் கேடுவரும். அந்த மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலம்" என்றார்.

அவர் யாரைக் குறித்துச் சொன்னார் என்பது சீடருக்குத் திட்டவட்டமாகத் தெரியாததால் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். இயேசுவுக்கு அன்பாயிருந்த சீடர் (யோவான்) அவருடைய மார்பருகில் சாய்ந்து கொண்டிருந்தார். 'இயேசு யாரைக் குறித்துச் சொல்லுகிறார்,' என்று கேட்கும்படி சீமோன் பேதுரு அவருக்குச் சைகை காட்டினார். அந்தச் சீடர் தாம் இருந்தபடியே பின்புறமாக இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்டு அவரிடம், "அவன் யார் ஆண்டவரே ?" என்று கேட்டார்.

அதற்கு இயேசு, "நான் யாருக்கு இந்த அப்பத்துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன்தான்," என்று சொல்லிவிட்டு அந்த

அப்பத்துண்டைத் தோய்த்தெடுத்து இஸ்காரியோத்தூர் சீமோனுடைய மகன் யூதாசுக்குக் கொடுத்தார்.

இயேசு அவனிடம், "செய்கிறதை விரைவில் செய்" என்று சொன்னார். எதற்காக அவனிடம் இப்படிச் சொன்னார் என்பதைப் பந்தியில் இருந்தவர்களுள் ஒருவரும் புரிந்து கொள்ளவில்லை. பணப்பெட்டி யூதாசின் பொறுப்பில் இருந்ததால் இயேசு அவனிடம் பண்டிகைக்குத் தேவையானதை வாங்கவோ, ஏழைகளுக்கு ஏதாவது கொடுக்கவோ சொன்னதாகச் சிலர் நினைத்துக் கொண்டனர். அப்பத்துண்டை வாங்கிக் கொண்டு அவன் வெளியே போனான். அது இரவு நேரம்.

அவன் வெளியே போனபின், இயேசு "இப்பொழுதே மனுமைந்தர் மாட்சிமை பெற்றுவிட்டார். இவ்வாறு அவர் வழியாகக் கடவுள் மாட்சிமை பெற்றிருப்பதால், கடவுளும் அவருக்குத் தம்முன்னிலையில் விரைவில் அவருக்கு மாட்சிமை அளிப்பார்," என்றார்.

சீடர்களிடையே எழுந்த விவாதம் (லூக் .22: 24-30)

அப்பொழுது சீடர்களிடையே தங்களுள் எவன் மற்ற எல்லாரையும் விடப் பெரியவன் என எண்ணப்படுவான் என்ற விவாதமும் எழுந்தது. இயேசு அவர்களிடம், "உலக மக்கள் மீது அரசர்கள் இறுமாப்புடன் ஆட்சி செலுத்துவதுண்டு. அதிகாரம் செலுத்துகிறவர்கள் வள்ளல்கள் என்னும் பட்டம் பெறுவதும் உண்டு. ஆனால் உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவன் சிறியவனாயும் தலைவன் பணியாளனாயும் இருக்கவேண்டும். பந்தியில் இருப்பவனோ, பணிவிடை செய்பவனோ எவன் பெரியவன்? பந்தியில் இருப்பவன் அல்லவா? ஆனால் நானோ உங்களிடையே பணிவிடை செய்கிறவனாகவே இருக்கிறேன். நான் சோதிக்கப்பட்ட வேளையில் என்னை விட்டு அகலாமல் இருந்தவர்கள் நீங்களே. ஆகவே என் தந்தை எனக்கு அரசுரிமை அளித்திருப்பது போல நானும் உங்களுக்கு அளிக்கிறேன். அதனால் நீங்கள் என்னுடைய ஆட்சியில் என் விருந்தில் உணவும் பானமும் அருந்துவீர்கள். இஸ்ரவேலின் பன்னிரு குலங்களையும் விசாரித்து தீர்ப்பு அளிக்கிறவர்களாக அரியணையில் அமருவீர்கள்,"என்றார்.

"சீடப்பிள்ளைகளே, நான் இன்னும் சிறு காலந்தான் உங்களோடு இருப்பேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் நான் செல்லுகிற இடத்துக்கு உங்களால் வர இயலாது. நீங்களெல்லாரும் என்னை விட்டு ஓடிப்போவீர்கள். ஏனெனில்

ஆயனை வெட்டுவேன்
ஆடுகள் சிதறிடிக்கப்படும்

என்று மறைநூலில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் நான் உயிரோடு எழுப்பப்பட்டபின் உங்களுக்கு முன்பே கலிலேயாவுக்குப் போவேன்" என்றார்.

பேதுருவின் மறுதலிப்பைப் பற்றிய முன்னறிவிப்பு
(மத். 26:31-35,மா.14: 27-31, லூக் 22: 31-34, யோ .13:36-38)

சீமோன்பேதுரு : ஆண்டவரே, நீர் எங்கே செல்லுகிறீர்?

இயேசு : நான் செல்லுகிற இடத்துக்கு என்னைப் பின்பற்றி இப்பொழுது உன்னால் வர இயலாது. பிறகுதான் வருவாய். சீமோனே, சீமோனே, கோதுமையைச் சலிப்பது போல உங்களெல்லாரையும் சலித்துத் தரம் பிரிப்பதற்கு சாத்தான் அனுமதி பெற்றிருக்கிறான். ஆனால் நானோ உன் நம்பிக்கை அற்றுப்போகாதிருக்க உனக்காக ஜெபம் செய்திருக்கிறேன். நீ மனமாற்றமடைந்தபின் உன் சகோதரரை உறுதியுடன் இருக்கச் செய்

பேதுரு : ஆண்டவரே ஏன் இப்பொழுது என்னால் உம்மைப் பின் தொடர்ந்து வர இயலாது? எல்லாரும் உம்மை விட்டு ஓடிப்போனாலும் நான் ஒருபோதும் அவ்வாறு செய்யமாட்டேன். உம்மோடு சிறைப்படுவதற்கும் சாவதற்கும் நான் ஆயத்தமாய் இருக்கிறேன்.

இயேசு : இன்று இரவு சேவல் கூவுமுன் என்னை உனக்குத் தெரியாதென நீ மூன்று முறை மறுதலிக்கப் போகிறாய்.

பேதுரு : நான் உம்மோடு இறக்க நேரிட்டாலுங்கூட உம்மைத் தெரியாதென்று மறுதலிக்கவே மாட்டேன். சீடர் எல்லாரும் அவ்வாறே கூறினர்.

இயேசு : பணப்பையும், தோற்பையும், மிதியடியும் இல்லாமல் நான் உங்களை அனுப்பின போது உங்களுக்குக் குறை ஏதாவது இருந்ததா?"

சீடர்கள் : ஒரு குறையும் இருந்ததில்லை

இயேசு : இப்பொழுது பணப்பை உடையவன் அதை எடுத்துக் கொள்ளட்டும். தோற்பை உடையவனும் அப்படியே செய்யட்டும். வாள் இல்லாதவன் தன் மேலாடையை விற்று ஒன்றை வாங்கிக் கொள்ளட்டும். ஏனெனில், குற்றம் செய்தோருள் ஒருவராக எண்ணப்பட்டார் என்று எழுதப்பட்டுள்ள மறைவாக்கியம் என்னில் நிறைவேற்றப் பட வேண்டும். என்னைப்பற்றி எழுதப்பட்டது உண்மை யிலேயே நிறைவேறி வருகிறது.

சீடர்கள் : ஆண்டவரே, இங்கே இரண்டு வாள்கள் இருக்கின்றன.

இயேசு : நிறுத்துங்கள் போதும்.

பகுதி - 7

ஆறுதல் உரை

அதற்குப்பின் இயேசு வெளியே வந்து தம் வழக்கப்படி ஒலிவமலைக்குப் போனார். சீடரும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

புதிய நெறி

இயேசு: நான் உங்களுக்குப் புதியதொரு நெறியை அருளுகிறேன். நீங்கள் ஒருவரிடமொருவர் அன்புடையவர்களாய் இருங்கள். நான் உங்களிடம் அன்புடையவனாய் இருந்தது போல நீங்களும் ஒருவரிடமொருவர் அன்புடையவர்களாய் இருங்கள். நீங்கள் ஒருவரிடமொருவர் அன்புடையவர்களாய் இருப்பதைக் கண்டு நீங்கள் என்னுடைய சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள்.

கலங்காதீர் : வழியும், சத்தியமும், மெய்வாழ்வும் நானே (யோ. 14:1-14)

“உங்கள் உள்ளம் கலங்கவேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள். என் தந்தை வீட்டில் ஏராளமான அறைகள் உண்டு. உங்களுக்கென்று ஓர் இடம் ஆயத்தம் செய்வதற்காகச் செல்லுகிறேன். நான் சென்று, உங்களுக்கென்று ஓர் இடத்தை ஆயத்தம் செய்தபின், திரும்பி வந்து, நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருக்கும்படி உங்களை என்னிடம் அழைத்துக் கொள்ளுவேன். நான் செல்லும் இடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும்”

தோமா : நீர் எங்கு செல்லுகிறீர் என்பதே எங்களுக்குத் தெரியாதிருக்கும்போது அதற்கு வழியை நாங்கள் எப்படி அறிந்திருக்க முடியும்?

இயேசு : வழியும், சத்தியமும், மெய்வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் விண்ணகத் தந்தையிடம் வர இயலாது. நீங்கள் என்னை அறிந்திருந்தால், என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இப்பொழுதோ நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள். அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்.

பிலிப்பு : ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும். அதுவே எங்களுக்குப் போதும்

இயேசு : பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். அப்படியிருக்க, தந்தையை எங்களுக்குக் காட்டும் என்று கேட்பதேன்? நான் தந்தையினுள்ளும் தந்தை எனக்குள்ளும் இருப்பதை நீ நம்பவில்லையா? நான் உங்களுக்குக் கூறும் வார்த்தைகளை நானாகக் கூறவில்லை. எனக்குள் இருக்கும் தந்தையே செயலாற்றி வருகிறார். நான் தந்தைக்குள்ளும் தந்தை எனக்குள்ளும் இருக்கிறார் என்று நான் சொல்லுவதை நம்புங்கள். என் வார்த்தைகளின் பொருட்டு நம்பாவிட்டாலும், என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள். என்னை நம்புகிறவன் நான் செய்யும் செயல்களைச் செய்வான். நான் தந்தையிடம் செல்லுகிறேன். தந்தையின் மாட்சிமை மைந்துரிடம் வெளிப்படவேண்டும் என்பதற்காக நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.

தூய ஆவியானவரைப் பற்றிய வாக்குறுதி (யோ. 14: 15-31)

"நீங்கள் என்னிடம் அன்புடையவர்களாயிருந்தால் என் நெறிகளைக் கடைப்பிடிப்பீர்கள். நான் தந்தையிடம் வேண்டிக்கொள்ளும்பொழுது, அவர் என்றும் உங்களோடு இருப்பதற்காக இன்னொரு தேற்றுகிறவரை உங்களுக்குத் தந்தருளுவார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியானவர். உலகத்தால் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் உலகம் அவரைக் காணவுமில்லை, அறியவுமில்லை. நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில் அவர் உங்களோடு தங்கியிருக்கிறார். உங்களுக்குள்ளும் இருக்கிறார். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடம் மீண்டும் வருவேன். இன்னும் சிறிது காலத்திற்குப் பிறகு உலகம் என்னைக் காணாது. நீங்களோ என்னைக் காண்பீர்கள். ஏனெனில் நான் மெய்வாழ்வுள்ளவன். நீங்களும் மெய்வாழ்வுள்ளவராய் இருப்பீர்கள். நான் தந்தைக்குள்ளும், நீங்கள் எனக்குள்ளும், நான் உங்களுக்குள்ளும் இருப்பதை அந்த நாளில் நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள். எனது நெறிகளை ஏற்றுக்கொண்டு அவற்றைக் கடைப்பிடிக்கிறவனே என்னிடம் அன்பு கொள்ளுகிறவன். என்னிடம் அன்பு கொள்ளுகிறவன் மீது என் தந்தையும் அன்பு கொள்ளுவார். நானும் அவனிடம் அன்புகொண்டு என்னை அவனுக்கு வெளிப்படுத்துவேன்," என்றார்.

யூதாசு (இஸ்காரியோத்தூர் யூதாசு அல்ல): ஆண்டவரே உம்மை நீர் உலகத்துக்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு மட்டும் வெளிப்படுத்துவதாகச் சொல்லுகிறீரே, இதன் பொருள் என்ன?

இயேசு: ஒருவன் என்னிடம் அன்பு கொண்டிருந்தால் அவன் என் வார்த்தையைக் கடைப்பிடித்து நடப்பான். என் தந்தையும் அவனிடம் அன்புகொள்ளுவார். நாங்கள் அவனோடு வாசம் பண்ணுவோம். என்னிடம் அன்புகொள்ளாதவன் என் வார்த்தையைக் கடைப்பிடித்து நடக்கமாட்டான். நீங்கள் கேட்கும் வார்த்தை என்னுடையதன்று, என்னை அனுப்பின தந்தையுடையது."

"நான் உங்களோடு இருக்கும் போதே இவற்றை உங்களுக்குச் சொல்லிவிட்டேன். என் பெயரால் தந்தை அனுப்பப் போகிற தூய ஆவியாகிய தேற்றுகிறவர் எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார். நான் உங்களுக்குச் சொன்ன யாவற்றையும் அவர் உங்களுக்கு நினைவூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு அளித்துவிட்டுச் செல்லுகிறேன். என்னுடைய சமாதானத்தையே நான் உங்களுக்கு அளிக்கிறேன். இதை நான் உலகம் அளிப்பதுபோல உங்களுக்கு அளிக்கவில்லை. உங்கள் உள்ளம் கலங்கவும் வேண்டாம்; மருளவும் வேண்டாம். 'நான் போகிறேன் ; உங்களிடம் திரும்பி வருவேன்' என்று நான் உங்களுக்குச் சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னிடம் அன்பு கொண்டிருந்தால், நான் தந்தையிடம் செல்லுகிறேன் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைவீர்கள். ஏனெனில் தந்தை என்னை விடப் பெரியவர். இவை நடக்கும்போது நீங்கள் நம்ப வேண்டும் என்பதற்காக, இப்பொழுதே, இவை நடக்கும் முன்பே, இவற்றைச் சொல்லிவைக்கிறேன். இனி மிகுதியாக நான் உங்களோடு பேசப்போவதில்லை. ஏனெனில், இவ்வுலகின் தலைவன் வருகிறான். அவனுக்கு என்னிடம் எந்த உரிமையும் இல்லை. ஆனால் நான் தந்தையிடம் அன்பு கொண்டிருக்கிறேன் என்பதையும், தந்தை எனக்குக் கட்டளையிட்டபடியே நான் செய்கிறேன் என்பதையும் உலகம் அறிய வேண்டும் என்பதற்காக இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இங்கிருந்து போவோம்" என்றார்.

மெய்யான திராட்சைச் செடி இயேசுவே (யோ. 15 : 1- 17)

"மெய்யான திராட்சைச் செடி நானே. என் தந்தையே தோட்டக்காரர். என்னிடமுள்ள கனி கொடாத கொடிகளை அவர் தறித்துவிடுவார். கனி கொடுக்கும் கொடிகள் மிகுதியாகக் கனி கொடுக்கும்படி அவற்றைக் கழித்துத் துப்புரவு செய்வார். நான் உங்களோடு பேசிய வார்த்தைகளால் நீங்கள்

இப்பொழுதே துப்புரவாகி விட்டீர்கள். நான் உங்களுக்குள் நிலைத்திருப்பது போல் நீங்களும் எனக்குள் நிலைத்திருங்கள். திராட்சைக்கொடி செடியில் நிலைத்திருந்தாலன்றி தானாகக் கனி கொடாதது போல நீங்களும் எனக்குள் நிலைத்திருந்தாலன்றி உங்களால் கனி கொடுக்க இயலாது. நானே திராட்சைச்செடி; நீங்கள் அதன் கொடிகள். ஒருவன் எனக்குள்ளும் நான் அவனுக்குள்ளும் நிலைத்திருந்தால் அவன் மிகுதியாகக் கனி கொடுப்பான். என்னுடன் இருந்தாலன்றி உங்களால் ஒன்றும் செய்ய இயலாது. எனக்குள் நிலைத்து இராதவன் வெளியே எறியப்பட்ட கொடியைப் போல உலர்ந்து போவான். அப்படிப்பட்ட கொடிகளை ஒன்று சேர்த்து எரித்து விடுவார்கள். நீங்கள் எனக்குள்ளும் என் வார்த்தை உங்களுக்குள்ளும் நிலைத்து இருந்தால், நீங்கள் விரும்பிக் கேட்பது எதுவாயினும் அது அப்படியே நடக்கும். நீங்கள் மிகுதியாகக் கனி கொடுத்து என் சீடராய் இருப்பதன் மூலம் என் தந்தையின் மாட்சிமையை விளங்கச் செய்வீர்கள். தந்தை என்னிடம் அன்பு கொண்டிருப்பது போல நானும் உங்களிடம் அன்பு கொண்டிருக்கிறேன். என் அன்பிலேயே நிலைத்திருங்கள். என் தந்தை தந்த நெறிகளை நான் கடைப்பிடித்து அவருடைய அன்பில் நிலைத்திருப்பது போல, நீங்களும் நான் தந்த நெறிகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்''

“என் மகிழ்ச்சியே உங்களுக்குள் இருக்கவேண்டுமென்றும், உங்கள் மகிழ்ச்சி நிறைவானதாக இருக்கவேண்டுமென்றும் இவற்றை உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவரிடம் ஒருவர் அன்பு கொள்ளுங்கள். இதுவே நான் தரும் நெறி. தன் நண்பர்களுக்காகத் தன் உயிரைக் கொடுக்கிறவனுடைய அன்பை விட மேலான அன்பு எவரிடமும் இருக்க முடியாது. நான் உங்களுக்குக் கட்டளையிடுவதை நீங்கள் செய்தால், நீங்கள் எனக்கு நண்பர்கள். இனி நான் உங்களை வேலைக்காரர் என்று சொல்லமாட்டேன். ஏனெனில் தன் தலைவன் செய்வது இன்னதென்பது ஒரு வேலைக்காரனுக்குத் தெரியாது. உங்களை நண்பர்கள் என்றேன். ஏனெனில் நான் என் தந்தையிடமிருந்து கேட்ட யாவற்றையும் உங்களுக்கு அறிவித்துவிட்டேன். நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நானே உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் போய் நிலைத்திருக்கும் கனியைக் கொடுக்க வேண்டுமென்று உங்களை நியமித்திருக்கிறேன். நீங்கள் என் பெயரால் விண்ணகத் தந்தையை வேண்டிக்கொள்ளுவது எதுவோ அதை அவர் உங்களுக்கு அருளும்படி இப்படிச் செய்தேன். நீங்கள் ஒருவரிடம் ஒருவர் அன்பு கொள்ளவேண்டுமென்றே இவற்றை நான் உங்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறேன்.''

உலகத்தாரின் பகைமை (யோ. 15: 18-27,16:1-4)

“உலகம் உங்களைப் பகைக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அது உங்களைப் பகைக்கும் முன்பே என்னைப் பகைத்தது என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் உலகத்திற்குச் சொந்தமானவர்களாய் இருந்திருந்தால் அது தனக்குச் சொந்தமான உங்களை நேசித்திருக்கும். ஆனால் நீங்கள் உலகத்திற்குச் சொந்தமானவர்கள் அல்ல. நான் உங்களை உலகத்தினின்று தேர்ந்தெடுத்துவிட்டேன். ஆகையால் உலகம் உங்களைப் பகைக்கிறது. வேலைக்காரன் தன் தலைவனைவிடப் பெரியவன் அல்ல என்று நான் உங்களுக்குச் சொன்னதை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்புறுத்தினது போல உங்களையும் துன்புறுத்துவார்கள். அவர்கள் என் வார்த்தையைக் கடைப்பிடித்து நடந்திருந்தால், உங்களுடைய வார்த்தையையும் கடைப்பிடித்து நடப்பார்கள். என் பெயரின் பொருட்டே அவர்கள் இப்படி உங்களை நடத்துவார்கள். ஏனெனில் என்னை அனுப்பினவரை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. நான் வந்து அவர்களுக்குப் போதிக்காதிருந்தால் அவர்கள் மேல் பாவம் சுமந்திராது. இப்பொழுது தங்கள் பாவத்திற்குச் சாக்குப் போக்குச் சொல்ல அவர்களுக்கு வழியே இல்லை.”

“என்னைப் பகைக்கிறவன் என் தந்தையையும் பகைக்கிறான். வேறு எவரும் செய்யாத செயல்களை நான் அவர்களிடமே செய்யாதிருந்தால் அவர்கள் மேல் பாவம் சுமந்திராது. இப்பொழுதோ அவர்கள் அவற்றைப் பார்த்திருக்கிறார்கள். என்னையும் என் தந்தையையும் பகைக்கிறார்கள். ‘காரணமில்லமல் என்னைப் பகைத்தார்கள்’ என்று அவர்களுடைய நீதிச்சட்ட நூலில் எழுதப்பட்டுள்ள வாக்கியம் இவ்வாறு நிறைவேறிற்று.”

“தந்தையிடமிருந்து நான் அனுப்பப் போகிற தேற்றுகிறவர் உங்களிடம் வருவார். அவரே தந்தையிடமிருந்து வெளிப்பட்டு வரும் தூய ஆவியானவர். அவர் வந்து எனக்காகச் சாட்சி கூறுவார். நீங்களும் சாட்சி கூறுவீர்கள். ஏனெனில் தொடக்கத்திலிருந்தே நீங்கள் என்னோடு இருந்து வருகிறீர்கள்.”

“நீங்கள் நம்பிக்கையினின்று வழுவி விடாதிருக்கும்படி நான் இச்செயல்களைக் குறித்து உங்களுக்குச் சொன்னேன். உங்களைத் தொழுகைக் கூடத்திலிருந்து விலக்கிவிடுவார்கள். மேலும் உங்களைக் கொல்லுகிற எவனும் தான் கடவுளுக்குத் திருத்தொண்டு புரிவதாக எண்ணிக்கொள்ளும் காலமும் வருகிறது. தந்தையையும் என்னையும் அவர்கள் அறிந்து கொள்ளாமல் இருப்பதால் இப்படியெல்லாம்

செய்வார்கள்.இவை நடைபெறும் காலம் வரும் போது நான் சொன்னதை நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ளுவதற்காகவே இவற்றை உங்களுக்குச் சொன்னேன்.''

தூய ஆவியானவரின் செயல் (யோ 16:5-15)

“நான் உங்களோடு கூடவே இருந்ததால் தொடக்கத்திலேயே நான் இச்செயல்களை உங்களுக்குச் சொல்லவில்லை. இப்பொழுதோ நான் என்னை அனுப்பினவரிடம் செல்லுகிறேன். உங்களுள் யாரும் என்னை எங்கே செல்லுகிறீர்? என்று கேட்பதாகத் தெரியவில்லை. நான் சொன்ன காரியத்தினால் உங்கள் உள்ளம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது. நான் சொன்னது உண்மையே. நான் போவதால் உங்களுக்கு நன்மையே உண்டாகும். நான் போகாவிட்டால் **தேற்றுகிறவர்** வரமாட்டார். நான் போய் அவரை உங்களிடம் அனுப்புவேன். உலகத்தார் என்னை நம்பாததால் அவர்களிடம் உண்டான பாவத்தையும், நான் தந்தையிடம் செல்லுவதால் கடவுளின் நீதி எத்தகையது என்பதையும், இந்த உலகத் தலைவனுக்கு அளிக்கப்பட்டிருக்கும் குற்றத் தீர்ப்பினால் கடவுளின் தீர்ப்பு எப்படிப்பட்டது என்பதையும் அவர் எடுத்துக் காட்டி அவர்களுக்கு உணர்த்துவார்.''

“நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய காரியங்கள் இன்னும் பல உண்டு. உங்களால் அவற்றைத் தாங்க இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியானவர் வரும்போது முழு உண்மையையும் நீங்கள் அறியும்படி உங்களை வழி நடத்துவார். அவர் தாமாக எதையும் சொல்லாமல் தாம் கேட்டு அறிந்ததையே உங்களுக்குச் சொல்லி, வரப்போகிற காரியங்களையும் அறிவிப்பார். அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பதன் மூலம் என்னை மாட்சிமைப் படுத்துவார்.தந்தையுடையவை யாவும் என்னுடையவையே. எனவேதான் அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.''

உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் (யோ: 16 : 16 -24)

“சிறிது காலத்திற்குப்பின் என்னைப் பார்க்கமாட்டீர்கள். பின்னும் சிறிது காலத்திற்குப்பின் என்னைக் காண்பீர்கள்'' என்றார். அவருடைய சீடருள் சிலர், “சிறிது காலத்திற்குப் பின் என்னைப் பார்க்க மாட்டீர்கள், பின்னும் சிறிது காலத்திற்குப்பின் என்னைக் காண்பீர்கள் என்றும், நான் தந்தையிடம் செல்லுகிறபடியால்'' என்கிறாரே, அவர் சொல்லுவதின் பொருள் என்ன ? அவர் என்ன சொல்லுகிறார் என்று நமக்குத் தெரியவில்லை'' என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டு இருந்தனர். அவர்கள் தம்மிடம் அதைப் பற்றிக் கேட்க விரும்புவதை இயேசு அறிந்து, “நான் சொன்னதைப் பற்றித்தானே நீங்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள், உலகமோ மகிழ்ச்சியோடு இருக்கும். நீங்கள்

துயரப்படுவீர்கள்; ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் என்று மிகவும் திட்டமாகச் சொல்லுகிறேன். குழந்தையைப் பெறும்போது தாய் தனக்குப் பேறுகாலம் வந்து விட்டபடியால் துயரப்படுகிறாள். ஆனால் குழந்தையைப் பெற்றெடுத்தபின் ஒரு குழந்தை உலகத்தில் தோன்றியிருக்கிறது என்கிற மகிழ்ச்சியினால் தன் வேதனையை மறந்து விடுகிறாள். அதுபோலவே, நீங்கள் இப்பொழுது துயரப்படுகிறீர்கள். ஆனால் மறுபடியும் நான் உங்களைக் காண்பேன். அப்போது உங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும். உங்கள் மகிழ்ச்சியை உங்களை விட்டு நீக்கிவிட ஒருவனாலும் இயலாது. அந்த நாளில் நீங்கள் என்னிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கமாட்டீர்கள். நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். இதுவரை நீங்கள் என் பெயரால் எதையும் கேட்டதில்லை. உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெற நீங்கள் கேளுங்கள். அப்பொழுது நீங்கள் பெற்றுக் கொள்ளுவீர்கள் என்று மிகவும் உறுதியாகச் சொல்லுகிறேன்.''

நான் உலகத்தை வென்றுவிட்டேன். (யோ. 16 : 25 - 33)

''நான் உங்களுக்குச் சொன்னவற்றை உருவகம் மூலம் சொன்னேன். ஒரு காலம் வரும். அப்பொழுது நான் உங்களோடு உருவகங்கள் மூலம் பேசாமல் தந்தையைப் பற்றித் தெளிவாக உங்களுக்கு அறிவிப்பேன். அந்த நாளில் என் பெயரால் நீங்கள் வேண்டுதல் செய்வீர்கள். அப்பொழுது உங்களுக்காகத் தந்தையிடம் மன்றாடுவேன் என்று சொல்லமாட்டேன். ஏனெனில் தந்தையே உங்கள் மீது அன்பு கொண்டுள்ளார். நீங்கள் என் மீது அன்பு கொண்டு நான் கடவுளிடமிருந்து வந்தேன் என்று நம்புவதால்தான் தந்தையும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளார். நான் தந்தையிடமிருந்து உலகத்துக்கு வந்தேன். இப்பொழுது உலகை விட்டுத் தந்தையிடம் செல்லுகிறேன்.

சீடர்கள் : இதோ, இப்பொழுதுதான் உருவகம் எதுவுமின்றி தெளிவாகச் சொல்லுகிறீர். உமக்கு எல்லாம் தெரியும். யாரும் உம்மை கேள்வி கேட்கத் தேவையில்லை என்பது இப்பொழுது எங்களுக்குத் தெரிகிறது. இதனால், நீர் கடவுளிடமிருந்து வந்திருக்கிறீர் என நம்புகிறோம்.

இயேசு : இப்பொழுது நம்புகிறீர்களா? இதோ, காலம் வருகிறது ஏன்? இப்பொழுதே வந்துவிட்டது. நீங்கள் சிதறடிக்கப்பட்டு ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்குச் செல்ல நேரிடும். என்னைத் தனியே விட்டுவிடுவீர்கள். ஆனால் நான் தனிமையாய் இல்லை. தந்தை என்னுடன் இருக்கிறார். நீங்கள் எனக்குள் நிலைத்திருந்து சமாதானத்தைப் பெறும் பொருட்டு

இவற்றை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்குத் துன்பம் உண்டு. ஆனாலும் மனச் சோர்வு அடையாதீர். நான் உலகத்தை வென்றுவிட்டேன்.

இயேசுவின் மன்றாட்டு (யோ. 17)

இவ்வாறு பேசியபின் இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து, தந்தையே, நேரம் வந்துவிட்டது. உம் மைந்தர் உம்மை மாட்சிமைப்படுத்துமாறு, நீர் மைந்தரை மாட்சிமைப்படுத்தும். ஏனெனில், நீர் உம்முடைய மைந்தரிடம் ஒப்புவித்த அனைவருக்கும் அவர் என்றுமுள்ள மெய்வாழ்வைக் கொடுக்கும் பொருட்டு அனைத்து மக்கள் மீதும் நீர் அவருக்கு அதிகாரம் அளித்திருக்கிறீர். உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிந்து கொள்ளுவதே என்றுமுள்ள மெய்வாழ்வு. நான் செய்யுமாறு நீர் எனக்குத் தந்த வேலையை நான் செய்து முடித்து உம்மை மாட்சிமைப்படுத்தியுள்ளேன். தந்தையே உலகம் உண்டாவதற்கு முன்பே உம்மிடம் எனக்கு இருந்த அதே மாட்சிமையை இப்பொழுதும் நீர் எனக்கு அளித்தருளும்."

உலகத்தினின்று நீர் தேர்ந்தெடுத்து என்னிடம் ஒப்புவித்த மனிதருக்கு நான் உமது திருப்பெயரை வெளிப்படுத்தினேன். உம்முடையவர்களாயிருந்த அவர்களை நீர் என்னிடம் ஒப்புவித்தீர். அவர்கள் உமது வார்த்தையைக் கடைப்பிடித்து நடக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவை எல்லாம் உம்மிடமிருந்தே வந்தவை என்பதை அவர்கள் இப்பொழுது அறிந்திருக்கிறார்கள்.நீர் எனக்கு அருளியவற்றையே நான் அவர்களுக்கு அருளினேன். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். நான் உம்மிடமிருந்து வந்தேன் என்பதையும் உறுதியாக அறிந்துகொண்டனர். நீர் தான் என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பியிருக்கின்றனர்."

"நான் அவர்களுக்காக மன்றாடுகிறேன். உலகத்திற்காக அன்று; நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காக மன்றாடுகிறேன். ஏனெனில் அவர்கள் உம்முடையவர்கள். என்னுடையவை யாவும் உம்முடையவை. உம்முடையவை என்னுடையவை. அவர்களால் நான் மாட்சிமை அடைந்திருக்கிறேன். இனி நான் உலகத்தில் இருக்கப்போவதில்லை. அவர்களோ உலகத்தில் இருப்பார்கள். நான் உம்மிடம் வருகிறேன். தூய தந்தையே, நாம் ஒன்றாயிருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு ஒப்புவித்த உமது திருப்பெயரின் பாதுகாப்பிலேயே வைத்து அவர்களையும் பாதுகாத்தருளும். நான் அவர்களோடு இருக்கையில் நீர் எனக்கு ஒப்புவித்த உமது திருப்பெயரின் பாதுகாப்பில் அவர்களைக்

காத்துவந்தேன். அவர்களுள் ஒருவனும் அழியவில்லை. மறைநூல் நிறைவேறும்படி அழிவின் மகன் மட்டும் அழிந்தான்."

"இப்பொழுது நான் உம்மிடம் வருகிறேன். என் மகிழ்ச்சி அவர்கள் உள்ளத்தில் நிறைவாய் இருக்கும்படி நான் உலகத்தில் இருக்கும்போதே இவ்வாறு சொல்லுகிறேன். உமது வார்த்தையை நான் அவர்களிடம் அறிவித்தேன். நான் உலகத்தைச் சார்ந்தவனாய் இல்லாதது போல அவர்களும் உலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. அதனால் உலகம் அவர்களைப் பகைக்கிறது. நீர் அவர்களை உலகத்தினின்று பிரித்துவிடவேண்டும் என்று நான் கேட்கவில்லை. அவர்களைத் தீயோனிடமிருந்து காத்தருள வேண்டுமென்றுதான் கேட்கிறேன். சத்தியத்தைக் கொண்டு அவர்களை உமக்கு உரியவர்களாக்கியருளும். உமது வார்த்தையே சத்தியம். நீர் என்னை உலகத்துக்குள் அனுப்பியதுபோல நானும் அவர்களை உலகத்துக்குள் அனுப்புகிறேன். அவர்கள் மெய்யாகவே உமக்கு உரியவர்களாய் இருக்கும்படி அவர்களுக்காக நான் என்னை உமக்கு உரியவனாக்குகிறேன்."

"நான் அவர்களுக்காக மட்டும் அல்ல; அவர்களுடைய வார்த்தையின் மூலம் என்னிடம் நம்பிக்கை கொள்ளுகிறவர் களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நீர் என்னை அனுப்பினீர் என்பதை உலகம் நம்புவதற்காக, அவர்கள் எல்லாரும் ஒன்றாய் இருக்கவேண்டும் என்றும் வேண்டிக்கொள்ளுகிறேன். தந்தையே, நீர் எனக்குள்ளும் நான் உமக்குள்ளும் இருக்கிறது போல அவர்கள் நமக்குள் இருக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாய் இருக்கிறது போல அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த மாட்சிமையை நான் அவர்களுக்கு அளித்தேன். நீர் என்னை அனுப்பினீர் என்பதையும், நீர் என்னிடம் அன்பு கொண்டதுபோல அவர்களிடமும் அன்பு கொண்டீர் என்பதையும் உலகம் அறிய வேண்டுமென்று இப்படிச் செய்தேன்."

"தந்தையே, உலகத் தோற்றத்திற்கு முன் நீர் என்னிடம் அன்பு கொண்டு எனக்கு மாட்சிமை அளித்தீர். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சிமையைக் காணும்படி நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். நீதியுள்ள தந்தையே, உலகம் உம்மை அறிந்து கொள்ளவில்லை. நானோ உம்மை அறிவேன். நீர் என்னை அனுப்பினீர் என்பதை இவர்களும் அறிந்து கொண்டார்கள். நீர் என்னிடம் கொண்டிருந்த அன்பு இவர்களுக்குள் இருக்கவும், நானும் இவர்களுக்குள் இருக்கவும் உம்மை இவர்கள் அறிந்து கொள்ளும்படி செய்தேன்.மேலும் அறிந்து கொள்ளவும் செய்வேன்," என்று மன்றாடினார்.

பகுதி - 8

இயேசுவின் பாடுகளும் இறப்பும்

கெத்செமனே தோட்டத்தில்
(மத்.26:36-46,மா.14:32-42,லூக்.22:39-)

இப்படிப் பேசியபின் இயேசு தம் சீடரோடு கெதரோன் என்னும் நீரோடையைக் கடந்து சென்றார். அங்கே கெத்செமனே என்னும் ஒரு தோட்டம் இருந்தது. இயேசுவும் அவருடைய சீடரும் அதனுள் சென்றார்கள். அவர்கள் அடிக்கடி அங்கே போய்க் கூடுவதுண்டு. யூதாசுக்கும் அந்த இடம் தெரியும். அவர் சீடரிடம், "நான் அதோ அங்கே போய் ஜெபம் செய்து கொண்டிருக்கையில், நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள்" என்று சொன்னார்.

பிறகு அவர் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை தம்மோடு கூட்டிக்கொண்டு போனார். அப்பொழுது வருத்தமும் ஆழ்துயரமும் ஆட்கொள்ளவே, அவர் அவர்களிடம், "என் ஆன்மா சாவுக்கேதுவான கடுந்துயரத்தால் நிறைந்திருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி என்னோடு விழித்திருங்கள்" என்று சொல்லிவிட்டு சற்று அப்பால் சென்று முகங்குப்புற விழுந்து, "என் தந்தையே, கூடுமானால் இத்துன்பக்கலம் என்னிடமிருந்து நீங்கட்டும். என்றாலும் நான் விரும்புகிறபடியன்று, நீர் விரும்புகிறபடியே நடக்கட்டும்," என்று மன்றாடினார். (அவ்வேளையில் வான் தூதன் அவர் முன் தோன்றி அவருக்குத் திடமளித்தான். அவர் ஆழ்துயரம் நிறைந்தவராய் இன்னும் மிகுந்த ஊக்கத்துடன் ஜெபித்தார். அவர் வியர்வை இரத்தப் பெருந்துளிகள் போல தரையில் விழுந்தது.)

பிறகு அவர் சீடர்களிடம் வந்து, அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி, "என்ன இது? ஒரு மணி நேரம் விழித்திருக்க உங்களால் இயலவில்லையா? உள்ளத்தில் ஆர்வம் இருக்கிறது. உடலோ ஆற்றலற்றதாய் இருக்கிறது. ஆகையால் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபியுங்கள்," என்றார்.

அவர் இரண்டாம் முறையாகப் போய் "இந்தக் கலத்தை நான் அருந்தினாலன்றி இது என்னை விட்டு நீங்காதென்றால் உமது விருப்பமே நிறைவேறட்டும்" என்று ஜெபித்தார். திரும்பவும் வந்து அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறதைக் கண்டார். அவர்களுடைய கண்கள் தூக்க மயக்கமாய் இருந்தன. அவர் மறுபடியும் அவர்களை விட்டுச்சென்று, மூன்றாம் முறையாக முன்பு சொன்ன வார்த்தைகளையே சொல்லி ஜெபித்தார். பிறகு அவர் சீடரிடம் வந்து, "இன்னுமா தூங்கி இளைப்பாறிக் கொண்டிருக்கிறீர்கள்? போதும்.

நேரம் நெருங்கிவிட்டது. மனுமைந்தர் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படப்போகிறார். எழுந்திருங்கள், போவோம். என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் இதோ நெருங்கி வந்துவிட்டான்" என்றார்.

காட்டிக் கொடுக்கப்படல் (மத். 26:47-56, மா. 14:43-50, லூக் 22:47-58, யோ 18:3-12)

இயேசு பேசிக் கொண்டிருந்த போது யூதாசு படைவீரரையும், தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும் அனுப்பிய காவலரையும் கூட்டிக்கொண்டு, கைப்பந்தங்கள், விளக்குகள், படைக்கலன்கள் ஆகியவற்றோடு அவ்விடத்திற்கு வந்தான். 'நான் யாரை முத்தமிடுகிறேனோ அவர்தாம் அந்த ஆள். அவரைப் பிடித்துப் பத்திரமாகக் கொண்டு போங்கள்' என்று அவர்களுக்கு அவன் அடையாளம் சொல்லியிருந்தான். அவன் அவரை அணுகி "ரபீ" என்று சொல்லிக்கொண்டே அவரை முத்தமிட்டான். இயேசு அவனிடம், "யூதாசே, முத்தத்தினாலா மனுமைந்தரைக் காட்டிக் கொடுக்கிறாய்? நண்பனே, நீ செய்ய வந்த செயலைச் செய்" என்றார்.

இயேசு தமக்கு நேரிடப்போகும் யாவற்றையும் அறிந்து வெளியே வந்து அவர்களைப் பார்த்து, "யாரைத் தேடுகிறீர்கள் ?" என்று கேட்டார்.

அவர்கள் அவரிடம், "நாசரேத்தூர் இயேசுவை" என்று சொன்னார்கள். "நான் தான் அவர்" என்று அவர் அவர்களிடம் சொன்னதும் அவர்கள் பின்வாங்கித் தரையிலே விழுந்தார்கள், "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று அவர் அவர்களிடம் மீண்டும் கேட்டார். அவர்கள், "நாசரேத்தூர் இயேசுவை" என்று சொன்னார்கள்.

அப்பொழுது அவர்கள் இயேசுவின் அருகில் வந்து அவர் மேல் கைவைத்து அவரைப் பிடித்தார்கள். சீமோன் பேதுரு தன்னிடமிருந்த வாளால் தலைமை ஆசாரியனின் பணியாளராகிய மல்குஸ் என்பவனைத் தாக்கி அவனுடைய வலக்காதைத் துண்டித்தார்.

இயேசு அவனிடம், "உன் வாளை அதன் உறையில் போடு. ஏனென்றால், வாளை எடுக்கிற யாவரும் வாளால் மடிவார்கள். நான் என் தந்தையை வேண்டிக் கொண்டால் அவர் பன்னிரண்டு லேகியோன்களுக்கும் (ஏறத்தாழ 72000பேர்) மேற்பட்ட தெய்வதூதர்களை உடனே என்னிடம் அனுப்பமாட்டரென்றா நினைக்கிறாய்? அப்படிச் செய்தால், இவ்வாறுதான் நடக்க வேண்டுமென்று உரைக்கும் மறைநூல் வாக்கியங்கள் எப்படி நிறைவேறும்? இது என் தந்தை எனக்குக் கொடுத்துள்ள துன்பக்கலம். இதை நான் பருகாமல் இருப்பேனோ?" என்று சொல்லி அவன் காதைத் தொட்டு அவனைக் குணப்படுத்தினார்.

அதன் பின் இயேசு கூட்டத்தை நோக்கி, "இது என்ன? கொள்ளைக்காரனைப் பிடிக்க வருவதுபோல வாள்களோடும் தடிகளோடும் என்னைப் பிடிக்க வந்திருக்கிறீர்களே? நான் நாள்தோறும் திருக்கோவிலில் உட்கார்ந்து போதித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதெல்லாம் நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை. இது உங்களுடைய வேளை. இது இருளின் ஆட்சி. இறைவாக்குநர் எழுதியுள்ளவை நிறைவேறுவதற்காகவே இவை அனைத்தும் நடந்திருக்கின்றன" என்றார்.

அப்பொழுது எல்லாச் சீடர்களும் அவரை விட்டுவிட்டு ஓடிப்போனார்கள். இளைஞன் ஒருவன் தன் உடம்பின்மேல் ஒரு துப்பட்டியை மட்டும் போர்த்துக்கொண்டு அவர் பின்னே சென்றான். அவனைப் பிடிக்கவும் அவன் துப்பட்டியை விட்டுவிட்டு ஆடையில்லாமலே ஓடிவிட்டான்.

விசாரணை (யோ. 18:12-13, 19-24)

1. அன்னாவின் வீட்டில்

படைவீரரும், படைத்தலைவனும் யூதருடைய காவலரும் இயேசுவை பிடித்துக்கட்டி முதலில் அன்னாவிடம் நடத்திச் சென்றார்கள். அவர் அந்த ஆண்டில் தலைமை ஆசாரியராயிருந்த காய்பாவுக்கு மாமன். இந்தக் காய்பாதான் 'மக்கள் பொருட்டு ஒரே ஒரு மனிதன் சாவது நலம்' என்று யூதருக்கு ஆலோசனை கூறினவர்.

அவர் இயேசுவிடம் அவருடைய சீடரைப்பற்றியும் அவருடைய போதனையைப் பற்றியும் விசாரித்தார். இயேசு அவரிடம் உலகமே அறிய நான் வெளிப்படையாகப் பேசி வந்தேன். யூதரெல்லாம் கூடிவரும் தொழுகைக் கூடங்களிலும் திருக்கோவிலிலும் நான் எப்பொழுதும் பேசி வந்தேன். மறைவாக ஒன்றும் பேசவில்லை. என்னிடம் ஏன் இதை விசாரிக்கிறீர்? நான் சொன்னதைக் கேட்டவர்களிடம் விசாரித்துப் பாரும். நான் அவர்களுக்கு என்ன சொன்னேன் என்பது அவர்களுக்குத் தெரியும்," என்றார்

அவர் இப்படிச் சொன்னதும் பக்கத்தில் நின்று கொண்டிருந்த காவலருள் ஒருவன் 'தலைமை ஆசாரியருக்கு இப்படியா பதில் சொல்லுவது?' என்று சொல்லி இயேசுவை அறைந்தான். இயேசு அவனிடம், "நான் பேசியது தவறென்றால் என்ன தவறு என்பதை எடுத்துக்காட்டு. நான் பேசியது சரியென்றால் ஏன் என்னை அடித்தாய்?" என்று கேட்டார். அதன்பின் அன்னா இயேசுவை கட்டுண்டவராகவே (அந்த ஆண்டின்) தலைமை ஆசாரியராகிய காய்பாவிடம் அனுப்பினார்.

2. காய்பாவின் வீட்டில்

பிறகு அவர்கள் இயேசுவைத் தலைமை ஆசாரியரிடம் நடத்திக் கொண்டு போனார்கள். அப்பொழுது எல்லாத் தலைமை ஆசாரியர்களும் மூப்பரும் மறை அறிஞர்களும் ஒன்று கூடினர். (மா. 14:53) சீமோன் பேதுருவும் வேறொரு சீடரும் இயேசுவைப் பின் தொடர்ந்து சென்றார்கள். அந்தச் சீடர் தலைமை ஆசாரியருக்கு அறிமுகமானவர். எனவே, அவர் இயேசுவோடு தலைமை ஆசாரியரது மாளிகை முற்றத்துக்குப் போனார். பேதுரு வெளியில் வாயிலருகே நின்றுவிட்டார். அப்பொழுது தலைமை ஆசாரியருக்கு அறிமுகமாயிருந்த அந்தச் சீடர் வெளியே வந்து, வாயில் காப்பவனிடம் சொல்லிப் பேதுருவை உள்ளே அழைத்துக் கொண்டு போனார்.

அது குளிர்காலமாயிருந்தபடியால் வேலைக்காரரும் காவலரும் கரியினால் நெருப்பு உண்டாக்கி அங்கே நின்று குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள். பேதுருவும் அவர்களோடு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார். (யோ. 15:15-18) அப்பொழுது ஒரு வேலைக்காரி அவர் நெருப்பினருகில் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு அவரை உற்றுப் பார்த்து விட்டு, "நீயும் நாசரேத்தூர் இயேசுவுடன் இருந்தாயே" என்றாள். அதற்கு அவர், "நீ என்ன சொல்லுகிறாய் என்பதே எனக்குத் தெரியவில்லை, புரியவுமில்லை" என்று சொல்லி மறுதலித்தார். (பிறகு வெளியே முற்றத்தின் முன்புறத்துக்குப் போனார்) அப்பொழுது ஒரு சேவல் கூவிற்று.

தலைமை ஆசாரியருடைய வேலைக்காரருள் ஒருவன், "தோட்டத்தில் நான் உன்னை அவனோடு பார்த்தேன் அல்லவா?" என்று கேட்டான். இவன் பேதுருவினால் காது துண்டிக்கப்பட்டவனுக்கு உறவினன். (யோ : 18:26) பேதுரு மீண்டும் மறுதலித்தார்.

சற்று நேரத்துக்குப்பின் அங்கே நின்றவர்கள் பேதுரு அருகே வந்து, "உண்மையாகவே நீயும் அவர்களுள் ஒருவனே. உன் பேச்சே உன்னைக் காட்டிக் கொடுக்கிறது" என்றார்கள். அப்பொழுது பேதுரு, "அந்த ஆளை எனக்குத் தெரியாது" என்று சொல்லி, பழிப்பாணையிட்டுச் சத்தியம் பண்ணத் தொடங்கினார். உடனே சேவல் இரண்டாம் முறை கூவிற்று. ஆண்டவரும் திரும்பிப் பேதுருவை உற்று நோக்கினார். "இன்றைக்கு சேவல் இரண்டு முறை கூவுமுன், என்னை உனக்குத் தெரியாதென நீ மூன்று முறை மறுதலிப்பாய்" என்று இயேசு தம்மிடம் சொன்ன வார்த்தை பேதுருவின் நினைவுக்கு வந்தது. அவர் விம்மி விம்மி அழுதார். (மத். 26:69-75; மா.14:66-72; லூக்.22:54-62)

தலைமை ஆசாரியர்களும் தலைமைச் சங்கத்தார் அனைவரும் இயேசுவை சாவுக்கான தண்டனைக்குள்ளாக்கும்படி அவருக்கு எதிரான சாட்சியம் ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தார்கள். ஆனால் எதுவும்

கிடைக்கவில்லை. பல பொய்ச்சாட்சிகள் முன்வந்த போதிலும் தகுதியான சாட்சியம் ஒன்றுமே கிடைக்கவில்லை.

கடைசியில் இருவர் முன் வந்து, "இவன் கடவுளின் ஆலயத்தை இடித்துவிட்டு அதை மூன்று நாட்களில் என்னால் கட்டி எழுப்ப முடியும் என்று சொன்னான்" என்று சொன்னார்கள். அப்பொழுது தலைமை ஆசாரியர் எழுந்து இயேசுவைப்பார்த்து, "இதற்கு ஒரு பதிலும் சொல்லவில்லையா? இவர்கள் உனக்கு விரோதமாகச் சாட்சி கூறுகிறார்களே. நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார். இயேசுவோ பதில் எதுவும் சொல்லவில்லை, அப்பொழுது தலைமை ஆசாரியர் அவரிடம் என்றென்றுமுள்ள கடவுளின் மேல் ஆணையிட்டுச் சொல்லும்படி உன்னைக் கேட்கிறேன். நீ போற்றுதலுக்குரியவரின் மைந்தராகிய மேசியாதானா?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "நீரே சொல்லிவிட்டீரே. மேலும் மனுமைந்தர் தெய்வ வல்லமையின் வலப்பக்கத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மீது வருவதையும் இப்பொழுதிருந்தே காண்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்றார்.

தலைமை ஆசாரியர் அதைக் கேட்டவுடனே, தம் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு "இவன் தெய்வ நிந்தனை பேசினான். இனி மேல் நமக்குச் சாட்சிகள் எதற்கு? இப்பொழுது நீங்களே இந்தத் தெய்வ நிந்தனையைக் கேட்டீர்கள். உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?" என்று கேட்டார். அவர்கள், "இவன் சாவுக்கேதுவான தண்டனைக்கு உரியவன்" என்றார்கள். அதன்பின் அவருடைய முகத்தில் துப்பி அவரை அடித்தார்கள். சிலர் அவருடைய கண்களைக் கட்டி, கன்னத்தில் அறைந்து, "மேசியாவே, உன்னை அடித்தவன் யார்? ஞானத்தால் உணர்ந்து சொல்," என்றனர்.

3. சங்கத்தில் (லூக் 22:66-71)

பொழுது விடிந்ததும் தலைமை ஆசாரியர்களும் மறைஅறிஞர்களும் அடங்கிய மக்களின் மூப்பர் சபை கூடிற்று. அவரைத் தங்கள் தலைமைச் சங்கத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தி, "நீ மேசியா என்றால் அதை எங்களுக்குச் சொல்லிவிடு" என்றார்கள். அதற்கு அவர், "நான் சொன்னாலும் நம்பமாட்டீர்கள். நான் கேள்வி கேட்டாலும் பதிலளிக்கமாட்டீர்கள். ஆயினும் இது முதற்கொண்டு மனுமைந்தர் தெய்வ வல்லமையின் வலப்பக்கத்தில் வீற்றிருப்பார்" என்றார். அப்பொழுது அவர்கள் எல்லாரும் சேர்ந்து, "அப்படியானால் நீ கடவுளின் மைந்தனா?" என்று கேட்டார்கள். "நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான்" என்று அவர் சொல்ல, அவர்கள் "இதற்கு மேல் நமக்குச் சாட்சி எதற்கு? இவன் வாயிலிருந்தே நாம் கேட்டுவிட்டோமே" என்றார்கள்.

4. பிலாத்துவின் மாளிகையில்

எல்லாத் தலைமை ஆசாரியர்களும், மக்களின் மூப்பர்களும் இயேசுவைக் கொன்றுவிடும்படி அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணினார்கள். அதன்பின் அவர்கள் அவரைக்கட்டி நடத்திச் சென்று மாநிலத்தலைவனின் மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள். (மத் 27:1-2) பஸ்கா விருந்தை உண்ணுமுன் தீட்டுப்படாமலிருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் மாளிகைக்குள் நுழையவில்லை. ஆகையால் பிலாத்து வெளியே வந்து அவர்களிடம் "இந்த மனிதன் மீது நீங்கள் சுமத்தும் குற்றம் என்ன?" என்று கேட்டான்.அதற்கு அவர்கள் "இவன் குற்றமற்றவன் என்றால் இவனை உம்மிடம் ஒப்புக் கொடுக்க வந்திருக்க மாட்டோமே,"என்றார்கள்.(யோ.18:29-30)

பிறகு கூட்டத்திலிருந்து அனைவரும், "இந்த ஆள் எங்கள் இனத்தவரைக் கலகம் செய்யத்தூண்டுகிறான். உரோமப் பேரரசருக்கு வரி கொடுப்பதைத் தடுக்கிறான். தானே மேசியாவாகிய அரசன் என்றும் சொல்லுகிறான். இவ்வாறெல்லாம் இவன் செய்ய நாங்களே கண்டோம்,"(லூக் 23:1-2) என்று கூறி அவர்மீது குற்றம் சுமத்தினார்கள்.

ஆனால் தலைமை ஆசாரியர்களும் மூப்பர்களும் அவர் மீது குற்றம் சுமத்தினபோது அவர் ஒரு பதிலும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து அவரைப் பார்த்து, "உனக்கு விரோதமாக எத்தனையோ காரியங்களைக் குறித்து இவர்கள் சாட்சி கூறுகிறார்களே, உனக்குக் கேட்கவில்லையா?" என்று கேட்டான். அவரோ ஒன்றுக்கும் ஒரு பதிலும் அவனிடம் சொல்லவில்லை. அதைக் கண்டு பிலாத்து வியப்புற்றான் (மத்.27:12-14)

அப்பொழுது பிலாத்து தலைமை ஆசாரியர்களையும் அங்கிருந்த மக்களையும் நோக்கி "இந்த மனிதனிடம் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லையே! (லூக் 23:4) இவனைக் கொண்டு போய் உங்கள் சட்டப்படி நீங்களே விசாரணை செய்து கொள்ளுங்கள்" என்றான். அதற்கு யூதர்கள், "யாருக்கும் சாவுக்கேதுவான தண்டனை அளிக்க எங்களுக்கு அதிகாரம் இல்லையே" என்று சொன்னார்கள். இவ்வாறு சொல்லி இயேசு தமக்கு எப்படிப்பட்ட சாவு வரும் என்று குறிப்பிட்டுச் சொன்னது நிறைவேறும்படி செய்து விட்டார்கள்.

பிலாத்து மீண்டும் மாளிகைக்குள் சென்று இயேசுவை வரவழைத்து, "நீ யூதருக்கு அரசனா?" என்று கேட்டான்.

இயேசு : நீரே இப்படிக் கேட்கிறீரா அல்லது மற்றவர்கள் என்னைப் பற்றி உம்மிடம் கூறினார்களா?

பிலாத்து : என்ன? நான் ஒரு யூதனா? உன்னுடைய இனத்தவரும் தலைமை ஆசாரியர்களுமே உன்னை என்னிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். நீ என்ன செய்தாய்?

இயேசு : என் அரசு இவ்வுலகத்தின் இயல்புடையதன்று. என் அரசு இவ்வுலகத்தின் இயல்புடையதாயிருந்தால், நான் யூதரிடம் ஒப்புக் கொடுக்கப்படாதபடி என் ஆட்கள் எதிர்த்துப் போராடியிருப்பார்கள். இல்லை. என் அரசு இவ்வுலகத்தின் இயல்புடையதன்று.

பிலாத்து : அப்படியானால் நீ ஓர் அரசன் தானே?

இயேசு : நான் அரசனென்று நீரே சொல்லுகிறீர். சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கூறவே நான் பிறந்தேன். அதற்காகவே இந்த உலகத்துக்கு வந்தேன். தனக்குள்ளே சத்தியத்தை உடையவன் ஒவ்வொருவனும் என் குரலுக்குச் செவி சாய்க்கிறான்.

பிலாத்து : சத்தியம் என்பது என்ன?

இப்படிக் கேட்டுவிட்டு அவன் மறுபடியும் வெளியே யூதரிடம் வந்து, "நான் அவனிடம் ஒரு குற்றத்தையும் காணவில்லை," என்றான். (யோ. 18:31-38)

ஆனால் அவர்கள், "இவன் கலிலேயா நாட்டில் தொடங்கி இவ்விடம் வரைக்கும், யூதேயா முழுவதிலும் மக்களுக்குப் போதனை செய்து அவர்களைத் தூண்டிவிடுகிறான்," என்று மிகவும் அழுத்தமாகச் சொன்னார்கள்.

இதைக் கேட்ட பிலாத்து, "அவன் கலிலேயனா?" என்று வினவி, அவர் ஏரோதுவின் அதிகாரத்துக்குட்பட்டவர் என்பதைத் தெரிந்து கொண்டு, அப்பொழுது ஏரோதுவும் எருசலேமில் இருந்ததால் அவரை அவனிடம் அனுப்பிவைத்தான் (லூக் 23:5-7)

5. ஏரோதுவிடம் இயேசு (லூக் 23:8-12)

ஏரோது இயேசுவைக் குறித்து ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்ததால் அவரைப் பார்க்க வேண்டுமென்று நெடுங்காலமாக விருப்பம் கொண்டிருந்தான். அவரால் செய்யப்படும் ஏதாவது ஓர் அற்புதத்தைப்

பார்க்கலாமென்று ஆவலாயுமிருந்தான். ஆகையால் அவன் இயேசுவைக் கண்டதும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் அவரிடம் பல கேள்விகள் கேட்டுப் பார்த்தான். ஆனால் அவர் அவனுக்கு ஒரு பதிலும் கூறவில்லை. தலைமை ஆசாரியர்களும் மறை அறிஞர்களும் அவர்மேல் மும்முரமாகக் குற்றம் சுமத்திக் கொண்டே நின்றார்கள். அப்பொழுது ஏரோது தன் போர் வீரரோடு சேர்ந்து அவரை இழிவாக நடத்தி, ஏளனம் செய்து, பளபளப்பான ஆடையை அவருக்கு உடுத்தி, அவரைப் பிலாத்துவிடம் அனுப்பிவிட்டான். முன்பு ஒருவருக்கொருவர் பகையாய் இருந்த பிலாத்தும் ஏரோதும் அன்றைக்கு நண்பர்களானார்கள்.

6. மீண்டும் பிலாத்து மாளிகையில்

பிலாத்து தலைமை ஆசாரியர்களையும், அதிகாரிகளையும் மக்களையும் ஒன்று கூட்டி, அவர்களிடம், “இந்த மனிதன் மக்களைக் கலகம் செய்யத் தூண்டுகிறவன் என்று என்னிடம் கொண்டு வந்தீர்கள். நீங்களே பாருங்கள். உங்கள் முன்னிலையில் நான் விசாரணை செய்தபோது இவன் மீது நீங்கள் சுமத்துகிற குற்றங்களுள் ஒன்றையும் இவனிடம் காணவில்லை. ஏரோதும் காணவில்லை. அதனால்தான் அவர் இவனை நம்மிடம் திருப்பி அனுப்பிவிட்டார். எனவே மரண தண்டனைக்கேற்றது எதுவும் இவன் செய்யவில்லை என்பது தெளிவு. ஆகையால் இவனுக்குச் சிறு தண்டனை கொடுத்து விடுதலை செய்கிறேன்.”என்றான் (லூக் 23:13-16)

பஸ்காப் பண்டிகைதோறும் மக்கள் விரும்பிக் கேட்கும் ஒரு கைதியை மாநிலத் தலைவன் அவர்களுக்காக விடுதலை செய்வது வழக்கமாயிருந்தது. அச்சமயம் பரபாஸ் என்னும் பேர்போன கைதி ஒருவன் சிறையில் இருந்தான் (மத். 27: - 15-16). அவன் ஒரு கொள்ளைக்காரன் (யோ.18:40).

அவன் நகரத்தில் நடந்த ஒரு கலகத்தின் பொருட்டும் கொலையின் பொருட்டும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். (லூக் 25:19) மக்கள் கூடி வந்து பிலாத்து வழக்கமாகச் செய்து வந்த படியே தங்களுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டனர். அவன் அவர்களிடம், “நான் உங்களுக்காக யூதருடைய அரசனை விடுதலை செய்வது உங்களுக்கு விருப்பந்தானா?” என்று கேட்டான். ஏனென்றால் தலைமை ஆசாரியர்கள் பொறாமை காரணமாகவே அவரை தன்னிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

(மா.15:8-12) அல்லாமலும், அவன் நீதிபதியின் இடத்தில் வீற்றிருக்கையில் அவனுடைய மனைவி அவனிடம் ஆள் அனுப்பி அந்த நீதிமான் காரியத்தில் நீர் தலையிடவேண்டாம். நேற்றிரவு கனவில் அவர் பொருட்டு நான் மிகவும்

துயரமடைந்தேன்," என்று சொல்லச் சொன்னாள். ஆனால் தலைமை ஆசாரியர்களும் மூப்பர்களும் பரபாசை விடுதலை செய்ய வேண்டுமென்று மக்களைத் தூண்டிவிட்டிருந்தார்கள். (மத். 27:19-20)

பிலாத்து : இவ்விருவருள் யாரை நான் உங்களுக்காக விடுதலை செய்ய வேண்டும்?

யூதர்கள் : பரபாசையே.

பிலாத்து : அப்படியானால் மேசியா என்னும் இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?

யூதர்கள் : அவனைச் சிலுவையில் அறையும்.

பிலாத்து : ஏன்? இவன் என்ன தீங்கு செய்துவிட்டான். சாவுக்கேதுவான தண்டனை பெறும் அளவுக்கு குற்றம் எதையும் இவனிடம் நான் காணவில்லையே.

யூதர்கள் : இவன் தன்னைக் கடவுளின் மைந்தன் என்று கூறிக் கொள்ளுகிறான். எங்களுக்கு ஒரு சட்டம் உண்டு. அந்தச் சட்டத்தின்படி இவன் சாகவேண்டும்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் பிலாத்து இன்னும் மிகுதியாக அஞ்சினான். அவன் மாளிகைக்குள் சென்று இயேசுவிடம், "நீ எங்கிருந்து வந்தவன்?" என்று கேட்டான். இயேசுவோ அவனுக்குப் பதிலளிக்கவில்லை. அப்பொழுது பிலாத்து, "என்னோடு பேசமாட்டாயா? உன்னை விடுதலை செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு. உன்னைச் சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் உண்டு. இது உனக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டான்.

அதற்கு இயேசு, "விண்ணிலிருந்து உமக்கு அதிகாரம் அளிக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு எந்த அதிகாரமும் இல்லை. இப்படியிருப்பதால் என்னை உம்மிடம் ஒப்புக்கொடுத்தவன் மேல் பெரும் பழி சுமரும்," என்று சொன்னார். அதன்பேரில் பிலாத்து அவரை எப்படியாவது விடுதலை செய்யவேண்டுமென்று எண்ணினான். ஆனால் யூதர்களோ "இவனை விடுதலை செய்தால் நீர் உரோமப் பேரரசருடைய நண்பர் என்று சொல்லுவதற்கில்லை. தன்னை அரசானாக்கிக் கொள்ளும் எவனும் பேரரசருக்கு எதிரியே," என்று கூக்குரலிட்டார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பிலாத்து இயேசுவை வெளியே அழைத்துக் கொண்டு வந்தான். பிறகு கல்தளம் என்று சொல்லப்படும் இடத்திலுள்ள நீதிபதி இருக்கை மீது உட்கார்ந்தான். அந்த இடம் எபிரேயு மொழியில் கபத்தா என்று அழைக்கப்பட்டது. அன்று பஸ்காப் பண்டிகைக்கு

ஆயத்த நாள். பிலாத்து யூதரை நோக்கி, "இதோ, உங்கள் அரசன்" என்றான். அவர்களோ, "ஒழிக, ஒழிக, சிலுவையில் அறையும்" என்று கூக்குரலிட்டார்கள். "உங்கள் அரசனையா நான் சிலுவையில் அறைவது?" என்று பிலாத்து கேட்டான். அதற்குத் தலைமை ஆசாரியர்கள், "உரோமப் பேரரசரைத் தவிர வேறு அரசர் எங்களுக்கு இல்லை" என்றனர். (யோ.19:8-16)

தன் முயற்சி பயனளிக்கவில்லை, அதற்கு மாறாகக் கலகந்தான் உண்டாகும் என்று நினைத்த பிலாத்து தீண்ணீரை எடுத்து, "இந்த மனிதனது இரத்தப் பழியில் எனக்குப் பங்கில்லை. நான் குற்றமற்றவன். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி மக்கள் முன்னிலையில் கைகளைக் கழுவினார். அதற்கு மக்கள் எல்லாரும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்," என்றார்கள். அதன்பின் அவன் பரபாசை அவர்களுக்காக விடுதலை செய்தான். இயேசுவையோ வாரினால் அடித்து, சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தான் (மத்.27:24-16)

யூதாசின் முடிவு (மத். 27: 3-10)

இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு அவர் குற்றத் தீர்ப்புப் பெற்றதை அறிந்தபோது, மன வருத்தமடைந்து அந்த முப்பது வெள்ளிக் காசுகளைத் தலைமை ஆசாரியர்களிடமும் மூப்பர்களிடமும் திரும்பவும் கொண்டுபோய், "குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்துப் பாவம் செய்தேன்," என்றான். அவர்கள் "அதைப் பற்றி எங்களுக்கென்ன? அது உன் பாடு", என்றார்கள். அவன் வெள்ளிக் காசுகளைத் திருக்கோவிலில் எறிந்து விட்டு, போய் தூக்குப் போட்டுக் கொண்டான்.

தலைமை ஆசாரியர்கள் வெள்ளிக்காசுகளை எடுத்து, "இது இரத்தத்தின் விலையாதலால் இதைக் கோவில் காணிக்கைப் பெட்டியில் போடுவது முறையன்று" என்று சொல்லி கலந்து பேசி அதைக்கொண்டு அன்னியரை அடக்கம் செய்வதற்காக குயவன் நிலத்தை வாங்கினார்கள். அந்த நிலம் இந்நாள்வரையிலும் 'இரத்த நிலம்' எனப்படுகிறது.

' இஸ்ரவேல் மக்களால் விலை மதிப்பிடப்பட்டவரின்
விலையாகிய முப்பது வெள்ளிக்காசுகளை எடுத்து
குயவன் நிலத்தை வாங்கக் கொடுத்தார்கள்.
ஆண்டவர் எனக்கு இட்ட கட்டளையும் இதுவே'

என்று இறைவாக்குநர் எரேமியா மூலமாக உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.

படைவீரர்களின் ஏளனம் (மத் 27:27-31)

அதன்பின் மாநிலத்தலைவனின் படைவீரர் இயேசுவை மாளிகைக்கு உள்ளே கூட்டிக் கொண்டு போய், பட்டாளம் முழுவதையும் அவர்முன் ஒன்று கூட்டி, அவருடைய ஆடைகளைக் கழற்றி, சிவப்பு மேலாடையை அவருக்கு அணிவித்து, முள்ளால் ஒரு முடியைப் பின்னி அதை அவர் தலையில் வைத்தார்கள்.

அவருடைய வலக்கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர் முன் முழந்தாள்படியிட்டு, "யூதருடைய அரசனே, வாழ்க!" என்று சொல்லி அவரை ஏளனம் செய்தனர். அவர்மேல் துப்பி, அந்தக் கோலைப் பிடுங்கி அதைக் கொண்டே அவரைத் தலையில் அடித்தார்கள். இவ்வாறு அவரை ஏளனம் செய்தபிறகு அவருக்கு அணிவிக்கப்பட்ட மேலாடையைக் கழற்றி விட்டு அவருடைய உடைகளையே அவருக்கு உடுத்தி அவரைச் சிலுவையில் அறைய நடத்திக் கொண்டு போனார்கள்.

இயேசுவை சிலுவையில் அறைதல் (லூக் 23: 26-43,யோ 19 : 17)

இயேசு தமது சிலுவையைத் தாமே சுமந்து சென்றார். அவர்கள் போய்க் கொண்டிருக்கையில் சிரேனே ஊரானும் அலெக்சாந்தர், ரூஃப் என்பவர்களின் தகப்பனுமாகிய சீமோன் நாட்டுப்புறத்திலிருந்து அவ்வழியே வந்து கொண்டிருந்தான். அவருடைய சிலுவையைச் சுமந்து செல்லும்படி அவர்கள் அவனைக் கட்டாயப்படுத்தினார்கள். (மா. 15 :21) பெருந்திரளான மக்கள் அவர் பின்னே சென்றார்கள். பெண்கள் மாரடித்துப் புலம்பிக் கொண்டு சென்றார்கள். இயேசு அவர்கள் பக்கம் திரும்பி, "எருசலேம் புதல்வியரே, நீங்கள் எனக்காக அழ வேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். ஏனென்றால், காலம் வரப்போகிறது. அப்பொழுது மலடிகளே நற்பேறு பெற்றவர்கள் என்றும், பிள்ளைப் பேறற்ற வயிறுகளையும், பால் கொடாத மார்பகத்தையும் நற்பேறு பெற்றவை என்றும் சொல்லுவார்கள். மலைகளை நோக்கி 'எங்கள் மேல் விழுங்கள்' என்றும், குன்றுகளை நோக்கி 'எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்' என்றும் சொல்லுவார்கள். மரம் பச்சையாய் இருக்கையிலேயே இவற்றைச் செய்கிறார்களே, அது காய்ந்தபின் அதற்கு என்னதான் நேரிடாது" என்றார்.

அவரோடு வேறு இரு குற்றவாளிகளையும் கொல்லப் படுவதற்கெனக் கொண்டுபோனார்கள்.(லூக் 23 : 27 -32) அவர்கள் தலைஓடு என்னும் பொருள் கொண்ட கொல்கொதா என்னும் இடத்தை அடைந்தபோது, அவருக்கு வெள்ளைப்போள மயக்க மருந்து கலந்த திராட்சை இரசத்தைக் குடிக்கக் கொடுத்தனர். அவரோ அதைக் குடிக்கவில்லை. அப்பொழுது நேரம்

காலை ஏறத்தாழ ஒன்பது மணி இருக்கும் (மா.15:23-25) வேறு இரு குற்றவாளிகளை இரு பக்கங்களிலும் அறைந்தார்கள். அக்கிரமக்காரருள் ஒருவராக எண்ணப்பட்டார் என்கிற மறைவாக்கியம் இவ்வாறாக நிறைவேறிற்று (மா. 15:28) (லூக் 23 :34)

பிலாத்து ஓர் அறிக்கையை எழுதி அதைச் சிலுவையில் பொருத்தும்படி செய்தான். அதில் "நாசரேத்தூர் இயேசு, யூதரின் அரசன்." என்று எழுதப்பட்டிருந்தது. இயேசுவைச் சிலுவையில் அறைந்த இடம் நகரத்துக்குப் பக்கத்தில் இருந்ததால் யூதர் பலர் அந்த அறிக்கையைப் படித்தனர். அது எபிரேயு, இலத்தீன் கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டிருந்தது. யூதருடைய தலைமை ஆசாரியர்கள் பிலாத்துவிடம் 'யூதரின் அரசன்' என்று எழுத வேண்டாம். 'நான் யூதரின் அரசன் என்று அவன் சொல்லிக் கொண்டதாக எழுதவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பிலாத்து, "நான் எழுதினது எழுதினதே" என்று சொன்னான். (யோ. 19 : 18-22)

இயேசுவைச் சிலுவையில் அறைந்த பின் படைவீரர்கள் அவருடைய உடைகளை எடுத்து அதை நான்கு பாகங்களாக்கி ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக் கொண்டார்கள், ஆனால் உள்ளங்கி தையலே இல்லாமல் மேலிருந்து கீழ்வரை ஒரே துணியாய் நெய்யப்பட்டிருந்தது. ஆகையால் அவர்கள் "நாம் இதைக் கிழிக்காமல், சீட்டுக் குலுக்கிப் போட்டு எடுத்துக் கொள்ளலாம்" என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டு அவ்வாறே செய்தார்கள்.

" என் ஆடைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு
என் உடையின் பேரில் சீட்டுக் குலுக்கினார்கள்"

என்ற மறைவாக்கியமும் இவ்வாறு நிறைவேறிற்று. (யோ. 19 : 23-24) "திருக்கோவிலை இடித்துவிட்டு மூன்று நாட்களில் கட்டி எழுப்புகிறவனே, நீ கடவுளின் மைந்தன் என்றால் உன்னை நீயே காப்பாற்றிக் கொள். சிலுவையிலிருந்து இறங்கி வா" என்று சொல்லி அவரைப் பழித்தார்கள்.

அவ்வாறே தலைமை ஆசாரியர்களும், மறை அறிஞர் மூப்பர் ஆகியோருடன் சேர்ந்து ஏளனமாய் பேசிக்கொண்டு "பிறரைக் காப்பாற்றினான். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இயலவில்லை. இஸ்ரவேலின் அரசனாகிய மேசியா இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும். நாங்கள் அதைப் பார்த்து நம்புவோம். கடவுளிடம் நம்பிக்கை கொண்டிருந்தான். அவருக்கு இவன்மேல் பிரியமிருந்தால் இப்பொழுது இவனை விடுவிக்கட்டுமே. இவன் நான் கடவுளின் மைந்தன் என்றானே"

என்று பழித்துரைத்தனர் (மத். 27 : 39-43) அப்பொழுது இயேசு, "தந்தையே இவர்களை மன்னியும்; தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாதிருக்கிறார்களே" என்றார்,

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், "நீ மேசியாதானே? அப்படியானால் உன்னைக் காப்பாற்றிக்கொள். எங்களையும் காப்பாற்று" என்று அவரைப் பழித்தான். ஆனால் மற்றவன் அவனைக் கண்டித்து, "நீயும் இதே தீர்ப்புப் பெற்றிருந்தும் கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நாம் தண்டிக்கப்படுவது முறையே. நாம் செய்தவற்றிற்குத் தகுந்த பலனை அடைகிறோம். இவரோ தகாதது ஒன்றும் செய்யவில்லையே" என்று பதில் அளித்து விட்டு, "இயேசுவே, நீர் உமது அரசுரிமையோடு வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான். அவர் அவனிடம்,

இன்றைக்கு நீ என்னோடு கூட பேரின்பவீட்டில் இருப்பாய் என நான் உறுதியாகச் சொல்லுகிறேன் என்றார்.

(நீ என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பாய் என்று இன்றைக்கு நான் உறுதியாகச் சொல்லுகிறேன் என்பது சிறந்த மொழியாக்கம். (லூக் 28:39-43).

இயேசுவின் தாயும், அவருடைய தாயின் சகோதரியும் கிலேயோப்பாவின் மனைவியாகிய மரியாளும், மகதலேனா மரியாளும் அவரது சிலுவை அருகில் நின்று கொண்டிருந்தார்கள். தம்முடைய தாயும், தாம் நேசித்த சீடரும் அருகே நிற்பதை இயேசு கண்டு தம் தாயிடம், "தாயே, அதோ உன் மகன்" என்றார். பிறகுஅந்தச் சீடரை நோக்கி, "அதோ, உன் தாய்," என்றார். அந்நேரமுதல் அந்தச் சீடர் அவரை ஏற்றுக் கொண்டு தம் வீட்டில் ஆதரித்து வந்தார் (யோ, 19:25-27)

நடுப்பகல் முதல் பிற்பகல் மூன்று மணி வரையிலும் நாடெங்கும் இருள் சூழ்ந்திருந்தது. பிற்பகல் ஏறத்தாழ மூன்று மணிக்கு இயேசு, "ஏலி (எலோயி) ஏலி (எலோயி) லாமா சபக்தானி" அதாவது "என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று உரத்த குரலில் கூப்பிட்டார். அங்கே நின்றவர்களுள் சிலர் இதைக் கேட்டு இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்றனர். உடனே அவர்களுள் ஒருவன் ஓடிப்போய் கடற்காளானை எடுத்துக் காடியில் தோய்த்து அதை ஒரு கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். மற்றவர்களோ, "பொறு, எலியா இவனைக் காப்பாற்ற வருகிறானா என்று பார்ப்போம்" என்றார்கள். (மத். 27: 45-49)

அதன் பின் எல்லாம் முடிந்தன என்பதை இயேசு அறிந்து **"தாகமாயிருக்கிறேன்"** என்றார். நிறைவேற வேண்டிய மறைவாக்கியம் முற்றிலும் நிறைவேறிற்று. அங்கே ஒரு பாத்திரம் நிறைய காடி இருந்தது. அந்தக் காடியில் கடற்காளானைத் தோய்த்து அதை ஈசோப்புத் தண்டில் பொருத்தி அவர் வாய் அருகில் பிடித்தார்கள். காடியை வாயில் வாங்கிய பின் இயேசு **"முடிந்தது"** என்றார் (யோ 19 :28 - 30)

கதிரவன் ஒளியற்றுப் போனதால் பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரையிலும் நாடெங்கும் இருள் சூழ்ந்திருந்தது. இயேசு உரத்த குரலில், **"தந்தையே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்,"** என்று சொல்லி உயிர் துறந்தார் (லூக் 23 : 44-46)

அதே நேரத்தில் திருக்கோவிலின் திரை மேலிருந்து கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. நிலம் அதிர்ந்தது. கற்பாறைகள் பிளந்தன. கல்லறைகள் திறந்தன. துஞ்சிய தூயோர் பலருடைய உடல்கள் உயிர் பெற்றன. அவர் உயிர்த்தெழுந்த பின்பு இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டு திருநகரத்திற்குள் சென்று பலருக்குத் தோன்றினார்கள். நூற்றுவர் தலைவனும், அவனோடு இயேசுவைக் காவல் காத்தவர்களும், நில நடுக்கத்தையும், நடந்த காரியங்களையும் கண்டு, மிகவும் அஞ்சி, "மெய்யாகவே இவர் கடவுளின் மைந்தரே" என்றார்கள்.

கலிலேயாவிலிருந்து இயேசுவைப் பின்பற்றி நடந்து அவருக்குப் பணிவிடை செய்த பெண் மக்கள் பலரும் அங்கே இருந்தனர். அவர்கள் தொலைவிலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடையே மகதலேனா மரியாளும். யாக்கோபு, யோசேப்பு ஆகியோரின் தாயாகிய மரியாளும், செபெதேயுவின் மைந்தர்களின் தாயும் இருந்தார்கள். (மத் 27 : 51 -56)

ஈட்டியால் குத்துதல் (யோ. 19 : 31 -37)

அன்று வெள்ளிக்கிழமை; ஆயத்த நாள். அடுத்த நாள் தனிச்சிறப்புடைய ஓய்வு நாள். அந்த ஓய்வு நாளில் உடல்கள் சிலுவையில் இராதபடி கால் எலும்புகளை முறித்து அவற்றை எடுத்துவிடும்படி பிலாத்துவிடம் யூதர்கள் கேட்டுக் கொண்டார்கள். எனவே, படை வீரர்கள் போய் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டவர்களின் கால் எலும்புகளை முறித்தார்கள். இயேசுவிடம் வந்தபோதோ அவர் ஏற்கெனவே இறந்திருப்பதை அறிந்ததால் அவருடைய கால் எலும்புகளை முறிக்கவில்லை. ஆனால் அவரது விலாப்பக்கத்தில் ஒரு படைவீரன் ஈட்டியால் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் வெளியே வந்தன. அதை நேரில்

கண்டவனே இதற்குச் சாட்சி கூறியிருக்கிறான். "அவருடைய எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை," என்ற மறைவாக்கியம் நிறைவேறும்படி இப்படி நடந்தது. மேலும், "தாங்கள் ஊடுருவக் குத்தினவரை உற்று நோக்குவார்கள்" என்று வேறொரு மறைவாக்கியமும் கூறுகிறது.

அடக்கம் செய்தல் (மத் 27: 57 - 61 மா. 15 : 42 -47 லூக் 23 : 50 -55 யோ. 19 38 -42)

யோசேப்பு யூதர் நாட்டில் உள்ள அரிமத்தியா என்னும் ஊரைச் சேர்ந்த செல்வந்தர். நற்பண்பு உடையவர். நேர்மையானவர். இயேசுவின் சீடர். ஆனால் யூதருக்கு அஞ்சி அந்தரங்க சீடராகவே இருந்தார். கடவுளுடைய அரசின் வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தவர். தலைமைச் சங்கத்தின் மதிப்பு பெற்ற உறுப்பினர். ஆனால், அவர்களுடைய இந்தத் தீர்மானத்திற்கும் செய்கைக்கும் உடன்படாதவர். அவர் பிலாத்துவிடம் துணிவுடன் போய் இயேசுவின் உடலைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டார். இயேசு அதற்குள் இறந்ததைக் கேட்டு வியப்புற்று நூற்றுவர் தலைவனை வரவழைத்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டாரா? என்று விசாரித்தான். நூற்றுவர் தலைவன் மூலமாகச் செய்தியை அறிந்து கொண்டு உடலை யோசேப்பிடம் ஒப்புவிக்க பிலாத்து அனுமதி கொடுக்கவே அவர் வந்து இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டு போனார்.

முன்பு ஒரு நாள் இரவு இயேசுவிடம் வந்த நிக்கொதேமு என்பவரும் அங்கே வந்தார். அவர் வெள்ளைப்போளமும், அகில்தூளும் சேர்ந்த நறுமணக் கலவையில் ஏறத்தாழ நூறு இராத்தல் கொண்டு வந்திருந்தார். அவர்கள் இயேசுவின் உடலை எடுத்து யூதர் அடக்கம் செய்யும் முறைமைப்படி நறுமணப் பொருட்களோடு அதை மெல்லிய துணிகளினால் சுற்றிக் கட்டினார்கள். இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் கற்பாறையில் தாம் வெட்டியிருந்த, அதுவரையிலும் யாரையும் அடக்கம் செய்யப் பயன்படுத்தப்படாத, புதிய கல்லறை இருந்தது. அந்த நாள் யூதரின் பண்டிகைக்கு ஆயத்த நாளாய் இருந்ததாலும், ஓய்வு நாள் தொடங்கும் நேரம் ஆகிவிட்டதாலும், அந்தக் கல்லறை அருகில் இருந்ததாலும் இயேசுவை அதில் வைத்து ஒரு கல்லைப் புரட்டிக் கல்லறையின் வாயிலில் வைத்தார்.

கலிலேயாவிலிருந்து அவருடனே வந்திருந்த பெண்களும், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் பின் தொடர்ந்து சென்று, கல்லறையையும் அதில் அவருடைய உடல் வைக்கப்பட்ட வகையையும் பார்த்துவிட்டு, திரும்பிப்போய் நறுமணப் பொருட்களையும் நறுமணத் தைலங்களையும் ஆயத்தம் செய்தார்கள்.

கல்லறைக்குக் காவல் (மத். 27 : 62-66)

தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும் பிலாத்துவின் முன் வந்து கூடி, "ஐயா, அந்த வஞ்சனையாளன் உயிருடன் இருக்கும்போது, 'மூன்று நாட்களுக்குப்பின் உயிர்த்தெழுவேன்' என்று சொன்னது எங்களுக்கு நினைவிருக்கிறது. ஆகையால், மூன்றாம் நாள் வரையில் கல்லறையைப் பத்திரப்படுத்தக் கட்டளையிடும். இல்லாவிடில், அவனுடைய சீடர்கள் வந்து அவனைத் திருடிக் கொண்டு போய்விட்டு. இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்' என்று மக்களிடம் சொல்லுவார்கள். அப்பொழுது முந்தின வஞ்சனையைவிடப் பிந்தினது இன்னும் மோசமாயிருக்கும்," என்றார்கள்.

அதற்குப் பிலாத்து, "உங்களிடந்தான் காவற்காரர்கள் இருக்கிறார்களே. போய், உங்களால் இயன்ற வரையில் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றான். அவர்கள் போய் கல்லறைக்குக் காவல் வைத்து, கல்லுக்கு முத்திரையும் இட்டுப் பத்திரப்படுத்தினார்கள்.

பகுதி - 9

இயேசுவின்உயிர்ப்பு

ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில் ஒரு பெரிய நில நடுக்கம் உண்டாயிற்று. ஆண்டவருடைய தூதன் வானத்தினின்று இறங்கி வந்து (கல்லறையின்) வாயிலிருந்து கல்லைப் புரட்டித்தள்ளி அதன் மீது உட்கார்ந்தான். அவனது தோற்றம் மின்னலைப் போலிருந்தது. அவனைப் பார்த்த அச்சத்தால் நடுநடுங்கி காவற்காரர்கள் செத்தவர்கள் போலானார்கள். (மத். 28 : 1-4)

காவலர் கதை (மத். 27 : 11-15)

காவலருள் சிலர் நகரத்திற்குள் சென்று நடந்தவற்றை தலைமை ஆசாரியர்களுக்கு அறிவித்தனர். அந்த ஆசாரியர்கள் மூப்பர்களுடன் கலந்து பேசிய பின், அந்தக் காவலருக்கு நிறையப் பணம் கொடுத்து, "நாங்கள் தூங்கிக் கொண்டிருந்தோம். அப்பொழுது இயேசுவின் சீடர்கள் இரவில் வந்து அவனைத் திருட்டுத்தனமாக கொண்டுபோய் விட்டார்கள் என்று மக்களுக்குச் சொல்லி விடுங்கள். மாநிலத் தலைவனின் காதுக்கு இது எட்டுமானால், நாங்கள் எப்படியாவது அவரை நம்பவைத்து உங்களுக்குத் தொல்லை வராதபடி பார்த்துக் கொள்ளுகிறோம்," என்றார்கள். இதனால் யூதரிடையே இந்தக் கதை இந்நாள் வரையிலும் உலவி வருகிறது.

கல்லறையை நோக்கி பெண்கள்

மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமி யோவன்னா ஆகியோரும் மற்றும் சிலரும் இயேசுவின் உடலில் பூசுவதற்காக நறுமணப்பொருட்களை வாங்கி, வாரத்தின் முதல் நாள் விடியற்காலத்தில் இருட்டு நீங்கு முன் கல்லறைக்குப் போனார்கள். போகையில் அவர்கள் 'கல்லறையின் வாயிலிருந்து கல்லை நமக்காகப் புரட்டித்தள்ள யாராவது இருப்பார்களா?' என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டு போனார்கள் (மா. 16 : 1-13)

உடலைக் காணவில்லை

மகதலேனா மரியாள் ஆர்வ மிகுதியால் மற்றவர்களுக்கு சற்று முன்பே கல்லறைக்குப் போய் கல்லறையின் வாயிலை அடைத்திருந்த கல் அகற்றப்பட்டிருந்ததைக் கண்டாள். கண்டதும் அவள் விரைந்து ஓடிச் சீமோன் பேதுருவிடமும், இயேசு நேசித்த அந்த மற்றச்சீடரிடமும் வந்து அவர்களிடம், "ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். அவரை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை" என்று சொன்னாள். (யோ. 20 : 1-2)

பேதுருவும் யோவானும் கல்லறைக்கு விரைதல்(யோ. 20 :3-10)

உடனே பேதுருவும் மற்றச் சீடரும் புறப்பட்டு கல்லறையை நோக்கிச் சென்றனர். இருவரும் சேர்ந்தே ஓடினர். ஆனால் பேதுருவை மற்றச் சீடர் முந்திக்கொண்டு விரைந்து ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். அவர் குனிந்து உள்ளே பார்த்தபோது துணிகள் கிடக்கிறதைக் கண்டார்.ஆனால் உள்ளே போகவில்லை. அவருக்குப்பின் வந்த சீமோன் பேதுரு நேரே கல்லறைக்குள் நுழைந்தார். அங்கே துணிகள் கிடக்கிறதைக் கவனித்தார். இயேசுவின் தலையை மூடியிருந்த துணி மற்றத் துணிகளோடு இல்லாமல் தனியாய் ஓரிடத்தில் சுருட்டப்பட்டுக் கிடக்கிறதையும் கவனித்தார். மற்றச் சீடரும் (யோவானும்) பிறகு உள்ளே நுழைந்தார். அதைப் பார்த்து, நடந்ததைப் புரிந்து கொண்டு நம்பிக்கையுள்ளவரானார். "அவர் இறந்தோரிடமிருந்து எழுந்திருக்க வேண்டும்," என்று மறைநூலில் சொல்லப்பட்டிருப்பதை அவர்கள் அது வரையிலும் விளங்கிக் கொள்ளாமலிருந்தார்கள். பிறகு அந்தச் சீடர்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிப் போய்விட்டார்கள்.

இயேசு மகதலேனா மரியாளுக்குக் காட்சியளித்தல் (யோ. 20 :11-18)

(கல்லறைக்கு மீண்டும் திரும்பி வந்த) மகதலேனா மரியாள் கல்லறைக்கு வெளியே நின்று அழுது கொண்டே குனிந்து கல்லறைக்குள் பார்த்தாள். இயேசுவின் உடல் வைக்கப்பட்டிருந்த இடத்தில் வெண்ணாடை அணிந்திருந்த இரண்டு தெய்வதூதர், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனும் உட்கார்ந்திருந்ததைக் கண்டாள். அவர்கள் அவளைப் பார்த்து, "ஏன் அம்மா அழுகிறாய்?" என்று கேட்க, அவள் "என் ஆண்டவரை யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை" என்றாள்.

இவ்வாறு சொல்லிவிட்டு அவள் தலையைப் பின் பக்கம் திருப்பினாள். இயேசு நிற்கிறதைக் கண்டாள். ஆனால் இயேசு என்பது அவளுக்குத் தெரியாது.

இயேசு அவளைப் பார்த்து, "அம்மா, ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" என்று கேட்டார். அவளோ அவரை தோட்டக்காரன் என்று நினைத்து அவரிடம், "ஐயா, நீர் அவரை தூக்கிக் கொண்டு போயிருந்தால், அவரை எங்கே வைத்தீர் என்று எனக்குச் சொல்லும். நான் அவரை எடுத்துக் கொள்ளுகிறேன்," என்றாள். இயேசு அவளை நோக்கி, "மரியாளே" என்றார். அவள் அவர் பக்கமாகத் திரும்பி எபிரேயு மொழியில் 'ரபூனி' என்றாள். அதற்குப் போதகரே என்பது பொருள். இயேசு அவளைப் பார்த்து, "என்னைப் பற்றிக் கொள்ள முயலாதே. நான் இன்னும் தந்தையிடம் ஏறிச் செல்லவில்லை. ஆனால் என் தந்தையும், உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன். இதை நீ என் சகோதரரிடம் போய்ச் சொல்," என்றார்.

உயிர்த்தெழுந்தபின்பு இயேசு மகதலேனா மரியாளுக்கு முதலில் காட்சியளித்தார். அவளிடமிருந்து தான் அவர் ஏழு பேய்களை ஓட்டியிருந்தார். அவள் போய் அவரோடு இருந்தவர்களுக்கு தான் கண்டதை அறிவித்தாள். அவர்கள் அந்நேரத்தில துயருற்று அழுது கொண்டிருந்தார்கள். அவர் உயிரோடு இருக்கிறார் என்றும், அவள் அவரைக் கண்டாள் என்றும் அவள் சொன்னபின்பும் அவர்கள் நம்பவில்லை. (மா. 16 : 9-11)

இயேசு மற்றப்பெண்களுக்குக் காட்சியளித்தல்

(ஆர்வ மிகுதியால் மகதலேனா மரியாள் முதலாவதாகவே கல்லறைக்கு சென்றுவிட்டாள். மற்றவர்கள் சற்று நேரத்திற்குப் பின்னரே கல்லறையை அடைந்தனர்.) அவர்கள் ஏறிட்டுப் பார்த்த போது கல் புரட்டித் தள்ளப்பட்டிருந்ததைக் கண்டார்கள். அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். இயேசுவின் உடல் அங்கே இல்லை. அதைக் குறித்து அவர்கள் மனக் கலக்கமுற்று நிற்கையில் ஒளி வீசும் ஆடையணிந்த இருவர் திடீரென்று அவர்கள் அருகில் வந்து நின்றனர். அப்பெண்கள் அச்சமுற்றுக் குனிந்து தரையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவ்விருவரும் அவர்களைப் பார்த்து, "திகிலடைய வேண்டாம். சிலுவையில் அறையுண்ட இயேசுவைத் தேடுகிறீர்கள். உயிரோடு இருக்கிறவரை நீங்கள் இறந்தோரிடையே தேடுகிறதேன்? அவர் உயிர்த்தெழுந்து விட்டார். அவர் இங்கே இல்லை. இதோ, இதுதான் அவரை வைத்த இடம், அவர் கலிலேயாவிலிருந்தபோது உங்களுக்குச் சொன்னதை நினைவுபடுத்திப் பாருங்கள். "மனுமைந்தர் பாவிகளான மனிதர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, சிலுவையில் அறையுண்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும்" என்று சொன்னாரே. நீங்கள் விரைந்து சென்று "அவர் இறந்தோரிடமிருந்து உயிர்தெழுந்து விட்டார். அவர் உங்களுக்கு முந்திக் கலிலேயாவுக்குப் போய்விடுவார். அங்கே அவரைக் காண்பீர்கள். என்று அவருடைய சீடரிடம் சொல்லுங்கள்"என்றனர்.

அவர்கள் விரைவாகக் கல்லறையை விட்டுப் புறப்பட்டு, அச்சத்தோடும் அதே நேரத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடும் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள். வழியில் இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு, 'வாழ்க' என்று சொல்லி அவர்களை வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி, அவருடைய பாதங்களைத் தழுவி அவரை வணங்கினார்கள். இயேசு அவர்களிடம் "இனி அச்சங்கொள்ளவேண்டாம். நீங்கள் என் சகோதரரிடம் சென்று, அவர்களை கலிலேயாவுக்குப் போகும்படி சொல்லுங்கள். அங்கே நான் அவர்களுக்கு காட்சியளிப்பேன்," என்று சொன்னார். அவர்கள் இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் பதினொருவருக்கும் மற்ற யாவருக்கும் அறிவித்தார்கள். அவர்கள் சொன்னது ஆதாரமற்ற செய்தியாக அவர்களுக்குத் தோன்றியதால் அவர்கள் அப்பெண்கள் சொன்னதை நம்பவில்லை.

எம்மாவு சீடருக்கு காட்சியளித்தல் (லூக் : 24:13-35)

அதே நாளில் அவர்களுள் இருவர் எருசலேமிலிருந்து ஏறத்தாழ ஏழு மைல் தொலைவில் உள்ள எம்மாவு என்னும் சிற்றூருக்குச் சென்று கொண்டிருந்தனர். நடந்த இந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் குறித்து அவர்கள் ஒருவரை ஒருவர் வினவி உரையாடிக்கொண்டு நடந்து செல்கையில் இயேசுவும் அருகில் சென்று அவர்களோடு நடந்து போனார். என்றாலும் இயேசு என்பதைக் கண்டு கொள்ளாதபடி அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. அவர் அவர்களிடம், "நீங்கள் நடந்து கொண்டு ஒருவரோடு ஒருவர் பேசும் காரியம் என்ன?" என்று கேட்டதும் அவர்கள் நின்று விட்டனர். அவர்களுடைய முகங்கள் வாட்டமுற்றிருந்தன.

அவர்களுள் ஒருவரான கிலேயோப்பா, "எருசலேம் நகரத்தில் தங்கி இருப்பவர்களுள் நீர் ஒருவர் மட்டும்தான் இந்நாட்களில் அங்கு நடப்பவற்றை அறியாமல் இருக்கிறீர் போலும்," என்று பதிலளித்தார். "நடந்தவற்றையா?" என்று இயேசு கேட்க, அவர்கள் "நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவற்றைத்தான். அவர் இறைவாக்குநராய் விளங்கி, கடவுள் முன்னும் எல்லா மக்கள் முன்னும் செய்கையிலும், வாக்கிலும் வல்லமையுள்ளவராய் இருந்தார். அவரை நம்முடைய தலைமை ஆசாரியர்களும் அதிகாரிகளும் சாவுக்கானத் தீர்ப்புக்கு ஆளாக்கிச் சிலுவையில் அறைந்தார்கள். நாங்களோ இஸ்ரவேல் மக்களுக்கு மீட்பு அளிக்கப்போகிறவர் இவரே என்று நம்பிக்கொண்டிருந்தோம். இவை எல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாட்கள் ஆகின்றன. என்றாலும் எங்களைத் சேர்ந்த பெண்கள் சிலர் எங்களைத் திகைக்கச் செய்துவிட்டார்கள்."

"அவர்கள் விடியற்காலத்தில் கல்லறைக்குப் போய் அவருடைய உடல் அங்கே இல்லாததைக் கண்டு திரும்பி வந்தார்கள். அவர்கள் தெய்வ தூதரைக் கண்கூடாகக் கண்டதாகவும், அந்தத் தூதர் அவர் உயிரோடு இருக்கிறார் என்று உரைத்ததாகவும் சொல்லுகிறார்கள். எங்களோடு இருந்தவர்கள் சிலரும் கல்லறைக்குப் போய் பெண்கள் சொன்னபடியே யாவும் இருக்கக் கண்டனர். ஆனால் இயேசுவைக் காணவில்லை," என்றார்கள்.

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, "அறிவில்லாதவர்களே, உங்கள் உள்ளம் இறைவாக்குநர் உரைத்த யாவற்றையும் நம்ப இயலாத அளவிற்கு மந்தமாய் இருக்கிறது. மேசியா தமது மாட்சிமைக்குள் செல்லுவதற்கு முன் இந்தப் பாடுகளை அடைந்து தீர வேண்டும் அல்லவா?" என்று சொல்லி, மோசேயும் இறைவாக்குநர் அனைவரும் உரைத்தவற்றிலிருந்து தொடங்கி, எல்லா மறைப்பகுதிகளிலும் தம்மைக் குறித்து எழுதியுள்ளவற்றை அவர்களுக்கு எடுத்து விளக்கினார்.

அவர்கள் தாங்கள் போகும் சிற்றூருக்கு அருகில் வந்ததும் இயேசு அதற்கப்பாலும் போகிறவர்போலக் காட்டினார். அப்பொழுது அவர்கள், "மாலை நேரமாயிற்று. பொழுதும் சாய்ந்துவிட்டது. ஆகையால் நீர் எங்களுடனே வந்து தங்கும்" என்று வருந்திக் கேட்டுக்கொள்ள, அவரும் அவர்களுடன் போனார். பிறகு அவர்களோடு பந்தியில் அமர்ந்திருக்கையில் அவர் அப்பத்தை எடுத்து, துதி செலுத்தி அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்த அந்நேரத்தில் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டன. அவர் இயேசு என்பதை அவர்கள் கண்டார்கள். உடனே அவர் அவர்களை விட்டு மறைந்து போனார்.

அப்பொழுது அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து "வழியில் அவர் மறைவாக்கியங்களை நமக்கு விளக்கிக் காட்டிப் பேசுகையில் நமது உள்ளம் கொழுந்துவிட்டு எரிவதுபோல இருந்தது அல்லவா" என்று பேசிக்கொண்டனர். உடனே அவர்கள் எழுந்து எருசலேமுக்குத் திரும்பிப் போய், ஒன்றாய்க் கூடியிருந்த பத்து சீடர்களையும் (தோமா அச்சமயம் அங்கு இல்லை) அவர்களோடு இருந்தவர்களையும் அங்கே கண்டார்கள். தாங்கள் எம்மாவுக்கு போய்க் கொண்டிருக்கும் வேளையில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கையில், எப்படி அவரை அறிந்து கொண்டார்கள் என்பதையும் விவரித்துச் சொன்னார்கள்.

இயேசு சீடர்களுக்குக் காட்சியளித்தல்

அன்று மாலை நேரத்தில் சீடர்கள் ஓர் அறையில் கூடியிருந்தார்கள். யூதரைப் பற்றிய அச்சத்தினால் கதவுகள் தாழிடப்பட்டிருந்தன. அப்பொழுது இயேசு வந்து அவர்களிடையே நின்று, "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்றார். அவர்கள் திடுக்கிட்டு அச்சங்கொண்டு ஓர் ஆவியைக் காண்பதாக நினைத்தார்கள். அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து, "ஏன் கலங்குகிறீர்கள்? உங்கள் உள்ளத்தில் ஐயம் எழுவானேன்? என் கைகளையும் கால்களையும் பாருங்கள். நான் தான். என்னைத் தொட்டுப்பாருங்கள். எனக்குத் தசையும் எலும்புகளும் இருப்பதை நீங்கள் காண்கிறீர்களே. இவை ஓர் ஆவிக்கு இராதே" என்று சொல்லி தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காட்டினார். அவர்களோ மகிழ்ச்சியின் மிகுதியால் இன்னும் நம்பமுடியாமல் திகைத்துக் கொண்டிருந்தார்கள். இயேசு மறுபடியும் அவர்களிடம் "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக. உண்பதற்கு ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார். அவர்கள் பொரித்த மீன் துண்டு ஒன்றை அவருக்குக் கொடுக்க அவர் அதை வாங்கி அவர்கள் முன்னிலையில் சாப்பிட்டார்.

தோமாவுக்கும், சீடர்களுக்கும் காட்சியளித்தல் (யோ.20 : 24-29)

பன்னிருவருள் ஒருவரான திதிமு எனப்படும் தோமா, இயேசு வந்திருந்தபோது அவர்களோடு இல்லை. எனவே மற்றச் சீடர்கள், "ஆண்டவரைக் கண்டோம்," என்று அவரிடம் சொல்ல, அவர் அவர்களைப் பார்த்து "அவருடைய கைகளில் ஆணிகளினால் உண்டான தழும்பை நான் பார்த்து ஆணி இருந்த இடத்தில் என் விரலை இட்டு, அவர் விலாவில் என் கையை வைத்துப் பார்த்தாலன்றி நம்பவே மாட்டேன்," என்று சொன்னார்.

எட்டு நாட்களுக்குப் பின் அவருடைய சீடர்கள் முன் போலவே வீட்டிற்குள் இருந்தார்கள். அவர்களோடு தோமாவும் இருந்தார். கதவுகள் தாழிடப்பட்டிருந்தன. அப்பொழுது இயேசு வந்து அவர்களிடையே நின்று"உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்றார். பிறகு அவர் தோமாவைப் பார்த்து, "உன் விரலை இங்கே நீட்டி என் விலாவிலே வை. இன்னும் நம்பிக்கையற்றவனாய் இராதே, நம்பிக்கையுள்ளவனாயிரு" என்று சொன்னார். அதற்கு தோமா, "என் ஆண்டவரே, என் கடவுளே" என்றார். இயேசு அவரிடம், "என்னைப் பார்த்ததனாலேதானே நம்புகிறாய்? பார்க்காமலே நம்புகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்," என்றார்.

ஏழு சீடர்களுக்குக் காட்சியளித்தல் (யோ 21: 1-14)

பிறகு இயேசு திபேரியா கடல் அருகில் மறுபடியும் சீடர்களுக்குக் காட்சியளித்தார். சீமோன் பேதுருவும் திதிமு எனப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டுக் கானாவூர் நாத்தான்வேலும், செபெதேயுவின் மைந்தரும், அவருடைய சீடருள் வேறு இருவரும் ஒன்றாய்க் கூடியிருந்தனர். சீமோன் பேதுரு மற்றவர்களைப் பார்த்து, "நான் மீன் பிடிக்கப் போகிறேன்," என்று சொன்னார். அதற்கு அவர்கள், "நாங்களும் உம்மோடு வருகிறோம்," என்று சொல்லி படகில் ஏறினார்கள். இரவு முழுவதும் அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.

பொழுது விடியும் வேளையில் இயேசு கரையில் வந்து நின்றார். ஆனால் அங்கு நின்றவர் இயேசு என்று சீடர்களுக்குத் தெரியாது. இயேசு அவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே, மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "இல்லை" என்றார்கள். அப்பொழுது அவர், "படகின் வலப்புறம் வலையை வீசுங்கள், கிடைக்கும்" என்றார். அவர்கள் அவ்வாறே வீசினார்கள். ஏராளமான மீன்கள் அகப்பட்டன. ஆகையால் அவர்களால் வலையை இழுக்க இயலவில்லை. இயேசு நேசித்த அந்த சீடர் (யோவான்) பேதுருவிடம், "அவர் ஆண்டவரே" என்று சொன்னார். அவர் ஆண்டவரே என்று சொன்னதைக் கேட்டதும் சீமோன் பேதுரு தம் ஆடையைக் களைந்திருந்ததால் மேலாடையை அரையில் கட்டிக் கொண்டு கடலில் குதித்து நீந்தி வந்தார். ஆனால், மற்றச் சீடர்களோ படகில் இருந்தவாறே மீன்

நிறைந்திருந்த அந்த வலையை அப்படியே இழுத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் கரையிலிருந்து நெடுந்தொலைவிலன்று; ஏறக்குறைய இருநூறு முழத் தொலைவிலே தான் இருந்தார்கள்.

அவர்கள் கரையில் இறங்கின போது கரியினால் நெருப்பு மூட்டியிருப்பதையும் அதன் மேல் மீனை வேக வைத்திருப்பதையும், அங்கே அப்பம் இருப்பதையும் கண்டார்கள். இயேசு அவர்களிடம், "நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களுள் சிலவற்றைக் கொண்டு வாருங்கள்" என்று சொன்னார். சீமோன் பேதுரு படகில் ஏறி வலையைக் கரைக்கு இழுத்தார். வலை நிறைய மொத்தம் 153 பெரிய மீன்கள் இருந்தன. அத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை.

இயேசு அவர்களிடம், "சாப்பிட வாருங்கள்" என்று சொன்னார். அவர் ஆண்டவரே என்பதை அறிந்து கொண்டதால் சீடருள் ஒருவராவது நீர் யார்? என்று அவரிடம் கேட்கத் துணியவில்லை. இயேசு அவர்களருகில் வந்து அப்பத்தை எடுத்துக் கொடுத்தார். மீனையும் அப்படியே கொடுத்தார். இயேசு தாம் இறந்தோரிடமிருந்து உயிரோடு எழுந்தபின் தம் சீடர்களுக்குக் காட்சியளித்தது இது மூன்றாம் முறையாகும்.

இயேசுவும் பேதுருவும் (யோ. 21.15-25)

அவர்கள் சாப்பிட்டு முடித்த பின்,

இயேசு : யோவான் மகனாகிய சீமோனே, இவர்களைவிட நீ என்னிடம் அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியும்.

இயேசு : என் ஆட்டுக் குட்டிகளை மேய்த்து வா. யோவான் மகனாகிய சீமோனே நீ என்னிடம் அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியும்.

இயேசு : என் ஆடுகளுக்கு மேய்ப்பனாய் இரு. யோவான் மகனாகிய சீமோனே என்னை நீ நேசிக்கிறாயா?

பேதுரு : (வருத்தத்துடன்) ஆண்டவரே எல்லாம் உமக்குத் தெரியும். நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்.

இயேசு : என் ஆடுகளை மேய்த்து வா. நீ இளைஞனாயிருந்தபோது உனக்கு விருப்பமான இடத்துக்கு நீ வரிந்து கட்டிக் கொண்டு

போவதுண்டு. ஆனால் நீ வயது முதிர்ந்தவனாய் இருக்கும் போது உன் கைகளை நீட்டுவாய். வேறொருவன் உன்னைக் கட்டி உனக்கு விருப்பமில்லாத இடத்துக்குக் கொண்டு செல்லுவான் என்று மிகவும் திட்டமாகச் சொல்லுகிறேன்.

அவர் எவ்வாறு மரணமடைந்து கடவுளின் மாட்சிமையை வெளிப்படுத்துவார் என்பதைக் குறிப்பிடுவதற்காக இப்படிச் சொன்னார். இப்படிச் சொன்ன பின் அவர் அவரிடம், "என்னைப் பின்பற்றி வா," என்றார்.

இயேசுவால் நேசிக்கப்பட்ட சீடன்

பேதுரு திரும்பிப் பார்த்து இயேசுவால் நேசிக்கப்பட்ட சீடரும் பின்பற்றி வருகிறதைக் கண்டார். கடைசி இராப்பந்தியில் இயேசுவின் மார்பருகில் சாய்ந்து, "ஆண்டவரே உம்மைக் காட்டிக் கொடுப்பவன் யார்?" என்று கேட்டவர் அவரே. பேதுரு அவரிடம் "ஆண்டவரே, இவனுக்கு என்ன நடக்கும்?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "நான் வருமளவும் இவன் உயிரோடிருக்க வேண்டுமென்று நான் விரும்பினால் உனக்கு என்ன? நீ என்னைப் பின்பற்றி வா" என்று சொன்னார். ஆகையால் அந்தச்சீடர் இறக்க மாட்டார் என்ற பேச்சு சகோதரரிடையே பரவிற்று. ஆனால் அவர் இறக்கமாட்டார் என்று இயேசு சொல்லவில்லை. நான் வருமளவும் இவன் உயிரோடிருக்க வேண்டுமென்று நான் விரும்பினால் உனக்கு என்ன? என்று தான் சொன்னார்.

அந்தச் சீடரே இவற்றிற்குச் சாட்சியாய் இருக்கிறார். அவரே இவற்றை எழுதி வைத்தவர். அவருடைய சாட்சியம் உண்மை.

சீடர்களுக்கு இயேசுவின் அறிவுரையும் கட்டளையும்

பதினொரு சீடர்களும் கலிலேயாவுக்குப் போய் இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலையை அடைந்தார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு வணங்கினார்கள். ஆனால் அவர்களுள் சிலர் நம்பத் தயங்கினர். (மத். 28:16-17) அவர்களுடைய நம்பிக்கையின்மையையும் உள்ளத்தின் மந்தத் தன்மையையும் குறித்து அவர் அவர்களைக் கடிந்து கொண்டார். (மா. 16.14)

அப்பொழுது இயேசு சீடருக்கு அருகில் வந்து அவர்களோடு பேசினார். "எனக்கு விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் அருளப்பட்டிருக்கிறது. நான் உங்களோடிருந்த காலத்தில் உங்களுக்குச்

சொன்ன வார்த்தைகளின் பொருள் இதுவே. மோசேயின் நீதிச் சட்டத்திலும் இறைவாக்குகளிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியுள்ள யாவும் நிறைவேறியாக வேண்டும்" என்று சொன்னார். அப்படிச் சொல்லி மறை நூல் பகுதிகளை அவர்கள் புரிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனத்தைத் திறந்தருளி அவர்களிடம், "மேசியா பாடுற்று மூன்றாம் நாளில் இறந்தோரிடமிருந்து எழுந்திருக்க வேண்டுமென்றும், எருசலேம் தொடங்கி எல்லா நாட்டினருக்கும் 'மனமாற்றமடைந்து பாவ மன்னிப்பைப் பெறுங்கள்' என்று அவருடைய திருப்பெயரால் அறிவிக்கப்பட வேண்டுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு நீங்களே சாட்சிகள்" என்றார். (லூக்.24:44-48)

"தந்தை என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன். ஆகையால் நீங்கள் புறப்பட்டு உலகெங்கும் போய், படைப்புகளான யாவருக்கும் அருட்செய்தியை அறிவியுங்கள். அதில் நம்பிக்கை வைத்து திருமுழுக்குப் பெறுபவன் மீட்புப் பெறுவான். நம்பாதவனோ குற்றத்தீர்ப்புப் பெறுவான். நம்பிக்கை உடையவர்களின் திருப்பணியில் இந்த அரிய செயல்கள் காணப்படும். அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவார்கள். பிறமொழிகளைப் பேசுவார்கள். பாம்புகளைப் பிடிப்பார்கள். சாவுக்கேதுவான ஏதாவது ஒன்றைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு செய்யாது. பிணியாளிகள் மேல் அவர்கள் கைகளை வைப்பார்கள். அவர்களும் குணமடைவார்கள்" (மா.16)

அவர்கள் மீது ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். யாருடைய பாவங்களை நீங்கள் மன்னிக்கிறீர்களோ அவை அவர்களுக்கு மன்னிக்கப்படும். யாருடைய பாவங்களை நீங்கள் மன்னியாதிருக்கிறீர்களோ அவை அவர்களுக்கு மன்னிக்கப்படமாட்டாது." (யோ.12)

"நீங்கள் புறப்பட்டுப் போய் எல்லா நாட்டினரையும் சீடராக்குங்கள். அவர்களுக்குத் தந்தை, மைந்தர், தூயஆவியானவரின் திருப்பெயரால் திருமுழுக்குக் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள். இதோ, உலக முடிவுவரை எல்லா நாட்களிலும் நான் உங்களோடு இருக்கிறேன் (மத். 28:19-20)

"என் தந்தை வாக்களித்ததை நான் உங்களுக்கு வழங்கப்போகிறேன். உன்னதத்திலிருந்து உங்களுக்கு வல்லமை அருளப்படும் வரை நீங்கள் இந்த நகரத்திலேயே இருங்கள்," என்றார்.

இயேசுவின் விண்ணேற்றம் (மா.16:19-20 லூக். 24:50-52)

பிறகு இயேசு பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போனார். அங்கே தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையிலேயே அவர் அவர்களை விட்டுப் பிரிந்தார். பிறகு விண்ணுலகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்தார். அவர்கள் அவரை வணங்கிவிட்டு மிகுந்த மகிழ்ச்சியோடு எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். நாள்தோறும் திருக்கோவிலில் கூடி கடவுளைப் புகழ்ந்து போற்றினார்கள். அவர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் அருளுரை ஆற்றினார்கள். ஆண்டவர் அவர்களுடனே செயல்புரிந்து அவர்களுடைய திருப்பணியில் காணப்பட்ட அரிய செயல்களினால் அவர்கள் கூறிய வார்த்தை மெய்யெனக் காட்டினார்.

இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்;
ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால்,
அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன்,
அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.
வெளிப்படுத்தல் 3:20

கனரா பதிப்பகம்
8-A, பேரின்பத்தெரு, மிலிட்டரி லைன்ஸ்,
பாளையங்கோட்டை - 627 002

Diocesan Offset Press, Palayamkottai. Ph:2573182